விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi
Follow@thamilthanthi

தமிழ் 07 தந்தி 10 ஞாயிற்றுக்கிழமை 03.02.2019 Sunday 03rd February 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

* விளம்பரங்கள்
* வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

# தமிழ் மக்களை ஏமாற்றியது யார்?

நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்திவந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து நல்லாட்சி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்து வந்தது. இந்த முட்டுக்கொடுப்பு உலக அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கலாம் என்ற சரித்திரத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு படைத்து வந்தது.

எதிர்க்கட்சி என்பது அரசாங்கத்தின் பிழையான நடவடிக்கைகளை சுட்டிக் காட்டுவது என்பதற்கு மாறாக அரசாங்கம் எதைச் செய்தாலும் சரியென்று அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்து வக்காலாத்து வங்கிவந்த எதிர்க்கட்சி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட எதிர்க்கட்சி என்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகைப்பதவி எதிர்க்கட்சி பதவி என்பதும் பலராலும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இருந்தபொழுதும் தீர்வுத்திட்டம் வருமென்று சொல்லி, எப்படி 77ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் அடுத்த தேர்தல் தமிழீழத்தில் என்று தமிழ்த்தலைமைகள் கூறியதோ அதேமாதிரி மீண்டும் 2016 டிசம்பரில் தீர்வு, 2017 தீபாவளிக்குள் தீர்வு, 2018 தைப்பொங்கலில் தீர்வு என்று மாறி மாறி சூளுரைத்தது தமிழ்தேசிய கூட்டமைப்பு. இதற்குள் இருந்த 14 உறுப்பினர்களும் தாங்கள் இதை எதிர்த்துப் பேசினால் தங்களுக்கும் தங்கள் கட்சிகளுக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தலைமைகள் வேட்புமனுக்கள் கொடுக்காது என்ற ஒரேஒரு காரணத்திற்காக அவர்கள் கூறுவது பொய் என்று தெரிந்தும் கிடைக்காத தீர்வு என்று தெரிந்தும் அதற்கு வக்காலாத்து வாங்கி வந்தது.

தற்பொழுது தேர்தல் நெருங்கிய காலகட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குச் சரிவு பாரியளவில் ஏற்பட்டதன் காரணமாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பே வேட்புமனுக் கொடுத்தாலும் தேர்தலில் வெல்லுவதென்பது கேள்விக்குறியாகியுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் தேர்தலில் போட்டியிட்ட பல உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் ஊடாகவும் 40வீதமான வாக்குவங்கி சரிந்ததன் காரணமாகவும் அவர்கள் மீண்டும் சிந்திக்க ஆரம்பித்துள்ளார்கள்.

மீண்டும் பாராளுமன்றக் கதிரைகளை சூடுகாட்ட வேண்டுமென்பதிலே அடைக்கலநாதன், சித்தார்த்தன், ஸ்ரீதரன் போன்றவர்கள் இருக்கின்றர்களேயொழிய தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரவேண்டுமென்றோ அல்லது தமிழ் தேசிய தலைமைகள் விடுகின்ற பிழைகளை சுட்டிக்காட்ட வேண்டுமென்றோ எந்தவித அக்கறையுமில்லை.

சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் இணைந்து வெளியேறுவதாக சூளுரைத்த அடைக்கலநாதன், பிரதிக் குழுக்களின்

02 ஆம் பக்கம் பார்க்க



## வடமாகாணசபை ஊடான அபிவிருத்தியை தடுத்தவர் சுமந்திரன்

### வடமாகாணசபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன்

கடந்த வடமாகாணசபையில் வினைத்திறன் மிக்க பலர் இருந்தார்கள். ஆளும் கட்சிக்குள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஒரு எதிர்க்கட்சியை உருவாக்கி வடமாகாண சபையின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தார்களே தவிர, வடமாகாண சபையை சீராக இயங்கிவிடவில்லை.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை நிராகரிக்கமால் அந்தப் பகுதியில் எங்கள் மக்களுக்கும் குடியேற்ற திட்டங்களை அளிக்கலாம். இன்றும் வடக்கில் எவ்வளவோ பேர் காணியில்லாமல் இருக்கின்றார்கள். ஆனால் அரசாங்கம் காணியை ஒதுக்க தயாராக இல்லை.

இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வனஇலாக திணைக்களம் ஒருபக்கம் காணியை கொடுக்க மறுக்க, மறுபக்கத்தில் தொல்லியல் திணைக்களம் காணிகளை சுவீகரித்துக் கொண்டு செல்கின்றது. ஆனால் வனஇலாகா திணைக்களம் எந்த வரையறையும் இல்லாமல் காணியை சுவீகரிக்கின்றது. மறுபுறத்தில் இராணுவத்தினர் ஹோட்டல்களையும், வீடுகளையும் அமைத்து தங்களின் பங்காக காணிகளை அபகரிக்கின்றனர்.

அதிகரித்து வரும் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக தமிழ்த்தலைமைகள் மௌனம் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று நாட்டில் நடந்த குழப்பங்களில் தமிழ்த் தலைமைகளின்

02 ஆம் பக்கம் பார்க்க

## குடு,முட்டை பிரச்சினையிலிருந்து திகாவை நான்தான் காப்பாற்றினேன்

### இராஜங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ்



பதுளையில் திகாம்பரத்தை அடித்துவிரட்ட முட்டை அடித்தார்கள். வெற்றிலை வைத்து துப்பினார்கள். காப்பாறியது வடிவேல் சுரேஷ். அதனை மறந்துவிட்டார்.

நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் கூட்டத்திற்கு போக முடியாமல் இருந்தது. வடிவேல் சுரேஷ் சென்று தோள் கொடுத்தேன். அவருக்கு என்னுடைய மனவேதனையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ்.பி.திசாநாயக்கவும் ஜனாதிபதியும் வந்த தலவாக்கலை கூட்டத்தில் அவருக்கு மோசமான முறையில் சில வார்த்தைகள்

02 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் ஜனவரியில் மட்டும் 400 கிலோ கஞ்சா மீட்பு



வடக்கில் இவ்வாண்டின் முதல் மாதத்தில் மாத்திரம் சுமார் 400 கிலோவுக்கு மேற்பட்ட கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக 111 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை காங்கேசன்துறையில் இடம்பெற்ற விஷேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த ஆண்டில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும், அதனோடு தொடர்புபட்ட சந்தேகநபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கேரள கஞ்சா கடத்தல்கள் அதிக

02 ஆம் பக்கம் பார்க்க

## பூனைக்குட்டி வெளியே வந்தது!

அன்றே சொன்ன தமிழ்த்தந்தி



**எஸ்.சிறிதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்**

எந்த ஜனநாயகத்திற்காக நாங்கள் யாரைக் காப்பாற்ற ரணில் விக்கிரமசிங்கவிற்காகவும் அவருடைய அரசிற்காகவும் வாதாடினோம். அவர்களின் ஜனநாயகத்திற்காக போராடினோமோ, அதே ரணில் விக்கிரமசிங்கவும், அதே சபாநாயகர் கரு ஜயசூரியவும் சேர்ந்து எங்கள் எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவின் எந்த ஆலோசனைகள்


Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

தமிழ்த்தந்தி

* விளம்பரங்கள்
* வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

www.facebook.com/thamilthanthi
Follow@thamilthanthi

தமிழ் 07 தந்தி 04 ஞாயிற்றுக்கிழமை 23.12.2018 Sunday 23rd December 2018 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

ரணிலை காப்பாற்றி தமிழ் மக்களையும் ஏமாற்றி தானும் ஏமாந்தார்!!!

சம்பந்தனை ஏமாற்றிய தென்னிலங்கை இராஜதந்திரம்

தமிழர்கள் விடயத்தில் ஒற்றுமையான பேரினவாதம்

யாழ்.மக்களுக்கும்

### தமிழ்த்தந்தி அன்று சொன்னதை இன்று நிஜமாக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்கள்

இல்லாமல் எங்களுக்குத் தெரியாமல் அவருடைய பதவியைப் பறித்து தங்களுடைய சிங்கள நிகழ்ச்சி நிரலை மிகத்துல்லியமாக அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதனை வரலாற்று ரீதியாக பல தடவைகள் ஏமாற்றப்பட்ட நாங்கள் இம் முறையும் சிங்கள அரசியலுக்காக கொடுத்த

02 ஆம் பக்கம் பார்க்க

## அரசை விட்டு வெளியேறுவோம் என்று அச்சுறுத்துபவர்கள் வெளியேற மாட்டார்கள்



### தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ரவீந்திர சமரவீர

இந்த தொழில்துறையை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தோட்டத்தில் வாழும் மக்களுக்கு இடையே சமாதானம் காணப்பட வேண்டும். அந்த சமாதானம் இல்லாவிடின் நாம் எவ்வாறான உடன்படிக்கைகளை கைச்சாத்திட்ட போதிலும் இந்த தொழில்துறையை முன்னோக்கிக் கொண்டு செல்வது கடினமாகும். அதனால் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் தீர்மானமொன்றை எடுத்துள்ளோம். தமிழ் முற்போக்குக் கூட்டணி, அரசாங்கத்துடன் உள்ள தொழிற்சங்கங்கள் சில கோரிக்கைகளை எம்மிடம்

02 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் காரணங்களுக்காக தாமதப்படும் விடுதலை



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு நெடுநாட்களாக சிறையில் உள்ள பேறறிவாளன் உள்ளிட்டோரின் விடுதலை அரசியல் காரணங்களுக்காகவே தாமதிக்கப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார் பேறறிவாளனின் தாயார் அற்புதம்மாள்.

ராஜீவ் காந்தி கைது செய்யப்பட்டு சுமார் 27 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ள பேறறிவாளன் உள்ளிட்ட எழுவரை விடுவிப்பது குறித்து மாநில அரசே முடிவெடுத்து கொள்ளலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்ததனையொட்டி, பேறறிவாளன் உள்ளிட்ட எழுவரையும் விடுவிக்கும்படி மாநில ஆளுநருக்கு தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்து சுமார் 140 நாட்கள் கடந்துவிட்ட நிலையில், மேற்காண் எழுவரின் விடுதலையை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்துவருகிறார்

02 ஆம் பக்கம் பார்க்க

## திண்ம உணவுப்பொருட்களுக்கும் வர்ணக் குறியீட்டு முறை அறிமுகம்



தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் மென்பானங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்ட வர்ண குறியீட்டு முறை முதலாம் திகதி தொடக்கம் திண்ம உணவுப் பொருட்களுக்கும் விஸ்தரிக்கப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சீனி, உப்பு, எண்ணெய் செறிந்த உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொள்வதன் மூலம் மக்கள் தொற்றா

02 ஆம் பக்கம் பார்க்க

## எங்கள் போராட்டத்தை கொச்சைப்படுத்தாதீர்கள்

காணாமற் போன பிள்ளைகளை கண்டு பிடிக்க உதவுவதற்கு, அமெரிக்கா மட்டுமே காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடிக்க சிறந்த அறிவாற்றல் தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது, சிறந்த உபகரணங்களைக் கொண்டுள்ளது, பல கஷ்டமான இடங்களை அடைவதற்கு போக்குவரத்து வசதிகளை கொண்டுள்ளது.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைத் தேடிக்கண்டறியும் சங்கத்தின் இணைப்பாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

தங்களின் தொடர் போராட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அமெரிக்காவை அழைப்பதற்காக

02 ஆம் பக்கம் பார்க்க

# போதைப்பொருள் பாவனைக்கெதிராக போராட்டம்





போதைப்பொருள் பாவனையை எதிர்த்தும், அண்மையில் பாடசாலை சிறுவன் பொலிசாருக்கு தகவல் வழங்கியமைக்காக தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தும் நேற்றுகிளிநொச்சியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பமாகியது. கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கவன ஈர்ப்பு பேரணி கிளிநொச்சி பொலிஸ் நிலயம் வரை சென்றது.

போதைப்பொருள் எதிர்ப்பு பதாதைகள் ஏந்தியவாறு குறித் கவன ஈர்ப்பு பேரணி ஏ9 வீதி ஊடாக கிளிநொச்சி பொலிஸ் நிலயத்தை வந்தடைந்தது. தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் மற்றும் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிகாரி ஆகியுாருக்கான மகஜர்கள் கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமார அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து தாக்கப்பட்ட பாடசாலை மாணவனிற்கு ஆதரவாகவும், குறித்த சம்பவத்தை கண்டித்தும் கண்டனங்கள் சிவில் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டன. தொடர்ந்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்தார்.

# சுங்கப் பணியாளர்கள் வேலைநிறுத்தம் தொடர்கிறது

இலங்கை சுங்கப் பணியாளர்கள் மேற்கொண்டுள்ள தொழிற்சங்க போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இந்த போராட்டம் காரணமாக நாளொன்றுக்கு சுமார் 02 பில்லியன் ரூபா நட்டம் அரசுக்கு ஏற்படுவதாக வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ள தொழிற்சங்கம் கூறியுள்ளது.

இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகமாக இருந்த பி.எஸ்.எம். சார்ள்ஸ் திடீரென இடமாற்றப்பட்டு அதற்குப் பதிலாக இலங்கை பாதுகாப்புச் சேவையின் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக இலங்கை சுங்கப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிதியமைச்சர் மங்கள சமரவீர மற்றும் போராட்டம் மேற்கொண்டுள்ள தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்துள்ளது.

இந்த நிலமை காரணமாக அரசாங்கத்திற்கு நாளொன்றிற்கு கிடைக்கின்ற சுமார் 04 பில்லியன் ரூபா வருமானம் 02 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

# அதிகாரிகளின் அசமந்தப் போக்கு

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள. கிண்ணியா பாலத்தருகே திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்திருக்கும் பிரமாண்டமான வரவேற்புக்கோபுரத்தின் இருபக்கங்களும் பொருத்தப்பட்டிருக்கும் மணிக்கூடுகள் செயலிழந்து இரண்டுவருடமாகியும் இன்னும் இதனைப் புனரமைக்க உரிய பகுதியினர் முன்வரவில்லையென பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே பொது மக்கள் சரியான நேரத்தினை அறிந்து செயற்படவும் இவ் வரவேற்புக்கோபுரத்தில் இவ் மணிக்கூடு பொருத்தப்பட்ட நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கும் ஏதுவாகவும் உரிய பகுதியினர் கவனமேடுத்து இவ் கிண்ணியா வரவேற்புக்கோபுரத்தில் பழுதடைந்துள்ளமணிககூட்டினை திருத்தியமைக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## எங்கள்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

நாங்கள் கையெழுத்துக்களை சேகரித்து வருவதாக உங்களுக்கு தெரிவிக்க இங்கு வந்துள்ளோம். மாசி மாதம், எமது சுழற்சி முறை உண்ணா விரத்தின் 2 வருட பூர்த்தி வரும் நாளில் எமது கையெழுத்து சேகரிப்பை ஆரம்பிக்கவுள்ளோம்.

காணாமற் போன பிள்ளைகளை கண்டுபிடிக்க உதவுவதற்கு, அமெரிக்கா மட்டுமே காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடிக்க சிறந்த அறிவாற்றல் தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது, சிறந்த உபகரணங்களைக் கொண்டுள்ளது, பல கஷ்டமான இடங்களை அடைவதற்கு போக்குவரத்து வசதிகளை கொண்டுள்ளது.

அமெரிக்கர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் உலகத் தலைவர்கள். அவர்களை நாம் கேட்டுக் கொண்டால், நிச்சயமாக அவர்கள் இங்கே வருவார்கள்.

அவர்கள் உலகில் மிக வலு வாய்ந்த சக்தியாக இருக்கிறார்கள், அவர்கள் இல்லாமல் இந்த உலகில் எதுவும் அசையாது மட்டுமல்ல ஒன்றுமே நடக்காது. அவர்கள் மனித உரிமை ஆதரவாளர்கள்.

வடக்கில் எமது பெரும்பான்மையை இழக்க நேரிடும் , சிங்கள அரசாங்கத்தால் அழிக்கப்படுகிறோம். கிழக்கில் தமிழர்கள் முஸ்லீம்களாக மாற்றப்படுகிறார்கள், சிங்கள குடியேற்றங்கள் நடந்து வருகின்றன, சிங்கள புத்த அடையாளங்கள் தமிழ் தாயகத்தில் பரவி வருகிறது. எங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பணம் மற்றும் சலுகைகளுக்கு விற்பனையானார்கள். அவர்களில் சிலர் சிங்கள முகவராக பணிபுரிகின்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் வட-கிழக்கு இணைந்த கூட்டாச்சிக்கு நாம் அவர்களுக்கு வாக்களித்தோம்.

அவர்கள் சிங்கள பௌவுத்த ஸ்ரீறிலங்காவுக்காவின் தீர்வுக்காக வேலை செய்கிறார்கள். தமிழரை அடிமைப்படுத்துவது தான் சிறிலங்காவுக்கான தீர்வு சில பின்வருமாறு:

1. தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச விசாரணையில் இருந்து சிறிலங்காவின் யுத்தக் குற்றங்களை நிறுத்துதல்.

2. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை பலவீனப்படுத்துவதற்காக, வடக்கு மற்றும் கிழக்கின் இணைப்புக்கு எதிராக செயற்படுகின்றது.

3. தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமஷ்ட்டி அல்லது கூட்டாட்சியை கேட்க மாட்டார்கள் என்று உள்ளார்கள்.

4. ஒற்றையாட்சி கோரிக்கைக்கு சிங்கள மொழியில் அவர்கள் ஏக்ய்யா ராஜ ஜாக என்று கூறுகின்றனர். 1972 ல் சிங்கள அரசியலமைப்பில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வகை ஏக்ய்யா ராஜஜாகவேயாகும். இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பானது ஒரு சொல் விளையாட்டைக் செய்கிறது. ஒற்றையாட்சி என்ற பெயரை அகற்ற, இப்போது அவர்கள் ஒருமித்த நாடு என்று கூறி எம்மை மடையர்களா நினைக்கிறார்கள்.

5. இந்த தமிழ் தலைவர்கள், புத்தமதத்திற்கு முதன்மையான இடத்தைக் கொடுத்துள்ளனர். இந்துத்களையோ அல்லது தமிழ் கிறிஸ்தவர்களிடமிருந்து இந்தத் தலைவர் ஒருபோதும் அனுமதி கேற்கவில்லை. இது சமஷ்டிக்கு எதிரன செயல்.

6. நெடுங்கேணியில், சிங்கள குடியேற்றத்திற்கு 4000 உறுதிகளை வழங்க, ரணில், மைத்ரி உடன் இருந்து சுமந்திரனும் செல்வம் அடைக்கலநாதனும் பங்குபற்றினார்கள் .

7. பல பௌத்த கோயில்கள் தோன்றுகின்றன தமிழ்த்தாயகம் முழுவதும். இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊமையாகவும் முதுகெலும்பும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிகழ்வுகள் அனைத்தையும் பார்த்தால்.

தமிழர்கள் விரும்பாத எல்லாவற்றையும் ரி.என்.ஏ செய்து வருகிறது.

தந்தை செல்வாவை விரும்பாதததையும் , அவரின் கனவுக்கும் எதிராகவும் தொழில் படுகிறார்கள்.

இந்த சூழ்நிலையில், நாம் ஒரு வழியை கண்டுபிடிக்க வேண்டும் இவர்களின் செயலை மறுதலிக்க, ஒன்று இவர்களை இனிவரும் தேர்தலில் படு தோல்வியக்கா வேண்டும், இரண்டாவதும் முக்கியமானதும், அமெரிக்காவின் உதவியை நாட வேண்டும்.

ஒரே வழி அமெரிக்காவை அழைக்க வேண்டும். நாம் அனைவரும் அவர்களை அழைத்தால், அவர்கள் வருவார்கள். அவர்கள் வந்தால்,

1. அவர்கள் காணாமற்போன குழந்தைகளை கண்டுபிடிப்பார்கள். பெரும்பாலான குழந்தைகள் உயிருடன் இருக்கிறார்கள். இராணுவ முகாமில் உள்ள சிலர், சிலர் சிங்கள பாடசாலைகளில் உள்ளனர், அவர்களில் சிலர் வெளிநாடுகளுக்கு சிங்களவர்களால் அனுப்பப்பட்டனர்.

2. நாம் விரும்பும் அரசியல் தீர்வை பெறலாம் . அமெரிக்கா, மற்ற நாடுகளில் செய்ததை , அவர்கள் எங்களுக்கும் ஐ.நா. ஆதரவுடன் சர்வ சனா வாக்கெடுப்புக்கு உதவலாம்.

3. அவர்கள் கஞ்சா கடத்தல் மற்றும் குழப்பமான குற்றங்களை தடுக்க எங்களுக்கு உதவுவார்கள்.

4. அமெரிக்கர் வந்தால், எவரும் எம்மை இரண்டாம் வகுப்பு குடிமகனாக நடத்த மாட்டார்கள் அல்லது எங்களை தொட்டுக் கூட பார்க்க பயப்பிடுவார்கள்.

அமெரிக்கா ஸ்ரீ லங்காவில் செய்ததைப் பாருங்கள்:

1.அமெரிக்கா 2009 ல் யுத்தத்தை நிறுத்த விரும்பியது. அமெரிக்காவின் போர் கப்பல் தயாராக இருந்தது. ஆனால் சிவசங்கர் மேனன் பல யுக்திகளை பாவித்து அமெரிக்காவை ஏமாற்றினார்.

2. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், சிங்களத்துக்கு எதிராக அமெரிக்கா யுத்த குற்றங்களை உறுதிப்படுத்தி ஓர் தீர்மானம் கொண்டுவந்தது.

3. ரணில் பதவி நீக்கத்தை ரத்து செய்து வெற்றி கண்ட நாடு அமெரிக்கா.

4. அக்டோபர் 2018இல், ராஜபக்ச பிரதம மந்திரியாக வந்தவுடன், அமெரிக்கா ராஜபக்சவின் கடந்த ஆட்சியை விசாரணை செய்ய வாஷிங்டண்ணில் வழக்கு ஒன்றை பதிவு செய்தது.

## திண்ம...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

நோய்களுக்கு உள்ளாகும் போக்கும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனை கவனத்தில் கொண்டு சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரட்ன மென்பான போத்தல்களுக்கான வர்ண குறியீட்டு முறையை அறிமுகம் செய்தார். இது 2017ம் ஆண்டு தொடக்கம் அமுலில் உள்ளது.

இதன் பிரகாரம் ஆகக் கூடுதலான சீனி அடங்கியுள்ள உணவுப் பொருட்களுடன் தொடர்புடைய லேபிள்களில் சிவப்பு நிறக் குறியீடு இடம்பெறும். இலங்கையின் உணவுச் சட்டத்திற்கு அமைய இந்த வர்ண குறியீட்டு முறை நேற்று முன்தினம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

## வடக்கில்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

ரித்துள்ள நிலையில் அதனை கட்டுபடுத்தும் வகையில் விஷேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் நாட்களில் அச்சுவேலி, இளவாளை, பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களில் இவ்விஷேட தேடுதல் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் இதன் காரணமாகவே கஞ்சா கடத்தல் அதிகளவில் இடம்பெறும் பகுதியில் உள்ள மக்களது விபரங்கள் திரட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் வடமாகாணத்தை அச்சுறுத்திய ஆவா குழுவைக் கட்டுப்படுத்த வடமாகாண மக்கள் வழங்கிய தகவல் தான் உதவியது என்று அவர் கூறியுள்ளார்.

ஆவாக்குழுவைச் சேர்ந்த அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒரு சிலரை தவிர. அவர்களையும் மிக விரைவில் கைதுசெய்வோம். வாள்வெட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் தலைமறைவாகியுள்ளனர். சிலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நபர்களை மீண்டும் நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு அந்தந்த நாட்டு அரசாங்கத்திடம் கோரவுள்ளோம். இந்நடவடிக்கை பொலிஸ்மா அதிபர் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

## வடமாகாண...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

வகிபாகம் ஆளும் தரப்பாக இருக்கின்றது. அப்படியிருக்கின்ற பொழுது அவர்களால் எதற்கும் வாயைத் திறக்கமுடியாது.

இலங்கையில் நடந்த கொந்தளிப்பை தணித்து ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டோம் என்று கூறுபவர்கள், நடந்து முடிந்த யுத்தத்தில் 12 ஆயிரம் போராளிகளை சமூகமயப்படுத்தியுள்ளார்கள். ஆனால் அவர்களுக்கு நிலையான வாழ்வாதார உதவித் திட்டம் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அதற்கு அரசாங்கத்துடன் சண்டைக்கு போவதற்கு அவர்களால் முடியாது. அதேபோல் மாற்றுத்திறனாளிகளுக்கு எந்தவித உதவித் திட்டமும் இல்லை. இவற்றையெல்லாம் பெற்றுக் கொடுக்க முடியாதவர்கள் வெறுமனே அரசாங்கத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொண்டு செல்கின்றார்கள்.

இந்த அரசாங்கம் வலிந்து யுத்தத்தை எம்மீது திணித்துவிட்டும் இன்று அதன் பின்பும் சர்வதேச நியமத்தின்படி எங்களுக்கு என்னத்தை செய்துள்ளார்கள். வீட்டுத்திட்டத்தை வழங்கியதில் எம்மக்கள் பாரிய கடனாளியாக்கிவிட்டார்கள்.

யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் முடிந்தும் எங்களின் நிலங்கள் முழுவதும் விடுவிக்கப்படவில்லை. வாழ்வாதாரம் கட்டியெழுப்பப்படவில்லை. போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் விமான நிலைய அபிவிருத்தியும் இன்னபிற அபிவிருத்திகளும் எங்களுக்காக செய்யப்படவில்லை.

ஜெனீவா தொடர்பில் உண்மையான அக்கறையுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படவில்லை. மாறாக அரசாங்கத்தைக் காப்பாற்றும் நோக்கிலேயே அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

## குடு,...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

சொல்லி, போதைப்பொருட்கள் எல்லாம் மலையகத்திற்கு கொண்டு வருவது அவர்தான் என்றார்கள்.

இந்த நேரம் முழுமையாக திகாம்பரத்தின் அட்டன் மேடையில் இருந்தேன். இதனை மறந்துவிட்டு சில கருத்துகள் சொல்லும்போது எனக்கு அவர் நண்பன் என்பது மனசுக்கு வேதனையாக இருக்கிறது.

## அரசியல்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

பேரறிவாளனின் தாயார் அற்புதம் மாள்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த அற்புதம்மாள், 'சாமானியர்களுக்கு நீதி கிடைப்பதுவென்பதுவே கடினமாக உள்ள சூழலில், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி அரசு பரிந்துரைத்தும் அரசியல் காரணங்களுக்காக ஆளுநர் தாமதிப்பது முறையல்ல' என தெரிவித்தார்.

## அரசை...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

முன்வைத்துள்ளன. அடுத்த சில தினங்களுக்குள் இந்த தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி, அதன் பின்னர் கூட்டு ஒப்பந்தத்தை வர்த்தமானியில் அறிவிப்பது தொடர்பில் எதிர்காலத்தில் செயற்படுவதற்கு நாம் எண்ணியுள்ளோம். இதனிடையே கொடுப்பனவொன்று நீக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் கோரும் அனைத்தையும் வழங்குவது கடினமாகும். எனினும் அவர்களுடன் கலந்துரையாட எண்ணியுள்ளோம். சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தலையீடு செய்து ஏதேனுமொன்றை செய்ய வேண்டிய நிலை ஏற்படக்கூடும். அதற்கமைய எம்மால் எதனைச் செய்ய முடியும் என நாம் பார்ப்போம். இதுவிடயம் தொடர்பில் அரசாங்கத்தை விட்டு சில அரசியல்வாதிகள் விலகுவதாக அச்சுறுத்துகிறார்களே என்றதற்கு, அப்படிக் கூறுபவர்கள் உண்மையில் வெளியேற மாட்டார்கள். மாறாக சும்மா மக்களை உசுப்பேத்துவதற்காக அப்படிக் கூறுவார்கள். ஒவ்வொரு விடயங்களை ஒவ்வொருவர் கூறுவார்கள். இவை எப்போதும் கூறும் விடயங்கள் அல்லவா? தற்போது விலகுவதைவிட, தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கான அதிகபட்ச பயனை பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டையே தற்போது முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## பூனைக்குட்டி...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

ஒத்துழைப்பும் ஜனநாயக போராட்டத்திலும் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். சர்வதேசம் அழுத்தம் இல்லாமல் இலங்கையில் எதுவும் நடக்கப் போவதில்லை என்பதனை நாங்கள் மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இதுதான் யதார்த்தம். வழி நடத்தல் குழுவின் ஆலோசனைகள் வருகின்ற போது 82 தடவைகள் கூடி இறுதி அறிக்கை வந்துள்ளது. அந்த ஆலோசனைகள் வருகின்ற போது பல்வேறுபட்ட கருத்துக்களை நாங்கள் பார்க்கின்றோம். அண்மையில் இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகின்றார்.

நாங்கள் வழிநடத்தல் குழுவில் இனிமேல்தான் இதனை ஒப்படைத்து ஒரு அரசியல் யாப்பை எழுதப் போகின்றோம் என்று. 82 தடவைகளும் கூடியது எல்லாம் அரசியல் யாப்பு எழுதுவதற்கு அல்லவா? என்கிற கேள்வியும் எங்களுக்குள் இருக்கிறதுது.

**கி.துரைராஜசிங்கம்**

**செயலாளர், இலங்கை தமிழரசுக் கட்சி**

நீதிமன்றம் தன்னுடைய செங்கோலை உறுதியாக நிலைநாட்டிட வேண்டும் என்பதற்காக நாங்கள் தான் இந்த ஒக்டோபர் சதியை எதிர்த்து முதன் முதலாக வழக்கிட்டோம். அந்த வழக்கில் நாங்கள் வென்றோம். வென்றதன் காரணமாக எதனை நாங்கள் வென்றோம் என்பது இப்போது கேள்வியாக உள்ளது. திண்பாருக்கு தேன் எடுத்துக் கொடுத்துள்ளோம். ஒரு கட்சிக்கு ஆட்சியைக் கொடுத்துள்ளோம். எங்களுக்கு இருந்த எதிர்கட்சி தலைமை என்ற பதவியையும் நாங்கள் இழந்துள்ளோம். இதில் நாங்கள் என்ன சாதித்தோம்.

**சீ.யோகேஸ்வரன்**

**பாராளுமன்ற உறுப்பினர்**

ரணில் விக்கிரமசிங்க எங்களுக்கு நியாயமான விடயங்களை செய்தவர் என்று கூறமுடியாது. ரணில் விக்கிரமசிங்கவினால் ஏமாற்றப்பட்டவர்கள். ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் செய்கின்ற ஏமாற்று நடவடிக்கைதான் அவருக்கு இப்போது அதன்பாவம் தான் இன்று சங்கடமான நிலையை தோற்றுவித்திருக்கிறது.

## தமிழ்...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி**

தலைவர் பதவியுடன் அடங்கி முடங்கினார். அன்று உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமக்கு ஆசனங்கள் கிடைக்க வேண்டுமென்பதற்காக வெளியேறுகின்றோம், வெளியேறுகின்றோம் என்று கூறி தங்களுக்கு வேண்டிய ஆசனங்களைப் பெற்றார்கள்.











ஆனால் இன்று மீண்டும் சித்தார்த்தனும், அடைக்கலநாதனும் இந்தத் தீர்வு வராது என்றும் கூறுகின்றார்கள். இந்தத் தீர்வு வராது என்பது யாவரும் அறிந்த உண்மை. காரணம், டட்லி-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதும், பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதும், திம்புப் பேச்சுவார்த்தை நடைமுறைப்படுத்தப்படாததும், 87ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம், அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற காணி அதிகாரமும், பொலிஸ் அதிகாரங்களும் அரசியலமைப்பில் இருந்தாலும், அவை வழங்கப்படவில்லை. இதற்கு எதிராக எவர் நீதிமன்றத்திற்குச் சென்றாலும் உச்சநீதிமன்றம் நிச்சயமாக தீர்வினை வழங்கும்.

இதற்கு ஜனநாயகத்திற்கு எதிராகப் போராடிய சுமந்திரனோ, சம்பந்தனோ தயாராக இல்லை. வேறு ஒரு சட்டத்தரணியை வைத்து வாதிடுவதற்கும் இவர்கள் தயாரில்லை. வேறொருவர் சென்றால் எமது தீர்வை குழப்பிவிட்டார்கள் என்று குறைகூறுவதற்கு இருக்கிறார்கள். சம்பந்தன், சுமந்திரன், அடைக்கலநாதன், ஸ்ரீதரன் போன்றவர்கள் ரணிலுக்கு சார்பாக இருகரங்களையும் பாராளுமன்றத்தில் உயர்த்துவதும், பின்னர் அவர்களுக்கு எதிராக பேசுவதும் வழமையான பாணியாக உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக தற்பொழுது தமிழ் மக்கள் இவர்களைப் புரிந்து கொண்டதன் காரணமாக தீர்வு இனி வருமா? வராதா? என்ற கேள்விகளை இவர்களும் எழுப்பத் தொடங்கிவிட்டார்கள். விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தை காலகட்டத்தில் சந்திரிக்கா அம்மையார் 94ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு 10 வருடங்கள் நாட்டைக் கொடுப்பேன் என்று கூறி ஆட்சிக்கு வந்தார். 2001ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் கொடுப்போம் என்று கூறி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தார்.

இப்படியெல்லாம் மேலே சென்று தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று ஒஸ்லோவில் சமஷ்டி முறையான தீர்வினை ஜீ.எல்.பீரிஸ் அவர்களும் ரணில் விக்கிமசிங்கவும் கைச்சாத்திட்டதின் பின்பு மீண்டும் ஒற்றையாட்சிக்குள் முடக்கியது யார்? கூட்டுமொத்தமாக 14 தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும்தான் என்பது யாவரும் மறுக்க முடியாத உண்மை.

எனவே சம்பந்தன், சுமந்திரனை மாத்திரம் குறைகூறுவது மாத்திரமல்ல, முக்கியமாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருக்கின்ற அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது சுகபோக வாழ்க்கைகளுக்காகவும், தமது பதவிகளுக்காகவும் சிங்களத் தலைமைகளுடன் இணைந்து தமிழ் மக்களை ஏமாற்றினார்கள் என்பது வரலாற்று உண்மை.

தற்பொழுது எதிர்க்கட்சிப் பதவிகளும் பங்களாக்களையும் வைத்துக் கொண்டுள்ள இவர்கள் இதுவரை எதிர்க்கட்சிப் பதவியை வேண்டுமென்று கேட்பதன் ஊடாக தமிழர்களுக்காக இவர்கள் எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதே உண்மை. இங்கிருக்கின்ற தலைமைகள் மீண்டும் பாராளுமன்றம் வருவதும் தமிழ் மக்களை ஏமாற்றுவதையும் தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

இந்த நிலைமையை மாற்றும் வரை தமிழ் மக்களின் விடிவு ஒரு கேள்விக்குறியாகத்தான் இருக்கும்.

# சப்ரகமுவ மாகாண மத்திய நூலகத்தினால் புத்தகங்களை மீண்டும் வாசிப்போம் என்ற வேலைத்திட்டம் ஆரம்பம்!

**இரத்தினபுரி நிருபர்**

பிரபல எழுத்தாளரும் கலைஞருமான அமரர் மஹாகம சேகரவின் நினைவுதினத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண மத்திய நூலகத்தினால் புத்தகங்களை மீண்டும் வாசிப்போம் என்ற வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புத்தகங்களை மீண்டும் வாசிப்போம் என்ற வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வும், சப்ரகமுவ மாகாண மத்திய நூலகத்தின் றறற.டளடி.ளப.பழஎ.டம இணையத்தள பிரிவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண மத்திய நூலகத்தின் கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்புத்திறனை மேலும் ஊக்குவிப்பதை கருத்திற் கொண்டே புத்தகங்களை மீண்டும் வாசிப்போம் என்ற வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க பிரபல எழுத்தாளரும் கலைஞருமான அமரர் மஹாகம சேகரவின் உருவ





படத்திற்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினார். அத்தோடு சப்ரகமுவ மாகாண மத்திய நூலகத்தின் இணையத்தள பிரிவையும் ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.


இதன்போது சிரேஷ்ட ஊடகவிலாளர் மஹிந்த பிரசாத் மஸ்சிபுல, விரியுரையாளர் சுமிந்த கே.குணரத்ன மற்றும் வைத்தியர் அஜித் கல்யாண அமரசிங்க, தனுஷ்க எதிரிவீர பண்டார ஆகியோரின் சொற்பொழிவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாக்க, சப்ரகமுவ மாகாண நூலக சேவை பிரிவின் தலைவர் சலித்த கருணாரத்ன, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னால் உறுப்பினர்களான யெஹியா எம்.இப்ளார், தீபால் குணசேகர, வத்சலா ஜனாதரி பத்ம சிறி, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் டி.எம்.மாலணி, ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் ஹேரத்.பி.குலரத்ன, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் சியானி பத்மலதா, இரத்தினபரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோதாகம, உட்பட அரச அதிகாரிகள் மற்றும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொலித்தீன் அற்ற பிரதேசமாக சிகிரியா

**கரடித்தோட்ட நிரூபர்**

எதிர்வரும் மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் சிகிரியா மலைக்குன்றைப் பார்வையிடச் செல்லும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் சிகிரியா அமைந்துள்ள வலயத்திற்குள் பொலித்தீனால் சுற்றப்பட்ட உணவுப் பொருட்களையும் சிற்றுண்டி



உணவுகளையும் எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவு வீடமைப்பு, நிர்மானத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் இதனை நிர்வகிக்கும் மத்திய கலாசார நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சிகிரியா வலயம் பொலித்தீன் அற்ற பிரதேசம் எனவும் பெயர் பொறிக்கப்படவுள்ளது.

பொலித்தீனால் சுற்றப்படாத உணவுப் பொருட்களையும் சிற்றுண்டி உணவுகளையும் கொண்டு செல்வதற்கு மட்டுமே இத்திகதி முதல் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் பனிப் பொழிவால் தேயிலை தோட்டங்களில் தேயிலைக் கொழுந்துகள் கருகும் நிலை

**க.கிஷாந்தன்**

மலையகத்தில் கடும் பனிப் பொழிவால் தேயிலை தோட்டங்களில் தேயிலைக் கொழுந்துகள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் தொழிலாளர்களும் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



அக்கரப்பத்தனை பெருந் தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் பிரதேசத்தில் கடந்த வாரம் பொழிந்த பனியினால் பெல்மோரல் தோட்டத்தில் மாத்திரம் 15 ஏக்கர் தேயிலை செடிகள் கருகியுள்ளதாக இத்தோட்ட தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத் தோட்டத்தில் 80 ஏக்கர் தேயிலை மலைகள் இருக்கின்ற போதிலும் இதில் 15 ஏக்கர் பனியினால் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது 60 ஏக்கர் தேயிலை மாத்திரமே எஞ்சியுள்ள நிலையில் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பின்றி இக்கட்டான சூழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலும், தோட்ட நிர்வாகத்தினால், தினமும் பறிக்கக் கூறும் 18 கிலோகிராம் தேயிலையைப் பறிக்க முடியவில்லை எனவும், தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பள உயர்வு விவகாரமும், தற்போது பிரச்சினையாகவே இருக்கின்ற பொழுதிலும் குடும்ப பொருளாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும், குடும்ப செலவினை சமாளிக்க முடியாத சூழ் நிலையில் இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தேயிலை செடிகளில் கொழுந்து விளைச்சல் அதிகரிக்கும் வரை தமக்கு தோட்ட நிர்வாகம் நிவாரண உதவிகளை வழங்க முன்வர வேண்டுமென இத்தோட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சப்ரகமுவ மாகாண சபையின் விளையாட்டு மைதானம் விரைவில் திறந்து வைக்கப்படும்!



**இரத்தினபுரி நிருபர்**

இரத்தினபுரி புதிய நகரில் நவீன முறையில் அமைக்கப்பட்டுவரும் சப்ரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் விரைவில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரி புதிய நகரில் நவீன முறையில் அமைக்கப்பட்டுவரும் சப்ரகமுவ மாகாண சபையின் விளையாட்டு மைதானத்தை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அதன் அபிவிருத்திப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கடியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் மேற்படி மைதானத்தில் உல்லக விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம், உணவகம் உட்பட சகல வளங்களையும் கொண்டு நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அதன் அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து தொடர்ந்து கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர்,

சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் இயங்கும் மேற்படி மைதானத்தின் முதற்கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளது. கூடிய விரைவில் இவ்மைதானம் பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இரண்டாவது கட்டமாக 400 மீற்றர் ஓடுகளம் உள்ளடக்கிய மைதானம் ஒன்றும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் அரம்பகட்ட பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் டி.எம்.மாலணி, ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் ஹேரத் பி.குலரத்ன, மாகாண அரசேவை ஆணைக்குழுவின் செயலாளர் சுநேத்ரா குணவர்தன, மாகாண விளையாட்டத்துறை அமைச்சின் செயலாளர் சாமர பமுனஆராச்சி உட்பட மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# 40 வருடங்களின் பின்னர் முதற்தடவையாக இரத்தினபுரி மிஹிந்து பாடசாலையில் மீலாதுன் நபி விழா

**எம்.எல்.எஸ்.முஹம்மத்**

இரத்தினபுரி நகரின் மத்தியில் அமைந்துள்ள சிங்கள மொழி மூலப் பாடசாலையான மிஹிந்து மகா வித்தியாலயத்தில் 40 வருடங்களின் பின்னர் அப்பாடசாலையின் வரலாற்றில் முதற்தடவையாக மீழாதுன் நபி விழா இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் கே.எம்.நிமல் விஜேகுனவர்தன தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக சபரகமுவ மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ஜேசுப்பிள்ளை மற்றும் கௌரவ அதிதிகளாக இரத்தினபுரி ஜென்னத் ஜும்மா மஸ்ஜித் பிரதம பேஷ்-இமாம் அஷ்ஷேய்ஹ்.முஹம்மத் ஹுஸைன்,இரத்தினபுரி அல்மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எஸ்.எம்.மில்ஹான் உட்பட சமூக முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி பாடசாலையின் இஸ்லாம் பாட ஆசிரியை பாஹிமா நிஜார் மற்றும் முஸ்லிம் மாணவர் மஜ்லிஸின் நெறிப்படுத்தல்களின் கீழ் இடம்பெற்ற இவ்விழாவில் பாடசாலையின் உதவி அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர்கள் உட்பட முஸ்லிம் பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ஜேசுப்பிள்ளை உரையாற்றுகையில்

இப்பாடசாலை சிங்கள மொழி மூல பௌத்த மதப் பாடாசாலையாக உள்ள போதிலும் இங்கு படிக்கும் 30இற்கும் குறைவான முஸ்லிம் மாணவர்களின் மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து வருடாந்த மீழாதுன் நபி விழாவை வெகு விமர்சையாக நினைவு படுத்துகின்றமையையிட்டு முதற்கண் இப்பாடசாலையின் அதிபருக்கும்,ஆசிரியர் குழாத்திற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவின் மூலம் இங்கு படிக்கும் மாணவர்கள் மத்தியில் மாத்திரமின்றி ஆசிரியர்கள் ஊழியர்கள் அனைவர்கள் மத்தியில் சிறந்த சகவாழ்வையும் ஒற்றுமையையும் எதிர்பார்க்க முடியுமென நான் நினைக்கின்றேன்.

உண்மையான ஜனநாயகத்தையும் தேசப் பற்றையும் மத சகிப்புத் தன்மையையும் எமது மாணவர் சமூகத்தின் ஊடாகத்தான் உருவாக்க வேண்டியுள்ளோம்.

இஸ்லாமிய மார்க்கம் மிகத் தூய்மையான மார்க்கம்.அது முஸ்லீங்களுக்கு மாத்திரமின்றி முழு உலக சமுதாயத்திற்கும் சாமாதானத்தையும் முன்மாதிரியையும் கற்றுத் தருகிறது என அவர் தெரிவித்தார்.



பாடசாலையில் இடம்பெற்ற இவ்வருட மீழாத் நபி விழா போட்டியில் பங்கு பற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் இதன்போது மேடையேற்றப் பட்டதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப் பட்டன.

இரத்தினபுரி அல்மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எஸ்.எம்.மில்ஹான் இரத்தினபுரி முஸ்லிம் சமூகத்தின் சார்பாக பாடாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்தார்.

# குளவி கொட்டுக்கு இழக்காகி ஒருவர் உயிரிழப்பு

**க.கிஷாந்தன்**

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை சின்ன கட்டுக்கலை தோட்டப்பகுதியில் குளவி கொட்டுக்கு இழக்காகி கணவன் உயிரிழந்துள்ளதோடு, மனைவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கணவனும், மனைவியும் தனது மரக்கறி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது மரத்தில் இருந்த குளவி கூடு கலைந்து வந்து இவ்வாறு இவர்களை கொட்டியுள்ளது.

குளவி கொட்டியதில் கடுமையாக பாதிக்கப்பட்ட அவர், உடனடியாக லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். அவரின் மனைவி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தலவாக்கலை சின்ன கட்டுக்கலை தோட்டத்தைச் சேர்ந்த பழனியாண்டி சுப்பிரமணியம் (வயது - 72) என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிலையான சமாதானத்தை வலியுறுத்தி இரத்தினபுரியில் சர்வமத மகாநாடு

**எம்.எல்.எஸ்.முஹம்மத்**

'சர்வமதங்களையும் பேணும் தேச மக்கள் நாமாவோம்' என்ற தொனிப் பொருளின் கீழ் பிராந்திய ரீதியான சர்வத மகாநாடொன்று இரத்தினபுரியில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா கெறிடாஸ் நிறுவனம் கடந்த வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்களாக இரத்தினபுரி ஸமுதி வரவேற்பு நிலையத்தில் ஒழுங்கு செய்திருந்த இம்மகாநாட்டில் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சர்வதத் தலைவர்கள்,பிராந்திய ரீதியான முக்கிய சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொகுபோதாகம உரையாற்றுகையில்

இலங்கை பல்லின மக்கள் வாழும் ஓர் நாடு.வித்தியாசமான மதங்களையும்,வித்தியாசமான கலாச்சாரங்களையும் பின்பற்றி வரும் நாம் அடுத்த மதங்களையும்,கலாச்சாரங்களையும் புரிந்து கொள்வதற்கும்,மதிப்பதற்கும் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்நாட்டில் இலவசக் கல்வியை பெற்றுக் கொள்ளும் நாம் நாட்டின் வளர்ச்சிக்காகவும் அதன் அபிவிருத்திக்காகவும் உழைக்கவும் கடமைப் பட்டிருக்கிறோம். நிலையான சமாதானத்தை வலியுறுத்தி இடம்பெறும் இச்சர்வமத மகாநாடு இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெறுவதையிட்டு நான் பெருமைப் படுகின்றேன் என அவர் தெரிவித்தார்.



## கால் டாக்ஸி ஓட்டுநரின் தற்கொலைக்கு காரணமான போலீஸாரை அடையாளம் காண்பதில் சிக்கல்

சென்னையில் கால் டாக்ஸி ஓட்டுநர் தற்கொலைக்கு காரணமான போலீஸாரை அடையாளம் காண்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

64 போலீஸாரின் பட்டியல் தயாரிப்பு, கண்காணிப்பு கேமரா காட்சிகள், கால் டாக்ஸியில் இருந்த ஐ.டி. பெண் ஊழியரிடம் விசாரணை எனப் பல்வேறு கோணங்களில் காவல் இணை ஆணையர் விஜயகுமாரி தலைமையிலான தனிப்படை தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியைச் சேர்ந்தவர் ராஜேஷ். சென்னையில் தனியார் நிறுவனத்தில் கால் டாக்ஸி ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார். இவர் கடந்த 25-ம் தேதி சென்னை அடுத்த மறைமலை நகர் - சிங்கப்பெருமாள் கோவில் ரயில் நிலையங்கள் இடையே தண்டவாளத்தில் தலை வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

'தன் மரணத்துக்கு சென்னை போலீஸார் தான் காரணம்' என்று கூறி தனது செல்போனில் வீடியோ பதிவு செய்திருந்தார். அதில் சென்னை அண்ணா நகர் சிக்னலில் நிற்கும்போது 2 போலீஸார் தனது காரை தாக்கியதாகவும், பெண் பயணி இருப்பதையும் பொருட்படுத்தாமல் தன்னை போலீஸார் தரக்குறைவாக திட்டியதாகவும் அதில் ராஜேஷ் குறிப்பிட்டிருந்தார். திருவொற்றியூரில் சாலை யோரம் நின்றிருந்தபோது,தனது டாக்ஸியின் சக்கரத்தை பூட்டிய போலீஸார் ரூ.500 லஞ்சம்பெற்றதாகவும், ரசீது கேட்டபோது கீழ்த்தரமாக பேசியதாகவும் கூறியிருந்தார். இதுகுறித்து சென்னை காவல் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதன் தீவிர விசாரணை நடத்தி, 4 வாரத்துக்குள் விரிவான பதில் அளிக்குமாறு மாநில மனித உரிமை ஆணையம் அவருக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இதைத் தொடர்ந்து, சென்னை மேற்கு இணை ஆணையர் பி.விஜயகுமாரி தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. ராஜேஷ் தற்கொலைக்கு காரணமான போலீஸார் யார் என தனிப்படை போலீஸார் விசாரணையில் இறங்கினர்.

64 போலீஸாரின் பட்டியல்

காவல் துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. ஆனால், ராஜேஷ் குறிப்பிடுவது எந்த பிரிவு காவலர் என உறுதியாக கண்டுபிடிக்க முடியவில்லை.

இதைத் தொடர்ந்து, இந்த சம்பவத்தில் தொடர்பு உடையதாக 64 போலீஸாரின் பட்டியல் சேகரிக்கப்பட்டது. அவர்களிடம் தனித்தனியே விசாரணை நடத்தப்பட்டது. ஆனால், எந்தப் போலீஸாரும் ஒப்புக்கொள்ளவில்லை.

இதைத் தொடர்ந்து சம்பந்தப் பட்ட பகுதிகளில் இருக்கும் கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகள் ஆராயப்பட்டன. அதில், ஒரே ஒரு சிக்னலில் மட்டும் ஒரு போக்குவரத்து போலீஸார் தெரிகிறார். மற்ற கேமராக்களில் எந்தப் போலீஸின் உருவமும் பதிவாகவில்லை. இதனால், சம்பந்தப்பட்ட போலீஸாரை அடையாளம் காண்பதில் தனிப்படைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், கடைசியாக ராஜேஷ் காரில் சவாரி வந்த ஐ.டி. நிறுவன பெண் ஊழியரை போலீஸார் அடையாளம் கண்டுபிடித்து பேசினர். அவர் கூறிய தகவல்கள், சம்பந்தப்பட்ட போலீஸாரை அடையாளம் காண உதவவில்லை என்று கூறப்படுகிறது. இதுவும் தனிப்படை போலீஸாருக்கு சிக்கலை ஏற்படுத் தியுள்ளது. சம்பந்தப்பட்ட காவலரை விரைவில் அடையாளம் கண்டு கைது செய்வோம் என்று தனிப்படை போலீஸார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்தச் சூழலில், ராஜேஷ் இறப்புக்கு காரணமான போலீஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது குடும்பத்துக்கு அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். இதுபோல எதிர் காலத்தில் கால் டாக்ஸி ஓட்டுநர்கள் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கால் டாக்ஸி ஓட்டுநர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## ராமதாஸ் கொலை அச்சுறுத்தல் விடுக்கிறார் காடுவெட்டி குருவின் மகன் குற்றச்சாட்டு




பாமக நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ஆகியோரின் அச்சுறுத்தல்களால் ஒவ்வொரு நாளும் குடும்பத்தோடு நாங்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகிறோம் என காடுவெட்டி குருவின் மகன் கனலரசன் தெரிவித்தார்.

மறைந்த வன்னியர் சங்கத் தலைவர் ஜெ.குருவின் பிறந்தநாளையொட்டி அரியலூர் மாவட்டம் காடுவெட்டியில் உள்ளகுருவின் நினைவிடத்தில் அவரது மகன் கனலரசன் உள்ளிட்ட ஏராளமானோர் புகழஞ்சலி செலுத்தினர்.

பின்னர், கனலரசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:என் தந்தை இறந்தது முதல் பாமக நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ஆகியோரின் அச்சுறுத்தல்களால் ஒவ்வொரு நாளும் குடும்பத்தோடு நாங்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகிறோம். என் தந்தையை மருத்துவமனையில் கொன்று விட்டார்கள். என் தந்தையின் பிறந்த நாளை வன்னியர் ஜெயந்தி விழாவாக நடத்தக்கூடாது என பாமக நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ஆகியோர் தடுக்க முயற்சிக்கின்றனர்.

என் தந்தை குருவின் பெயரையும் புகழையும் மறைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நாகை வி.ஜி.கே.மணிகண்டன் மற்றும் அவரது ஆதரவாளர்களுக்கு மட்டுமே தடை உத்தரவு என கூறியிருந்த நிலையில், பல்வேறு மாவட்டங்களிலிருந்து அஞ்சலி செலுத்துவதற்காக என் தந்தையின் நினைவிடத்துக்கு வந்த தொண்டர்களை உள்ளே செல்ல விடாமல் காவல் துறையினர் தடுத்தனர்.

எங்களின் சார்பில் வன்னியர் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும். மாநிலம் முழுவதும் பாதிக்கப்பட்டு வரும் வன்னிய சொந்தங்களை ஒன்றிணைத்து, அவர்களின் உரிமைக்காக நாங்கள் குரல் கொடுப்போம். அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம் என்றார்.

## வங்கி அதிகாரி போல் நடித்து கவனத்தை திசை திருப்பிய நபர் ஆட்டோ ஓட்டுநரிடம் பணம் பறித்து மாயம்

ஆட்டோவுக்கு தவணை கட்ட வந்த தந்தை மற்றும் மகனின் கவனத்தை திசைதிருப்பி வங்கி அதிகாரி போல் நடித்து பணத்தைப் பறித்துச் சென்ற நபரை போலீஸார் தேடி வருகின்றனர்.

ஷெனாய் நகர், அருணாச்சலம் தெருவில் வசிப்பவர் முனுசாமி (50). இவரது மகன் சரண் குமார் (20). இவர்கள் சொநதமாக ஆட்டோ வைத்துள்ளனர். ஆட்டோவை நியூ ஆவடி சாலையில் உள்ள இந்தியன் வங்கியின் நிதியுதவியுடன் வாங்கி ஓட்டி வருகின்றனர்.

முனுசாமி மாதம் ரூ.11,500/- தவணை கட்ட வேண்டும். வழக்கம்போல் இந்த மாத தவணைத் தொகையை கட்டுவதற்காக தன் மகன் சரண் குமாரை அழைத்துக்கொண்டு இன்று வங்கிக்கு வந்தார் முனுசாமி. வங்கியில் கூட்டம் அதிகம் இருந்தது.

பணம் கட்டும் சலானை வாங்கி மகன் சரண் குமார் அதைப் பூர்த்தி செய்துள்ளார். பணம் கட்டும் இடத்தில் கும்பல் அதிகம் இருந்தது. அப்போது ஒரு டிப்டாப் நபர் அங்குள்ளவர்களை வரிசையில் நில்லுங்கள், சலானைக் காட்டுங்கள், பணம் போட வந்தீர்களா? எடுக்க வந்தீர்களா? என அதிகாரத் தோரணையில் கேட்டபடி முனுசாமி அருகில் வந்துள்ளார்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளார். ஆட்டோவுக்கு லோன் பணம் கட்ட வந்தேன் என்று கூறியுள்ளார். லோன் பணத்துக்கு வேற கவுன்ட்டரில் பணம் கட்ட வேண்டும். சலானில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டித்தர வேண்டும். ரெவின்யூ ஸ்டாம்ப் எங்கே என்று கேட்டுள்ளார்.

முனுசாமி திருதிருவென விழித்துள்ளார். லைன் கிட்ட வந்து கவுன்ட்டரில் வந்து எங்கள் உயிரை வாங்க வேண்டியது என்று சிடுசிடுத்தபடி போய் ரெவின்யூ ஸ்டாம்ப் வாங்கிட்டு வாங்க சார் என்று முனுசாமியை அனுப்பியுள்ளார்.

முனுசாமி மகனிடம் சொல்லிவிட்டு ரெவின்யூ ஸ்டாம்ப் வாங்கச் சென்றார். மகன் சரண் குமார் சலானைப் பூர்த்தி செய்துவிட்டு தந்தைக்காகக் காத்திருந்தார். வங்கி ஊழியர்கள் பணியாற்றும் கவுண்டர் அருகிலிருந்து மீண்டும் அங்கு வந்த அந்த நபர் என்னப்பா சலானில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டிவிட்டாயா எனக் கேட்டுள்ளார்.

இல்ல சார், அப்பா இன்னும் வரவில்லை என்று சரண் குமார் கூற, என்னப்பா நீ நேரம் ஆகுது என சலித்துக்கொண்ட அவர் பணத்தை இங்கு கொடு நீ சீக்கிரம் போய் உங்க அப்பாவை கூட்டிக்கிட்டு இந்த கவுண்டருக்குள்ள நேரா வந்துவிடு என்று பணத்தை வாங்கிக்கொண்டு மீண்டும் வங்கியின் கவுன்ட்டருக்குள் சென்றுள்ளார்.

வங்கி அதிகாரி நமக்காக எவ்வளவு மெனக்கெடுகிறார் என்கிற சந்தோஷத்துடன் சரண் குமார் ரெவின்யூ ஸ்டாம்ப் வாங்கச் சென்ற தந்தையைத் தேடிச் சென்றார். பின்னர் ரெவின்யூ ஸ்டாம்புடன் இருவரும் வங்கிக்கு வந்தனர். வங்கி ஊழியர்கள் பணியாற்றும் கவுன்ட்டருக்கு சென்ற தந்தையும் மகனும் அந்த அதிகாரியைத் தேடியுள்ளனர்.

ஆனால் யாரையும் காணவில்லை. அவரது அடையாளத்தைச் சொல்லிக் கேட்டுள்ளனர். அப்படி ஒரு ஆளே வங்கியில் வேலை செய்யவில்லை. வங்கிக்குள் மேனேஜரைப் பார்க்கக்கூட யாராவது கவுன்ட்டருக்குள் வந்துவிட்டு வெளியே வருவார்கள். அவர்களை எல்லாம் வங்கி அதிகாரிகள் என நம்புவதா? என கேட்ட வங்கிப் பணியாளர்கள் போய் போலீஸில் புகார் கொடுங்கள் என்று அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து டி.பி.சத்திரம் போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்ததன் பேரில் போலீஸார் வங்கிக்கு வந்து விசாரணை நடத்தினர். அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளைப் பார்த்தபோது ஏமாற்றிய நபரை சரண் குமார் அடையாளம் காட்டினார். இதையடுத்து அந்த நபரைப் போலீஸார் தேடி வருகின்றனர்.

வங்கிக்கு வருபவர்கள் தங்களை இடைமறித்துப் பேசும் நபர்களை நம்பாமல் வங்கியில் உள்ள அலுவலர்கள், மக்கள் தொடர்பு அலுவலர்களை தொடர்புகொண்டு உதவி பெறும்படி போலீஸார் அறிவுறுத்தினர்.

## மீனாட்சி கோயில் கும்பாபிஷேகம் 2020 - 21ல் நடத்த ஏற்பாடு



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தீ விபத்து சம்பவத்துக்கு பின் வீரவசந்தராயர் மண்டபம் புனரமைப்பு பணி முடிந்ததும் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடுகள் நடக்கிறது.

இக்கோயிலில் பழமையான வீரவசந்தராயர் மண்டபம் கடந்தாண்டு பிப்.,2 நள்ளிரவு தீ விபத்துக்கு உள்ளாகி ஒரு பகுதி இடிந்து விழுந்தது. பழமை மாறாமல் புனரமைப்பு பணியை மேற்கொள்ள பொதுப்பணித்துறை ஓய்வு தலைமை பொறியாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் 12 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக்குழு பரிந்துரைப்படி 20 கோடி ரூபாய் மதிப்பில் வீரவசந்தராயர் மண்டபம் புனரமைக்கப்படவுள்ளது.இதற்காக நாமக்கல் மாவட்டம் பட்டினம் பகுதியில் பழமையான, குளிர்ச்சியான, நன்கு விளைந்த கருங்கற்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதனை வெட்டி எடுத்து கொள்ள அரசு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

கோயில் கும்பாபிஷேகம் கடந்த 2009 ல் நடந்தது. 12 ஆண்டுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். எனவே, வீரவசந்தராயர் மண்டபம் புனரமைப்பு பணியை விரைவில் முடித்து 2020 - 21 ல் கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடுகள் நடக்கிறது.

## அஜித்தை அழைத்த அண்ணா பல்கலைக்கழகம்



அண்மைக்காலமாக நடிகர் அஜித் அண்ணா பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் கல்லூரியில் தக்க்ஷா என்ற மாணவ தொழில்நுட்ப குழுவின் சிறப்பு ஆலோசகராக பணியாற்றி வருகிறார். அந்த குழுவினருடன் சேர்ந்து ஏற்கனவே சிறிய ரக விமானங்கள் போன்றவை உருவாக்கி சாதனை படைத்தது வந்த நிலையில் அஜித்தின் தக்க்ஷா குழுவினரால் வடிவமைக்கப்பட்ட 60 முதல் 80 கிலோ வரை எடையுள்ள பொருட்களை தாங்கும் திறன் உள்ள ஏர்டாக்ஸி நந்தம்பாக்கம் டிரேட் சென்டரில் நடந்த உலக முதலீட்டாளர் மாநாட்டில் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள அந்த ஏர் டாக்சியில் பயணித்தால் கூகுள் மேப் போலவே நாம் எந்த இடத்திற்கு செல்ல வேண்டுமோ அந்த இடத்தை கொடுத்துவிட்டால் அந்த திசைக்கு அழைத்துச் செல்லும் இந்த டாக்ஸியில் 45 நிமிடங்கள் தொடர்ந்து பயணிக்க முடியும் என்றும் அக்குழு கூறியிருந்தது.

இந்நிலையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆளில்லா விமான ஆய்வு மையம் அமைப்பு நடிகர் அஜித்திற்கு ஒரு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

வரும் காலங்களில் விரும்பினால் மீண்டும் ஆலோசகராக கவுரவ பணியில் பணியாற்ற வேண்டும் என்று அக்குழு அவரிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## மெக்சிகோவில் கடும் நிலநடுக்கம் கட்டிடங்கள் குலுங்கியதால் மக்கள் பதற்றம்

மெக்சிகோவின் தெற்குப் பகுதியில் உள்ளூர் நேரப்படி நேற்று காலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. சியாபாஸ் மாநிலம் தபசுலாவில் இருந்து 10 மைல் தொலைவில், கடலுக்கடியில் 40 மைல் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

நிலநடுக்கம் காரணமாக கட்டிடங்கள் கடுமையாக குலுங்கின. இதனால் பொதுமக்கள், பயந்துபோய் வீடுகளை விட்டு வெளியேறி நீண்ட நேரம் திறந்த வெளியில் தஞ்சமடைந்தனர். சில கட்டிடங்களில் லேசான விரிசல் ஏற்பட்டு, சிமெண்ட் பூச்சு பெயர்ந்து விழுந்தது. நிலநடுக்கம் காரணமாக சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, சாலைகளில் கற்கள் பெயர்ந்து விழுந்துள்ளன.

தலைநகர் மெக்சிகோ சிட்டியிலும் நில அதிர்வு உணரப்பட்டது. அண்டை நாடான கவுதமாலா, எல்சால்வடோர் ஆகிய நாடுகளிலும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

எனினும் நிலநடுக்கம் மற்றும் அதனால் ஏற்பட்ட விபத்துக்களில் பெரிய அளவில் சேதமோ, உயிர்ச்சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை.

இதே பகுதியில் கடந்த 2017ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டபோது, 100 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னர் மெக்சிகோ சிட்டி உள்ளிட்ட மத்திய பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் (7.1 ரிக்டர்), 400க்கும் மேற்பட்டோரை பலி வாங்கியது குறிப்பிடத்தக்கது.

## ஐஸ்கிரீமை நாக்கால் சாப்பிடக் கூடாது; பெண்களுக்கு துருக்கி விதித்த புதிய விதிமுறை



துருக்கியில் பெண்கள் ஐஸ்கீரிமை எவ்வாறு சாப்பிட வேண்டும் என்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விதிமுறைகள் சமூக வலைதளங்களில் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளது.

துருக்கியில் உள்ள பக்சிலர் மாவட்டதில் மாநகராட்சி அமைப்பு ஒன்று, பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு மாதம் பயிற்சி வகுப்பை தொடங்கியுள்ளது. இந்த பயிற்சி வகுப்பு வாரத்துக்கு 2 மணி நேரம் நடைபெறுகிறது.

இந்த பயிற்சி வகுப்பில் பெண்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ள விதிமுறைகள்தான் தற்போது துருக்கியில் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளது.

அதிலும் குறிப்பாக அந்த பயிற்சி வகுப்பில் பெண்கள் நாக்கால் ஐஸ்கீரிமை சாப்பிடக் கூடாது என்று கூறப்பட்டுள்ளதாம்.

இதனைத் தான் தற்போது சமூக ஊடகங்களில் அந்த நாட்டு பெண்கள் ஐஸ்கிரிமை இனி நாம் உருகிய பின் தான் சாப்பிட வேண்டும் என்று கடுமையாக விமர்சித்துள்ளனர்.

இது மிகவும் ஆபத்தான போக்கு பெண்கள் ஐஸ்கீரிமை எப்படி சாப்பிட வேண்டும் என்று கூற இவர்கள் யார்? நாங்கள் எப்படி இருகிறோமோ அப்படியே எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று துருக்கி பெண்கள் அமைப்புகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## வழிதவறிய 3 வயது சிறுவனை 2 நாட்களாகப் பாதுகாத்த கரடி

அமெரிக்காவின் நார்த் கரோலினா மாநிலத்தில் வழிதவறி காட்டுக்குள் சென்ற 3 சிறுவனை 2 நாட்களாக கரடி ஒன்று பாதுகாத்த அதிசய சம்பவம் நடந்துள்ளது.

நார்த் கரோலினாவில் உள்ள கிராவன் கவுண்டியில் எர்னல் நகரைச் சேர்ந்த சிறுவன் கேஸே ஹதாவே (வயது 3). கடந்த வாரம் செவ்வாய்க்கிழமையன்று தனது பாட்டி வீட்டில் மற்ற குழந்தைகளுடன் கேலே ஹதாவே விளையாடிக் கொண்டிருந்தான். விளையாடி முடித்துவிட்டு மற்ற குழந்தைகள் வீட்டுக்குச் சென்ற நிலையில் கேஹே ஹதாவே மட்டும் வூட்ஸ்காட்டுப் பகுதிக்குள் வழிதவறிச் சென்றுவிட்டான்.

இந்நிலையில், கேஸே ஹதாவே நீண்ட நேரம் ஆகியும் வீட்டுக்கு வராதது குறித்து அவரின் பெற்றோர் கவலையடைந்து தேடத் தொடங்கினர். மேலும், போலீஸார், தன்னார்வ அமைப்புகளுக்குத் தகவல் அளித்து கேஸே ஹதாவேவை தேடும் பணியைத் தீவிரப்படுத்தினார்கள்.

நார்த் கரோலினா வனப் பகுதியில், கறுப்புநிறக் கரடிகள் அதிக அளவில் வாழ்கின்றன. இந்தக் கரடிகளால் சிறுவன் ஹதாவே தாக்கப்படலாம் எனக் கருதி தீவிரமாகத் தேடினார்கள். மேலும், இரவுநேரத்தில் மைனல் 3 டிகிரியாக குளிர் நிலவும், குளிரைத் தாக்கும் உடையையும் சிறுவன் ஹதாவே அணியவில்லை என்பதால், பெற்றோர் மிகுந்த பதற்றமடைந்தனர். ஏறக்குறைய இரு நாட்கள் ஹெலிகாப்டர், ட்ரோன்கள், போலீஸார், தன்னார்வ அமைப்புகள் சேர்ந்து தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும், இரு நாட்களாக மழையும் பெய்ததால், சிறுவனின் நிலை குறித்து அனைவரும் கவலையடைந்தனர். இந்நிலையில், கடந்த வாரம் வியாழக்கிழமை ஊட்ஸ் காட்டுப்பகுதியில் சிறுவனின் அழுகுரல் வனப்பகுதிக்குள் சாகசப் பயணம் சென்ற பெண்ணுக்குக் கேட்டுள்ளது. இதையடுத்து, அந்த இடத்துக்குச் சென்ற பெண் அந்தக் காட்சியைப் பார்த்து ஆச்சர்ய அதிர்ச்சி அடைந்துள்ளார்.

ஒரு மிகப்பெரிய கரடி, சிறுவனைப் பாதுகாப்பாக வைத்திருப்பதை அந்தப் பெண் பார்த்துள்ளார். அப்பெண்ணைப் பார்த்தவுடன் அந்தக் கரடி அங்கிருந்து சென்றது. அதன்பின் சிறுவன் ஹதாவேவை அழைத்துக் கொண்டு வந்து கிராவன் கவுண்டி போலீஸில் அந்தப் பெண் ஒப்படைத்துள்ளார். இது குறித்து கிராவன் கவுண்டி போலீஸ் அதிகாரி சிப் ஹக்ஸ் கூறுகையில், வனப் பகுதிக்குள் சிக்கிய சிறுவன் ஹதாவேவை கடந்த 2 நாட்களாக ஒரு கரடி பாதுகாத்துள்ளது. ஒரு பெண் காட்டுக்குள் தனது நாயுடன் சென்றபோது சிறுவனின் அழுகுரல் கேட்டு மீட்டு வந்துள்ளார். சிறுவனை 2 நாட்களாகக் கரடி பாதுகாத்தது வியப்பாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

சிறுவன் ஹதாவே கிடைத்த மகிழ்ச்சியில் அவனின் தாய் பிரணியா ஹதாவே ஃபேஸ்புக்கில் பதிவிடுகையில், 'எனது மகனை ஒரு பெரிய கரடி ஒன்று 2 நாட்களாகக் காட்டில் பாதுகாத்து வைத்துள்ளது. கடவுள்தான் அவனுக்கு ஒரு நண்பனை அனுப்பிப் பாதுகாத்துள்ளார். எப்போதாவது இதுபோல் அதிசயங்கள் நடக்கின்றன' எனத் தெரிவித்துள்ளார்.

## கூகுள் நிறுவனத்திற்கு அபராதம்

ரஷியாவில் 'கூகுள்'உள்ளிட்ட தேடுபொறிகளில், சட்டவிரோத தகவல்களை கொண்ட தளங்கள் இடம் பெறக்கூடாது என கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் அரசு புதிய சட்டம் இயற்றியது. ஆனால் 'கூகுள்' தேடுபொறி இந்த சட்டத்தை பின்பற்றவில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்தன. தடை செய்யப்பட்ட தளங்கள் அந்த தேடுபொறியில் தொடர்ந்து இடம் பெற்று வந்தன. இதையடுத்து சட்ட விதிகளை மீறிய குற்றத்துக்காக 'கூகுள்' நிறுவனத்துக்கு 7 ஆயிரத்து 600 அமெரிக்க டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ.5.4 லட்சம்) அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த அபராத தொகையை 'கூகுள்'நிறுவனம் செலுத்தி விட்டதாக ரஷிய தகவல் தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய். உரிமையாய். உணர்வாய்.

ஞாயிற்றுக்கிழமை 03.02.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

## மறக்கப்படும் விடுதலை வேட்கையும் மறுக்கப்படும் சுதந்திரமும்

சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளைத் தாண்டிய நிலையிலும் இலங்கையில் தமிழர்களுக்கு பூரண சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதை கடந்த காலங்களில் இனவிடுதலைப் போராட்டங்கள் வெளிக்காட்டியுள்ளன. இன்று தமிழரின் விடுதலை வேட்கை மறக்கக்கப்படுகின்ற அதேவேளையில் சுதந்திர தாகமும் மறுக்கப்படுகின்றது. தமிழரின் அரசியல் தலைமைகளான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தேர்தல் அரசியலுக்குள் மூழ்கிப் போயுள்ளனர். மக்கள் திரள் அரசியல் பற்றிய அக்கறையில் அரசியல் தலைமைகள் இல்லை. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாளை கரிநாளாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பிரகடனப்படுத்துகிறது. இது மாணவர்களின் வேட்கை மட்டுமல்ல. உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் யதார்த்தம் ஆகும். ஆயுத ரீதியான யுத்தம் முடிந்தததாக சர்வதேசத்திற்கு காட்டப்பட்டாலும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையில் சுதந்திரம் குறைந்திருக்கவில்லை.

விதேசிகளின் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 71 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னமும் அதன் வடுக்கள் மறைந்தும் மறையாது உள்ளது. ஆதியில் இலங்கையில் பல்லினச் சமூகமும் சுதந்திரமாக வாழ்ந்தன. பலதரப்பட்ட குறுநில மன்னர்களால் கூறுகளாக்கப்பட்டு இலங்கை ஆட்சிசெய்யப்பட்டது. குறுநில மன்னர்களின் ஆட்சியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளை அனுபவித்து சுதந்திரமாகவும், சந்தோசமாகவும், சகோதரத்துடன் வாழ்ந்ததையே வரலாறு காட்டி நிற்கின்றது. பின்னர் குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சியில் 1815ம் ஆண்டிலேயே முடிக்குரிய பிரித்தானிய அரசினால் இலங்கை ஒரே நாடாக உருவாக்கப்ட்டு நிர்வாக அலகுகள் பிரிக்கப்பட்டு பிரித்தானிய ஆளுனரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இச் செயல் ஒழுங்கானது இலங்கையில் இன்றுவரை இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுப்பதற்கான மையக்கருவாக அமைகின்றது.

காலனித்துவ ஆட்சியால் ஒருசில நன்மைகளை இலங்கைவாழ் மக்கள் பெற்றுக் கொண்டாலும் இன்றுவரை தீராத புற்றுநோயாய் உள்ள இனவாதப் பிரச்சினைகளிற்கு அடிப்படையாக காலணித்துவ ஆட்சியின் பிரித்தாளும் சூழச்சியே அடிப்படையாகும். காலணித்துவ ஆட்சியாளர்களால் சுவைக்கப்பட்ட பலாப்பழத்தின் வெற்றுக் கோம்பையாகவே இன்றைய இலங்கை உள்ளதாக தேசியவாதிகள் கூறுவார்கள். இந்தியா போன்று வெள்ளையர்களிற்கு எதிராக ஆயுத ரீதியாகவும், அகிம்சை ரீதியாகவும் போராடி இலங்கை சுதந்திரத்தை பெறவில்லையாயினும், சர்வதேச நாடுகளிற்கு குறிப்பாக காலணித்துவ நாடுகளிற்கு இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மிகவும் அவசியமாகின்றது. இதனால்தான் இன்றைய இனமுரண்பாடுகளிற்கு தீர்வுகளை ஏற்படுத்தாது, இலங்கை அரசாங்கத்திற்கும்; சிறுபான்மைச் சமூக பிரதிநிகளிற்கும் சர்வேச அரசாங்கங்கள் அழுத்தங்களைப் பிரயோகித்து இலங்கையின் அரசியல் இஸ்தீரணத்தை தளர்வடைய வைக்கின்றனர். இன்றைய இலங்கையின் ஆட்சி மாற்றங்கள், ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணைகள், முஸ்லிம்களிற்கு எதிரான செயற்பாடுகள், இனப்பிரச்சினைத் தீர்வின் இழுத்தடிப்புக்கள் போன்றவற்றிற்கெல்லாம் சர்வதேச செயற்பாடுகளும் அழுத்தங்களுமே அடிப்படையாவதை உணர வேண்டிய தேவைப்பாடு இன்று எழுந்துள்ளது.

இலங்கைவாழ் மக்களிற்கு பிரித்தானிய காலனித்துவத்திடமிருந்து சுதந்திரம் கிடைத்தாலும் இவர்களால் திணிக்கப்பட்ட அரசியல் திட்டங்களாலும், நிர்வாகக் கட்டமைப்புக்களாலும் தமிழ்மக்கள் இன்றுவரை பலதரப்பட்ட இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இதனால் தமிழர்களின் சுதந்திர வேட்கை தணியாது வலுவடைந்து கொண்டே செல்கின்றது. இலங்கையின் வரலாற்றில் பல தேசிய போராட்டங்கள் இடம் பெற்றன. இவை சிங்கள பேரினவாதத் தலைவர்களால் வெற்றிகொள்ளப்பட்டவை அல்ல, மாறாக இலங்கையின் சுதந்திரத்தின் பங்காளிகளாகவும், முழுமையான செயற்பாட்டாளர்களாகவும் தம்மை அர்ப்பணித்தவர்களில் முதன்மையானவர்களாக சேர் பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம் போன்றோர் கோடிட்டுக் காட்டப்படுகின்றனர். இவர்களின் உழைப்பால் கிடைத்த சுதந்திரத்தை இன்றுவரை தமிழ்ச் சமூகம் சரியாக அனுபவிக்கவில்லை என்பதே யதார்த்தமாகும். பல்லின, பலமத, பலமொழி, பலபண்பாட்டுத் தன்மை கொண்ட இலங்கையில் அடிப்படையான யதார்த்தத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு குறுகிய கால அரசியல் அனுகூலங்களை புறந்தள்ளியும், அரசியல் தலைவர்கள் செயற்பட்டால்தான் இலங்கைத் தமிழர்களின் சுதந்திர வேட்கை தணியும்.

உண்மையான சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் சுதந்திரத்தையும் மக்கள் அனுபவிக்க வேண்டுமாயின் கண்டிப்பாக ஒரு புதிய அரசியல் திட்டம் அவசியமாகும். இதனை குறுகிய ஆட்சிக்காலத்தில் பெற்றுத் தரமுடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியுள்ளார். புதிய அரசியலமைப்பு வரைபு குறித்து ஜனநாயகப் போராளி ரணில் விக்கிரமசிங்க கொடுத்த ஒற்றையாட்சி விளக்கத்தால் சிங்களத்தோடான உறவுப்பாலமும் உடைந்துவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பறிபோய் விட்டது. இதனால் சினமடைந்த பாராளுமன்றத் தமிழ்த் தலைவர்களை சில உலகத் தலைவர்கள் சந்தித்து ஆறுதல் வார்த்தைகள் கூறியுள்ளார்கள். அடுத்த தேர்தலில் சர்வதேசத்தின் தேவைகளுக்கேற்ப தமிழ்த்தலைமைகளால் தமிழ் மக்கள் பிழையாக வழிநடத்தப்படுவார்கள். தமிழ் தேசிய அரசியலையும் பௌத்த பேரினவாத கொழும்பு அரசியலையும் இணைக்கும் சுமந்திரனின் அரசியல் நகர்வுகள் தொடர்ந்தும் சறுகலைச் சந்தித்தவாறே நகர்கின்றன. இந்நிலையில் தமிழ் மக்கள் சுதந்திரமான மனநிலை அற்றவர்களாக சுதந்திரதினத்தைக் கொண்டாட முடியாதவர்களாகவே வாழ்கின்றனர்.

தமிழர்களின் நிரந்த தீர்வின் மூலமாக அவர்களில் மனங்களையும் வெல்வதனாலேயே தமிழரின் தொடரும் சுதந்திர வேட்கை தணியும் என்பதே இன்றைய சிந்தனைப் பொருளாக வலியுறுத்துகிறேன்.

# அரசியற் சூழ்நிலையை சாதகமாக்குமா கூட்டமைப்பு?



சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளுடன் தென்னிலங்கையின் அரசியல் சமநிலை குழம்பிவிட்டது. தற்போது நடைபெற்றுவரும் ஆட்சிக் குழப்பங்களால் சிங்கள - தமிழ் -முஸ்லிம் முறுகல் நிலையானது, நாட்டின் ஸ்திரத்தன்மையை மேலும் பாதித்திருக்கிறது. இவ்வாறானதொரு சூழலில் கூட்டமைப்பு அல்லது இலங்கை தமிழரசு கட்சி இதுவரை வெளியிட்டுவந்த அரசியல் தீர்வு தொடர்பான நம்பிக்கைகள் அனைத்தும் கானல் நீராகிவிட்டது. சம்பந்தன் அரசியல் தீர்வு தொடர்பில் தொடர்ந்தும் நம்பிக்கையை வெளிப்படுத்தி வந்தார். புதிய அரசியல் யாப்பு ஒன்றின் ஊடாக அரசியல் தீர்வு கிடைக்கும் என்பதே தமிழ் மக்களுக்கு சொல்லப்பட்டுவந்த கதை.

தற்போது அந்தக் கதையை எழுதிய சம்பந்தன்-சுமந்திரன் தரப்பு கதையின் போக்கை எவ்வாறு மாற்றி எழுதுவதென்று தெரியாமல் குழம்பிப் போயிருக்கின்றனர். கடந்த 2015, ஜனவரி 8இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டமையானது, ஒரு திணிக்கப்பட்ட ஆட்சி மாற்றமேயன்றி, இலங்கை மக்களின் விரும்பங்களிலிருந்து இயல்பாக ஏற்பட்ட ஒன்றல்ல. ஆட்சியார்கள் மீது அதிருப்தி ஏற்பட்டால் மக்கள் அந்த ஆட்சிக்கு எதிராக சிந்திப்பார்கள் என்பது இயல்பே.

இன்றைய அரசியற் குழப்பங்களின் மத்தியில் நாட்டின் நிலைமைகளை ஆழமாக அவதானித்தால் ஆட்சி மாற்றம் தொடர்பான கற்பனைகள் அனைத்துமே ஒரு முடிவுக்கு வந்துவிட்டன. உண்மையில் ஆட்சி மாற்றம் என்பது தற்போது அந்த ஆட்சியை தக்கவைப்பதற்கான அரசியலாக சுருங்கியிருக்கிறது.

இதனை இன்னும் ஆழமாக பார்த்தால், ஆட்சி மாற்றம் தமிழர்களுக்கான அரசியல் வெளியை மேலும் சுருக்கியிருக்கிறது. கூட்டமைப்பை வெறுமனே தென்னிலங்கையை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு அமைப்பாக குறைத்திருக்கிறது. இடைக்கால அறிக்கை, புதிய அரசியல் யாப்பு, நிலைமாறு கால நீதி என்பவற்றின் கதை இனி நீளப் போவதில்லை. கூட்டமைப்பின் அரசியல் களத்தை நிலைகுலைய வைத்துள்ளது. அரசியல் விவகாரங்களில் தோல்வி அடைவது ஒரு பாரதூரமான விடயமல்ல. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை ஆனால் சூழ்நிலை சாதகமாக இருக்கின்ற போதே எடுக்கக் கூடியவைகளை எடுத்துக் கொள்வதுதான் ஒரு தலைமையின் பணியாக இருக்க வேண்டும். அதுதான் தலைமையின் அழகு. அதற்காக அடிப்படைகளை விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதல்ல மாறாக குறித்த சூழ்நிலையை எந்தளவு தூரம் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்தளவிற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆட்சி மாற்றம் ஒரு சாதகமான சூழ்நிலையை வழங்கியிருந்தது. அதனை அடிப்படையாக் கொண்டு, மாகாண சபை முறைமையிலுள்ள சில சிக்கல்களை களையும் வகையில் சில ஏற்பாடுகளை செய்யுமாறு அரசாங்கத்தை கோரியிருக்கலாம். ஆளுனரின் அதிகாரங்களை குறைக்குமாறு வலியுறுத்தியிருக்காலம். அதற்கு அரசாங்கம் உடன்படாது விட்டிருந்தால் அதனையையே புதிய அரசியல் யாப்பு விடயங்களுக்கான ஒரு நிபந்தனையாக மாற்றியிருக்கலாம். ஒரு இடைக்கால ஏற்பாடாக சில விடயங்களை செய்து காண்பித்தால்தான் வழிகாட்டல் குழுவில் நாம் பங்குபற்றலாம் என்றவாறு பிடியை தொடர்ந்தும் கூட்டமைப்பின் பக்கமாகவே வைத்திருந்திருக்கலாம்.

இல்லாவிட்டால் நாங்கள் தனித்தரப்பாகத்தான் பேச முடியும் என்றவாறு பந்தை எப்போதும் கூட்டமைப்பின் பக்கமாகவே வைத்திருந்திருக்கலாம். ஆனால் தமிழ்த் தலைமை சம்பந்தன் ஐயா எதனையுமே செய்யவில்லை. இவ்விடயத்தில் வெறுமனே சம்பந்தன் - சுமந்திரன் தரப்பை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இதில் பெரிய பங்குண்டு. அவர்கள் தங்களின் பொறுப்புக்களிலிருந்து வாய்ப்பாக விலகிக் கொண்டு செல்வதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். தாங்கள் இருக்கின்ற ஒரு இடத்தில் விடயங்கள் தவறாக அனுகப்படுகின்றன என்றால், ஒன்றில் அதனை திருத்தியமைக்க வேண்டும் அல்லது அங்கிருந்து வெளியேற வேண்டும். ஆனால் பங்காளிக் கட்சிகளோ இரண்டையுமே செய்யவில்லை என்பது தமிழ் தரப்பினரிடமிருந்து வரும் குற்றச்சாட்டுக்களாக காணப்படுகின்றன.

தமிழ் அரசியலும் கிட்டத்தட்ட விநோத அரங்கான ஒரு நிலையில்தான் இருக்கிறது. எவரிடமும் எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை. ஆனால் மேடை முழக்கங்கள் மட்டுமுண்டு. இது கூட்டமைப்புக்கு மட்டுமல்ல கூட்டமைப்பிற்கு வெளியில் இருப்பவர்களுக்கும் பொருந்தும் ஒரு கருத்தாகவே அமைந்துள்ளது.

அரசியலில் கட்சிகளுக்கு வாய்ப்புக்கள் வராமல் போகாது. ஆனால் அவ்வாறு வாய்ப்புக்கள் வருகின்ற போது அதனை பயன்படுத்திக் கொள்ளும் திறமையுள்ள தலைவர்கள் கட்சியில் இருக்க வேண்டும். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின்படி கூட்டமைப்பின் வாக்கு வங்கி வீழ்சியடைந்திருந்தாலும் கூட, ஒரு தனிக்கட்சி என்னும் அடிப்படையில் பார்த்தால் தற்போதும் கூட்டமைப்புத்தான் வடக்கு கிழக்கிலுள்ள முதன்மையான கட்சி என்பதனை அறிய முடிகின்றதர்க குறிப்பிட்டர்லும் தற்போது அந்நிலைமை தலைகீழாக மர்றியுள்ளது.

யாழ்ப்பாணத்திற்குள் சில மாற்றங்கள் தென்பட்டாலும் கூட அந்த மாற்றங்கள் ஏனைய பகுதிகளுக்கு பரவக் கூடிய சாதகமான சூழல் இல்லை. குறிப்பாக கிழக்கில் அனைத்து கட்சிகளும் ஓரணியில் நிற்க வேண்டும் என்றவாறான கோசங்கள் பரவலாகி வருகின்றன. வடக்கின் அரசியல் சமன்பாடுகள் கிழக்கிற்கு பொருந்தாது என்பதில் நியாயமான உண்மையுண்டு. கூட்டமைப்பின் தலைவர்கள் சிந்திக்கவும் திருந்தவும் சந்தர்ப்பங்கள் இல்லாமலில்லை. ஆனால் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு கூட்டமைப்பு தன்னை திருத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மிகுந்த விழிப்புடன் செயலாற்ற வேண்டியதொரு காலகட்டம் தற்போது உருவாகியுள்ளது. கூட்டமைப்பை அடியோடு வேரறுத்து விடுகின்ற செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்ற இந்த வேளையில் கூட்டமைப்பினால் விழிப்புடன் செயலாற்றுவது அவசியமாகி விட்டது.

வடக்கு மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிராகத் தமிழரசுக்கட்சி தீர்மானமொன்றைக் கொண்டு வந்தபோதே தனக்கு எதிரான சக்திகளைக் கூட்டமைப்பு இனம் கண்டிருக்க வேண்டும். ஆனால் அதில் தவறிழைத்து விட்டது. தற்போது மாகாணசபைத்; தேர்தல் இடம்பெறப்போகும் நிலையில் எதிரணியினர் பகிரங்கமாகச் சவால் விடுத்து நிற்கின்றனர். முதலமைச்சர் விக்னேஸ்வரன் அடுத்து இடம் பெறப் போகும் மாகாணசபைத்தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன் கூறியதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. விக்னேஸ்வரன் இதை மறுத்தாலும், இந்தச் செய்தி வெளியானதற்கு ஒரிரண்டு தினங்களுக்கு முன்னால்தான் தமிழரசுக்கட்சியின் தலைமைக்கு எதிராக அவர் கருத்துக் கூறியிருந்தார். தாம் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்லவெனவும், தமது கருத்துடன் ஒத்துப்போகக் கூடியவர்கள் பேரவையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். விக்னேஸ்வரனின் மனநிலை அப்போதே தெளிவாகத் தெரிந்து விட்டது. அவர் என்ன செய்யப் போகின்றார் என்பதும் புரிந்துவிட்டது.

கட்சித் தொண்டர்களது உணர்வுகளுக்கு தமிழரசுக்கட்சி மதிப்பளிக்க வேண்டும். கூட்டமைப்பில் பிரதான இடத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி வகிக்கின்றது. அந்தக் கட்சிக்கு ஏராளமான தொண்டர்களும் உள்ளனர். கடந்த மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் கூட்டமைப்பு பெற்ற மகத்தான வெற்றிக்கு இவர்களது செயற்பாடுகளே பிரதான காரணமெனக் கூற முடியும். ஆகவே இந்தத் தொண்டர்களின் உணர்வுகளைத் தமிழரசுக்கட்சியின் தலைமை மதித்து நடந்துகொள்ள வேண்டும். கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது வேட்பாளர்கள் தெரிவில் தமிழரசுக் கட்சி தவறிழைத்து விட்டதாகப் பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தில் மதிக்கப்படாதவர்களும், ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்காதவர்களும், வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன . கட்சித் தலைமையுடன் நெருக்கமாக உள்ளவர்களுக்கு மட்டுமே வேட்பாளர் தெரிவில் முக்கியத்துவம் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நேர்மையும், தகுதியும் உள்ளவர்களுக்கு மட்டுமே இடம் வழங்கப்படுதல் வேண்டும். இனிவரும் காலகட்டம் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் கடினமானதாகவே அமையப் போகின்றது. முன்னர் போன்று எதிர்ப்பில்லாத வெற்றிகளை அதனால் ஈட்டிக்கொள்ள முடியாது.

அந்த அளவுக்கு நம்பிக்கையிழந்த மக்கள் உட்பட கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் வியூகம் வகுத்துக்கொண்டு களத்தில் குதித்துள்ளனர். இதை முறியடிப்பதற்குரிய இராஜதந்திரத்தை கூட்டமைப்பு வகுத்துச் செயற்பட வேண்டும். கூட்டமைப்புடன் ஒட்டிக்கொண்டிருக்கின்ற பச்சோந்திகளையும், புல்லுருவிகளையும் களையெடுத்துவிட வேண்டும். அவ்விதம் செய்யாதுவிட்டால் கூடவேயிருந்து குழிதோண்டி விடுகின்ற செயற்பாடுகள் கச்சிதமாக நிறைவேற்றப்பட்டுவிடும்.

மேலும் உள்ளூராட்சித்தேர்தலுடன் ஓய்ந்து விடாது, மாகாணசபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களிலும் கூட்டமைப்பின் தலைமை உடனடிக் கவனம் செலுத்துதல் வேண்டும். இதேவேளை கூட்டமைப்பின் தலைமை துணிவுடன் உறுதியான முடிவுகளை எடுப்பதில் தவறி விடுவதாகப் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. எந்த விடயமாக இருந்தாலும் துணிவுடன் உறுதியான முடிவுகளை மேற்கொள்வது தலைமையொன்றின் முக்கிய பணியாகும். ஆகவே கால நிலையைப் புரிந்து கொண்டு கூட்டமைப்பின் தலைமை விழிப்புடனும், துணிவுடனும், உறுதியாகவும் செயற்படவேண்டியது அவசியம். அதுதான் எதிர்ப்புக்களைக் கடந்து கூட்டமைப்பு கரை சேர உதவும். காலத்தின் கட்டாயமும் இதுவே. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் இதுவேயாகும்.

**கூட்டமைப்பினர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தலைமைகளை மாத்திரம் குறைகூறமுடியாது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இதில் பாரிய பங்குண்டு. அவர்கள் தங்களின் பொறுப்புக்களிலிருந்து வாய்ப்பாக விலகிக் கொண்டு செல்வதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். தாங்கள் இருக்கின்ற ஒரு இடத்தில் விடயங்கள் தவறாக அனுகப்படுகின்றன என்றால், ஒன்றில் அதனை திருத்தியமைக்க வேண்டும் அல்லது அங்கிருந்து வெளியேற வேண்டும். ஆனால் பங்காளிக் கட்சிகளோ இரண்டையுமே செய்யவில்லை என்பது தமிழ்த் தரப்பினரிடமிருந்து வரும் குற்றச்சாட்டுகளாகக் காணப்படுகின்றன**

எனவே கூட்டமைப்பிற்குள் ஆற்றல் வாய்ந்தவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். கூட்டமைப்பு தன்னை திருத்திக் கொள்ளாமலும் இருக்கலாம் ஆனால் அது தமிழ்த் தேசிய இருப்பை தொடர்ந்தும் சிதைக்கும். மக்களின் நம்பிக்கையையும் எதிர்காலத்தில் இழக்கவைக்கும். அது எதிர்வரும் தேர்தல் காலங்களிலேயே வெளிப்படும். இதனால் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை வீழ்சியடையும். இந்த இடைவெளியை தென்னிலங்கை கட்சிகள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளும். அந்நிலையில் தென்னிலங்கை கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கை பெற முயற்சிப்பதும் கூட, ஆச்சரியப்படத்ததக்க விடயம் அல்ல என்பது அப்போது புரியும்.



# கல்லடி பாலத்தின் கண்ணீர் கதை!

இரா.துரைரத்தினம்
சுவிட்சர்லாந்து

உலகில் தெற்காசிய நாடுகளே தற்கொலை மரணங்களில் முன்னணியில் இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருகிறது. மட்டக்களப்பில் மட்டும் கடந்த ஒரு வருட காலத்தில் 77 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாகும்.

அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து வாவியில் குதித்து தற்கொலை செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

மட்டக்களப்பின் அடையாளமாக திகழும் கல்லடிப் பாலம் அல்லது லேடி மனிங் பாலம் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் கட்டப்பட்ட ஓர் பாலமாகும்.

இப்பாலமே மட்டக்களப்பு வாவிக்கும் கடலுக்கும் இடைப்பட்ட எழுவான்கரை எனப்படும் பிரதான நிலப்பரப்பை இணைக்கும் பிரதான பங்கை வகிக்கிறது. இது மட்டக்களப்பின் வட பகுதியையும் தென் பகுதியையும் இப்பாலமே இணைக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே மிக முக்கியமான பாலமாகவும்

**யுத்தத்திற்குப் பின் ஆரோக்கியமான மனநிலையைக் கொண்டுவர வடகிழக்கில் எந்தவொரு திட்டமும் கொண்டு வரப்படவில்லை என்பது கசப்பான உண்மை. மனதில் இருக்கும் வடுக்கள், காயங்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்**

இலங்கையின் நீளமான பாலமாகவும் இது விளங்குகிறது.

இப்பாலத்தின் கீழ் உள்ள வாவியில் தான் பாடும் மீன்கள் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த பாடும்மீன்கள் பற்றி கடந்த காலங்களில் பல ஆய்வுகளும் நடத்தப்பட்டிருக்கின்றன.

புணீரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சேர் வில்லியம் ஹென்றி மனிங் தேசாதிபதியாக இருந்த போது 1924ஆண்டு இப்பாலம் அமைக்கப்பட்டது. இந்த பாலம் அமைக்கப்படுவதற்கு முன் மட்டக்களப்பு கோட்டைமுனையிலிருந்து கல்லடிக்கு செல்வதற்கு வாவி ஊடாக தோணிகளும், படகுகளுமே பயன்படுத்தப்பட்டது.

இதன் பின்னர் தற்கால போக்குவரத்து தேவையை நிறைவு செய்ய முடியாமல் கல்லடிப் பாலம் காணப்பட்டதால் இதற்கு அருகாமையில் புதிதாக ஓர் பாலம் 2.6 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு 2013 மார்ச் 22ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மக்களின் போக்குவரத்திற்கு பெரிதும் பயன்படும் கல்லடிப்பாலம் இப்போது தற்கொலை செய்வோருக்கான ஒரு களமாகவும் மாறிவிட்டது.

கடந்த வருடத்தில் மின்சார பொறியியலாளர் ஒருவர் கல்லடி பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

இவ்வருடம் ஜனவரி மாத ஆரம்பத்தில் 16வயது மாணவி ஒருவர் வாவியில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வெளிவந்தன. ஆனால் அது தற்கொலை அல்ல. கொலையாக இருக்கலாம் என பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

16வயது மாணவி காதலுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு வாவியில் குதித்ததாக கூறப்படுகிறது.

அதேபோன்று கடந்த வாரம் பாண்டிருப்பை சேர்ந்த தனுஷ் என்ற 22வயது இளைஞன் கல்லடி பாலத்திலிருந்து வாவியில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய இந்த இளைஞர் விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை வைத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

சிறந்த சமூக சேவையாளனாகவும், விளங்கிய இந்த இளைஞர் பல பொது அமைப்புக்களில் முக்கிய பொறுப்புக்களில் இருந்து சமூக சேவைகளை செய்து வந்திருக்கிறார்.

அண்மையில் கல்முனையில் தமிழ் இளைஞர்கள் பொங்கல் விழாவை கொண்டாடினர். அதனை ஏற்பாடு செய்வதிலும் இந்த இளைஞரே முன்னின்றதாக கூறப்படுகிறது.

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயங்களின் இந்து இளைஞர் மன்ற செயலாளராகவும், கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையின் முக்கிய உறுப்பினராகவும், பாண்டிருப்பு யூத் விளையாட்டுக்கழகத்தின் செயலாளராகவும் இவர் செயற்பட்டு வந்தார்.

பொதுபணிகளில் ஈடுபடுகொண்ட இந்த இளைஞர் தற்கொலை செய்து கொள்ளும் மனநிலைக்கு ஏன் தள்ளப்பட்டார் என்பது புரியாமல் உள்ளது.

இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் அறிமுகமாகாத காலத்தில் இலங்கையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் தற்கொலை செய்திகளை வெளியிடுவதில்லை என்ற கொள்கையுடன் செயற்பட்டன.

இன்று சமூக வலைத்தளங்களின் வருகையால் பத்திரிகைகளால் தொடர்ந்து இந்த கொள்கையில் உறுதியோடு செயற்பட முடியாமல் போய்விட்டது.

தற்கொலை செய்திகளை வெளியிடுவதால் அது தற்கொலைக்கு ஏனையவர்களையும் தூண்டும் என்ற காரணத்திற்காகவே அக்காலத்தில் இலங்கையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் தற்கொலை செய்திகளை வெளியிடாமல் தவிர்த்து கொண்டன.

விடுதலைப்புலிகளின் காலத்தில் தற்கொலை தாக்குதல்களை நடத்தி தன்னை மாய்த்துக்கொள்பவர்கள் மாவீரர்களாக போற்றப்பட்டு வந்தனர் என்பது வேறு விடயம்.

இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் தீக்குளித்து தற்கொலை செய்யும் போக்கு அதிகமாக காணப்படுகிறது. தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். இறந்த போது 20க்கும் மேற்பட்டவர்கள் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர்.

அதேபோன்று ஜெயலலிதா இறந்த போதும் சிலர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர்.

இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் தமிழ்நாட்டில் 14பேர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர்.

சுவிட்சர்லாந்து ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்கு முன்னால் உள்ள மைதானத்திலும் இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் இலங்கை தமிழர்கள் இருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர்.

இந்த தற்கொலை மரணங்களை போற்றுபவர்களும் உள்ளனர். இவர்களை தியாகிகள் என கொண்டாடுபவர்களும் உண்டு.

தமிழ்நாட்டை போன்று தமது தலைவர்கள் இறந்தாலோ அல்லது அரசியல் பிரச்சினைகளுக்காக தீக்குளிக்கும் போக்கு இலங்கையில் இல்லாவிட்டாலும் தமது சொந்த பிரச்சினைகளை முன்வைத்து தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகாரித்து வருகிறது.

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமான மட்டக்களப்பில் இளவயது தற்கொலை மரணங்கள் பெரும் பாதிப்பையே எதிர்காலத்தில் உருவாக்கும்.

இலங்கையில் முஸ்லீம்களின் சனத்தொகை




அதிகரிப்பு வீதம் 15 வீதமாகவும் சிங்களவர்களின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் 6வீதமாகவும் தமிழர்களின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் 2வீதமாகவும் உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை செய்பவர்களில் 95வீதமானவர்கள் தமிழர்களாகும். அதுவும் இளவயதினராகும்.

போரில் அங்கவீனமடைந்து வறுமையில் வாழ்வோரும் இதில் அடங்குவர். வறுமை, காதல் பிரச்சினை, நுண்கடன்களின் பாதிப்பு, கடன் தொல்லை, பரீட்சையில் சித்தியடையாமை, மன அழுத்தங்கள், பணிச்சுமைகள், குடும்ப பிரச்சினைகள், நிதிக்கையாடல்களால் ஏற்படும் நெருக்கடிகள், தவறான உறவுகளால் கருத்தரிப்பது, தீராத நோய்கள், பெற்றோரின் கண்டிப்பு, போன்ற பல பிரச்சினைகளால் சிலர் தற்கொலைகளை நாடுகின்றனர்.

ஆளுமைச் சிதைவு, குடிப்பழக்கம் குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல் வலி, போதை மருந்து பயன்பாடு போன்ற பல காரணங்களில் ஒன்றோ அல்லது பல காரணங்களோ ஒருவரைத் தற்கொலைக்குத் தூண்டலாம்.

மனநல கோளாறுகளுக்கு சிகிச்சையளித்தல் பொருட்களை தவறாகப் பயன்படுத்துதலை தவிர்த்தல் முறையான செய்தி ஊடக அறிக்கையால் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல் போன்றவையும் தற்கொலைகளை குறைக்கும் வழிமுறைகளாகும்.

இதில் தூக்கில் தொங்குதல், விஷம் அருந்துதல், ரயில் பாய்தல், கிணற்றுக்குள் விழுதல், கல்லடி பாலத்தில் பாய்தல் என தற்கொலைக்கான வழிகளை தேடிக்கொள்கின்றனர்.

அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து வாவியில் குதித்து தற்கொலை செய்யும் போக்கு அதிகரித்து காணப்படுகிறது.

கல்லடி பாலத்திலிருந்து வாவியில் குதித்து தற்கொலை செய்வோரை தடுப்பதற்கு மட்டக்களப்பு மாநகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என சமூக வலைத்தளங்களில் சிலர் குற்றம் சாட்டுவதையும் அவதானிக்க முடிகிறது.

மாநகரசபை மீதான இந்த குற்றச்சாட்டு தேவையற்ற ஒன்றாகும். கல்லடி பாலத்தில் பொலிஸாரை நிறுத்தினாலோ அல்லது மாநகரசபை காவலர்களை நிறுத்தினாலோ தற்கொலை செய்யும் மனநிலையுடன் வருபவர்களை தடுக்க முடியாது.

இலங்கையில் மன உளைச்சல், தோல்விகளுக்கு உள்ளானவர்களை ஆற்றுப்படுத்தி உளவள ஆலோசனைகளை வழங்குவதற்கு சுமித்திரயோ என்ற அமைப்பு கடந்த 40 வருடங்களாக இயங்கி வருகிறது. ஆனால் இந்த அமைப்பின் செயற்பாடுகள் வடக்கு கிழக்கில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களில் இந்த உளவள ஆற்றுப்படுத்தல்கள் அவசியமாக இருந்த போதிலும் வடக்கு கிழக்கு தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுவது போல உளவள ஆற்றுப்படுத்தல் விடயங்களிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வருகிறது.

யுத்தத்துக்கு பின் ஆரோக்கியமான மனநிலையை கொண்டுவர வடகிழக்கில் எந்த வொரு திட்டமும் கொண்டு வரப்படவில்லை என்பது கசப்பான உண்மை. மனதில் இருக்கும் வடுக்கள் காயங்கள் ஆற்றுப்படுத்தபட வேண்டியது அவசியமாகும்.

# கூட்டமைப்பு ஏமாற்றுகிறதா? ஏமாறுகிறதா?



அன்று தந்தை செல்வா தமிழரை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னது இன்றும் பொய்யாகவில்லை. தொடர்ச்சியாக தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வு விடயத்தில் தென்னிலங்கையினால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருகிறார்கள்.

2015 இல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தோற்கடிக்கப்பட்டு, நல்லாட்சி உருவாக்கப்பட்டது. நல்லாட்சி உருவாக்கப்பட்ட கையுடன் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பங்கிடப்பட்டு, பிரச்சனைகளுக்கு எல்லாம் விமோசனம் கிடைத்துவிடும் என தமிழ் அரசியல்வாதிகள் முழக்கமிட்டனர்.

**பண்டாரவன்னியன்**

இராணுவ பிடியில் இருந்த தமிழருக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், காணாமல் போனோர் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரங்கள் இன்றும் தொடர் கதையாகவே உள்ளன.

மேலும் முல்லைத்தீவு கேப்பாப்புலவு மக்கள் இன்றும் தமது சொந்த நிலத்தின் மீட்பிற்காய் தெருவில் கிடந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அபிவிருத்திகளும், அரசியல் தீர்வுகளும் தமிழ் மக்களுக்கு எட்டாத நிலையில் மேலும் மேலும் அவர்களை நெருக்கடிகளுக்குள் தென்னிலங்கை தள்ளிக் கொண்டிருக்கின்றது. முல்லைத்தீவு நாயாறு பகுதியில் புதிய பௌத்த சிலை திறப்பு அண்மைக்கால அத்துமீறலாக பதிவாகியுள்ளது. இவ்வாறு தொடர்ந்தும் தமிழ் மக்களின் நிலப்பரப்பை கையகப்படுத்தி, வடக்கு கிழக்கை முற்று முழுதாக பௌத்தமயமாக்கி, இலங்கையை பௌத்த தேசம் என முடிசூடுவதற்கு சகல தென்னிலங்கை அரசியல்வாதிகளும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருகிறார்கள்.

தென்னிலங்கையில் ஏற்படுகின்ற ஆட்சி மாற்றங்களில் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் மக்கள் இருந்து வருகின்ற நிலையில், அவர்களின் வாக்குளை நாசுக்காகப் பேசி அள்ளிக் கொண்டு போகும் தென்னிலங்கையின் அரசியல் தந்திரத்திற்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரிய பங்களிப்பு நல்கிவருகின்றது.

இராமன் ஆண்டால் என்ன இராணவன் ஆண்டால் என்ன தமிழ் மக்களுக்கு என்றும் விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

தொடர்ந்தும் தமிழ் மக்கள் பழிவாங்கலுக்கும், சுரண்டல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

இராணுவ மேலாதிக்கத்தின் ஊடாக வடக்கில் தென்னிலங்கையின் திட்டம் சிறப்பாக முன்னேடுக்கப்படுகின்றது. இது ஊர் அறிந்த உலகறிந்த சம்பவம். ஆனாலும் இவற்றை தடுக்க, தட்டிக்கேட்ட திராணி அற்ற தலைவர்களாக இன்றைய தமிழ்த் தலைமைகள் செயற்பட்டுக் கொண்டிருகிறார்கள்.

இதேவேளை புதிய அரசியலைப்பு உருவாக்கம் நாட்டிற்கு ஆபத்தானது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்திவருவதுடன்

தென்னிலங்கை ஆட்சியாளர்களினால் மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கூட கொடுக்க முடியாத மனநிலையில் இருக்கின்ற போது, எவ்வாறு அதி உச்ச அதிகாரப் பகிர்வை வழங்குவார்கள். தொடர்ந்தும் தமிழ் மக்கள் நம்பி ஏமாறுவதற்கு அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல.

சகல அரசியல் மட்டங்கள் தொடர்பிலும் இன்றைய இளைஞர்கள் தெளிவான நிலைப்பாட்டை கற்றுக் கொண்டுள்ளார்கள். தமக்கான அபிவிருத்தி தொடர்பில் அதிக அக்கறை காட்டத்தொடங்கியுள்ளார்கள். இந்த நிலையில் ஏமாற்று அரசியல் அவர்களின் பானையில் இனி அவியாது.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் என கூறிவந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று ஒற்றை ஆட்சிக்குள் தீர்வைத் தான் தன்னால் வழங்க முடியும் என உறுதியாக கூறியுள்ளார். இந்த நிலையில் ஒக்டோபர் 26 இல் ஏற்பட்ட திடீர் ஆட்சி கவிழ்ப்பினால் ஆட்சியை இழந்த ரணில், தான் பிரதமராக பதவி மீண்டும் ஏறினால் தமிழர்களுக்கான தீர்வை ஜனவரியில் வழங்குவேன் என கூறிவந்ததை அவர் மறந்திருக்கலாம் தமிழ் மக்கள் மறக்கவில்லை. இதேவேளை புதிய அரசியலைப்பு உருவாக்கம் நாட்டிற்கு ஆபத்தானது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்திவருவதுடன் மகாநாயக்க தேர்களும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுவருகின்றனர்.



இந்த நிலையில் பொதுஜன பெரமுனையின் ஜனாதிபதி வேட்பாளராக அறியப்படுகின்ற கோட்டபாய ராஜபக்ஷ தான் தமிழ் மக்களுக்கான தீர்வை தருவதாகவும், தற்போது கொண்டுவர எத்தனித்துள்ள அரசியலமைப்பு, ஆபத்துக்கள் நிறைந்த சரத்துக்களைக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்க காட்டியுள்ளார்.

ஆக தென்னிலங்கை தமிழர் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டில் தான் இருக்கின்றது. அதிகாரப் பகிர்வு, தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி என்ற விடயங்களில் சகலரும் பக்கசார்பாகவே நடந்து வருகின்றனர். ஒரு தரப்பு அதிகாரத்தை பகிர முற்படுகின்ற போது மற்றைய தரப்பு எதிர்ப்புத் தெரிவிப்பதும் வாடிக்கையாகப் போயுள்ளது. இது ஏதோ சொல்லி பேசி செய்கிறார்களோ என்ற சந்தேகம் இன்று தமிழ் மக்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது.

இன்று தமிழ்ர்களின் வாழ்க்கையினை எடுத்துக் கொண்டால். பல குடும்பங்களுக்கு அன்றாட உணவில்லை. இருக்க நல்ல வீடு இல்லை. தொழில் இல்லை. இதனால் பல்வேறு சமூக பிரச்சனைகளை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

கூட்டமைப்பினர் வெறுமனே தமக்கு கிடைக்கும் நிதியில் சிறு வீதிகளை அமைத்துவிட்டு,

14 ஆம் பக்கம் பார்க்க....

நவீன வங்கிமுறைமையின்
புதிய மாற்றத்தை அனுபவிக்க...
மஹரகமை வாருங்கள்...

எமது மஹரகமை புதிய கிளையில் முதன் முறையாக Digital Loan முறைமை நடைமுறைப்படுத்தப்படும் அதே நேரத்தில் Pesonal Loan ஐ பெற்றுக்கொள்ளும் Digital தொழில் நுட்பமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாருங்கள்... நவீன வங்கி முறைமையில் Digital Loan அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்...





PEOPLE'S digital

PEOPLE'S BANK
The Bank of the People

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
AA+ (lka) Fitch Rating, AA Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து அவர்களுக்கு துரித கதியில் நிவாரணம் வழங்குவதற்காகவே மக்கள் அனைவரும் குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் உட்பட தமிழ் மக்களின் பலமாகத் திகழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று நல்லாட்சி அரசாங்கம் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சிப்பீடம் ஏறியது.

நாடு நாளொன்றாக பொருளாதார ரீதியில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந் நிலைமையில் நாட்டின் சுமைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண பொதுமக்களையேதான் பாதிப்பதாக உள்ளது. ஆனால் தற்போது வரையில் அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்போதைய தேசிய அரசாங்கம் நாட்டின் பொருளாதார நிலைமைகளை நன்கறிந்து கொண்ட நிலையிலேயே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தது. ஆகவே அதற்கு மாற்றீடான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய கொள்கைத் திட்டமொன்றை கொண்டிருக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.



# ஏமாறும் தமிழர் சமுதாயம்

**நக்கீரர்**

ஆனால் அவ்வாறான கொள்கைத் திட்டமொன்று ஆட்சியாளர்களிடத்தில் இல்லை என்றே தோன்றுகின்றது. காரணம் வெளியக முதலீடுகளை மட்டுமே மையமாக வைத்து பொருளாதாரத்தின் ஸ்த்திர தன்மையை கட்டியெழுப்ப இலக்காக கொண்டிருக்கின்றார்கள். வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கின்றார்கள் ஏனைய விடயங்களை கையாள்கின்றார்கள் என்றே கூற முடிகின்றது. வெளியக முதலீடுகள் தாமதப்படுமாயின் அல்லது கிடைக்காது போய்விடுமாயின் அனைத்துமே சீர்குலைந்து செல்லும் பேராபத்தே உள்ளது. ஆகவே உள்ளக முதலீடுகள், ஏற்றுமதிக்கான சந்தைகள் விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது.

**நான்கு வருடங்களைக் கடந்தும் தமிழர் விவகாரம் குறித்து தேசிய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து விலகியே செல்கின்றன. இதற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் பல உதாரணங்கள் இருக்கின்ற நிலையில், இனியும் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளை சரியான முறையில் அணுகத் தவறினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது அரசிற்கு நேரடியாகவே அழுத்தம் கொடுக்கும் சூழலே விரைவில் உருவாகும்**

இன்று வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் விவசாயச் சந்தையிலும், கைத்தொழில் சந்தையிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய சக்தி காணப்படுகின்றது. குறிப்பாக விவசாய நடவடிக்கைகளுக்குரிய மானியங்கள், ஊக்குவிப்புக்கள் யுத்தம் நிறைவடைந்த சூழலிலும் முறையாக மக்களை சென்றடையாத நிலைமையே காணப்பட்டுவருகின்றது.

அதேபோன்று மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகள், கடற்பரப்புக்கள் மக்களிடத்தில் முழுமையாக ஒப்படைக்கப்படாத சூழலே இவ்வாட்சியிலும் நிலவுகின்றது. இவற்றை விடவும் கைத்தொழில் சந்தையில் செல்வாக்குச் செலுத்திய ஒட்டுசுட்டான் மட்பாண்டதொழிற்சாலை, பரந்தன் இரசாயண தொழிற்சாலை, ஆணையிறவு உப்பளம், அச்சுவேலி தொழிற்பேட்டை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஆகியன மீளவும் இயக்கப்படாதிருக்கின்றன. அதேபோன்று கிழக்கில் பல்வேறு இடங்களில் இயங்கிவந்த காகித தொழிற்சாலை உட்படபல தொழிற்சாலைகள் கேட்பாரின்றி முடங்கிக் கிடக்கின்றன.

நாம் இந்துமா சமுத்திரத்தில் கேந்திர ஸ்தானத்தில் இருக்கின்ற நிலையில் அயல்நாடுகளுக்கிடையிலான வர்த்தக, போக்குவரத்து தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் கடல்சார் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த வேண்டும். குறிப்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான படகு சேவையை மீளவும் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும். ஆகவே பொருளதார ரீதியாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனக் கூறிக்கொண்டு சாதாரணமாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை காலதாமதப்படுத்துவது பிரதானமானதாகும்.

இந்த நாட்டில் ஏழு தசாப்தங்களுக்கு மேலாக தமது அபிலாடிகளை பெற்றுக்கொள்வதற்காக உரிமைப்போராட்டத்தை முன்னெடுத்துக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கு பல்வேறு ஏமாற்றங்களும் ஆறாதா வடுக்களுமே இன்றுவரையில் கிடைக்கப்பெற்றவருகின்றன. மனித உரிமை, மனிதாபிமான சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்ட சமுகத்திற்கு நீதியை வழங்கும் முகமாக கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணையை வழங்கி நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று வருடங்கள் கடந்திருக்கின்றன. தற்போது வரையில் தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறை ரீதியாக முன்னெடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.



இவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பு என்ற நீண்டதொரு விடயப்பரப்பு உடனடியாக நடைமுறைச் சாத்தியமாகுமா? அவ்வாறு சாத்தியமானாலும் அந்த அரசியலமைப்பு தமிழ் மக்களின் அபிலாடிகளை பூரணப்படுத்தும் வகையில் அமையுமா? பிரிக்கப்படாத நாட்டில் இணைந்த வடகிழக்கில் பகிரப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் தங்களின் விடயங்களை தாமே தீர்மானிக்கும் வகையிலான ஏற்பாடுகள் இடம்பெறுமா என்பது கேள்விக்குறியே.

உறவு, உயிட,; உடமை, உடல் அங்கங்கள் என அனைத்தையும் இழந்து நிற்கும் தமிழ்ச் சமுகம் சர்வதேசத்தையே தமது நீதிக்காக எதிர் பாத்திருக்கின்றது. இதனையே கடந்த பல தசாப்தங்களுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்த் தலைமைகளும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அதுவும் அன்றைய சூழலில் தமிழர்களுக்கு கையை விரித்ததாகவே வரலாற்றில் நோக்கப்படுகின்றது. இதனை பல்வேறு தமிழ் அரசியல் பிரமுகர்கள் பல தடவை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தனர். அவ்வாறான நிலையில் இன்றைய காலத்திலும் தமது நலன்களுக்காக தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சிதறடித்து தமிழ் மக்களுக்கு துரோகத்தை இழைக்கும் செயற்பாட்டில் மேற்குல நாடுகள் ஒருபோதும் ஈடுபடக்கூடாது என்பதே மக்களது வேண்டுதலாக உள்ளது.

மூன்று வருடங்களைக் கடந்தும் தமிழர் விவகாரம் குறித்து தேசிய அரசாங்கம் தாம் வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து விலகியே செல்கின்றன. இதற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் பல உதாரணங்கள் இருக்கின்ற நிலையில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனையவர்கள் எவ்விதமான கருத்தை வெளியிட்டாலும் தமிழ் மக்களிற்கு அதிகளவு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தலின் போது வழங்கிய தற்போதைய ஜனாதிபதி, பிரதமரும் சமீபகாலமாக கூறும் உறுதியற்ற வார்த்தைகளை உத்தியோகபூர்வமான நிலைப்பாடாக கருதாமல் விடமுடியாது. நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற இந்த அரசாங்கத்திலும் தமிழ்மக்கள் அன்றாட வாழ்விற்காகவும் நாளாந்த அடிப்படைப் பிரச்சினைக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் போராட வேண்டியுள்ளதை நினைக்கும்போது தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகி உள்ளதையே உணரமுடிகின்றது.

எனவே அரசாங்கத்திற்கு எதிராகப் போராட முடிகிறது: வெள்ளைவான் கடத்தல் இனிவராது: பயங்கரவாதத் தடைச்சட்டம் எம்மை பாயாது என்று கடந்தகால கொடுங்கோல் குடும்ப ஆட்சியைத் தோற்கடித்து இந்த ஆட்சியை உருவாக்கியது மக்கள் வீதிகளில் இறங்கி போராடுவதற்காக வல்ல என்பதை நல்லாட்சி அரசாங்கம் உணர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து அவர்களுக்கு துரிதகதியில் நிவாரணம் வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உட்பட முன்வர வேண்டும். தமிழ்மக்கள் அரசாங்கத்தின் மீது மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் நம்பிக்கையிழந்தவர்களாக உள்ளனர். இதனால் அவர்கள் வீதியில் இறங்கி மாதக்கணக்கில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த வருடம் முல்லைத்தீவு கோப்பாபிலவு புலக்குடியிருப்பு மக்கள் மன உறுதியுடன் மேற்கொண்ட போராட்டத்தினால்தான் அவர்களின் காணி பகுதியளவில் மீளவும் ஒப்படைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் பதிலுக்குப் பதிலாக காணியை ஒப்படைத்த படைத்தரப்பினர் இதுநாள்வரை தாங்கள் அனுபவித்து வந்த வீடுகளின் கதவுகளையும் ஜன்னல்களையும் பெயர்த்துக் கொண்டு சென்றுள்ளனர். வீடுகளை இடித்துவிட்டும் சென்றுள்ளனர். இந்நிலையில் அப்பகுதிவாழ் மக்கள் தங்களது வாழ்வை சீராகக் கொண்டு நடத்தமுடியயாமல் போராடிவருகின்றனர். அத்துடன் மீதியுள்ள பூர்வீக கிராம மக்களும் தங்களது காணிகளை விடுவிக்குமாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றும் 135குடும்பங்களுக்குச் சொந்தமான 480 ஏக்கர் காணிகளை படையினர் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றதாக கூறப்படுகின்றது. சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் 92 வயது மூதாட்டிவரை ஆண்களும் பெண்களுமாக தங்களது காணியைத் திருப்பி வழங்கக்கோரி இரவு பகலாக கொளுத்தும் வெயிலிலும் பொழியும் பனியிலும் கொட்டும் மழையிலும் வேள்வி நடத்துகின்றனர்.

கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களது காணிகளைக் கபளீகரம் செய்து வைத்திருப்பது எத்தகைய மனிதாபிமானம்? கடந்த ஒன்பதாண்டுகளாக அவர்களது வாழ்வாதாரத்தைப் பறித்தெடுத்து அவர்களை வறியவர்களாக்கி வைத்திருப்பது நல்லாட்சியில் எத்தகைய நல்லிணக்கம் என்பது புரியாததாகவே உள்ளது. வடக்கில் பூர்வீக கிராம மக்களின் காணிகளில் பலநூறு ஏக்கர் காணிகளில் தெங்கு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது காணிகளிலேயே வீடுகளை அமைத்து தங்களையும் காணியையும் பிரிக்கமுடியாத அளவிற்கு காணியடன் உறவாடியவர்கள். இன்னபிற பயிர்வகைகளையும் பயிர்செய்து தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்திருந்தனர். இன்று அவர்களின் காணிகளில் குடிபுகுந்திருக்கும் படையினர் அவர்களின் மண்ணில் விளைந்தவற்றை அவர்களிடமே விலைக்கு விற்று அதிகாரம் செய்கின்றதாக பல குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தில் கூறப்பட்டுவருகின்றன.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மற்றும் யுத்த காலங்களில் காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரையும் ஒரு சரியான முடிவைத் தெரிவிக்க இந்த அரசாங்கம் முன்வரவில்லை. இதன் காரணமாக எமது உறவுகள் தமது உறவுகளைத் தேடி வற்றிய கண்களுடன், ஒட்டிய வயிற்றுடன் வீதிகளில் இறங்கி நியாயம் கேட்கின்றனர். நல்லாட்சி அரசின் மனச்சாட்சி இனியாவது பேசுமா? என்ன காரணத்திற்காக சிறையில் இருக்கிறோம் என்பதே தெரியாமல் இருப்பவர்களை விடுவிக்க மறுக்கும் நல்லாட்சி அரசின் நீதிதான் என்ன?

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களாக வட கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பிலும், காணிகள் விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு தொடர்பிலும் உரிய அதிகாரிகள் நேரில் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு என்ன நடந்தது என்பது நீரில் எழுதிய எழுத்தாகவே மாறியுள்ளது. மக்களின் பிரச்சினைகளை கவனிப்பதற்குத்தான் மாகாண சபைகள், பிரதேச, நகர மற்றும் மாநகரசபைகள் இருக்கின்றன. அவைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்கி, போதிய நிதியை ஒதுக்கி அவை சரிவர இயங்குகின்றனவா? என்ன தேவை இருக்கிறது? என்ன குறைபாடு இருக்கிறது என்பதை ஆராய்ந்து அவற்றை வழிநடத்தினாலே நல்லாட்சி நல்லாட்சி என்ற முழு அர்த்தத்தைப் பெறும்.

அத்துடன் வேலையற்ற பட்டதாரிகள் தொடர்ந்தும் இன்று வட கிழக்கில் தமக்கான தொழில் நியமனங்கள் இன்றியும், தகமைகளுக்கேற்ற தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பாரபட்சமாக இழைக்கும் அநீதிகளுக்கு நீதி வேண்டி போராட்டங்களை நடாத்திவருகின்றனர். இளைஞர்கள் பல்கலைக்கழகம் செல்வதே அரிதாக உள்ள நிலையில், இன்று பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் இல்லை என்றால் அவர்கள் வாழவிருப்பற்று விரக்தி அடைவார்கள் என்பதை நல்லாட்சி புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்து நடக்குமிடத்தே சகல மக்களும் சம உரிமைகளுடன் சகோரத்துவத்துடன் கைகோர்த்து சமாதானமாக வாழ வேண்டிய சூழல் உருவாகும்.

சர்வதேச சமூகம் அரசுகளுக்கு இடையிலான உறவு என்ற அடிப்படையில் அரசாங்கத்துடன் மட்டும் உறவை வைத்துக்கொள்ளாமல் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்குவதற்காகவும் அந்த மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் பற்றுறுதியுடன் செயற்பட முன்வரவேண்டும். அவ்வாறின்றி, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை சரியான முறையில் அணுகத் தவறினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது அரசிற்கு நேரடியாகவே அழுத்தம் கொடுக்கும் சூழல் விரைவில் உருவாகும் என்பதே சமகால அரசியல் நடப்பாக மாறிவருகின்றது.






**அமெரிக்காவிலிருந்து**
**எம்.ரூபன்**

மண்டை தீவு மனித எலும்புக்கூடு குறித்து பல வருடங்களுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பியான எஸ்.சிறிதரன் அரசின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். அவர் கூறியுள்ள இந்த சம்பவம் இன்று பல தமிழ்,சிங்கள அரசியல்வாதிகளுக்கும் தெரியாது..மன்னாரில் மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்கிறது.300 மனித எலும்புக்கூடுகள் வரை அங்கே தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.இவற்றின் சில மாதிரிகள் காபன்

பரிசோதனைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.காபன் பரிசோதனையின் பின் யார் செய்தது அல்லது யாருடையவை என தெரியவருமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.மன்னாரில் அப் புதை குழியை தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.இவை விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்ட படையினராக இருக்கலாம் என அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

தற்போது யாழ்.மண்டைதீவிலும் கிணற்றில் மனித எலும்புக்கூடு பிரச்சினை எழுந்துள்ளது. அண்மையில் சுன்னாகம் பகுதியில் மின்கம்பம் நாட்டகிடங்கு வெட்டிம்போது மனித எலும்புக் கூடு வெளிவந்தது.யாழ்.கோட்டைக்குள்ளும் கிடங்கு வெட்ட மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டன.1996 படையினர் வந்த பின்னர யாழ.துரையப்பா விளையாட்டரங்கின் அருகில் மலசல கூடம் அமைக்க குழி தோண்ட சில மனித எச்சங்கள் வெளி வந்தன. இவ்வாறாக யாழ்.குடாநாட்டில் எந்த எந்த இடங்களில் மனித எச்சங்கள் உள்ளன என்பது தெரியாமல் உள்ளது.

யாழ்.செம்மணி புதைகுழி தோண்டி எடுக்கப்பட்டு நீதிமன்ற விசாரணை இடம்பெற்று அதனுடன்தொடர்புடையதாக குற்றம் சாட்டப்பட்ட சில படை அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.அதேபோல மிருசுவில் புதைகுழி வழக்கிலும் சில படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டு நீதி மன்ற விசாரணை நடைபெற்று சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.ஆனால்,மண்டை தீவு விவகாரத்தை அரசு எவ்வாறு செயற்படப்போகிறது என பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.இதில் யாரை குற்றம் சொல்வது.தீவுப்பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பல அதிகாரி கள் இன்று எம்மத்தியில் இல்லை.அதில் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பொதுமக்களின் குடும்பங்களும் பல இன்று இல்லை. அப்படி இருப்பவர்களும் விசாரணைக்கு நேரில் வருவார்களா என்பதும் சந்தேகம்.

சந்திரிகாவும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது, ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான நடவடிக்கையின் மனித புதைகுழியை தோண்டுவதாக கூறினார்.ஆனால்,பதவிக்கு வந்ததும் ஆரம்பத்தில் ஒரு சிலவற்றை தோண்டி காண்பிக்கப்பட்டு, பின்னர் அந்த பணிகள் கைவிடப்பட்டன. ஏனெனில்,1971 அவரது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின்போது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) க்கு எதிரான நடவடிக்கைகளும் தெரியவேண்டிவரும் என்பதாலேயே அதனை கைவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

**யாழ்.நகரை கைப்பற்றவே தீவுப்பகுதி நடவடிக்கை**

மண்டை தீவு சம்பவத்துக்கு காரணம் என்ன? யாழ்.நகரை விடுதலைப்புலிகளிடம் இருந்த கைப் பற்றி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவென 1990 இறுதி யில் தீவுப்பகுதியில் ஆரம்பித்த பாரிய படை நடவடிகையே. இந்திய அமைதிப்படையினர் வடக்கு,கிழக்கை விட்டு சென்ற பின்னர், ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கும்,விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுக்கள் நடைபெற்றன.சுமார் ஆறு மாதங்களுக்கு மேல் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு வடக்கு,கிழக்கில் அமைதியான ஒரு சூழல் காணப்பட்டது.1990 ஆனி 10 இல் இரு தரப்பினரின் இந்த சமாதானப்பேச்சு வார்த்தைகள் முறிவடைந்ததும்,மீண்டும் யுத்தம் ஆரம்பமானது.விடுதலைப்புலிகளின் தாக்குதல்களும் அதிகரித்தது. அதனையடுத்து யாழ்.குடாநாட்டில் பலாலி விமான நிலையம்,காங்கேசன்துறை துறைமுகம் விடுதலைப்புலிகளின் வசமானால் படையினருக்கு பாரிய பிரச்சினயாகிவிடும் என்று விமான நிலையம்,துறைமுகம் உள்ள பிரதேசமான வலிகாமம் தெற்கு பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் படையினர் கொண்டுவந்து,பொதுமக்களை முற்றாக வெளியேற்றி படை நடவடிக்கையை நடாத்தினர்.அது பின்னரே பாதுகாப்பு வலயமாக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து விடுதலைப்புலிகள் ஆனையிறவு இராணுவ முகாமை பிடிக்க ஒரு பாரிய தாக்குதலை 1991 ஆடி மாதம் நடாத்தினர்.

அதனை முறியடிக்க படையினருக்கு பல நாட்கள் எடுத்தன. புலிகள் அந்த முகாமை சுற்றி வளைத்ததால், வடக்கின் இராணுவ அதிகாரியான டென்சில் கொப்பேகடுவ வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி பகுதியில் கடல் வழியாக படையினரை இறக்கி அங்கிருந்து ஆனையிறவுக்கு நகர்த்ததி முகாமை புலிகளின் தாக்குதலில் இருந்து மீட்டார்.

குடாநாடு நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இருந்து துண்டிக்கப்பட்டது.ஏ-9 பாதை போக்குவரவும் தடைப்பட்டது.அதனால்,குடாநாட்டை படையினர் பிடிக்க திட்டமிடப்பட்டது.இந்திய படைவரமுன்பு யாழ்.கோட்டை இராணுவ முகாமின் பாதுகாப்புக்காக மண்டைதீவில் ஒரு இராணுவ முகாம் ஏற்கனவே 1986 இல் அமைக்கப்பட்டுவிட்டது.யாழ்.ஒல்லாந்தர் கோட்டை முகாமுக்குள் இருந்து படையினர் வெளியேறவும் முடியாததுடன், அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் உதவிகளை அரசால் செய்யமுடியவில்லை.அதனால்,மண்டை தீவில் இந்த முகாம் அமைக்கப்பட்டது.அதனையும் இந்த இராணுவ அதிகாரியான டென்சில் கொப்பேகடுவ மேற்கொண்டிருந்தார். அதுமட்டுமன்றி,1987 மே வடமராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற ஒரு பெரிய இராணுவ நடவடிக்கையையும் மேற்கொண்டிருந்தார். எனவே,யாழ்.நகரை பிடித்து போதனா வைத்தியசாலை,மாவட்ட செயலகம் (கச்சேரி) என்பவற்றை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டால், குடாநாட்டின் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ளலாம். ஏனைய பகுதி மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்காக யாழ் நகருக்கே வர வேண்டும் என்பதும் அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளையும் குடாநாட்டை விட்டு முற்றாக வெளியேற்றிவிடலாம் என்பதும் அரசின் திட்டமாகும் என அன்று தெரிவிக்கப்பட்டது.டென்சில் கொப்பேகடுவ இதற்காக நியமிக்கப்பட்டார்.

இதனால்தான்,தீவுப்பகுதியின் ஊடாக இராணுவத்தினரை யாழ்.நகருக்குள் கொண்டுவருவதற்கு பிரேமதாச அரசு நடவடிக்கை எடுத்தது. அதன் பின்னர் மெல்ல மெல்ல படை நடவடிக்கையை முன்நகர்த்தி குடாநாட்டை முழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ். கொண்டு வருவதே அரசின் நோக்கம். வன்னி இறுதி யுத்த சம்பவங்களை வருடம் தோறும் நினைவுகூருகிறோம்.ஆனால்,தீவுப்பகுதி சம்பவங்களை எவருமே எண்ணிப்பார்ப்பதில்லை. யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற இலங்கை,இந்திய படை நடவடிக்கைகளில் தீவுப்பகுதியில் இடம்பெற்றவையே பாரிய இழப்புகளாகும் என மனித உரிமை கள்,மற்றும் தொண்டர் அமைப்புகள் தெரிவிக்கின்றன. இதனால் தீவுப்பகுதிகளில் இருந்து மக்கள் அராலித்துறை ஊடான கடல் ஏரி வழியாக யாழ்ப்பாணம்பகுதிகளுக்கு தப்பி வந்த காட்சிகளை மறக்கமுடியாது.

காரைநகரில் இருந்தும், பலாலியில் இருந்து ஹெலிகள் மூலமும் ஊர்காவற்றுறை பகுதிகளில் தரையிறக்கப்பட்ட துருப்புக்கள் அங்கிருந்து மண்டைதீவு நோக்கி முன்னேறிச்செல்லும்போது இடம்பெற்ற சம்பவங்களை இங்கு விபரிக்கமுடியாது. ஏற்கனவே,வேலணையிலும் கிணற்றில் மனித எச்சங்கள் இருந்ததாக அப்போது தெரிவிக்கப்பட்டது. தீவுப்பகுதியியை படையினர் முழுமையாக கைப் பற்றும்போது கேட்ட ஷெல்,விமான தாக்குதல் சத்தங்களால் அப்பகுதியே அதிர்ந்தது. யாழ்.நகரப் பகுதிக்கே இந்த சத்தங்கள் கேட்டன.இதில் காணமல்போனவர்கள்,இறந்தவர்கள் விபரங்கள் இன்றும் உள்ளன.

**யாழ்.நகரை பிடிக்கும் திட்டம் கைவிடப்பட்டது**

தீவுப்பகுதியில் இருந்து படையினரை யாழ்ப்பாணத்தை பிடிக்க எவ்வாறு நகர்த்துவது என ஆலோசனை செய்து, சரியான இடம் அராலித்துறை என தெரிவுசெய்த டென்சில் கொப்பேகொடுவ மற்றும் சில படை அதிகாரிகள் மூன்று வாகனங்களில் அவ்விடத்தை பார்வையிட 1992 ஆவணி 8 ஆம் திகதி வந்தபோது அவ்விடத்தில் இடம்பெற்ற நிலக் கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் பாதுகாப்பு தரப்பினருக்கே பெரிய அதிர்ச்சி மட்டுமல்ல அந்த இடத்துக்கு இவர்கள் வருவார்கள் என்பது எவ்வாறு புலிகளுக்கு தெரியும் என ஆச்சரியப்பட்டனர்.ஆனால்,இதனை புலிகள் செய்யவில்லை என சில தரப்பினர் கூறிவந்தனர்.

இதன்பின்னர் குடாநாட்டை பிடிக்கும் அரசின் திட்டம் கைவிடப்பட்டதுடன்,அங்கு சிக்கிய பொது மக்களுடன் தீவுப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் இயங்கியது, இந்த நிலையில்1994 பொது தேர்தலில் யாழ்.மாவட்ட வாக்களிப்பும் அங்குதான் நடைபெற்றன.1996 குடாநாட்டை படையினர் முற்றாக கைப்பற்றிய பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் மெல்ல மெல்ல தீவுப்பகுதியில் மீளக்குடியேறினார்கள்.அதன் பின்னரும் ஒரு சில சம்பங்கள் இடம்பெற்றுள்ளன. கத்தோலிக்க மதகுரு ஒருவர் உட்பட சிலர் காணமல் போயுள்ளதாக புகார்கள்.

தீவுப்பகுதிக்கு சில பத்திரிகையாளர்கள் மனித உரிமைகள் அமைப்புகள் 1996 க்கு பின்னர் சென்று பலரிடம் இருந்து பல தகவல்களை பெற்றுக்கொண்டர்.இங்கு இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்கள்.நட்ட ஈடுகள் வழங்கப்படவில்லை என அந்த மக்கள் இன்றும் தெரிவிக்கின்றனர்.



# இனங்களுக்கிடையில் இனவாத முரண்பாட்டினைத் தோற்றுவிக்குமா?

அண்மைய நாட்களில் இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் பேசப்பட்ட ஒருவிடயம் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஏழு முஸ்லிம் மாணவர்கள் பற்றியதாகவே இருந்தது. அந்த மாணவர்களுக்கு எதிராகவும், கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச கடும் சீற்றத்துடன் காணப்படுகின்றார் என்கிற செய்திகளும் உலாவந்தன. அதாவது, கிரலகல புராதன தூபியில் ஏறி படம் பிடித்து, சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியிருந்த தென்கிழக்கு பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் ஏழு


கோப்புப்படம்

பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டிருந்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் கருத்துரைக்கையில் இது தெரியாமல் நடந்தது என கூறுவதை என்னால் நினைத்து பார்க்க முடியாது. பல்கலைகழகத்திற்கு செல்லும் மாணவர்கள் அவர்களின் உயர் அறிவிக்கு அமைய அனைத்து மத ஸ்தானங்களையும் பாதுகாக்க மற்றும் கௌரவப்படுத்த தெரிந்து கொள்ள வேண்டும். இதனை மிகவும் மட்டமான ஒரு செயற்பாடாகவே நான் பார்க்கிறேன். இது போன்ற செயற்பாடுகளை வேறு எவரும் செய்யா முடியாத வகையில் இவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க உறுதிபூண்டுள்ளோம் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது இவரது கருத்தாக இருந்தாலும் இந்த விடயத்தில் கருணை எண்கிற ஒருவிடயம், அவர்கள் மாணவர்கள் என்பதையும் தாண்டி அவ்வாறு தண்டைனை பெற்றுக் கொடுப்பதில் இவர் போன்றவர்களுக்குள்ள அக்கரை கடுமையாக இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் இலகுவாக ஊகித்துக் கொள்ள முடியும். அதாவது இவர்கள் அனைவரும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதேயாகும். இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறக்கூடாது என்பது நமது வாதமாக இருந்தபோதிலும் முஸ்லிம்களையும், முஸ்லிம்களுடைய சொத்துக்கள், உயிரிழப்புக்கள் அனைத்தையும் வெளிப்படையாக இழந்து அவர்களுடைய வணக்கஸ்தலங்களுக்குள் பன்றித்தலை தொடக்கம் சப்பாத்துக் காலும் சென்று நாசம் செய்தவர்களை ஏன் கைது செய்து அவர்களுக்கு தண்டனை வழங்கவில்லை என்கிற கேள்விகளும் சாதாரண மக்களிடமிருந்து சிந்தனை எழுகின்றபோது ஏன் இந்த ஏழு இளைஞர்கள் விடயத்தில் கடும்போக்குடன் பேசப்படுவதைப் பற்றி முஸ்லிம் அமைச்சர்கள் ஒருசிலரைத் தவிர ஏனையவர்களிடமிருந்து பேசாமடந்தையாகவே இருக்கின்ற நிலைமை தொடருமாக இருந்தால் இந்நாட்டில் முஸ்லிம்களின் நிலை அம்போவென்றாகிவிடும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

ஒரு கட்டத்தில் முஸ்லிம்கள் இந்நாட்டு அரசியலில் விரும்பிய ஒருவராக கௌரவ சஜீத் பிரேமாதாசாவை பார்த்தனர். ஆனால் அமைதியான முறையில் இருந்துகொண்டு முஸ்லிம் இளைஞர்கள் விடயத்தில் கடும்போக்குடன் நடந்துகொள்வதைப் பார்க்கின்றபோது முஸ்லிம்களிடமிருந்து இவரைப்போன்றவர்களின் தொடர்பில் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமை இப்போது தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது. பிழை செய்தவர்களுக்க தண்டனை கொடுக்க வேண்டும் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இருப்பினும் கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் பயங்கரவாதிகளால் முஸ்லிம் அப்பாவிகள் பள்ளிவாசலினுள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களை சுடுமாறு ஏவியவர்கள் இன்றும் கிழக்கில் உலாவருகின்றனர். அமைச்சராக இருந்து கிழக்கின் ஆளுநனராக நியமிக்கப்பட்டிருக்கின்றவர் ஒரு முஸ்லிம் என்பதற்காக இனவாதத்தையே கையிலெடுத்து பத்தாயிரம் கையொப்பங்கள் எடுத்து எப்படியும் ஒரு பேரினவாதி ஒருவரைக் கொண்டுவருவதில் சிலர் முனைந்திருப்பதைப் பார்க்கின்றபோது இனவாதம், மதவாதம் முன்னிலை வகிக்கிறது என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

இன்று முஸ்லிம் அரசியல்வாதிகள் எதுநடந்தாலும் தட்டிக்கேட்பதை கைவிட்டுவிட்டு விட்டனர். ஞானசாரரை எவ்விதமான தண்டனையும்; வழங்காது மன்னித்து விடுதலை செய்தால் என்ன என்று கேட்கும் அளவுக்கு முஸ்லிம்களில் ஒருசிலர் கருத்துக்களை வழங்கிவருகின்றனர். அது அவர்களிடமுள்ள மனிதாபிமானம் என்றுகூடச் சொல்லாம். ஏனெனில் அநியாயமாக மனிதர்களுக்கு தண்டனை வழங்குவதைத் தவிர்த்து மன்னிப்பு வழங்குவதன் மூலம் சிலவேளைகளில் அவர்கள் திருந்தலாம் என்பதற்காகவே இவ்வாறு கூறுகின்றனர். அது போலவே இந்த முஸ்லிம் இளைஞர்களும் தங்களுடைய தவறை உணர்ந்துவிட்டனர். திருந்தலாம் தானே என்கிற கோதாவில்தான் அமைச்சர் றிஷாட் பதியுதீன், பிரதியமைச்சர் ஹரீஸ் போன்றோர் குரல் எழுப்பியும் அது நடக்காமலே போய்விட்டன. இந்தியாவில் 1992ம் ஆண்டில் முஸ்லிம்களின் பள்ளிவாசலான பாபரி மஸ்ஜிதை முன்நின்று உடைத்தெறிவதற்கு உழைத்தவரான பல்பிர் சிங் என்கிற சூர்த்திரதாரி பின்னர் பல்வேறு அச்சாடங்களுக்குள் அகப்பட்டு தன்னை ஒரு இஸ்லாமியனாக மாற்றிக்கொண்டு (மொஹமட் ஆமிர் எனும் பெயரில்) இப்போது உடைத்த பாவத்திற்காக நூறு பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கு உதவியாக இருந்து வருகின்றார். முஸ்லிம்கள் அன்று அவரை மன்னிக்காது விட்டால் அவர் பெரிய பாவியாக மாறியிருப்பார். உண்மை ஒருநாள் வெற்றிபெறும் என்பதற்காகவே முஸ்லிம்களில் ஒருசிலர் சிலவேளைகளில் இனவாதம் பேசினாலும் முழுமையாக யாரும் இந்நாட்டில் வாழும் எந்தவொரு முஸ்லிமும் இனவாதியல்ல என்பதைத்தான் நாம் இவ்வேளை கூறவேண்டியிருக்கிறது.

குறிப்பாக கிழக்கில் இனவாதம் தலைவிரித்தாடுகின்றது. ஆளுநர் விடத்தில் சில தரப்புக்கள் கடும்போக்குடன் காணப்பட்டபோதிலும் தன்னுடைய சேவைகளை நிறைவேற்றுவதில் ஆளுநர் ஹிஸ்புல்லா தவறவில்லை என்பதையே காணமுடிகிறது. கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வின் நியமன விடயத்தில் கருணா அம்மான் கூட்டணியைச் சேர்ந்த சம்பந்தன் ஐயாவையும் சுமந்திரனையும் குற்றம் சாட்டிவருவது வேடிக்கையானது. அவரை நியமித்தவர் ஜனாதிபதியே என்கிற கருத்தினை அண்மையில் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்திருந்தார். கருணா அம்மான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செல்லப்பிள்ளை. இவரது கட்சியின் தலைவர் பிரதமரல்ல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஆவார். அவரே கிழக்கு மாகாண ஆளுநரை நியமித்தார். இதை விடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு மீதும் சம்பந்தன் ஐயா மீதும் சுமந்திரன் மீதும் அவர் குற்றம் சுமத்துவது எந்த வகையில் நியாயமாகும்?

வெறுமனே இன வாதத்தை விதைப்பதனூடாக

**தந்திமகன்**

எதையுமே அறுவடை செய்யமுடியாது. கிழக்கு அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் காலம் காலமாக ஒன்றித்து வாழுகின்ற மாவட்டம். இங்கு இரு சமூகமும் இரு கண்களைப் போன்றவை. ஒன்றை ஒன்று பிரித்து ஒரு காலமும் நிம்மதியாக வாழ முடியாது. தேவை ஏற்படும் போது தமக்கு ஆதாயம் தேவைப்படும் போது சில அரசியல் வாதிகள் இனங்களிடையே முறுகலை உண்டு பண்ணி ஆதாயம் தேட முனைவது தொடர்ந்தேர்ச்சியாக நடந்து வருகின்ற விடயங்கள். இது குறித்து தமிழ், முஸ்லிம் சமூகங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் கூறியிருப்பது இனவாதிகளின் அட்டகாசங்களை கிழக்கிலுள்ள மூவினங்களைச் சேர்ந்தவர்களும் உணர்ந்து செயற்படவேண்டும் என்பதற்காக கூறியிருக்கலாம்.

அதேவேளை கிழக்கு மாகாணம் தனி ஒருவரின் கட்டுப்பாட்டில் இருப்பதை ஏற்கமுடியாது என்கிற கருத்தினை நாடாளுமன்ற உறுப்பினரான சீ. யோகஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார். அதாவது மக்களால் தேர்தல் ஊடாக நிராகரிக்கப்பட்டவர்களை நியமித்து மாகாண அதிகாரத்தை அதியுச்சமாக பயன்படுத்தி வருவதுதமமால் பொறுக்க முடியவில்லை என்கிற கருத்தினைத்தான் இவர் விதைத்திருக்கின்றார். அதனால்தான் இவரைப் போன்றவர்கள் புதிய அரசியலமைப்பின் ஊடாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். தேர்தல் நடாத்தப்பட வேண்டும். மத்தியரசு மீளப்பெறாத வகையில் அதிகாரம் அமைய வேண்டும் என கூறி வருகின்றார். கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு ஆளுநரின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ளது மாகாண சபை தனியொருவரின் கட்டுப்பாட்டில் இருப்பதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. விரைவாக மாகாண சபைத் தேர்தலினை நடாத்தி மாகாண சபையினை மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்காக ஒத்துழைப்பு வழங்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பு எதற்காக அமைச்சுப் பதவிகளை ஏற்கவில்லை என பலரும் கேள்வியெழுப்புகின்றனர். ஐக்கிய தேசிய கட்சி அரசு தற்போது அமைச்சுப் பதவிகளை ஏற்குமாறு எங்களை அழைக்கிறார்கள். எமது மக்கள் அமைச்சுப் பதவிகளை பெற்று சுகபோக வாழ்கையை அனுபவிப்பதற்காக ஆணையை வழங்கவில்லை. எமது இனம் இழந்த உரிமையை மீண்டும் பெறுவதற்காக பல உயிர் தியாகங்களை செய்துள்ளது அமைச்சு பதவிகளை பெற்று அற்ப சொற்ப சலுகைகளுக்காக அவர்களின் தியாகங்களை தூக்கி எறிவதற்கு நாங்கள் தயாராக இல்லை. தமிழ் மக்களினைப் பொறுத்தமட்டில் காலம் காலமாக இழந்த உரிமையை பெற்றுத்தருவோம் என நம்பியே தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிக்கிறார்கள். ஒரு சில கசப்பான விடயங்களுக்காக தமிழ் மக்களில் ஒரு சிலர் அமைச்சுப் பதவிகளைப் பெற்று அபிவிருத்தி செய்யுங்கள் என கூறினாலும் பெரும்பாலான மக்கள் எமது அபிலாசைகளை நிறைவேற்றும் வரை எந்த பதவிகளை பெறகூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். என்றும் அவர் கூறியிருந்தார். இதன் அர்த்தம் என்னவெனில் ஆளுநர் ஹிஸ்புல்லா விடயத்தில் தமக்கு பொறுத்தாப்பாடு இல்லை என்கிற விடயத்தினை மறைமுகமாக சாடி இனவாதத்தை விதைத்து வருகின்றார் என்பதே இதன் அர்த்தமாகும்.

அதுவேளை பொருத்தமான பதவிகளுக்கு பொருத்தமானவர்களை நியமித்து வருகின்றார் கிழக்கின் கல்வி வீழ்ச்சியடைந்து வருகின்றது என்கிற கருத்தாடல்கள் அண்மைய ஆண்டுகளில் தொடர்ந்து கூறப்பட்டு வந்தபோதிலும் கடந்த நவம்பர் காலப்பகுதியில் புதிய கிழக்கின் மாகாணக் கல்விப் பணிப்பாளராக எம்கே.எம். மன்சூர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் சில நல்ல வேலைத் திட்டங்களை மேற்கொண்டிருந்தாலும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டதன் நிமித்தம் இப்போது அவருக்குப் பதிலாக முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளராக இருந்த எம்ரிஎம். நிஸாம் அவர்கள் புதிய ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டிருகின்றார். இந்த நியமனமானது முன்னாள் மாகா.பணிப்பாளர் மன்சூர் அவர்கள் முஸ்லிம் பெண்கள் அணிகின்ற அபாயா தொடர்பாக வெளியிட்ட கருத்து முஸ்லிம் சமூகத்தினால் பாரமாக பார்க்கப்பட்டிருக்கிறது. தாம் அவ்வாறு பேசவில்லை என்றுஅவர் கூறியிருந்த போதிலும் அது உண்மையானதுதான் என்பதை நிருபிக்கும் வகையில் இப்போது அவர் நீக்கப்பட்டிருக்கிறார்.

புதிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் நிஸாம் அவர்கள் கடந்த காலங்களில் கிழக்கின் கல்வி எழுச்சிக்காக பல்வேறு திட்டங்களை மேற்கொண்டிருந்தார். கொய்க்கா, யுனிசெப் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு திட்டங்கள் கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால் மன்சூர் அவர்கள் அதனை நிறைவேற்றாது தடுத்திருந்தார். அல்லது அதிக கவனம்செலுத்தாமல் இருந்தார். உண்மையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்ரிஎம். நிஸாம் அவர்கள் நிதானமாக போக்குடன் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்பவர். இனவாதமின்றி அனைவரையும் சமமாக மதித்து வருகின்ற ஒருவர். தனது இனத்திற்கு மாத்திரமன்றி அனைத்து இன மாணவர்களையும் அன்போடு பார்க்கின்றனர். அவரது நியமனம் குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டிருகின்றன. ஆனால் மன்சூர் அவர்களின் தொடரான நடவடிக்கைகள் சில வேளைகளில் பலருக்கு பிடிக்காமல் போனதன் விளைவு இன்று அவரது இடமாற்றம் காணப்படுவதாக ஆசிரியர்களும், அதிபர்களும், கல்விப் பணிப்பாளர்களும் கூறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இனவாத்தை அறுவடை செய்யாமல் அவற்றை அடியிலேயே கிள்ளி எறிகின்ற ஒரு சமூகக் கட்டமைப்பினை கல்வியின் ஊடாகவும், அரசியல் ஊடாகவும் இந்நாட்டு மக்கள் ஒன்றித்து பயணிப்பதற்குரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறு அரசை வேண்டிநிற்போம்.

# கின்னியா மணல் அகழ்வு; நடந்தது என்ன?

சோத்துப் பிழைப்புக்கான கூலித் தொழிலாளிகளை சாவின் விளிம்பில் கொண்டு செல்வது ஆக்கபூர்வமான செயற்பாடுகளாக ஏற்றுக் கொள்ள முடியாது. அது அணைவரையும் விஷனமடையச் செய்யும் செயலாகும். கடந்த 29ஆம் திகதி கிண்ணியா கண்டல்காடு கங்கை சாவத்துப் பாலத்திற்கு அருகில் சட்ட விரோதமாக மணல் ஏற்றும் நடவடிக்கையின் பேரில் அவர்களை கைது செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் இரண்டு இளைஞர்களின் உயிரை காவு கொடுக்க வைத்து விட்டதுடன் பாரிய பரபரப்பையும் ஏற்படுத்தி விட்டது.

கூலித் தொழிலாளிகள் என்ற வகையில் தமது குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக பல்வேறுபட்ட வகையான தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக மகாவலி ஆற்றில் பாய்ந்துள்ளனர். இவ்வாறு பாய்ந்தவர்களில் இருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பதட்டத்தையும், மக்கள் மத்தியில் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

கடற்படையினரின் மேற்படி நடவடிக்கையானது அவர்களின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டியுள்ளதாக கிண்ணியா மக்கள் தமது கடுமையான விஷனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்து கவலையையும் வெளியிட்டுள்ளனர். எந்தவித தாக்கும் ஆயுதமும் இன்றி மணல் ஏற்றிக் கொண்டிருந்தவர்களை துப்பாக்கியால்தான் சுட்டுப் பிடிக்க வேண்டும் என்ற சட்டம் இல்லை. இந்த விடயத்தில் துப்பாக்கியை பாவிக்க வேண்டிய தேவையும் இல்லை. காரணம் மணல் ஏற்றியவர்களை அவர்கள் சாதாரணமாகவே சென்று கைது செய்திருக்கலாம். அவர்கள் இவர்களைக் கண்டு அஞ்சி ஓடி ஒழிந்திருந்தாலும் அவர்கைள கடற்படையினர் தேடிக் கண்டு பிடிக்கும் வழிமுறையே இருந்திருக்கின்றது.

**சத்தார் எம் ஜாவித்**



அதிநவின ஆயுதங்களைக் கையில் வைத்துக் கொண்டு சாதராண மனிதர்களைப் பிடிப்பதற்கு அச்சத்தையும், பதட்டத்தையும் ஏற்படுத்த வேண்டிய தேவை எந்த விதத்திலும் சாத்தியமானதொன்றல்ல. இது தேவையற்ற விதத்தில் பிரச்சினையை ஏற்படுத்த மேற்கொண்ட ஒரு செயலாகவே காணப்படுவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளா விட்டால் அவர்களை இலகுவாகவே கைது செய்திருக்கலாம். ஆனால் கடற்படையினர் தமது பலத்தைக்க காட்டியதன் விளைவு இரண்டு உயிரைப் பலி கொடுக்கவும், கடற்படையினரைத் தாக்கவும் வழிவகுத்து விட்டது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் காரணமாக குறித்த இருவரின் குடும்பங்களும் பாரிய பொருளாதார கஷ்டங்களுக்கு உள்ளாகி இருப்பதுடன் அவர்களின் குடும்பங்களைக் கவனிக் ஆளில்லாத ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. காரணம் நாளாந்த சிறிய வருமாணத்திலேயே அவர்களின் குடும்பங்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

பல்வேறுபட்ட யுத்த தந்திரங்களை கற்றுக் கொண்ட கடற்படையினர் ஒரு சிறிய விடயத்தை மிகவும் கட்சிதமாக முடிப்பதற்குப் பதிலாக துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள வைத்து சம்பவத்தை ஊதிப் பெரிதாக்கி விட்டனர். அவர்கள் இன்று ஊடகங்கள் வாயிலாக அவர்களை மக்கள் தூற்றுவதற்கு வழிவகுத்து விட்டது. எந்தவித ஆபத்துக்களுமின்றி அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தாமல் தாம் தவறை விட்டு விட்டு இன்று படைத்தரப்பினரும், சூழலியளாளர்களும் அப்பாவி மக்களை குற்றவாளிகளாக்கும் வகையில் தமது பொய்யான கருத்துக்களை ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டுள்ளமை அந்த மக்களை மேலும் சினங் கொள்ள வைத்துள்ளது.

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டியவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளும்போது மக்கள் இந்த அரசாங்கத்தில் வைத்திருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும் இல்லாமல் போவதற்கான விடயமாகவே அமைந்து வருகின்றது. சும்மா இருக்கும் மக்களைக் குழப்பி அப்பாவி தொழிலாளிகளின் வயிற்றில் அடிக்கும் ஒரு வகையான சூழ்ச்சிகளே நடக்கின்றதாக அந்த மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். இன்று பெரும்பான்மை மக்கள் இருக்கின்ற பல பகுதிகளில் எத்தனையோ சட்ட விரோத செயற்பாடுகள் நடக்கின்றன. அவற்றைக் கண்டு கொள்ளாத பாதுகாப்புத்துறையோ அல்லது

11 ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர்களும் சுதந்திர தினமும்

இலங்கை நாடு 1948 பெப்ரவரி 4இல் சுதந்திரம்பெற்றது. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக னு.ளு சேனநாயக்க தெரிவுசெய்யப்பட்டார். இவரின் ஆட்சிக்காலத்தில் அமைச்சரவையில் தமிழ் தலைவர்களான பொன்னம்பலம், அருணாசலம் மகாதேவா ஆகியோர் இடம்பிடித்தனர். டி.எஸ்.சேனநாயக்க பதவி விலகியதனைத் தொடர்ந்து, ளு. று. சு. னு. பண்டாரநாயக்க 1956ல் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர்காலத்திலே சர்ச்சைக்குரிய சிங்களம் மட்டும் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் சர்ச்சைகள் எழுந்தன. பின் 1960ல் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்றார். பின்தங்கிய பிரதேசத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகக் கல்வியை வழங்கும் முகமாக சிறிமாவோ அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறையினால், பல்கலைக்கழகங்களில் திறமைவாய்ந்த தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டது. இது தமிழ் ஆயுதப் போராட்டத்துக்கு உடனடிக் காரணியாக அமைந்தது. 1977இல் து.சு. ஜெயவர்த்தன அரசு, பதவிக்கு வந்தது. இக்காலப்பகுதிகளிலும் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டனர். ஆயுதப் போராட்டங்களும் நடைபெற்றன.

இவ்வாறு ஆயுதப்போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலப்பகுதியில்தான் மகிந்த ராஜபக்ச இலங்கை நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இவரின் காலப்பகுதியான 2009 மே 18ல்; இலங்கை நாட்டிலே யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டது. யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவந்திருந்தாலும் கூட, சமகாலத்தில் தமிழ் மக்கள் மிகுந்த நெருக்கடிகளின் மத்தியிலே இவ்வாட்சி காலத்தில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. இதனால்தான் புதியதொரு தலைமையிலான ஆட்சியினை தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அதற்கேற்ற வகையில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக அரியணை ஏற்றினர். அரியணையேறிய மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் 71 வது சுதந்திரதினம் நாளைய தினம் கொண்டாடப்படுகின்றது. இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றாலும், தமிழ் மக்களின் மனங்களில் சுதந்திரம் பூரணம்பெற்றிருக்கின்றதா? என்பதுதான்; வினாவாகியிருக்கின்றது என்பதனை அவர்களது பேச்சுக்கள், செயற்பாடுகள் புலப்படுத்தி நிற்கின்றன.

**71 ஆவது சுதந்திர தினம் இந்த நாட்டிலே நடைபெறவிருக்கின்ற இத்தருணத்தில், நாடு சுதந்திரத்தினைப் பெறுவதற்காக அன்றைய தமிழ்த்தலைமைகள் உட்பட தமிழ் மக்கள் அனைவரும் உறுதுணையாக இருநுது சுதந்திரத்தினைப் பெற்றுக் கொடுத்தனர். நாட்டிற்கு சுதந்திரத்தினைப் பெற்றுக் கொடுத்தாலும், தமக்கான சுதந்திரம் இந்த நாட்டிலே மறுக்கப்பட்டுள்ளதனை தமிழ் மக்கள் உணர்ந்ததன் பின்னரே நாட்டின் சுதந்தி தினத்தை கொண்டாட மறுத்து வருகின்றனர்**

முனையூரான்

### ஐந்து சுதந்திர தினங்களுக்கு தலைமையான நாட்டின் அதிபர்

மைத்திரிபால சிறிசேன அரியணையேறி ஐந்தாவது தடவையாக நாளைய தினம் தனது தலைமையில் சுதந்திர தினத்தினை கொண்டாடுகின்றார். நாட்டினைப் பொறுப்பேற்ற 2015ம் ஆண்டு பெப்ரவரி 4ல் முதலாவது சுதந்திர தினத்தினை கொண்டாடிய மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம், தொடர்ச்சியாக 2016, 2017, 2018ம் ஆண்டுகளில் சுதந்திர தினத்தினை கொண்டாடி 2019இலும் நாளைய தினம் சுதந்திர தினத்தினை கொண்டாடுகின்றனர்.

### சுதந்திர தினங்களில் ஜனாதிபதி கூறிய செய்திகள்

2016ம் ஆண்டு நடைபெற்ற 68வது சுதந்திர தினத்தில், தேசிய நல்லிணக்கம் சகோதரத்துவத்தின் ஊடாக ஒரே நாடு ஒரே இனத்தை கட்டியெழுப்புவதற்கும் தாய் நாட்டின் மரபுரிமையை தேசிய மரபுரிமையாக்கி இலங்கையை மீள் நிர்மாணித்து, இன மத குல பேதங்களை கடந்து மனித உறவுகளை வலுப்படுத்திய சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவது தமது நோக்கம் எனக்கூறியிருந்தார். 2017ம் ஆண்டு நடைபெற்ற 69வது சுதந்திர தினத்தில், தீர்மானமிக்க மற்றும் சவால்மிக்க தருணத்திலேயே சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதாகவும், ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாத்து, எமது எண்ணக்கருவின் ஊடாக அனைத்து இனத்தவர்களும் சிறப்பாக வாழக்கூடிய நாடொன்றை உருவாக்கும் பொறுப்பு அனைவரதும் தோள்கள் மீது சுமத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். 2018ம் ஆண்டு நடைபெற்ற 70வது சுதந்திர தினத்தில், ஊழல், மோசடி, வறுமை இல்லாத தூய்மையான நாட்டைக்கட்டியெழுப்ப அனைத்து தலைமைகளும் மனப்பூர்வமாக முன்வரவேண்டும். இன மத பேதமற்ற நல்லிணக்க வாழ்க்கையை நம் நாட்டில் உறுதிசெய்யவேண்டும். இனமோதல்கள் அற்றவகையில் மக்கள் வாழக் கூடிய வகையில் நாம் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டும். கடந்த முப்பதாண்டு காலப் பகுதியானது இலங்கையின் எதிர்காலப் பயணத்துக்கு மிக முக்கியமானது. எதிர்பாராத விதமாக நாட்டில் யுத்தம் நிலவியிருந்தது. நாட்டின் அபிவிருத்தியை முப்பதாண்டு காலம் பின்னோக்கி இழுத்திருக்கிறது. எனவே, நாட்டை முன்னேற்றத்தை நோக்கிக் கொண்டு செல்வதற்கு, நாட்டின் அனைத்துத் தரப்பினரும் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டும். இன மத பேதமற்ற சூழ்நிலையை உருவாக்குவதுடன் சமதானம் சகவாழ்வை மக்களுக்கு உறுதி செய்வதுடன் மத நல்லிணக்கத்தையும் நம்பகத்தன்மையுடன் வாழும் சூழ்நிலை உறுதிசெய்யப்படவேண்டும். என்ற கருத்தினைக்கூறியிருந்தார்.

### சுதந்திர தினத்தில் தமிழ் பெரும்பான்மை கட்சி பங்கேற்பு

இலங்கை நாடு சுதந்திரம் அடைந்தாலும், இலங்கை நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தொடர்ந்தும், துயரங்களையே அனுபவித்து வருகின்றனர். இதனால் பூரண சுதந்திரம் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் வரை இலங்கையில் நடைபெறும் சுதந்திர தின கொண்டாடத்தில் தாம் கலந்துகொள்வதில்லையென 1972ஆம் தமிழர் விடுதலைக்கூட்டணி தீர்மானத்தினை எடுத்ததாக கூறப்படுகின்றது. அத்தீர்மானத்திற்குகேற்ப தமிழ் பெரும்பான்மை கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அங்கத்தவர்களும், சுதந்திர தினத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனாலும் மைத்திரிபால சிறிசேன ஆட்சிபீடம் ஏறியதற்கு பின், எதிர்கட்சி தலைவராக இருக்கின்ற இரா.சம்பந்தன் சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். குறிப்பாக 43 வருடங்களின் பின் தமிழ் தலைமை சுதந்திர தினத்தில் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதொன்று.

### சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம்

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு, 1949ம் ஆண்டு தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதனை தொடர்ந்து, பின்வந்த காலப்பகுதியில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாத நிலையிலும், மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற 69வது சுதந்திர தினத்தில், மகிந்த ராஜபக்ச போன்றோரின் எதிர்ப்புக்கு அப்பாலும் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இவ்வாறு தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### தமிழ்மக்கள் சுதந்திரத்தினை கறுப்பு பட்டி அணிந்து பகிஸ்கரிப்பு

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம் தலைநகர் கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட அதேவேளை, வடக்கில் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும், சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கு துக்க தினமென தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. வட மாகாண சபையின் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், க.சவர்வேஸ்வரன், அனந்தி சசிதரன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இவ்வார்ப்பட்டத்தில் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்

71வது சுதந்திர தினம் இந்த நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், நாடு சுதந்திரத்தினை பெறுவதற்காக அன்றைய தமிழ்த் தலைமைகள் உட்பட தமிழ் மக்கள் அனைவரும் உறுதுணையாக இருந்து சுதந்திரத்தினைப் பெற்று கொடுத்தனர். நாட்டிற்கு சுதந்திரத்தினை பெற்றுக்கொடுத்தாலும், தமக்கான சுதந்திரம் இந்த நாட்டிலே மறுக்கப்பட்டுள்ளதனை தமிழ் மக்கள் உணர்ந்தனர். இதன் வெளிப்பாடகத்தான் எமது நாட்டின் சுதந்திரத்தினத்திற்கே கலந்து கொள்ளக்கூடாது என்ற தீர்மானங்களை நிறைவேற்றினர். இந்த நாட்டிலே சுதந்திரத்தினை கொண்டாடுவதற்கு தமக்கு சுதந்திரம் இல்லையென்ற ஆதங்கத்தினால்தான் உவகையோடு சுதந்திர தினத்தினை கொண்டாட தமிழ் மக்கள் கவலையுற்று நிற்கின்றனர். கறுப்புபட்டி அணிந்து போராட்டங்களிலே ஈடுபடுகின்றனர். இவற்றினை காலம் காலமாக மாறி வந்த அரசாங்கங்களும் கண்டுகொள்ளாமல் இதுவரையும் விரக்தியினை தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டமையே இந்த நாட்டில் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கானோர் மடிந்தமைக்கு காரணமாகின என கூறப்படுகின்றது.

தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்த, அவற்றினை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையினை உருவாக்க முடியாதவர்களாக 65க்கு மேற்பட்ட வருடங்களை கடத்தியதன் பின்பு, முன்னைய அரச அதிபர் உள்ளிட்ட பலரின் நேரடி எதிர்ப்புக்கு மத்தியிலும் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்காலத்தில் ஒலிக்கச் செய்தமை பாராட்டக்கூடியதானதொன்று. அதேவேளை தமிழ் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகள் கடந்த 43 வருடங்களாக சுதந்திர தினங்களில் கலந்துகொள்ளாத நிலையிலும் கூட, தமிழ் மக்கள் அரியணையேற வைத்த ஜனாதிபதி, தமக்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பார் என்ற எண்ணத்தில் இரா.சம்பந்தன் கலந்து கொண்டிருந்தார். அதே போல சுதந்திர தின செய்திகளும் கூட அனைத்து மக்களுக்கான சுதந்திரத்தினையும் பெற்றுக் கொடுப்பதை கூறுவதாகவே அமைந்திருக்கின்றன. ஆனாலும் 05வது தடவையாக தனது தலைமையில் சுதந்திர தினத்தினை மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் கொண்டாடும் தருணத்தில், இந்த நாட்டு மக்களும் இணைந்து கொண்டாடுகின்ற போதும், தமிழ் மக்கள் மத்தியில் இன்றுவரையும் விடுதலை பெறாத சுதந்திர தினமாகவே நோக்கப்படுகின்றது. இதனை அவர்களது சொல்லாடல்கள் மற்றும் அவர்களது செயற்பாடுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

அரசியல் ரீதியான உரிமை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, இறுதியுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பிலான நீதியான விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை, கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் கையளிப்பு போன்றவற்றினை வலியுறுத்தி இன்றுவரை போராட்டங்களிலே இருந்து கொண்டிருக்கின்ற

12 ஆம் பக்கம் பார்க்க....

## கிண்ணியா..

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசோ சிறுபான்மைக் கூலித் தொழிலாளிகளை இவ்வாறு இலக்கு வைப்பதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நியாயப்படுத்தவோ முடியாது என்பதே சமுக ஆர்வளர்களின் கருத்துக்களாகும்.

கிண்ணியாச் சம்பவம் சட்ட விரோதமானதாக இருந்தால் அதனை மேற்கொள்பவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதே சிறந்த பொறிமுறையாகும். குறிப்பாக இந்த விடயங்களுடன் தொடர்பு உள்ளவர்களை கைது செய்யக்கூடிய முறைகள் இருப்பதுடன் அவர்கள் மணல் ஏற்றிக் கொண்டு சென்றுள்ள வாகனத்தை பறிமுதல் செய்திருக்கலாம், கூலித் தொழிலாளிகளை கைது செய்து விசாரணை மேற்கொண்டு இந்த விடயத்தில் அவர்களை ஈடுபடுத்தியவர்களை அடையாளங் கண்டு அவர்களையும் சட்ட விதிப்படி கைது செய்யலாம். மாறாக கடற்படையினர் நடந்து கொண்ட விடயத்தை எவரும் ஏற்றுக் கொள்வதாக இல்லை.



கோப்புப்படம்

கிண்ணியா கண்டல்காடு சாவத்துப் பாலப் பகுதிகளில் மண் அகழ்வு இடம் பெறுவதாக தெரிவித்து குறித்த தினத்திற்கு முன்னர் நேரடியாகவே பலரைக் கைது செய்துள்ளதுடன் குறிப்பாக அப்பகுதியில் சுமார் 225 பேருக்குமேல் கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் வாகனங்கள், வள்ளங்களை கடற்படையினர் கைப்பற்றியும் இருக்கின்ற நிலையில் அதே முறைமையில் கடந்த 29ஆம் திகதி துப்பாக்கிப் பிரயோகம் செய்யாது குறித்த கூலித் தொழிலாளர்களையும், வாகனத்தையும் கைப்பற்றி இருக்கலாம். இவ்வாறு கடற்படையினர் செய்திருந்தால் இரண்டு உயிர்களை பலி கொடுத்திருக்கத் தேவையில்லை. அவர்கள் விட்ட பிழையை இன்று அப்பாவி மக்கள் பக்கம் திசையை திருப்பி தமது பக்கத்தின் நியாயங்களை ஊடகங்கள் வாயிலாக மேற்கொண்டு தாம் குற்றவாளிகள் அல்ல என்ற முன்வைக்கின்றனர். இந்த விடயத்தை மக்கள் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

சட்ட விரோத மணல் அகல்வு என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கத்தில் அதற்கான அனுமதி பெற்றே மேற்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. சட்ட விரோதம் என்றால் அதற்கான நடவடிக்கைகளை உரிய மறையில் எடுக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு ஆனால் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்யும் அளவிற்கு குறித்த சம்பவம் முக்கியமானதல்ல. இந்த சட்ட விரோத செயற்பாட்டுக்கு அனுமதியை யார் கொடுத்தது? இந்த விடயங்களுடன் தொடர்புடையவர்கள் யாடர்? ஏன் அவர்களை பாதுகாப்புத் தரப்பினர் கண்டு கொள்ளாது இருக்கின்றனர் போன்ற விடயங்களில் மக்களுக்கு சந்தேகங்களே இருக்கின்றன. தொழில் இல்லாத காணத்தினால் ஏதாவது ஒரு தொழிலை நாடிச் செல்ல வேண்டிய தர்மசங்கடத்தில் கூலித் தொழிலாளிகள் இருக்கின்றனர். இவ்வாறான நிலையிலே அவர்கள் முதலாளிமார்களிடத்தில் இவ்வாறான வேலைகளுக்கு செல்கின்றனர்.



கோப்புப்படம்

இலங்கையைப் பொருத்த வரையில் தொழில் வாய்ப்பு என்ற விடயத்தில் பாரிய சவாலை எதிர் கொள்ள வேண்டியுள்ளன. குறிப்பாக பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இன்று வேலை வாய்ப்புக்கள் இல்லாது திண்டாடிக் கொண்டிருக்கின்னர். இதற்கான ஒரு சரியான பொறிமுறை இன்னும் அரசால் மேற்கொள்ளப்பட இல்லை. தொழில் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் பல குழப்பங்கள் ஏற்படவும், பிரச்சினைகள் ஏற்படவும் வழியேற்படுகின்றன. பலர் படித்து விட்டு கூலித் தொழில்கள் செய்ய வேண்டிய சிலைமைகளே காணப்படுகின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில்தான் இன்று இளைஞர்கள் மண் அகழ்வு போன்ற தொழில்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இவ்வாறான நிலைமைகளை இல்லாது செய்வதற்கு புதிய தொழில்களை வழங்குவதற்கான ஒரு பொறிமுறைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக குறித்த பகுதிகள் கடற்றொழில் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்ற நிலையில் இத்துறை சார்ந்த வகையில் தொழிந்சாலைகளை நிறுவி அப்பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கலாம். ஆனால் அரசு இதுவிடயத்தில் இன்னும் அக்கறை கொள்ளாது இருப்பதே மக்கள் சட்விரோத தொழில்களுக்கு விரும்பியோ அல்லது விரும்பாமலோ செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதனை இங்கு சுட்டிக்காட்டலாம்.

எனவே மேற்கூறப்பட்ட வகையில் மக்களின் நலன்களில் அவர்களின் தொழில் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் அரசுக்கு இருக்கின்ற நிலையில் அவற்றை கவனத்திற் எடுக்காது இருக்கும்போது மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு ஏதாவது தொழில்களை செய்ய வேண்டிய நிலையிலேயே இருக்கின்றனர். இந்த வகையில் அரசு மக்களின் நலன்களில் அக்றை கொண்டு அவர்களுக்கான தொழில் வழிமுறைகளை ஏற்படுத்துவதன் மூலமே அதிகமான சட்ட விரோத செயற்பாடுகளை குறைக்கலாம் எனலாம்.

## தமிழர்கள்

# ஒருகணம் சிந்திக்க வேண்டிய நேரமிது!

**நிவே**

தமிழர் போராட்ட வரலாறு 71 வருடங்களை எட்டுகின்றது. இலங்கை குடியரசின் 71 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது. இந்த சுதந்திரதின நிகழ்வுகளை பெரும்பான்மை சிங்கள மக்களும் சரி சிறுபான்மை தமிழ் முஸ்லிம்களும் சரி கொண்டாடுவதற்கு தகுதி உள்ளவர்களாக உள்ளனரா என்ற கேள்வி எழுகின்றது. அது பற்றி ஆராய்ந்தால் இலங்கை வரலாற்றில் அந்நிய ஆதிக்கத்திற்குள் இலங்கைத் தீவு உள்ளாகும் வரையில் தமிழர்கள் தனி இராச்சியங்களை அமைத்து தமது படைப்பலத்தின்மூலம் தமிழர்களின் மரபுவழித் தாயகத்தையும் தமிழர் இறையாண்மையையும் பாதுகாத்து வந்ததுடன் அவர்கள் இன மத பேதமின்றி நீதி நெறி தவறாது நல்லாட்சி புரிந்து வந்திருந்தனர்.

அந்நிய ஆக்கிரமிப்பாளர்களினால் இலங்கைத்தீவு ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் அவர்கள் மக்களை அடிமைப்படுத்தி, எமது வளங்களை மட்டுமே சூறையாடி வந்தனர் என்பதும் மக்களுக்கு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தவோ அன்றி இலங்கைத் தமிழர்களையோ அன்றி சிங்கள மக்களையோ பாரியளவில் கொலைசெய்யவோ அல்லது தற்போதைய சிங்கள பேரினவாத அரசுகள் போன்று இனவழிப்புக்களை திட்டமிட்டுச்செய்யவோ இல்லை என்பதை வரலாறுகள் கூறும்.

அந்நிலையில் இலங்கைத்தீவை பிரித்தானிய அரசாங்கம் இறுதியாக ஆண்டதும் அவர்களது வெளியெற்றத்தின் பின் இலங்கைத் தீவின் ஆட்சிப் பொறுப்பை சிங்கள பௌத்தவாதிகளின் கைகளில் கொடுத்துச்சென்றதையும் முன்னைய எனது கட்டுடிரைகளில் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தேன்.

அந்த வகையில் இலங்கை சுதந்திரம் பெற்றது 1948 பெப்ரவரி 4ந் திகதி யாகும். இவ்வாறு ஆட்சிப்பொறுப்பை சிங்கள பெரும்பான்மைவாதிகளிடம் கையளித்துச்சென்ற பிரித்தானிய அரசாங்கத்தினர் செய்த தவறு ஒன்றே ஒன்றுதான். அவர்கள் இலங்கைத்தீவில் போராடிப்பெற்ற ஆட்சியதிகாரத்தை எவ்வாறு எவர்களிடமிருந்து பெற்றார்களோ அதே மக்களின் கைகளில் கொடுக்காதுவிட்டதுதான். அவர்கள் அவ்வாறு போராடி தமிழ் அரசர்களைத் தோற்கடித்து பெற்ற இலங்கைத்தீவினை உரியவாறு அந்த அந்த ஆட்சியாளர்களிடமே விட்டுச்செல்லாமையே இன்றைய இடர்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக அமைந்தது என்றால் மிகையாகாது. இந்த வகையில் இலங்கையில் ஏற்பட்ட இந்த யுத்தமேகத்திற்கு பிரித்தானிய அரசாங்கமும் ஒருவகையில்மூலகாரணமாக அமைந்தது என்பதை பிரித்தானியஅரசு மறுக்க முடியாது. அதற்கான முழுப்பொறுப்பையும் பிரித்தானிய அரசாங்கமே ஏற்கவேண்டும். இந்நிலையில் இன்றைய நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற கூட்டாட்சிக்கால கட்டத்தில் யுத்தமேகம் தணிந்துள்ள (தணிக்கப்பட்ட) போதிலும் தமிழர்களின் தாயகப்பிரதேசத்தில் திட்டமிட்ட வகையில் இன, மத, பாரம்பரிய உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமன்றி வடக்கினை அபிவிருத்தி செய்கின்றோம் என்ற போர்வையில் மகாவலி திட்டத்தினை மேற்கொள்வதாகக் கூறி (வலிந்த) சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதும், தமிழர் தாயகத்தினை நிரந்தரமாகவே பௌத்த சிங்கள பேரினவாத சித்தாந்தத்தறிகுள் அடிமைப்படுத்தி வைக்கும் திட்டத்துடன் வடக்கு கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதும், அதுமட்டுமன்றி வடக்கு கிழக்கின் பெரும்பான்மையான கடற்கரைப்பிரதேசங்களை முழுவதுமாக மக்களிடம் விடுவிக்காது இன்னமும் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதும் படையினரின் குடும்பங்கள் இன்னமும் அங்கு வசித்துவரும் நிலையுமே காணப்படுகின்றது.

அது மட்டுமன்றி தமிழர் பாரம்பரியமாக வாழ்ந்து பண்பாட்டில் சிறந்து விளங்கிய யாழ்ப்பாணத்தில் இன்று போதைவஸ்து என்னும் கொடிய அரக்கனை பலவழிகளிலும் ஊடுருவச்செய்து இன்றைய தமிழ் இளைஞர்களின் எதிர்காலத்தை இருளுக்குள் தள்ளவும் எதிர்கால தமிழர்களின் இருப்பையும் அவர்களது கீர்த்தியையும் குழிதோண்டிப் புதைக்கும் பாரிய திட்டமிடலுடன் தென்னிலங்கை தனது கோரமுகத்தை திரைமறைவில் செய்துவருகின்றது. இவ்வாறான மறைமுகமான பனிப்போர் ஒன்றினை தமிழர்தரப்பினர்மீது ஏவிவருகின்ற இன்றைய சிங்கள பேரினவாத சக்திகள் இந்த 71 ஆவது ஆண்டு சுதந்திர தின நிகழ்வுகளை எதிர்கொள்கின்ற இன்றைய நிலையில் தமிழர்கள் தரப்பினரால் செய்யக்கூடியது என்ன என்று பார்ப்போம்.

தமிழ் மக்கள் தாம் அனுபவித்து வந்த இன்னல்கள் பெரும்பான்மை ஆட்சியாளர்களால் காலத்துக்கு காலம் வழங்கப்படுவதாகக் கூறி வந்த பொய்வாக்குறுதிகளினால் ஏற்பட்ட வடுக்கள், தற்போது ஆட்சியிலிருக்கும் மைத்திரி ரணில் கூட்டரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த கால இழுத்தடிப்புக்கள், உரிமை மறுப்புக்கள். மற்றும் ஏமாற்றுவித்தைகள், பயங்கரவாதசட்டத்தை இல்லாமலாக்காமை, காணாமல்போனொருக்கான அலுவலகத்தை திறந்தாலும் உரிய முறையில் அது செயற்படுத்தாது பாராமுகமாக இருத்தல், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆக்கபூர்வமாக எதையும் செய்யாமை, அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தில் சமஷ்டி இன்மை, வடக்கு கிழக்கு இணைப்பு இன்மை, பௌத்தத்திற்கு முன்னுரிமை போன்ற விடயங்களை இன்னும் நடைமுறைப்படுத்த உள்ளமை போன்ற அனைத்துவிதமான அரசியல் நகர்வுகள் எல்லாமே தமிழர்களுக்கு எதிரானதாகவே உள்ளது.

இவ்வாறான பாரதூரமான விளைவுகளை தமிழர் தரப்பினர் எதிர்கொள்கின்ற இவ்வேளையில் தமிழர்களுக்கு சுதந்திர தினம் கொண்டாடும் அருகதை எங்கேயிருந்து கிடைக்கின்றது என்பதை அனைத்து தமிழர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான இன்றைய நிலையில் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் புதிய அரசமைப்பின் மூலம் நீடித்து நிலைக்கக்கூடிய ஒரு நிரந்தரத் தீர்வை அடைவதற்கான சரியான சந்தரப்பம் ஒன்று கிட்டியுள்ளதாகவும் அதனை நடுவிப்போக விடாமல் புதியஅரசமைப்பை நிறைவேற்றுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கூறுவது போன்று சரியான சந்தர்ப்பம் கிடைத்தது என்னவோ உண்மைதான். அது முன்னைய காலத்தில் சாத்தியமானதாகவே இருந்தது என்பது உண்மையாக இருந்தது. ஆனாலும் இன்றைய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காலத்தில் அந்த சந்தர்ப்பம் பல காத தூரம் கடந்து சென்றுவிட்ட ஒன்று என்பதை சம்பந்தன் உணர மறுக்கின்றாரா அல்லது உணர்ந்தும் வேறுவழியின்றி அறிக்கை வெளியிட வேண்டும் என்பதற்காக சொல்கின்றாரா என்று புரியவில்லை.

எவ்வாறாயினும் இதே சர்வதேச சமூகம்தான் தமிழர் ஆயுதப்போராட்டத்தின்போது அவர்கள் தமது உரிமைக்காகப் பேராடுகின்றார்கள் என்று தெரிந்திருந்தும் தமது நலன்களுக்காக பெரும்பான்மை சிங்கள மேலாதிக்கவாதிகளுடன் கைகோர்த்து தமிழர் உரிமைப் போராட்டத்தை வேரோடு சாய்த்தது என்பதை அவர் அவர் எவ்வாறு மறந்துவிட்டாரோ தெரியவில்லை. தற்போது சர்வதேசத்தினர் இலங்கை விவகாரங்களில் அதிகமாகத் தலையீடு செய்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணமும் அவர்களது சுயநலனாகத்தான் இருக்க முடியுமேயன்றி இலங்கைத் தமிழர்களின்பால் அவர்கள் கொண்டுள்ள உண்மையான அக்கறையாக அமையாது என்பதே கணிப்பாகும்.



இப்போதைய இந்த அக்கறையை பிரித்தானிய அரசாங்கம் அன்றே கொண்டிருந்தால் இலங்கையில் இத்தனை பெரிய இரத்த ஆறு ஓடியிருக்காது. உயிர்கள் பலியாகியிருக்காது. உடமைகள் அழிக்கப்பட்டிருக்காது. நீண்ட யுத்தத்தினை தமிழர்கள் எதிர்கொண்டிருக்கத்தேவையில்லை. எப்போது உலகத்தமிழாராய்ச்சி இடம்பெற்றதோ எங்கே எமது உரிமைகள் கலாசார விழுமியங்கள் என்பன உலகறிய மறுக்கப்பட்டதோ அன்றே பிரித்தானிய அரசாங்கம் உரிய தீர்வினை வழங்க முன்வந்திருக்கவேண்டும். சரி அந்தத்தருணத்தைத்தான் விட்டிருந்தாலும் 1983 ஜூலைக்கலவரதின்போது தமிழர்கள் பால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவழிப்பின்பொதாவது பிரித்தானியாவும் சரி இப்போதுள்ள சர்வதேச அரசாங்கங்களும் சரி உரிய நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும்.

சடலங்களை கடத்தி யுத்தமேகம் சூழ்ந்து தமிழர்கள் வகைதொகையின்றிக்கொல்லப்பட்ட போதும் போராட்டகளங்கள் சூடுகண்டு நேரடிச்சமர்கள் நடந்தபோதும் சரி சமரசப்பேச்சுவார்த்தைகள் என்று சிங்கள அரசாங்கத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்தனவே தவிர உரிய தீர்விற்கான சாவியை அந்த சிங்கள பேரினவாத அரசாங்கத்திற்கு வழங்க மறுத்துவிட்டன. பேரினவாதிகள் தொடர்ந்தும் சிறுபான்மையினரை ஏமாற்றிவந்தபொதும் கைகட்டி வேடிக்கை பார்த்தனவேயன்றி வேறெதுவும் செய்ய முனையவில்லை. இந்திய அரசு மட்டும் மக்களுக்கு உதவுவதாகக் கூறி இந்தியப்டையினரை அனுப்பி வைத்தது.

எனினும் அந்த முயற்சிகூட பாதை மாறி தமிழர்களை அழிக்கப்பயன்படுத்தப்பட்டதேயன்றி விமோசனத்தை வழங்கத்தவறியிருந்ததும் கசப்பானதும் என்றும் மறக்கமுடியாததுமான சோக வரலாறாகப்பதியப்பட்டுவிட்டது.

மேலும் போராட்ட காலங்களில் எமது குழுக்களிடையெ எற்பட்ட பிரிவினைகள் போன்று போரட்டம் முற்றுப்பெற்றுள்ள அல்லது மௌனிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் சமரச அரசியல் செய்யும் இக்காலத்தில் கூட தமிழ்க்குழுக்கள் பிளவடைந்து திக்குத்திக்காக நிற்பதும் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படுவதும் எதிர்காலத்தில் தமிழர்களுக்கு எத்தகையதொரு சாதகமான முடிவையும் பெற்றுக்கொள்வதில் முட்டுக்கட்டையாகவே அமையும் என்பதும் மறுக்கமுடியாத கசப்பான உண்மை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரின் எதேச்சாதிகாரப்போக்கும் ஏனைய பங்காளிக்கட்சிகளின் அபிலாசைகளை நிராகரித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறுண்டு சின்னாபின்னமாகிப்போன நிலையும் தோன்றியுள்ளதையும் அதற்குக் காரணம் தமிழரசுக்கட்சியினர்தான் என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

அவ்வாறு அவர்கள் ஏனைய பங்காளிக்கட்சிகளை பகைத்துக்கொள்ளாது அரவணைத்த நடந்து தமிழர் வாக்குகளை சிதறடிக்காது ஒருமுகமாகப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டிய கடப்பாடும் தார்மீக உரிமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நிச்சயமாக உள்ளது. அதுவே தமிழ் மக்கள் அவர்களுக்கு வழங்கிய ஆணையாகும். எனினும் தமிழ் மக்களின ஆணைக்கு அடிபணிய மறுத்ததும் எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டதும் கட்சிகளை முன்னைய போராட்ட காலங்களில் பிரிவடைந்து சென்றதால் பாரிய இழப்புக்களை சந்தித்துக்கொண்ட விடுதலைப்புலிகளைப்போலவே இன்று விடுதலைப்புலிகள் காலத்தில் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இழப்புக்களை சந்திக்கவுள்ளது. இங்கே இழப்புக்கள் என்று கூறும்போது தனியே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அங்கத்தவர்களின் இழப்பை கருதவில்லை.

மாறாக அரசியல் போராட்ட வரலாற்றில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவுள்ள பாரிய பின்னடைவையே இங்கே கருத்திற்கொள்கின்றேன்.

ஆக மொத்தத்தில் தமிழ் மக்கள் மேய்ப்பனின்றி வழிதவறவுள்ள வெள்ளாட்டு மந்தைகளாகவுள்ளனர் என்பதே இறுதிமுடிவா? இக்கேள்விக்கு பதிலிறுக்கக்கூடிய தலைவர்கள் யார்? இந்தப்பாரிய இடைவெளி என்றுமே நிலைத்து நிற்கும் அபாயமும் உள்ளது என்பதை அனைத்து தமிழ் மக்களும் உணரவேண்டும். சிந்தித்து செயற்பட வேண்டும்.



## தமிழர்களும்...

II ஆம் பக்கத் தொடர்ச்சி

நிலையிலும் அவை தீர்க்கப்படாமல், பெரிதும் பேசப்படாமல் இருந்துகொண்டிருக்கின்ற நிலையினால்தான் தமிழ்மக்கள் சுதந்திர தினத்தினை மனமுவந்து கொண்டாட தயங்கி நிற்கின்றனர் என்பதனை மனகுமுறல்கள் எடுத்தியம்பி நிற்கின்றன.

நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் இணைந்து மகிழ்ச்சிகரமாக கொண்டாட வேண்டிய சுதந்திர தினத்தில் ஒருபக்கம் கொண்டாடியும் மறுபக்கம் எதிர்ப்புக்களும், மனச்சோரல்களும் இடம்பெறுவது, நாட்டிற்கு சாலப்பொருத்தமற்றது என்பது இவ்விடத்தில் பொதுவான கருத்தாகவிருக்கின்ற நிலையில், 71வது சுதந்திர தினத்திலிருந்தாவது தமிழ் மக்களுக்கு அவர்களுக்கான நீதிகளை வழங்கி எதிர்வரும் காலங்களில் சிறந்ததொரு சுதந்திர தினத்தினை கொண்டாடுவதற்கு நாட்டின் தலைவர் அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதே மக்களின் பெருவிருப்பாகும்.

# கிண்ணியாவை அச்சுறுத்தும் கால்நடைகளின் மர்ம மரணங்கள்

கியாஸ் ஷாபி, கிண்ணியா



ஒரு மாத காலத்துக்குள் கிண்ணியா பிரதேச பண்ணையாளர்களுக்குச் சொந்தமான 28 ஆயிரம் மாடுகள் உயிரிழந்துள்ள செய்தியானது பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாகியிருப்பதோடு, கால்நாடை பண்ணைகளின் எதிர்கால இருப்புக் குறித்த சந்தேகம் கால்நடை வளர்ப்பாளர்களை மாத்திரமன்றி ஒட்டு மொத்த கிண்ணியாவையும் அதிர வைத்திருக்கிறது.

2018 டிசம்பர் 1ஆம் திகதியில் இருந்து டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள்ளே இந்த மோசமான அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இக்கட்டுரை எழுதும் போதும் ஆங்காங்கே தினமும் ஐந்தாறு மாடுகள் என்ற கணக்கில் இறந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மாடுகளுக்கு நிரந்தரமான மேய்ச்சல் தரை ஒன்று இல்லாத காரணத்தினால் தற்காலிகமாக கந்தளாய் சீனி ஆலை, கண்டல்காடு, கல்லரப்பு, சாவாறு, சுண்டியாறு, செம்பிமோட்டை மற்றும் கங்கை போன்ற காட்டுப் பிரதேசங்களில் விடப்பட்டிருக்கின்றன, புற்கள், செடிகள் இல்லாத இந்த காட்டுப் பிரதேசங்களில் மாடுகளுக்கு போதியளவு உணவு கிடைக்காமையினாலே இவ்வாறு இறந்துள்ளதாக பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றார்.

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களே மாடுகள் கன்று ஈன்றுவதற்கான பருவகாலமாகும். மாடுகளுக்கு போதியளவு உணவு கிடைக்க வேண்டிய கர்ப்ப காலத்தில் உணவு கிடைக்காத படியால் இவ்வாறு கர்ப்பம் தரித்த மாடுகளும், கன்று ஈன்ற பின்னர் தாயும் கன்றுகளுமே அநியாயமான முறையில் இறந்திருக்கின்றன.

வருடம் தோறும் ஒக்டோபர் மாதம் ஆரம்பத்தில் வட கீழ் பருவ பெயர்ச்சி மழையோடு, வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை



ஆரம்பித்து விடும். இந்த காலப்பகுதிக்குள் அதாவது, ஒக்டோபரில் இருந்து பெப்ரவரி மாதம் வரை சுமார் ஐந்து மாதங்கள் கால்நடைகளை காட்டுப் பகுதிக்குள் கொண்டு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு பண்ணையார்கள் ஒவ்வொரு வருடமும் ஆளாகின்றனர்.

இந்த விடயம் குறித்து கிண்ணியா பிரதேச கால்நடை வளர்ப்பாளர் சங்கத்தின் செயலாளர் ஏ.சி.முகம்மது முபாரக் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவிய யுத்த காலப்பகுதிக்குள் நிரந்தரமாக இருந்த மேய்ச்சல் நிலங்களை, தற்போது விவசாயிகள் அத்துமீறி பிடித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாகத்தான் நாங்கள் நிரந்தரமான மேய்ச்சல் நிலங்களை இழந்து, இந்தளவு பெரிய தொகையாக எமது பொருளாதாரத்தை இழந்திருக்கிறோம்.

இந்த கால்நடை பண்ணைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரம் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறது. ஒரு நாளைக்கு 10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் வரையான லீற்றர் பால் கறக்கப்படுகின்றது.

மலைநாட்டு பிரதேச எருமை மாட்டுப் பாலை விட, எமது எருமை மாட்டுப் பாலுக்கு தென் பகுதியில் அதிகரித்த கேள்வி காணப்படுகிறது. காரணம் இங்குள்ள பாலில் அதிக கொழுப்பு காணப்படுவதாகும். பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் மிக்க எமது தொழிலை பாதுகாப்பதற்கு நிரந்தரமான மேய்ச்சல் நிலம் ஒன்று அவசியமாகும். ஏனெனில் வேளாண்மை துறைக்கு ஆயிரக்கணக்கான ஏக்கார் நிலம் இருக்கும் போது, கால்நடை பண்ணையாளர்களுக்கு ஏன் நிலம் ஒதுக்க முடியாது என்று தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணிஆகிய இரு கமநல சேவை நிலையங்கள் உள்ளன.

இதில் கல்லறப்பு, சாவாறு, சுண்டியன் ஆறு, உகல்வத்தை, கல்லடப்பு மற்றும் கல்மடு ஆகிய கிராமங்கள் கிண்ணியா கமநல சேவை நிலையத்துக்கு சொந்தமான வேளாண்மை காணிகளாகவும் செம்பிமோட்டை, ஆயிலயடி (ஒருபகுதி), பனிச்சங்குளம் ஆகிய கிராமங்கள் குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்திற்கும் சொந்தமான விவசாய காணிகளாகவும் இருக்கின்றன.

இந்த கிராமங்களை சம்மந்தப்படுத்தியே தற்போது, இந்த கால்நடைகள் இறப்பு குறித்து பேசப்படுகின்றன. 10வருடங்களாக மேச்சல் தரைக்காக போராடி வருவதாகவும் கால்நடை வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களில்

## “அரசியல்வாதிகளும் நிர்வாக அதிகாரிகளுமே கிண்ணியா பிரதேச அபிவிருத்தியின் பின்னடைவுக்கு பொறுப்புதாரிகள்”

வேளாண்மை செய்யப்படுகின்றது என்ற கால்நடை பண்ணையாளா'களின் குற்றச்சாட்டை மறுக்கின்ற விவசாயிகள், பரம்பரை பரம்பரையாக உற்பத்தி செய்யப்பட்ட காணிகளிலேயே தாம் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு வருவதாக இங்கு குடியேறி பயிர்ச் செய்கையில் ஈடுபடுபோர் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து, விவசாய சம்மேளனத் தலைவர் அப்துல் மஜீத் உமர் லெப்பை (ஓய்வு பெற்ற கிராம நிலதாரி) கருத்து தெரிவிக்கும் போது, 1963 இல் பாராளமன்ற உறுப்பினர் மறைந்த ஏ.எல்.அப்துல் மஜீதின் சிந்தனையில் உறுவானதே இந்த விவசாயக் காணிகளாகும். ஒவ்வாரு கிண்ணியா காரனுக்கும் இரண்டு ஏக்கர் வீதம் விவசாயக் காணியை பெற்றுக் கொள்ளும் அவரது திட்டத்தின் கீழ், அப்போது காடுகள் வெட்டி களனிகளாக்கப்பட்டன.இவருடைய முயற்சியின் காரணமாக 1971 இல் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு தலா இரண்டு ஏக்கருக்கான காணி பராமரிப்பு அனுமதி பத்திரம் வழங்கப்பட்டதோடு விவசாயிகளுக்கு வேளாண்மை உற்பத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக 2 ஏக்கருக்கான விவசாயக் கடனையும் பெற்றுக் கொடுத்தார்.

இந்த காணி பராமரிப்பு அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் புதுபிக்கப்படல் வேண்டும். ஆனால் 1975 இல் திருகோணமலையில் உள்ள மாவட்ட காணி அலுவலகம் மின் ஒழுக்கு காரணமாக முற்றாக எரிந்து போனது இதில் இந்த காணி அனுமதி பத்திரம் சம்மந்தப்பட்ட ஆவணங்களும் எரிந்து நாசமாகியது.எனினும் இதனை மீற்றும் பெற்றுக் கொடுப்பதற்கு அரச அதிகாரிகள எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனைத் தொடா'ந்து 1993 இல் துறைமுகங்கள், கப்பல் துறை இராஜாங்க அமைச்சராக இருந்த மறைந்த எம்.ஈ.எச். மகரூப் இவர்களுக்கு நிரந்தர காணி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார். ஆனால், இந்த அனுமதிப் பத்திரம் காடு வெட்டி, வேளாண்மை செய்த எல்லோருக்கும் கிடைக்கவில்லை. இதற்கு காரணம் அரச அதிகாரிகளின் திட்டமிட்ட செயற்பாடாகும். ஏனெனில் இவா'கள் முறைாக அறிவித்தலை வழங்கவில்லை. இதனால் முன்னா' வேளாண்மை செய்த பல போ' பாதிக்கப்ட்டனர்.

இந்த நிலையில் யுத்தமும் உக்கிரமடைய நிரந்தர அனுமதிப்பத்திரம் எடுப்பதை கைவிட்டதோடு, வேளாண்மைச் செய்கையையும் கைவிட்டனா'. இவ்வாறு 30 வருடங்களின் பின்னா' இன்று மீண்டும் அங்கு சென்று காடு வெட்டி, தங்கள் காணிகளில் வேளாண்மை செய்து வருகின்றனர் என்று தெரிவித்தார்.

இது இவ்வாறு இருக்க, செம்பி மோட்டை பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்குச் சொந்தமான காணிகளை விடுத்து, மீதியிருக்கின்ற 350 ஹெக்டேயர் அளவு காணியை மேய்சல் தரைக்கு கொடுப்பதற்கு 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 2017 இல் காணி அளவையும் செய்யப்பட்டடது. ஆனால் இன்னும் அது அமுல்படுத்தப்படவில்லை. இவ்வாறு 350 ஹெக்டேயர் காணி மேய்ச்சல் தரையாக கிடைத்திருக்குமானால், இந்த இறப்பில் இருந்து அரைவாசி மாடுகளையாவது பாதுகாத்திருக்க முடியும் என பண்ணையாளர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடா'பாகவும் அரச அதிகாரிகள் மீதே குற்றம் சுமத்தப்படுகின்றது. அதாவது உரிய நேரத்தில் வன இலாகா அதிகாரிகள் எல்லையிட்டு கல் நட்டியிருக்க வில்லை. இதன் காரணமாக இதில் சுமார் 200 ஹெக்டேயா' அளவிலான காணியை விவசாயிகள் பிடித்து வேளாண்மை செய்திருக்கிறார்கள் என்ற தகவலும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையிலேயே செம்பிமோட்டையில் இருந்து தங்கள் கால்நடைகளை கடந்த ஒக்டோபா' மாதம் கந்தளாய் சீனி ஆலை காட்டுப்பகுதிக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். இவ்வாறு கொண்டு சென்ற எருமை மாடுகளே உணவு இன்றி அதிகம் இறந்திருக்கின்றன.

இது இவ்வாறு இருக்க விவசாயிகள் சொல்லுகின்ற கருத்துக்களை நோக்குவோமாக இருந்தால், , யுத்த காலத்துக்கு முன்பிருந்தே அவர்கள் வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை செய்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் யுத்தம் காரணமாகவே, விவசாயத்தை கைவிட்டிருந்த நாங்கள் எங்களுடைய காணிகளில் விவசாயம் செய்கிறோம். ஆனால், கால்நடை வளர்ப்பாளர்களின் காணிகளை அத்துமீறி பிடிக்கவில்லை என்றும் அவர்கள் யுத்த காலத்திலே மாடுகளை வளர்த்து பெருக்கிக் கொண்டனர் தெரிவிக்கிகின்றனர்.

மாடுகளின் உயிரிழப்பு தொடர்பாக கிண்ணியா பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி எம்.எஸ்.எம். பைசால் கருத்து தெரிவிக்கையில்,

ஆறு மாதங்களுக்கு முன்னர் கந்தளாய் சீனி தொழில்சாலை காடுகளில் உள்ள மாடுகளுக்கு ஒருவகை வைரஸ் நோய் இருந்தது. ஆனால் அந்த நோய்க்கு உரிய மருத்துவ கிகிச்சை வழங்கப்பட்டதால் அந்த நோய்த் தொற்றில் இருந்து அந்த மாடுகள் ஏற்கனவே பாதுகாக்கப்பட்டு விட்டன.

ஆனால்,தற்போது மாடுகளுக்கு போதியளவு போசாக்கு கிடைக்காமையினாலே அவை இறக்கின்றன. இதற்கு காரணம் மேய்ச்சல் தரை இன்மையாகும்.

இறந்த மாடுகளின் சில உடல்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது, கல்சியமும் மெக்னீசியம் முழமையாக குறைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இல்வாறு குறைவு ஏற்பட்டதனால், எலும்புகளுக்கு போதியளவு பலம் கிடைக்காது, மாடுகள் நிற்க முடியாமல், நிலத்தில் விழந்து இறக்க நேரிடுகின்றது என்றும் இறந்த மாடுகளை பாதுகாப்பான முறையில் புதைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட தகவல்களில் இருந்து சிக்கல்களை தெளிவாக இனங்கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. பிரதானமாக யுத்த கால சூழ்நிலைதான் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது என்பது ஒரு முக்கியமான காரணமாக தெரிகின்றது. விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இந்த விவசாயக் காணிகளில், யுத்த காலத்தில் விவசாயிகள் அங்கு குடியிருந்து பயிர் செய்வது ஒரு ஆபத்தான தொழிலாக மாறியிருந்திருக்கிறது. இதனால் விவசாயிகள் வேளாண்மைத் தொழிலைக் கைவிட்டிருக்கிறார்கள். இதன்காரணமாக அப்போது இலாபகரமான தொழிலாக காணப்பட்ட கால்நடை வளா'ப்பு முக்கியமடைந்திருக்கிறது. அடுத்து அரசாங்க அதிகாரிகளின் கவனயீனம் அல்லது அவர்களின் திட்டமிட்ட செயற்பாடும் இந்தப் பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கிறது என்ற உண்மையும் இதிலிருந்து விளங்குகின்றது. எது எப்படியாக இருப்பினும் யுத்த காலத்தில் ஒரு துறை வீழ்ச்சியடைந்து இன்னுமொரு துறை வளா'ச்சியடைந்திருக்கிறது என்பதே உண்மை.

யுத்தம் முடிந்த கையோடு விவசாயிகள் தங்கள் காணிகளுக்குள் குடியேறி வேளாண்மை மற்றும் மேட்டு நிலப் பசிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போதைய கணக்கின்படி கிண்ணியா கம நலசேவைப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 3220 ஏக்கா' வேளாண்மைக் காணிகளும் 40 ஏக்கா' மேட்டு நிலக்காணியும் இருக்கின்றன. குறிஞ்சாக்கேணி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 700 ஏக்கர் வேளாண்மைக் காணியும் 30 ஏக்கா' மேட்டு நிலக் காணியும் இருப்பதோடு இந்த இரு பிரதேசங்களிலும் பெரும்பாலான இடங்களில் மக்கள் மீள்குடியேறியும் இருக்கின்றனர்.

யுத்தம் ஆரம்பித்து 30 வருட காலத்துக்குள் சுமார் 700 கால் நடை பண்ணையாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். நாளாந்தம் 6000 முதல் 8000 லீற்றா' வரையான பால் உற்பத்தியை பெற்றுக் கொடுத்திருக்கிறது. இது ஒரு பிரதேசத்தின் உடைய விவசாய பொருளாதார வளர்ச்சியின் சிறப்பானதொரு குறிகாட்டியாகும்.

வேளாண்மை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை மூலமும் மக்களின் வாழ்வாதாரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஒக்டோபர் தொடக்கம் ஜனவரி மாதம் வரையான நான்கு மாத காலப்பகுதிக்குள் 1000 தொடக்கம் 1500 வரையிலான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குகிறது.

அத்தாடு இந்தப் பிரதேசங்களில் மக்கள் நிரந்தரமான குடியிருப்புக்களை அமைத்து

14 ஆம் பக்கம் பார்க்க....

# முஸ்லிம் பெண்களின் ஆடையும் அந்நியக் கலாசார ஆதிக்கமும்

உலகில் முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள். இஸ்லாத்தில் தன்னை இணைத்துக்கொண்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வழியில் நடந்து இறைவனை அடைவதற்காக அவனது கட்டளைகளை நிறைவேற்றுகின்றவர்கள். ஐவேளை தொழுது நல்ல விடயங்களை உலகில் மேற்கொண்டு மறுமை நாள் என்கிற ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் மரணத்தின் பின்னரான வாழ்வுக்காக தம்மைத் தயார்படுத்துகின்றவர்கள். இவ்வாறு இறைநம்பிக்கையுடன் வாழ்கின்ற ஒரு இனமாகவே பார்க்கப்படுகின்ற முஸ்லிம்கள் விடயத்தில் அந்நிய கலாசார மரபுகளையும், அந்நிய ஆதிக்கத்தையும் விதைப்பதற்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையான கூட்டத்தினர் முஸ்லிம்களை பிளவுபடுத்தி அதன் தூய்மையினை கெடுக்கும் நோக்குடன் தீயோர்கள் பலதரப்பட்ட வேலைகளை முஸ்லிம்கள் மத்தியில் விதைப்பது இன்று நேற்றல்ல இது வரலாறு நெடுகிலும் மேற்கொண்டு வருகின்றமை உலகம் அறிந்த விடயமாகும். அந்த அடிப்படையில்தான் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது முஸ்லிம் பெண்கள் அணிகின்ற ஆடையைப் பற்றிய விடயங்களாகும்.

அராபிய நாடுகளில் மாத்திரமன்றி உலகில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் உண்மையான முஸ்லிம்களுக்குரிய அடையாளத்தை அழிக்காமல் வாழ்ந்து வருவது பலருக்கு குரோதத்தை ஏற்படுத்திவிடுகிறது என்றுதான் நோக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக முஸ்லிம் பெண்கள் அணிகின்ற ஆடை விடயத்தில்கூட இஸ்லாமிய வரையறைகளை மீறாத வகையில் அணிகின்ற ஆடைகள் சிலவேளைகளில் ஏனைய கலாசாரத்தவர்களின் ஆடைகளோடு ஒப்பிடுகின்றபோது சிலவேளைகளில் அது அத்துமீறியதாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை முஸ்லிம்கள் என்கிற வகையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சமாச்சாரமாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. முஸ்லிம் பெண்கள் தங்களுடைய உடம்பின் எப்பாகத்தையும் பிறருக்கு காண்பிக்கக் கூடாது என்பதே இறைகட்டளையாகும். அதற்கு இணங்கிய விதத்தில் அணிகின்ற ஆடையினால் யாருக்கும் எவ்விதமான கெடுதியும் நிகழ்ந்து விடாது என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இன்று உலகில் ஏற்படுகின்ற பலவிதமான பெண்கள் தொடர்பான துஸ்பிரயோகங்களுக்கு மிகமிக அத்திவாரமாக அமைகின்ற ஒரு விடயம் ஆடை தொடர்பானவையாகும் என்பதே பலரது கருத்தாகும். இருப்பினும் அதனை ஒரு மோசமான ஆடையலங்காரம் என்று பிறர் கூறுவதை முஸ்லிம்கள் என்கிற வகையில் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே நமது வாதமாகும்.

குறிப்பாக இலங்கையில் முஸ்லிம்கள் தனித்துவமான பண்பாட்டைக் கொண்டுள்ள ஒரு தேசிய இனம். இந் நிலையில் அவர்களின் தனித்துவ அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு எவரும் தடையாக இருக்க முடியாது. எவருக்கும் அது ஒரு வெறுப்பான விடயமாகவும் இருக்க முடியாது. முஸ்லிம் பெண்கள் அணிகின்ற முழுமையாக மூடப்பட்ட அல்லது முகம் மட்டும் தெரியக் கூடியவகையில் அணிகின்ற ஆடைகளை இந்நாட்டு அரசோ அந்நிய மேலாதிக்க சக்திகளோ தடைப்படுத்த முடியாது அல்லது கட்டுப்பாட்டினை கொண்டு வரவும் முடியாது. அவ்வாறு தடைகள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அந்த விடயமானது ஒரு சுந்திரமான நாட்டில் ஒரு ஜனநாயக வழியில் இருக்கின்ற நாட்டில் இந்த விடயம் அடிப்படை மனித உரிமை மீறலான செயலாகவே பார்க்க வேண்டியிருக்கும். எனவேதான் இலங்கையில் மாத்திரமன்றி உலகில் மனிதர்கள் என்கிற வகையில் அவர்களது மதகலாசார அடிப்படையில் முஸ்லிம்களின் குறிப்பாக பெண்களின் ஆடைவிடயத்தில் அதனை ஒரு அநாகரிகமான செயற்பாடாக கருதுவார்களாக இருந்தால் அதனை முஸ்லிம்கள் ஒருகாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சிலர் முஸ்லிம் பெயர்களில் உலாவுகின்றனர். அவர்கள் அணிகின்ற ஆடைகள் இஸ்லாத்தி;ற்கு விரோதமாக இருக்கலாம். ஆனால் அவர்களை பார்த்துக்கொண்டு இதுதான் இஸ்லாமிய ஆடை என்கிற முடிவுக்கு சில மேலாதிக்கவாதிகள் கூக்குரல் இடுகின்றனர். இவர்கள் முஸ்லிம் என்கிற பெயரில் உலாவுகின்ற அந்நியர்களாவர். இவர்களுக்குரிய தண்டனை இறைவன் மறு உலகில் வழங்குவான் என்பதிலும் உண்மையான முஸ்லிம்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இறுக்கமான ஆடை அணிந்திருந்த உயரதிகாரி ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பாருங்கள். அதாவது ஒருமுறை ஐ.ஏ.ஸ். பெண் அதிகாரியான ரூபன் தியோல் அவர்கள் இறுக்கமான ஸ்கட் அணிந்திருந்ததால் அவரது பின்புறம் கவர்ச்சியாக தெரிந்ததைக் கண்ட டி.ஜி.பி கில் அவர்கள் உணர்ச்சி மேலீட்டால் அவரது பெட்டெக்ஸை தடவியதால் ஏற்பட்ட சர்ச்சை பல்வேறு விமர்சனங்களை உண்டுபண்ணியதாக சில காலங்களுக்கு முன்னர் இந்திய பத்திரிகைகளில் அச்செய்தியாகி இருந்ததைப் பார்த்திருக்கிறோம். இந்த விடயத்தில் அவர் நடந்துகொண்ட இடம் பொதுவான இடம் என்பதால் அத்தோடு நின்றுவிட்டார். அச்சம்பவம் ஒரு தனிப்பட்ட இடமாக இருந்திருந்தால் நிலைமையை யோசித்துப் பாருங்கள். இன்று உலகில் மாத்திரமன்றி நமது அண்டைநாடான இந்தியாவில் இத்தியாதி ஒரு வியாதியாகவே நடைபெற்று வருவதை அண்மைய நாட்களில் பலவிடயங்களைப் பார்த்திருக்கிறோம். இவைகள் அனைத்துக்குமே ஆடை அணிகலன்களும் முக்கியமான இடத்தை வகிக்கிறது என்பதில் எவ்விதமான மாற்றுக் கருத்துக்கும் இடமிருக்காது.

மலேஷியாவில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர் என்பதால் அழகலங்காரத்தை முதலில் தடைசெய்தனர்,



கோப்புப்படம்

## அட்டாளைச்சேனை மன்சூர்

இதையும் மீறி பலாத்காரங்கள் நடைபெறவேச் செய்தன இறுதியில் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் இறுக்கமான உடைகள் அணிந்து வருவதே சக ஆண் ஊழியர்களுக்கு கிளர்ச்சியை ஏற்படுத்துவதாக அறிந்தவர்கள் உடம்பை மறைக்கும் புர்கா அணிந்து வர சட்டமியற்றினர். காரணம் பெண்களின் உடம்பில் எதாவது ஒரு இடம் தெரிந்தாலும் ஆண்களின் விரசப் பார்வைகள் அங்கு சென்று மேயாமல் திரும்புவதில்லை என்பதே யதார்த்தமாகும். பெண்களின் கழுத்து மீது ஆண்கள் விடும் பெருமூச்சுகள், உரசல்கள் ஆபாச இழவுகளிலிருந்து பெண் தன்னை காத்துக் கொள்வது பெரும் பாடாகிறது என்று தினமனி கதிரில் (4-2009-ல்) பெருமூச்சு விட்டிருந்தார் ஜோதிர் லதா கிரிஜா அவர்கள். மேலும், ஆண், பெண் கலந்திருக்கும் இடங்களில் பெண் தன்னை மறைத்து நடப்பதுவே சிறந்ததென்று ஜோதிர் லதா கிரிஜாவின் கருத்தாக இருக்கிறது இஸ்லாமும் அவ்வாறுதான் கூறிக் கொண்டிருக்கிறது.

அல்குர் ஆனில் 24:31. என்கிற இறைவசனத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக! அவர்கள் தமது அலங்காரத்தில் வெளியே தெரிபவை தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். தமது முக்காடுகளை மார்பின் மேல் போட்டுக் கொள்ளட்டும். தமது கணவர்கள், தமது தந்தையர், தமது கணவர்களுடைய தந்தையர், தமது புதல்வர்கள், தமது கணவர்களின் புதல்வர்கள், தமது சகோதரர்கள், தமது சகோதரர்களின் புதல்வர்கள், தமது சகோதரிகளின் புதல்வர்கள், பெண்கள், தங்களுக்குச் சொந்தமான அடிமைகள், ஆண்களில் (தள்ளாத வயதின் காரணமாக பெண்கள் மீது) நாட்டமில்லாத பணியாளர்கள், பெண்களின் மறைவிடங்களை அறிந்து கொள்ளாத குழந்தைகள் தவிர மற்றவர்களிடம் தமது அலங்காரத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம். அவர்கள் மறைத்திருக்கும் அலங்காரம் அறியப்பட வேண்டுமென்பதற்காக தமது கால்களால் அடித்து நடக்க வேண்டாம். நம்பிக்கை கொண்டோரே! அனைவரும் அல்லாஹ்வை நோக்கித் திரும்புங்கள்! இதனால் வெற்றியடைவீர்கள் என்கிற விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மேற்காணும் திருமறைக் குர்ஆனில் பெண்களுக்காக வென்றே கூறப்பட்ட இரத்தின சுருக்கமான கட்டளைகளை அவர்கள் பேணிக் கொண்டால் கற்பழிப்புகள், மற்றும் கள்ளக்காதல்களின் வாசல் கதவுகள் நிரந்தரமாக இழுத்து மூடப்பட்டுவிடும். அல்லாஹ்வின் கட்டளைப்படி நடப்பதுவே எங்களுக்கு பாதுகாப்பு அதனால் புர்கா அணிந்து கொண்டே வெளியில் செல்வோம், புர்கா அணிந்து கொண்டே கல்லூரிக்கு செல்வோம் எங்கள் உரிமையில் கை வைக்காதே என்று புர்கா அணியச் செய்வது முஸ்லிம் பெண்களின் மீது இழைக்கப்படும் அநீதியாகும் என்று வீதியில் இறங்கி போரடியும் இருக்கிறார்கள் முஸ்லிம் பெண்கள். இந்தியாவில் தொன்று தொட்டு நடந்து வரும் கற்பழிப்புகளை கட்டுக்குள் கொண்டு வரமுடியாதக் காரணத்தால் இறுதியாக அத்வானி அவர்கள் கற்பழிப்புகளுக்கு (இஸ்லாமிய) மரண தண்டனையே சரியானத் தீர்வு என்று பாராளுமன்றத்தில் கோரிக்கை வைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டமைக்கு இந்தியாவில் நாளுக்கு நாள் பெருகி வரும் கற்பழிப்புகள்தான் காரணம் என்று கூறாமல் கூறியிருந்தார் அத்வானி அவர்கள்.

கற்பழிக்கும் ஆண்களுக்கு மரண தன்டனையை தீர்ப்பாக்கிய இஸ்லாம் கற்பழிப்புகளுக்கு தூண்டும் அனைத்து அம்சங்களையும் பட்டியலிட்டுக் கூறி அவற்றை தடுத்துக் கொள்ளும்படி பெண்களுக்கும் கட்டளையிட்டிருக்கிறது. நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, நீதிக்குச் சாட்சிகளாக ஆகிவிடுங்கள்! ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலரிருக்க, உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிந்தவன மேலும், நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும், நல்லதைக் கொண்டு ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து தடுப்பபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும் இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர். 3:104 என்கிற இறைவசனமும் பெண்கள் விடயத்தில் நீதமாக நடந்து கொள்ளுங்கள் இறைவனை அஞ்சிக்கொள்ளுங்கள் என்றே இறைவேதம் கட்டளையிட்டுக்கொண்டிருக்கிறது. அதற்காக பெண் ஒரு போதைப் பொருள். அதனை எப்படிவேண்டுமானாலும் அனுபவித்து தூக்கவீசலாம் என்று யாரும் நினைக்கக் கூடாது என்பதற்காக முஸ்லிம் பெண்களின் ஆடை விடயத்தில் கடுமையான கட்டளைகளை உண்டு பண்ணுகிறது இஸ்லாம்.

மேலும், அல்குர்ஆன் ஹதீஸ் ஒளியில் ஆதாரமாக பெண்கள் பர்தா அணிவதைப் பற்றி அல்லாஹத்தஆலா தன் திருமறையில் பல இடங்களில் கூறியிருக்கிறான். அல்லாஹவின் திருத்தூதர் முஹம்மது(ஸல்) நவின்றுள்ளதாக பல ஹதீஸ்களும் தெரிவிக்கின்றன. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். நபியே! உம்முடைய மனைவியருக்கும், உம்முடைய புதல்விகளுக்கும், விசுவாசிகளின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முந்தானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு நீர் கூறுவீராக! அதனால் அவர்கள் (சுதந்திரமானவர்கள் என) அறியப்படுவதற்கு இது மிக நெருக்கமானதாகும் அப்போது அவர்கள் (பிறரால்) நோவினை செய்யப்படமாட்டார்கள்; இன்னும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாக, மிகக்கிருபையுடையவனாக இருக்கிறான். (அல்குர்ஆன்-33:59) இதன் மூலம் பெண்கள் பர்தா அணிய வேண்டும் என்று அல்லாஹ் வலியுறுத்தியிருக்கிறான். மேலும் பெண்கள் எத்தகைய பண்புகளுடன் இருக்க வேண்டும் என்பதை பற்றியும், மஹரமற்ற ஆண்களுக்கு தன் அலங்காரங்களை காண்பிக்கக் கூடாது என்பது பற்றியும் பல இறைவேத வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன. எனவேதான் இஸ்லாமியப் பெண்கள் அணிகின்ற ஆடைகள் விடயத்தில் இறைவனது கட்டளை புதைந்திருக்கிறது. அந்த இறைகட்டளைகளை மீறாதவகையில் முஸ்லிம்கள் பெண்கள் அணிகின்ற ஆடைகளில் புனிதம் நிறைந்திருக்க வேண்டும். அந்தப் புனிதம் மாசடைகின்றபோது சில பிரச்சினைகள் எழுகின்றன. எனவேதான் அபாயா அபாயமானதல்ல என்பதை அணிகின்றவர்கள் ஏனைய கலாசார மனிதாபிமானிகள் முன்னே எடுத்தியம்ப வேண்டியதும் அவசியமான ஒன்றாகும்.

---

## தமிழ்...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆலயங்களின் புனர்நிர்மானத்திற்கும் சிறிய தொகைக் கொடுத்துவிட்டு, தாம் அரசாங்கத்துடன் அதிகாரத்தைப் பகிர போராடுகின்றோம் என கூறி தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் இலங்கைக்குள் பேசித் தீர்மானிக்க முடியாத காரணத்தினால் விடுதலைப்புலிகள் சர்வதேச மத்தியஸ்தத்தை நாடி இருந்தனர். ஆனால் கூட்டமைப்பே ஒன்றித்த இலங்கைக்குள் தீர்வு காணப்படும் என்று பொய்ப்பித்த லாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு கடும்பிரயத்தனம் மேற்கொண்ட கூட்டமைப்பினால், வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்த முடியாதுள்ளது.

கிராமத்தவர்களுக்கு நாளாந்த வேலை இல்லை. அவர்களை இலக்குவைத்து தொழிற்சாலைகளை நிறுவலாம். ஆனாலும் அதற்கும் அவர்களிடம் திராணி இல்லை. இவ்வாறு பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிருக்க வேண்டிய கூட்டமைப்பினர், எதிர்க்கட்சிப் பதவியினையும் பறிகொடுத்துவிட்டு, ரணில் அரசாங்கத்தை கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தாம் என்ன சொன்னாலும் தமிழ் மக்கள் நம்பி வாக்களித்துவிடுவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருகிறார்கள்.

உண்மையில் இன்று தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக ஏமாற்றப்பட்டு களைத்து சலிப்படைந்துவிட்டார்கள். தொடர்ந்தும் இனி ஏமாற அவர்கள் தயாராக இல்லை. மாற்றுத் தலைமைகள் குறித்து சிந்தித்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு உரிய பேரம் பேசலை மேற்கொள்ளக் கூடிய காத்திரமான தலைமையை தமிழ் மக்கள் தமது சமூகத்தில் இருந்து எதிர்பார்த்து காத்துக்கிடக்கின்றனர். அவ்வாறு சிறந்த தலைவர் ஒருவன் தமிழ் மக்களை வழிநடத்தவும், அவர்களின் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவும் வருவாராயின் கூட்டமைப்பினருக்கு நல்ல பாடத்தை தமிழ் மக்கள் கற்றுக் கொடுப்பார்கள் என்பது இன்றைய அரசியல் களநிலவரத்தின் நிலைப்பாடு.

---

## கிண்ணியாவை...

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

வருவதால், அங்கு பாடசாலைகள், சுகாதார நிலையங்ககள், மத ஸ்தாபனங்கள் என பல்வேறு சமூக நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றன. இதன் மூலம் புதிய குடியிருப்பு கிராமங்கள் உருவாவதற்கான வழி ஏற்பட்டிருக்கிறது. இதுவும் பிரதேச அபிவிருத்தியின் சிறப்பான தொரு குறிகாட்டிதான்.

இந்த நிலையில், வேளாண்மைத் துறையையும் கைவிட முடியாது. கால்நடை வளர்ப்பையும் கைவிட முடியாது. 80ஆயிரம் சனத் தொகையைக் கொண்ட கிண்ணியாவுக்கு வேலை வாய்ப்பையும் உணவையும் கொடுத்து பிரதேசத்தின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இந்த இரண்டு துறைகளும் அவசியமானவையாகும்.

கடல் வளம் , மணல் வளம், காட்டு வளம், நீர் வளம், மக்கள் வளம் என்று ஒரு பொருளாதாரத்துக்கு தேவையான அனைத்து வளங்களும் தாராளமாக நிறையப் பெற்றதுதான் கிண்ணியா பிரதேசம். இந்த ஒரு அதிஸ்டமான நிலை, இலங்கையில் எந்தவொரு பிரதேசத்துக்கும் கிடைக்காத ஒரு வரமாகும். இந்த நிலையில் வேளாண்மைத் துறையையும் பண்ணைத் துறையையும் சேர்த்து ஏன் அபிவிருத்தி செய்ய முடியாது. கிழக்கு மாகாணத்தில் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிட்டு பார்க்கும் போது சகல துறைகளிலும்வீழ்ச்சியடைந்து கொண்டுசெல்வதை காண முடிகிறது. சுகாதாரத் துறையை எடுத்துக் கொண்டால் கிண்ணியா வைத்தியசாலையில் நோயாளிக்கு கட்டில் இல்லை என்று சொல்லுகின்ற காலமா இது? குறிஞ்சாக்கேணிக்கு பாலம் கேட்டு எவ்வளவு காலத்துக்குத்தான் போராட்டம் நடாத்துவது? கல்வியை எடுத்துக் கொண்டால் இலங்யிலேயே 98 ஆவது வலயம் என்று பல வருடங்களாகவே சொல்லிக் கொண்டு வருகிறோமே வெட்மில்லையா?

அரசியல்வாதிகளும் நிர்வாக அதிகாரிகளுமே கிண்ணியாவின் பின்னடைவுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்பதை உறுதியாகக் கூறலாம். இரு பிரிவினரும் சமூகத் தலைவர்களே. ஒரு மாத காலத்துக்குள் 28 ஆயிரம் மாடுகள் இறந்து இரண்டு மாதங்களாகியும் இது சம்மந்தமாக இவர்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

திட்டமிடல் மற்றும் முகாமைத்துக் கோட்பாட்டின் படி, சமூகத் தலைவர்களுக்கு அச் சமூகத்தின் அபிவிருத்தது குறித்து கற்பனை இருக்க வேண்டும். தூங்கி எழும்பும் போது கூட சமூகம் பற்றி ஏதாவதொரு கற்பனையோடுதான் எழும்ப வேண்டும். இவர்களைத் தான் உயிருள்ள தலைவர்கள் என சீனப் பழமொழி ஒன்று கூறுகின்றது.

ஆகவே, எமது தலைவர்கள் கட்சிக்காரனை எவ்வாறு பாதுகாப்பது என்று கற்பனை செய்வதை விடுத்து வைத்தியசாலையை எவ்வாறு பாதுகாப்பது என்றுதான் சிந்திக்க வேண்டும். தனது பொருளாதாரத்தை எவ்வாறு காப்பாற்றுவது என்ற கற்பனையை விடுத்து பிரதேசத்தின் பொருளாதாரத்தைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும். தனக்கு வேண்டியவா 'களையும் உறவினர்களையும் இடமாற்றத்தில் இருந்து பாதுகாப்பதற்காக இன்னொருவரை எவ்வாறு பழிவாங்குவது என்ற சிந்தனையை விடுத்து ஒட்டு மொத்த சமூகத்தின் கல்வி நிலை பற்றியே சிந்திக்க வேண்டும்.

இந்த நிலை இனியும் தொடருமானால் கால்நடை பண்ணைத் தொழில் அழிந்தே தீரும். ஏதர வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக மாறும். 98 வது இருக்கின்ற கல்வி வலயம் 99 ஆவது இருக்கின்ற கடைசி வலயத்தை பிடித்து சாதனையும் படைக்கும் என்பதில் ஐயமே இல்லை.

# இரண்டு வார அவகாசம்

அ.தி.மு.க-வோடு கூட்டணி அமையும் எனத் தமிழக பா.ஜ.க நிர்வாகிகள் நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். 'நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகும் பா.ஜ.க-வின் தயவு தேவைப்படலாம் என்பதால் மிகுந்த கவனத்தோடு செயல்பட்டு வருகிறார் எடப்பாடி பழனிசாமி. தொடர்ச்சியான வழக்குகளால் ஆட்சிக்கான ஆபத்தும் பின்தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்கின்றனர் அ.தி.மு.க வட்டாரத்தில்.



நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க, காங்கிரஸ், இடதுசாரிகள், ம.தி.மு.க, வி.சி.க, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. இந்த அணிக்கு எதிராக வலுவான அணியை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் பா.ஜ.க இருக்கிறது. தம்பிதுரையின் தொடர்ச்சியான விமர்சனங்களால் பா.ஜ.க தலைவர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். அமைச்சர்கள் கடம்பூர் ராஜு, ஜெயக்குமார் உள்ளிட்டவர்களும் விமர்சனத்தை முன்வைத்து வருகின்றனர். தமிழிசை, பொன்னார் ஆகியோர் அடுத்தடுத்து எடப்பாடி பழனிசாமியைச் சந்தித்ததும் கூட்டணி விஷயங்களை உறுதிப்படுத்துவது போல் அமைந்தன. ஆனால், இதுதொடர்பாக ஆளும் கட்சியிலிருந்து அதிகாரபூர்வமாக எந்தத் தகவலும் வரவில்லை. பா.ஜ.க - அ.தி.மு.க கூட்டணி குறித்து கட்சித் தலைமை முடிவு செய்யும் எனக் கூறிவிட்டார் பா.ஜ.க தமிழக தலைவர் தமிழிசை. இதன் தொடர்ச்சியாக மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்த பிரதமர் மோடி, ஆளும்தரப்பிடம் உற்சாகமான மனநிலையைக் காட்டவில்லை.

கூட்டணி அமையுமா? என்ற கேள்வியை தமிழக பா.ஜ.கவின் முன்னணி நிர்வாகி ஒருவரிடம் கேட்டோம். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு மோடி சொல்வதைத்தான் தமிழக ஆட்சியாளர்கள் கேட்டு வருகின்றனர். சசிகலாவுக்கு எதிராகப் பன்னீர்செல்வம் தர்மயுத்தம் நடத்தியது, தலைமைக் கழகத்திலிருந்து சசிகலா படத்தை எடப்பாடி பழனிசாமி நீக்கியது, மீண்டும் பன்னீர்செல்வத்தைக் கட்சியில் இணைத்தது, இரட்டை இலைச் சின்னத்தைப் பெற்றுக் கொடுத்தது என இவை அனைத்துக்கும் பா.ஜ.க-தான் பின்புலமாக இருந்தது. டெல்லி சொன்னதன் அடிப்படையில் 8 வழிச் சாலை, ஹைட்ரோ கார்பன், ஸ்டெர்லைட் எனப் பல விஷயங்களை முன்னெடுத்தார்கள். ஜெயலலிதாவுக்குப் பிறகு மோடியைத்தான் இவர்கள் பிக்பாஸாகப் பார்க்கின்றனர். எனவே, கூட்டணிக்கு மறுப்பு சொல்வதற்கான வாய்ப்புகளே இல்லை என விவரித்தவர், இதில், நுட்பமான சில விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. கொடநாடு எஸ்டேட் கொலைகள் தொடர்பாக ஆளுநரிடம் மனு கொடுத்திருக்கிறார் தி.மு.க தலைவர் ஸ்டாலின். இந்த மனுவை சி.பி.ஐ-க்கு ஆளுநர் அனுப்பிவிட்டாலே, இந்த அரசுக்கு நெருக்கடிகள் வரத் தொடங்கிவிடும். இந்த வழக்கிலிருந்து ஆளும்கட்சியால் தப்பிக்க முடியாது. தவிர, இந்த அரசை பயமுறுத்தக் கூடிய வழக்குகளின் பட்டியல் மிக நீளம். பணமதிப்பிழப்பு நடவடிக்கையின்போது பெங்களூருவில் எடப்பாடி பழனிசாமி மகன் சிக்கினார். பன்னீர்செல்வம், விஜயபாஸ்கர், ராமமோகன ராவ், சேகர் ரெட்டி, தங்கமணி ஆகியோர் மீதான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இந்த வழக்குகளில் பலவற்றை சி.பி.ஐ, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை உள்ளிட்ட மத்திய அரசின் ஏஜென்சிகள் விசாரித்து வருகின்றன. இந்த வழக்குகளின் மீது தேர்தல் காலத்திலும் நடவடிக்கை எடுக்கலாம். நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றன. இந்த வழக்குகளுக்கு எதிராக அ.தி.மு.க அரசால் எதையும் செய்ய முடியாது. கூட்டணிக்கு விருப்பம் தெரிவித்துத்தான் ஆக வேண்டும். அதேநேரம், ரஜினிக்காக டெல்லித் தலைமை காத்திருப்பது உண்மைதான். ஆனால், அமித் ஷா முயற்சிக்கு ரஜினி சிக்னல் கொடுப்பாரா என்பதும் சந்தேகம்தான்.

இரட்டை இலைக்கான அடிப்படை வாக்குகளை மையமாக வைத்து, பிரமாண்டமான அணியை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் பா.ஜ.க இருக்கிறது. தேர்தலுக்குப் பிறகு மிகக் குறைந்த எண்ணிக்கையில் பா.ஜ.க வெற்றி பெறும் எனக் கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. அதுவும் 40 முதல் 50 இடங்களில் பெரும்பான்மைக்கான வாய்ப்பு குறையலாம். 'இந்தத் தேர்தலில் மாநிலக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும்' என அரசியல் நோக்கர்கள் பேசி வருகின்றனர். இதை உணர்ந்து பல மாநிலங்களில் வலிமையான கூட்டணியை உருவாக்கும் பணிகளில் தேசியத் தலைவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தலுக்குப் பிறகும் பா.ஜ.க-வின் தயவு அ.தி.மு.க-வுக்குத் தேவை. இதை அ.தி.மு.க தலைமையும் உணர்ந்திருக்கிறது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள் கூட்டணி விஷயங்கள் முடிவுக்கு வந்துவிடும் என்றார் விரிவாக.

பா.ஜ.க நிர்வாகிகளின் எதிர்பார்ப்பு சரிதானா? என்ற கேள்வியை அ.தி.மு.கவின் முன்னணி நிர்வாகி ஒருவரிடம் கேட்டோம். கூட்டணி அமைய வேண்டும் என பா.ஜ.க விரும்புகிறது. ஆனால், எடப்பாடி பழனிசாமியோ, 'இந்த விஷயத்தில் அவசரப்பட வேண்டாம். தேர்தல் நேரத்தில் முடிவு எடுத்துக்கொள்ளலாம் எனத் தயக்கம் காட்டி வருகிறார். கூட்டணிக்கான வாய்ப்புகள் 50 சதவிகிதம் அளவுக்கு இருக்கின்றன. வழக்குகளுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. இப்போதும் டெல்லி எங்களை விட்டுவைக்கவில்லை. வழக்குக்கு மேல் வழக்கு போட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். வரும் தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. அவர்களால் கூட்டணியையே இறுதி செய்ய முடியவில்லை. பெரும்பான்மை இல்லாவிட்டாலும், அதிக எண்ணிக்கையிலான இடங்களை பா.ஜ.க வெல்லலாம்.

'பா.ஜ.க-வோடு சேராமல் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்' எனக் கழக நிர்வாகிகள் விரும்புகின்றனர். ஆனால், தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு மீண்டும் பா.ஜ.க வந்துவிட்டால், அ.தி.மு.க ஆட்சிக்குச் சிக்கல் ஏற்பட்டுவிடும். பா.ஜ.க-வின் நேரடி எதிரியாக மாறுவதற்கு எடப்பாடி விரும்பவில்லை. 'ஓரளவுக்குத்தான் அவர்களை எங்களால் எதிர்க்க முடியும். இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்கு ஆட்சியை நடத்த வேண்டும். தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க-வோடு தி.மு.க சேர்ந்து கொண்டு ஆட்சியைக் கவிழ்த்துவிடக் கூடாது. சூழலுக்கு ஏற்ப பாதுகாப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பதுதான் எடப்பாடியின் மனநிலையாக இருக்கிறது. தற்போது பொதுமக்களிடம் நிலவும் அதிருப்தியை சரிக்கட்டும் வேலைகள் நடந்து வருகின்றன. நாடாளுமன்றத் தேர்தலைவிடவும் ஆட்சியைக் காப்பாற்றுவதுதான் முக்கியமானதாக இருக்கிறது என்றார் எதார்த்தத்தை பிரதிபலித்தபடி.



## உலகப் பொருளாதாரத்தைக் கட்டமைக்கும் நாடாக சீனா உருமாறியது எப்படி?

சீனத்தில் 1978 டிசம்பரில் நடந்த சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவின் பதினோராவது மாநாடு, எதைப் பற்றியது என்பது வேண்டுமானால் உலகுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால், அது ஏற்படுத்திய விளைவுகள், உலகம் முழுவதும் பெரும் நில அதிர்வைப் போல இன்னமும் உணரப்பட்டுவருகிறது. வேளாண்சார் நாடாக இருந்ததைத் தொழிலுற்பத்தி ஆற்றல் மையமாக டெங் சியோபிங் தொடங்கிய (பொருளாதார) சீர்திருத்தம் - திறந்துவிடல்கொள்கையானது மாற்றியுள்ளது. அது மட்டுமின்றி, உலகப் பொருளாதாரத்தையே கட்டமைக்கும் நாடாக சீன வளர உதவுகிறது.

பொருளாதாரச் சீர்திருத்தத்தின் 40-வது ஆண்டு விழாவைச் சீனா கொண்டாடுகிறது. உலகிலேயே அதிக அந்நியச் செலாவணியை (அக்டோபர் கணக்குப்படி, 3.05 லட்சம் கோடி டாலர்கள்) கையிருப்பாக வைத்திருக்கும் ஒரே நாடு சீனாதான். 2017 தரவுகளின் படி, அதன் ஜிடிபி 12.2 லட்சம் கோடி டாலர்கள். உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடு சீனா. சர்வாதிகார ஆட்சியமைப்பைக் கொண்ட சீனத்தால், பொருளாதாரச் சீர்திருத்தம் சாத்தியமில்லை என்று மேற்குலகப் பண்டிதர்கள் கூறிவந்தது பலிக்கவில்லை.

### முரண்பாடுகளால் நிரம்பிய நாடு

இப்போதைய சீனத்தின் வெவ்வேறு துறைகளை ஒப்பிட்டால், அது முரண்பாடுகளின் மொத்த கலவைபோலத் தெரியும். சீனத்தை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி சமத்துவப் பொருளாதாரத்தைப் பேசுகிறது. ஆனால் சமூகமோ, அசமத்துவமே அடையாளமாய்க் கொண்ட முதலாளித்துவத்தால் உந்தப்படுகிறது.

நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் பொருளாதார நலன்கள், கிராமப்புற விவசாயிகள் - வேலைக்காக இடம்பெயரும் தொழிலாளர்களின் நலன்களுடன் முரண்படுகிறது. உலகிலேயே மிக அதிகமாக 77.2 கோடி இணையதள இணைப்புகள் சீனத்தில்தான் உள்ளன. உலகின் மொத்த மின்வணிகத்தில் 40% சீனத்தில்தான் நடக்கிறது. உலகிலேயே டிஜிட்டல் நடைமுறைகள் அதிகம் தணிக்கைக்குள்ளாகும் நாடும் சீனாதான்.

வட்டத்தைச் சதுரமாக்கும் கலையில் வல்லமைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சி, சீனத்தில் பொருளாதாரச் சீர்திருத்தம் வெற்றிபெறாது என்ற கணிப்புகளைப் பொய்யாக்கியது.

இதைச் சாத்தியமாக்கியது டெங் சியோபிங் காலத்தில் அமலான முன்னோடித் திட்டமாகும். 'ஆற்றைக் கடக்கும்போது கற்களைக் காலால் தடவி நடப்பதுபோல'என்று அதற்கு அவர் பெயரிட்டார். தேச அளவில் ஒரு திட்டத்தை அமல்படுத்தும் முன், உள்ளூர் அளவில் அதை அமல்படுத்தி சாதக-பாதகங்களைத் தெரிந்துகொள்ளச் செய்தார்.

சீனக் கடலோர நகரங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 1980-களில் ஏற்படுத்தப்பட்டன. அவை தொழிலுற்பத்தி தொடர்பான சோதனைச் சாலைகளாகவே இயக்கப்பட்டன. அவை பொருளாதார வளர்ச்சிக்கான மூலவிசையாகச் செயல்பட்டன. ஷென்ஷென் போன்ற மீன்பிடிக் குப்பங்கள்கூட உலகளாவிய உற்பத்தி நகரங்களாக வளர்ச்சிபெற்றன. ஒவ்வொரு கொள்கையும் இப்படித்தான் உள்ளூர் அளவில் சோதிக்கப்பட்டு, பிறகு விரிவுபடுத்தப்பட்டன. மருத்துவ நலத் திட்டங்கள் கூட்டுறவுத் துறையில் முயன்றுபார்க்கப்பட்டன. தொழிலாளர்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்கு இடம்பெயர விதிக்கப்பட்டிருந்த தடைகள் விலக்கப்பட்டன. மாசேதுங் காலத்தில்

1950-கள் முதல் 1970-கள் வரையில் நடந்த சித்தாந்த ஒடுக்குமுறைகளுக்கு விடைகொடுக்கப்பட்டு, காரிய சாத்தியமான வகையில் தொழிலாளர்களின் சக்தி பயன்படுத்தப்படுகிறது.

கட்சியின் அதிகாரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பொருளாதார வளர்ச்சியின் பலன்களை வாக்குறுதி தந்தபடி நிறைவேற்றியாக வேண்டும். மத்தியதர வர்க்கம் தங்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும் என்று கோரியது. அதையொட்டி நகரங்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு எடுத்தது. பெய்ஜிங் மாநகரத்தின் சூழல் அதற்குச் சான்று. டெல்லி போன்ற மாநகரங்கள் பின்பற்றும் வகையில் நகரின் மாசு குறைக்கப்பட்டிருக்கிறது.

சீர்திருத்த அமலுக்குப் பிந்தைய காலத்தில் சமூக, பொருளாதாரத் தளங்களில் ஏற்பட்டுள்ள சவால்களைத் தீர்க்கும் நடவடிக்கைகளில் சீனத் தலைவர்கள் அக்கறை செலுத்திவருகின்றனர். சர்வாதிகார அரசுகளில் இப்படியொரு செயலைக் காண முடியாது. சீர்திருத்தம் பொருளாதாரத் தளத்தோடு நிற்காமல் அரசு நிர்வாகம், அரசுக் கட்டமைப்பு ஆகியவற்றிலும் பரவியிருக்கிறது. அரசு அதிகாரிகள் முக்கியப் பதவிகளை இத்தனை முறைதான் வகிக்கலாம் என்ற கட்டுப்பாடும், ஓய்வு வயது நிர்ணயமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சீர்திருத்தத்தில் சித்தாந்தத்தைவிட செயல்பாட்டுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. இந்தியா போன்ற நாடுகள் வளர்ச்சியில்

ஏன் பின்தங்கியிருக்கின்றன என்பதைச் சீனத்தில் சீர்திருத்தம் அமலாகும் விதத்தைப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம்.

ஜனநாயகரீதியாகச் செயல்படுகிறோம் என்று கூறி, திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்தாமல் இருப்பதற்கு இந்திய அரசால் சமாதானம் சொல்ல முடியும். சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒரு செயலை மேற்கொண்டால், அதை நிறைவேற்றாமல் இருக்க முடியாது. இந்தியாவில் அரசியலில் ஏழைகளுக்குப் பிரதிநிதித்துவம் இருந்தாலும் சீர்திருத்தங்களின் பலன்கள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அரசியல் பங்கேற்பு இல்லையென்றாலும், அனைவருக்கும் சீர்திருத்தப் பலன்கள் சீனத்தில் கிடைத்துவிடுகின்றன. சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை சீனத்தில் அனைவருக்கும் உறுதிசெய்யப்படுகின்றன.

### ஜி ஜின்பிங் சகாப்தம்

டெங் சியோபிங் காலத்தில் தொடங்கிய 'சீர்திருத்தம் - திறந்துவிடல்' கொள்கையை முழுமையாகப் புரிந்துகொண்டால்தான், சீனம் இன்றைக்கு அடைந்திருக்கும் முன்னேற்றத்தையும் புரிந்துகொள்ள முடியும். ஜி ஜின்பிங் காலத்திலும் அது எப்படித் தேவைப்படுகிறது என்பதும் விடை காணப்பட வேண்டிய கேள்வி. பொருளாதார தாராளமயத்தை மேலும் விரிவுபடுத்துவதில் சீனத்துக்கு உறுதியிருந்தாலும், அமெரிக்கா தொடங்கியுள்ள வர்த்தகப் போர், சீன அரசைத் தொடர்ந்து கட்டுப்படுத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளியிருக்கிறது. பொருளாதாரத்தைச் சீன அரசு கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், சந்தைகள் மட்டும் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டுள்ளது. 'சீன அடையாளங்களோடு கூடிய சோஷலிசம்'என்று சீனத்தில் இதை அழைக்கிறார்கள்.

டெங் உத்வேகப்படுத்திய கொள்கைகளிலிருந்து சீனம் விலகவும் செய்திருக்கிறது. அதிபர் பதவியில் ஒருவர் தொடர்ந்து இரு முறைதான் இருக்கலாம் என்ற விதி சமீபத்தில் நீக்கப்பட்டுவிட்டது. இதனால், ஜி ஜின்பிங் காலவரம்பின்றி வாழ்நாள் முழுக்க அதிபராக நீடிக்க முடியும். பொருளாதார நடவடிக்கைளை வெளிப்படையாக மேற்கொள்ளுங்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்களையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுங்கள் என்று டெங் வலியுறுத்தியிருந்தார்.

சுயச்சார்பு அவசியம், வெளிநாட்டு விரோத சக்திகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார் ஜி ஜின்பிங்.

பொருளாதார நடவடிக்கைகளை அமைதியாக ஒருங்கிணைக்க வேண்டும் என்றார் டெங். ஆனால், இப்போதோ வர்த்தகப் போட்டியால் 'புதிய பனிப்போர்' தொடங்கும் ஆபத்து நிலவுகிறது.

ஆற்றலை மறைத்துக்கொண்டு உரிய நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டும் என்றார் டெங். அதில் தேசிய உணர்வு கலந்திருந்தது. டெங் காலத்தில் முன்னோடித் திட்டம் உள்ளூர் அளவில் பரிசீலிக்கப்படுவதாக அதிகம் இருந்தது. 2010-ல் 500 கொள்கைசார் திட்டங்கள் பரிசோதனையில் இருந்தன. 2016-ல் அது 70 ஆகச் சுருங்கிவிட்டது.

'சீர்திருத்தம் - திறந்துவிடல்' என்ற கொள்கைக்கான காலம் மலையேறிவிட்டதா? அப்படியென்றால், எது அதன் இடத்தைப் பிடிக்கப்போகிறது? அமெரிக்கா மற்றும் அதைப் போன்ற நாடுகளுடனான போட்டியைச் சீனா எப்படி எதிர்கொள்ளப்போகிறது? இந்தக் கேள்விக்கான விடைகள் இன்னும் தெளிவாகவில்லை.

சீன கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் கவனத்துடன் அடியெடுத்துவைக்க வேண்டும் என்பது மட்டும் நிச்சயம்.

**'தி இந்து'**

## எளிய மனிதர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்



கர்நாடக மாநிலம், மங்களூருவில் 3-6-1930 அன்று பிறந்த பாதுகாப்பு துறை முன்னாள் அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசின் பூர்வீகம் தூத்துக்குடி என்றும் கூறப்படுகிறது. தான் வகித்த பொறுப்புகளுக்கு சமரசமின்றி நியாயம் செய்த எளிமையான மனிதர் அவர். கிறிஸ்தவ பாதிரியாராக கல்வி பயின்றவர் இயல்பிலேயே தனக்குள் இருந்த புரட்சிகர எண்ணங்கள் காரணமாக தொழிற்சங்க வாதியாக உருமாறுகிறார். 1950 முதல் 1960 ம் ஆண்டுவரை ரயில்வேயில் பணிபுரிந்த கால கட்டத்தில் பல்வேறு போராட்டங்களை தலைமையேற்று நடத்துகிறார். தொழிலாளர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்ததன் காரணமாக தொழிற்சங்க தலைமை பதவி இவரைத் தேடி வருகிறது. அதன் பின்னர் 1967- ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுகிறது. அதில் போட்டியிட்ட ஜார்ஜ் பெர்னாண்டஸ் காங்கிரஸ் கட்சியின் வலிமை வாய்ந்த வேட்பாளர் ஒருவரை எளிதாக தோற்கடித்து விடுகிறார்.

தேர்தலில் பெற்ற பெருவெற்றி, துணிச்சலான செயல்பாடுகள் இவற்றின் விளைவாக அகில இந்திய ரெயில்வே தொழிலாளர்கள் சம்மேளனத்தின் தலைவராக உயர்கிறார். அப்போது 1974-ம் ஆண்டு இவரது தலைமையில் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறுகிறது. அந்தப் போராட்டம் இன்றளவும் மிகவும் வெற்றிகரமான போராட்டமாக கருதப்படுகிறது. 1975-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி நாடு முழுவதும் நெருக்கடி நிலையைப் பிரகடனப் படுத்துகிறார். இந்த நெருக்கடி நிலையை கடுமையாக எதிர்த்தவர்களுள் ஒருவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ். எதிர்த்து குரல் கொடுத்தவர்களை எல்லாம் விரட்டி விரட்டி வேட்டையாடிய போலீசாரின் கண்களில் சிக்காமல் சென்னை உள்ளிட்ட பகுதிகளில் சில ஆண்டுகள் தலைமறைவாக வாழ்கிறார். இதற்கு இடையில், பரோடா வெடிகுண்டு வழக்கில் கடந்த 1976-ம் ஆண்டில் போலீசாரால் கைது செய்யப்பட்ட ஜார்ஜ் பெர்னாண்டஸ் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலும் மோசமான கொடுமைகளை சந்தித்த அவர் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் இருந்தவாறே போட்டியிட்டு பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறார். அப்போது மத்திய அரசில் தொழில் துறை அமைச்சராக பணியாற்றிய ஜார்ஜ் பெர்னாண்டஸ் அப்போதே பெருவலிமையோடு இந்தியாவில் வியாபாரம் செய்து வந்த கொக்கோகோலா நிறுவனத்தை இந்தியாவில் இருந்து வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### சமதா கட்சி

ஜனதா தளம் கட்சியில் இருந்து 1994-ம் ஆண்டு வெளியேறிய ஜார்ஜ் பெர்னாண்டசும் நிதீஷ் குமாரும் சமதா கட்சி என்னும் புதிய அரசியல் இயக்கத்தை தொடங்கினர். கட்சி தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள் நாடாளுமன்ற தேர்தல் வர 1996- ம் ஆண்டு பாஜகவுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது சமதா கட்சி. இதில் இக்கட்சிக்கு பீகார் மாநிலத்தில் 6 எம்.பிக்களும் உத்தரப்பிரதேசம் மாநிலத்திலிருந்து ஒரு எம். பி. யும் ஒடிசா மாநிலத்திலிருந்து ஒரு எம். பி என மொத்தம் 8 மக்களவை உறுப்பினர்கள் கிடைத்தனர். அதன் பின்னர் 1998 -ம் ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தலில் பீகார் மாநிலத்திலிருந்து பத்து மக்களவை உறுப்பினர்களும், உத்தரப்பிரதேசம் மாநிலத்திலிருந்து இரண்டு மக்களவை உறுப்பினர்களும் என பன்னிரண்டு மக்களவை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 1994-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட சமதா கட்சி 4 ஆண்டுகளில் 12 மக்களவை உறுப்பினர்களை பெறுமளவுக்கு கட்சியை வளர்க்க அரும்பாடு படுகிறார் ஜார்ஜ் பெர்னாண்டஸ்.

பின்னர் 2003-ம் ஆண்டு நடைபெற்ற அரசியல் மாற்றங்களில் சமதா கட்சி ஐக்கிய ஜனதா தளம் கட்சியோடு ஐக்கியமாகிறது. 2003 -ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐக்கிய ஜனதா தளம் கட்சியோடு சமதா கட்சியை இணைத்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் பின்னர் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக மீண்டும் அதிலிருந்து வெளியேறி சமதா கட்சிக்கு வருகிறார். இவரோடு ஜெயா ஜெட்லியும் ஐக்கிய ஜனதா தளத்திலிருந்து வெளியேறுகிறார். பெற்றோரின் விருப்பபடி பாதிரியாராக பணியாற்ற துணிந்தபோதும் சரி, தொழிற்சங்க வாதியாக பணியாற்றிய போதும் சரி, தொழில்துறை அமைச்சராக பணியாற்றியபோதும் சரி பின்னர் கட்சி தலைமைப் பொறுப்பில் அமர்ந்தபோதும் சரி, அதனையடுத்து பாதுகாப்புத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்தபோதும் சரி தான் வகித்த அத்தனைப் பதவிகளுக்கும் எவ்வித சமரசமும் இன்றி நியாயம் செய்தவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்.

## அனைவரின் கவனமும் கோலி மேல் இருப்பதால் ரோஹித் சர்மாவை மறந்து விடுகின்றனர்

கிரிக்கெட் வல்லுநர்களின் பார்வைகள், கருத்துகள், சார்வேக்கள் எல்லாம் தற்போது இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் மேல் உள்ளது. அது நடத்தப்படும் விதம் முந்தைய உலகக்கோப்பை தொடரிலிருந்து வேறுபட்டது எனும் போது கணிப்பது கடினம் என்று ஒருவரும் கூற முன் வருவதில்லை.

1992 உலகக்கோப்பை மாதிரி போல் எல்லா அணிகளும் எல்லா அணிகளுடன் விளையாட வேண்டிய வடிவத்தில் இந்த உலகக்கோப்பை நடைபெறுகிறது. ஆகவே கணிப்பது கடினம். 1992-ல் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் பாகிஸ்தான் வென்றது, முதல் முறையாக வந்த தென் ஆப்பிரிக்கா கலக்கு கலக்கென்று கலக்கி அரையிறுதியில் மோசமான மழை விதிகளால் 3 ஓவர் 21 ரன்கள் என்ற இலக்கு 1 பந்து 21 ரன் என்று ஆகி அதை வீச வேண்டிய அபத்தமும் நடந்தது. இதனால் இங்கிலாந்து இறுதிக்கு முன்னேறியது. நிறைய அணிகளிடம் தோல்வியடைந்த பாகிஸ்தான் கோப்பையை வெல்ல இரண்டு தோல்விகளை மட்டும் சந்தித்த நியூஸிலாந்துக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.

எனவே இந்த வடிவம் மிகவும் கடினமான வடிவம் என்பதில் இருவேறு கருத்துகள் இல்லை எனும் நிலையில், இங்கிலாந்து வெல்லும் இந்தியா வெல்லும் என்றெல்லாம் கருத்தமைவுகள் உருவாக்கப்பட்டு நிரந்தரப்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் உலகக்கோப்பை, இந்தியாவின் சமீபத்திய ஆதிக்கம் பற்றி இங்கிலாந்தின் முன்னாள் ஸ்விங் பவுலர் டாமினிக் கார்க் ஸ்கை ஸ்போர்ட்ஸ் பத்தியில் தெரிவித்திருப்பதாவது:

ஆண்ட்ரு ஸ்ட்ராஸ் 50 ஓவர் கிரிக்கெட்டில் இங்கிலாந்தின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று முடிவெடுத்த பிறகே இங்கிலாந்து அணி பிரமாதமான சில வெற்றிகளை ஈட்டி வருகிறது. நிறைய பேர் இங்கிலாந்துதான் உலகக் கோப்பையை வெல்ல வாய்ப்புள்ள அணி என்று கூறுகின்றனர்.

ஆனால், இந்திய அணியை எடுத்துக் கொள்ளுங்கள் ஒருநாள் போட்டிகளை வெற்றி பெற என்ன தேவையோ அத்தனை பகுதிகளையும் திறம்படக் கொண்டுள்ளனர். அங்கு எல்லா வீரர்களும் பிரமாதமாக ஆடுகின்றனர் (இன்றைய போட்டிக்கு முன் எழுதிய பத்தி).

ரோஹித் சர்மாவை எடுத்துக் கொள்ளுங்கள் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் தடுமாறுகிறார், ஆனால் ஒருநாள் போட்டிகளில் சீராக ஆடிவருகிறார், விராட் கோலி ரன்கள் அடிக்கும் போது சிலவேளைகளில் ரோஹித் சர்மா மறக்கப்படுகிறார். ரோஹித் சர்மா எவ்வளவு பிரமாதமாக ஆடுகிறார் என்பதை மக்கள் மறந்து விடுகின்றனர்.

இந்திய அணியைப் பார்த்தோமானால், தோனி இன்னமும் நன்றாகவே ஆடுகிறார். பிறகு இந்திய பந்து வீச்சு, அவர்களின் வேகம் மற்றும் திறமை என்னை வெகுவாகக் கவர்கிறது. ஆல்ரவுண்டராகப் பாண்டியாவும் சரியாக ஆடுகிறார், இந்திய அணியில் அனைவரும் திறம்பட ஆடுகின்றனர்.

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா



டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க கேப்டன் டுபிளெசிஸ் முதலில் பீல்டிங்கைத் தேர்வு செய்ய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ரன்களை எடுக்க தென் ஆப்பிரிக்க அணி 241/3 என்று 40 ஓவர்களில் கதையை முடித்தது.

குவிண்டன் டி காக் 58 பந்துகளில் 11 பவுண்டரிகள் 3 சிக்சர்களுடன் 83 ரன்களையும் டுபிளெசிஸ் மற்றும் வான் டெ டியூசென் ஆகியோர் முறையே 50 ரன்கள் எடுத்து நாட் அவுட்டாகத் திகழ்ந்தனர். வான் டெர் ட்யூசென் சிக்ஸ் அடித்து வெற்றி பெற்றார். டி காக் 12 ரன்களில் இருந்த போது நோ-பாலில் கேட்ச் கொடுத்தார், ஆனால் அதன் பிறகு சாத்து முறை நடக்க 18வது ஒருநாள் அரைசதம் கடந்தார்.

இலங்கை, ஜிம்பாப்வே, ஆஸ்திரேலியாவை வீழ்த்தியதற்கு அடுத்த படியாக தென் ஆப்பிரிக்கா பாகிஸ்தானையும் வீழ்த்தி 4வது ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது.

பார்மைத் தேடிக்கொண்டிருந்த ஃபகார் ஜமான் பாகிஸ்தானில் அதிகபட்ச ஸ்கோராக 10 பவுண்டரிகளுடன் 73 பந்துகளில் 70 ரன்கள் எடுத்தார், இவருக்கு 20 ரன்களில் ஸ்லிப்பில் ஆம்லா கேட்சை விட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் 70 ரன்களில் இவர் பெலுக்வயோ பந்தில் இம்ரான் தாஹிரிடம் டீப் பைன்லெக்கில் கேட்ச் ஆகி வெளியேறினார். இவர் ஆட்டமிழந்த பிறகு 15 ஓவர்களில் மந்தமாக ஆடி 49 ரன்களையே எடுத்தது.

கடைசியில் இமாத் வாசிம் 31 பந்துகளில் 47 ரன்கள் எடுத்தது கடைசி 10 ஓவர்களில் ஸ்கோரிங் ரேட் கொஞ்சம் ஏறியது. இவர் டேல் ஸ்டெய்னை ஒரு சிக்சரும், ரபாடாவை ஒரு சிக்சரும் அடிக்க கடைசி 10 ஓவர்களில் 63 ரன்கள் வந்தது.

தென் ஆப்பிரிக்க தரப்பில் பிரிடோரியஸ், பெலுக்வயோ தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்ற, இம்ரான் தாஹிர் தன் 10 ஓவர்களில் 36 ரன்கள் என்று கடும் சிக்கனம் காட்டினார்.

241 ரன்கள் வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென் ஆப்பிரிக்க அணி குவிண்டன் டி காக்கை ஆரம்பத்தில் வீழ்த்தும் வாய்ப்பை ஷின்வாரியின் நோ-பாலால் இழந்தது. இதே ஷின்வாரி ஓவரில் 18 ரன்களை விளாசினார் டி காக். இரண்டு தோஹுயர பவுன்சரும் சிக்சருக்குப் பறந்தது. ஸ்பின்னர் ஷதாப் கானை ரிவர்ஸ் ஸ்வீப்பிலேயே காலி செய்தார். ஷதாப் கான் 10 ஓவர்களில் 78 ரன்கள் விளாசப்பட்டார்.

முன்னதாக ஹஷிம் ஆம்லா 14 ரன்களிலும் ஹென்றிக்ஸ் அதிரடி 34 ரன்களிலும் வெளியேறினர், டிகாக் அவுட் ஆகும் போது 20.2 ஓவர்களில் 146/2 என்று வலுவான நிலையில் தென் ஆப்பிரிக்கா இருந்தது ஆனால் மேலும் சரிவு ஏற்படாமல் டுபிளெசிஸ், வான் டெர் ட்யூசென் அரைசதங்கள் அடித்து தொடர் வெற்றியை உறுதி செய்தனர்.

ஆட்ட நாயகனாக குவிண்டன் டி காக்கும், தொடர் நாயகனாக பாகிஸ்தானின் இமாம் உல் ஹக்கும் தேர்வு செய்யப்பட்டனர்.

## ஸ்பாட் பிக்சிங்: ஸ்ரீசாந்த் நடத்தை சரியாக இல்லையே- உச்ச நீதிமன்றம் கருத்து

ஸ்பாட் பிக்சிங் செய்ய தன்னை அணுகினால் உடனடியாக பிசிசிஐ-யிடம் ஸ்ரீசாந்த் புகார் தெரிவிக்க வேண்டியதுதானே ஏன் அவர் செய்யவில்லை? அவரது நடத்தை நன்றாக இல்லையே என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீசாந்துக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தடையை கேரள நீதிமன்றம் ரத்து செய்திருந்தது, இதனை எதிர்த்து பிசிசிஐ வழக்குத் தொடர நீதிமன்றம் தன் ரத்து உத்தரவை நீக்கியது, இதனையடுத்து ஸ்ரீசாந்த் மீதான ஆயுள் தடை மீண்டும் அமலுக்கு வந்தது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் தன் தடையை நீக்க வேண்டும் என்று ஸ்ரீசாந்த் செய்திருந்த மனு விசாரணைக்கு வந்தது.

அப்போது ஸ்ரீசாந்த் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சல்மான் குர்ஷித், 2013 ஐபில் தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ், கிங்ஸ் லெவன் அணிக்கு இடையிலான போட்டியில் ஸ்பாட் பிக்சிங் நடந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஸ்பாட் பிக்சிங்குக்காக அவர் தொகை பெற்றதாகவும் ஆதாரமில்லை என்றார்.



இவையெல்லாம் எதைக்காட்டுகிறது என்றால் ஸ்பாட் பிக்சிங்கில் ஸ்ரீசாந்த் நடத்தை சரியல்ல, இதில் எந்த வித சந்தேகமும் இல்லை என் பதே என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிபதிகள் கே.எம்.ஜோசப், அசோக் பூஷன் தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு, ஸ்பாட் பிக்சிங்கிற்கு அணுகினார்கள் என்றால் ஏன் ஸ்ரீசாந்த் உடனடியாக பிசிசிஐ-க்கு இதனைத் தெரிவிக்கவில்லை? என்றார்.

இதனையடுத்து மூத்த வழக்கறிஞர், ஸ்ரீசாந்த் பிசிசிஐ-யிடம் உடனடியாகத் தெரிவிக்கவில்லை, அப்படி அவர் பிசிசிஐ-யிடம் தெரிவிக்காவிட்டாலும் அதிகபட்சத் தடை 5 ஆண்டுகள் விதிக்க முடியும்.

இதனையடுத்து நீதிபதிகள் அமர்வு,

இதற்குப் பிறகு பிறநாடுகளின் விளையாட தனக்கு அழைப்பு இருப்பதாகவும் இந்த வாழ்நாள் தடையினால் தன்னால் கிரிக்கெட் ஆட முடியாமல் போகிறது என்றும் தனக்கு விதிக்கப்பட்ட தடை நிறுவப்படாத ஆதாரங்களினால் அளிக்கப்பட்டுள்ளது எனவே தனது மாண்பைக் காப்பாற்றவாவது தடையை நீக்குமாறு ஸ்ரீசாந்த் தரப்பில் வாதிடப்பட்டது.

இதனையடுத்து வழக்கு விசாரணையை பிப்ரவரி 20ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

## சர்பராஸ் அகமெட் செயலை ஏற்க முடியாது; அக்தர்


நிறவெறிக் குற்றச்சாட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு 4 போட்டிகளுக்குத் தடைவிதிக்கப்பட்ட சர்பராஸ் அகமெட் செய்த காரியம் ஏற்புடையதல்ல என்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷோயப் அக்தர் கூறியதற்கு அவர் தன்னை தனிப்பட்ட முறையில் தாக்குகிறார் என்று பதிலளித்துள்ளார் சர்பராஸ் அகமெட்

ட்விட்டர் வீடியோவில் அக்தர் கூறியதாவது:

ஒரு பாகிஸ்தானியராக சர்பராஸ் அகமெட் கருத்தை ஏற்று கொள்ள முடியவில்லை. அவர் அந்தத் தருணத்தின் சூட்டில் அதனைச் செய்திருக்கலாம், அவர் இது குறித்து பொதுமக்கள் முன்னிலையில் மன்னிப்பு கேட்க வேண்டும், என்று கூறியிருந்தார்.

இதற்கு பதில் அளித்த சர்பராஸ் அகமெட், நான் என் தவறை ஒப்புக் கொண்டு தண்டனையையும் ஏற்றுக் கொண்டுள்ளேன். நான் என் ஆட்டத்தையும் நடத்தையையும் இனி மேம்படுத்துவேன். என் ஆதரவாளர்களுக்கு நன்றி. ஷோயப் அக்தர் என்னை தனிப்பட்ட முறையில் தாக்கியுள்ளார். என்னை விமர்சிக்கவில்லை என்று தெரிவித்தார்.

## அரையிறுதியில் பார்சிலோனா



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோபா டெல் ரே தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான பார்சிலோனா தகுதி பெற்றுள்ளது.

செவில்லியா அணியின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் இரண்டு கோல்கள் பின்தங்கியிருந்த பார்சிலோனா, தமது மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது சுற்று காலிறுதிப் போட்டியில் அம்முன்னிலையைத் தகர்த்த அபார வெற்றியின் மூலமே கோப்பா டெல் ரே தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இப்போட்டியின் 13ஆவது நிமிடத்தில், செவில்லியாவி அணியின் குயின்ஸி புரோமேஸின் தொடுகைக்குள்ளான பார்சிலோனாவின் நட்சத்திர முன்கள வீரரான லியனல் மெஸ்ஸி வீழ்த்தார். இதனையடுத்து வழங்கப்பட்ட பெனால்டியை பிலிப் கோச்சினியோ கோலாக்க பார்சிலோனா முன்னிலை பெற்றது.

தொடர்ந்த போட்டியின் 26ஆவது நிமிடத்தில், பார்சிலோனாவின் பின்கள வீரர் ஜெராட் பிகேயால், செவில்லியா அணியின் மத்தியகள வீரர் றொக்கே மெஸா வீழ்த்தப்பட, பெனால்டி வழங்கப்பட்டது. எனினும், எவர் பனிகாவின் இந்த பெனால்டியை பார்சிலோனாவின் கோல் காப்பாளர் ஜஸ்பர் சில்சன், இடது பக்கம் பாய்ந்து தடுத்திருந்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில், சக மத்தியகள வீரரான ஆர்தர் மெலோவிடமிருந்து பெற்ற பந்தை பார்சிலோனாவின் இன்னொரு மத்தியகள வீரரான இவான் றகிட்டிச் கோலாக்க, தமது முன்னிலையை பார்சிலோனா இரட்டிப்பாக்கிறது.

தொடர்ந்து, 53ஆவது நிமிடத்தில், சக முன்கள வீரர் லூயிஸ் சுவாரஸிடமிருந்து பெற்ற பந்தை பிலிப் கோச்சினியோ கோலாக்க 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற பார்சிலோனா, அடுத்த நிமிடத்தில் மெஸ்ஸி கொடுத்த பந்தை சேர்ஜி றொபேர்டோ கோலாக்க 4-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில், 67ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்ற குய்ல்ஹெர்மே அரானா, பார்சிலோனாவின் மொத்த கோல் முன்னிலையை ஒன்றாகக் குறைத்தார். எனினும், சக இடது பின்கள வீரரான ஜோர்டி அல்பாவிடமிருந்து பெற்ற பந்தை 89ஆவது நிமிடத்தில் கோலாக்கியதோடு, மேலதிக நிமிடங்களில் மெஸ்ஸி கோலொன்றைப் பெற இச்சுற்று காலிறுதிப் போட்டியில் 6-1 என்ற கோல் கணக்கில் முன்னிலையைப் பெற்ற பார்சிலோனா, 6-3 என்ற மொத்த கோல் கணக்கில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

## ஸ்மித் மற்றும் வார்னர் அணிக்குள் வருவது கடினம்



ஆஸ்திரேலிய அணிக்குள் தடை செய்யப்பட்ட ஸ்மித், வார்னர் வருவது குறித்த பேச்சு தற்போதைய வீரர்களிடத்தில் ஒவ்வறையில் இல்லை என்று ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் அணி துணைக் கேப்டனும் விக்கெட் கீப்பருமான அலெக்ஸ் கேரி தெரிவித்துள்ளார்.

12 மாத தடை முடிந்து மார்ச் 29 வாக்கில் அவர்கள் அணித் தேர்வுக்குத் தயாராகும் நிலையில், நிச்சயம் உலகக்கோப்பைக்கான ஆஸ்திரேலிய அணியில் ஸ்மித், வார்னர் நிச்சயம் இடம்பெறுவார்கள் என்கிறது ஆஸ்திரேலிய ஊடகம்.

அப்படி இருவரும் வந்து விட்டால், இப்போதைய அணியிலிருக்கும் இருவீரர்கள் வெளியே போக வேண்டியதுதான்.

இந்நிலையில் அலெக்ஸ் கேரி கூறியதாவது: உள்ளபடியே கூற வேண்டுமெனில் நாங்கள் இன்னும் அவர்கள் அணிக்குத் திரும்புவது பற்றி ஒய்வறையில் எதுவும் பேசவது இல்லை.

இப்போதைக்கு அணியில் இருப்பவர்கள் தங்கள் இடத்தைத் தக்க வைக்கவே முனைப்புடன் உள்ளனர். இந்த வீரர்கள் சிறப்பாகச் செயல்பட்டால், ஸ்மித், வார்னர் அணிக்குள் நுழைவதைக் கடினமாக்கி விடுவார்கள். இதுவும் ஆஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கு வலுசேர்ப்பதுதான்.

இவ்வாறு கூறினார் அலெக்ஸ் கேரி.

## கணிப்பு பலிக்குமா?

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் வரும் மே மாத இறுதியில் இங்கிலாந்தில் தொடங்குகிறது. இதன் முதல் போட்டியில் இங்கிலாந்து அணியைத் தென்னாப்பிரிக்கா எதிர்கொள்கிறது. உலகக்கோப்பை போட்டிகளில் எப்போதும் ராசியில்லாத அணியாகவே தென்னாப்பிரிக்கா இருந்து வருகிறது. இந்த முறையும் அந்த அணி டூப்ளசிஸ் தலைமையில் பலமாகவே இருக்கிறது. ஆனால் உலகக்கோப்பை என்று வந்துவிட்டால் எந்த அணியையும் கணிக்க முடியாது. இதற்கிடையே, டூ ப்ளசிஸிடம் தென்னாப்பிரிக்கா இந்த முறை கோப்பையைக் கைப்பற்றுமா என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், உலகக் கோப்பை என்று வந்தவுடன் கோப்பையை வெல்ல வேண்டும் என்ற ஒருவித நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது.

அதனால் இந்த முறை எந்தவித நெருக்கடி, மனஅழுத்தம் இல்லாமலே செல்லப்போகிறோம். வெற்றி என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் விளையாடினால் அழுத்தம் குறையும்.

மற்ற அணிகளைப் பார்க்கும் போது நாங்கள் இப்போது வலுவான அணி ஒன்றும் கிடையாது. எங்கள் அணி வீரர்கள் உலகக்கோப்பையை வெல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

அவர்களுக்கு நான் கூறும் அட்வைஸ், உலகக்கோப்பை வெல்ல வேண்டும் என்பதற்காக சூப்பர்மேனாக மாற வேண்டாம். அங்கு சென்று நம் சிறப்பைக் கொடுத்தாலே போதும் என்று பேசினேன்.

அப்போது அவரின் எந்த அணி உலகக்கோப்பை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது என்று கேள்வி முன்வைக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், இந்தியா அல்லது இங்கிலாந்து அணிகள் கோப்பை வெல்லவே அதிக வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளார்.

## விளையாட்டு வீரருக்கான காலணிகள் மற்றும் மேலங்கிகள் வழங்கும் நிகழ்வு

**மருதமுனை நிருபர்**

தேசிய மட்ட விளையாட்டில் திறமை காட்டிய சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்துவ குடும்ப விளையாட்டு வீரருக்கான காலணிகள் மற்றும் மேலங்கிகள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.ஐ.றிஹாஸ்ஸின் முன்னிலையில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி திணைக்கள நிதி ஒதுக்கீட்டிலிருந்து பிரதேச சமுதாய அமைப்பினூடாகக் கொள்வனவு செய்யப்பட்டு உரிய வீரருக்கு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர்



ஏ.ஆர்.சாலி அவர்களின் வழிகாட்டலில் இணைந்து வழங்கி வைக்கப்பட்டது.

# போர்ன்மெத்துடனான போட்டியில் தோற்றது செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிரீமியர் லீக் தொடரில், ஏ.எவ்.சி போர்ன்மெத் அணியின் மைதானத்தில் இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, இங்கிலாந்து பிரீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் காணப்படும் லிவர்பூல், தமது மைதானத்தில் இன்று அதிகாலை இடம்பெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியின் மூன்றாவது நிமிடத்தில் சாடியோ மனே பெற்ற கோலோடு முன்னிலை பெற்றபோதும் முதற்பாதி முடிவில், லெய்செஸ்டரின் ஹறி மக்கியூரி, போட்டியின் முதற்பாதி முடிவில் பெற்ற கோலோடு இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் போட்டியை சமநிலையில் முடித்துக் கொண்டிருந்தது.

இந்நிலையில், தமது மைதானத்தில் இடம்பெற்ற வட்போர்ட் அணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றிருந்தது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 03.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# பாதிக்கப்பட்ட விவசாயிகளது விபரங்கள் திரட்டப்படுகின்றன

## மாவட்ட விவசாயப் பணிப்பாளர்



நட்டஈடு வழங்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அந்நியப் படைப்புழுத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளது விபரங்கள் திரட்டப்பட்டு வருவதுடன், இதுவரை தங்களது விபரங்களைப் பதிவு செய்யாதவர்கள் கமநல அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் வை.பி.இக்பால் தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாரின் பணிப்பிற்கமைய உடனடியாக படைப்புழுத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சோளன் செய்கையாளர்களுக்காக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது விபரங்களை பதிவு செய்துகொள்ளுமாறும், அது தொடர்பான அதிகாரிகளினால் பரீசிலனைகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1000 ஹெக்ரயர் வரையில் செய்கை பண்ணப்பட்டிருந்ததுடன், அதில் 689 ஹெக்ரயர் சோளன் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், 1500 வரையான விவசாயிகள் நஸ்டத்தினை எதிர்கொண்டுள்ளதாகவும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் வை.பி.இக்பால் தெரிவித்தார்.

அத்துடன், மாவட்ட ரீதியாகவும், பிரதேச செயலக ரீதியாகவும், விவசாய போதனாசிரியர் பிரிவுகள் ஊடாகவும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




# போலிநாணயத் தாள்களுடன் ஒருவர் கைது

**க.விஜயரெத்தினம்**

திருகோணமலை-ரொட்டவெவ பகுதியில் ஒரு இலட்சத்தி 75,000 ரூபாய் கள்ள நோட்டுக்களுடன் சந்தேக நபரொருவரை கைதுசெய்துள்ளதாக மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த அபூபக்கர் தௌபீக் (52வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து சந்தேகநபரை மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி எச். எம். பீ. குலதுங்க குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். பீ. விமல் மற்றும் 39035 சமன்த, 67627 ரத்னசேகர, 9985 துலானி, 10175 குமாரி ஆகியோர்கள் சென்று சோதனையிட்டபோது அவரின் இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் இதில் ஐயாயிரம் ரூபாய் தாள்கள் 16ம், ஆயிரம் ரூபாய் தாள்கள் 95 அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விசாரணை செய்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஹொரவ்பொத்தான நகர்ப்பகுதியில் 1000 ரூபாய் தாள்கள் 29வுடன் திருகோணமலை - மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த மூன்று நபர்களை ஹொரவ்பொத்தான பொலிஸார் கைது செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்



**பெரியகல்லாறு நிருபர்**

பெரியகல்லாற்றில் தோற்றம் பெற்றுள்ள பெரியகல்லாறு அடைக்கலம் சமூக சேவை அமைப்பு அதன்சமூக சேவைப் பணிகளில் ஒன்றாக சுய தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் முகமாக பெண் பயனாளிஒருவருக்கு அமைப்பின் ஏற்பாட்டில் சமயல் உபகரணங்களை மலையக புதிய கிராமங்கள்உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டாக்டர் பொன் சுரேஸ், தலைவர்மூ.சுரேஸ் (பொறியியலாளர்) ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இவ்வமைப்பு வசதி குறைந்த இரு குடும்பங்களுக்கு துறைநீலாவணை கிராமத்தில் வீடு அமைத்துக்கொடுக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. பெரியகல்லாற்றில் கழிவறைகள் கட்டிக்கொடுக்கும்பணியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். படுவான் கரைப் பிரதேசத்திலும் தங்கள் சேவைகளை முன்னெடுப்பதம் இவர்களின் நோக்கமென அதன் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# பழைய மாணவர்களால் ஆசிரியர்கள் கௌரவிப்பு





**க.விஜயரெத்தினம்**

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 98ஆம் வருடத்திற்கான பழைய மாணவர்களினால் தாங்கள் கல்வி கற்ற காலப்பகுதியில் அவர்களுக்கு கல்வி கற்பித்த அதிபர்களையும்,ஆசிரியர்களையும் பொன்னாடை போர்த்தி,நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி நவரெட்ணம்-மௌலீசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மெதடிஸ்த மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர்களான ஏ.ஏ.அருளன்னராஜா,கே.ஜீ.அருளானந்தம்,ஐ.கமல்ராஜ்,ஜே.ஆர்.பீ.விமல்ராஜ்,தற்போதைய அதிபர் இ.பாஸ்கர்,கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ச.நவநீதன்,சிரேஸ்ட பொறியியலாளர் (லண்டன்)டவ்ல்யூ. துஷேந்திரா,விவசாய போதனாசிரியர் ரீ.மாதவன்,வில்லியம் ஓல்ட் நம்பிக்கை நிதியத்தின் செயலாளரும்,ஆசிரியருமான கே.சுபகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

1986ஆம் ஆண்டுமுதல் 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்மாணவர்களுக்கு கற்பித்து தங்களை இன்று சமுதாயத்தில் ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்ற அதிபர்களையும்,ஆசிரியர்களையும் நன்றியோடு நினைவு கூர்ந்து அவர்களை பொன்னாடை போர்த்தி,நினைவுச்சின்னமும் வழங்கி,பரிசுப்பொருளையும் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு அவ் அதிபர்கள்,ஆசிரியர்களிடமிருந்து மனப்பூர்வமானதும்,மானசீகமானதுமான ஆசீர்வாதத்தினையும் பெற்றுக்கொண்டனர்.இந்த கௌரவிப்பில் 39பேர் பழைய மாணவர்களினால் கௌரவிக்கப்பட்டமை வரலாற்றுச்சாதனை ஆகும்.

98ம் ஆண்டு பிரிவு மாணவர்கள் கடந்த 5 வருடகாலமாக பாடசாலையின் குறைபாடுகளையும்,தேவைகளையும் அறிந்து கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்ட ஒரு அணியாகத்திரண்டு பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றார்கள்.

அந்தவகையில் அவர்களுடைய முதலாவது நிகழ்வாக 2015ஆம் ஆண்டு பாடசாலையின் சென்றலைட் கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தின் குறைபாடுகளையும் கேட்டறிந்து கிழக்கு மாகாணத்திலேயே எந்த பாடசாலையிலும் இல்லாத ஒரு பந்துவீசும் கருவியை லண்டனில் இருந்து தருவித்து வழங்கியதுடன் மெட்டனும்,கடின பந்துகளையும் வழங்கி வருடாவருடம் நடைபெறும் பாடுமீன் சமர் என்று அழைக்கப்படும் கிரிக்கெட் போட்டிக்கு பெரும் பங்காற்றி வருகின்றார்கள்.

தொடர்ந்தும் பாடசாலையின் பிரதான மண்டபத்தின் கதிரைகள் தேவை கருதி 202ஆவது வருட நிறைவை முன்னிட்டு 2016ஆம் ஆண்டு 202 கதிரைகள் மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கு வழங்கி ஏனைய பாடசாலையின் பழைய மாணவர்களையும் 98ஆம் வருட மாணவர்கள் திரும்பி பார்க்கவைத்துள்ளார்கள்.மேலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் ,அம்மாணவர்களை உற்சாகப்படுத்தி பரீட்சையில் சித்தியடையவைத்த ஆசிரியர்களுக்கும் நினைவுச்சின்னம்,பரிசுப்பொதி வழங்கி கௌரவித்தார்கள். இம்மாணவர்களின் இச்செயலானது ஏனைய பாடசாலை பழைய மாணவர்களுக்கும் முன்னுதாரணமாக புடம்போட்டு காட்டுகின்றது.

# மட்டக்களப்பில் சுதந்திர தின விழா

இலங்கை ஜனநாயக சோசலீச குடியரசின் 71வது சுதந்திர தின பிரதான நிகழ்வானது அதிமேதகு ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளநிலையில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதான சுதந்திர தின நிகழ்வானது மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நாளை 04 ஆம் திகதி காலை. 8.30 மணிக்கு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஆரம்பக்கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அலிசாஹிர் மௌலானா கலந்து கொள்ளவுள்ளார்.

# இரங்கல் நிகழ்வு

**சேனையூர் நிருபர்**

மூத்த எழுத்தாளர் டாக்டர் இராஜ. தர்மராஜா அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை ரி. டி. டி.எ. மண்டபத்தில் 03-02-2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 .00 மணிக்கு நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் எழுத்தாளர்களான கந்தவனம் கோணேஸ்வரன், திருமலை நவம், கலாநிதி க.சரவணபவன், யதீந்திரா ஆகியோர் நினைவுரையாற்றுவர். அஞ்சலிக் கவிதையினை கவிஞர். மு.யாழவன் வழங்குவார்.

நிகழ்வில் கலை இலக்கியவாதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் ஜயசிங்கம் நியமனம்

**மண்டூர் நிருபர்**

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆனைக்குழுவின் தலைவராக கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் தங்கமுத்து ஜயசிங்கம் புதன்கிழமை 30.01.2019 நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அந்த மாகாணத்தில் நியமனங்களை வழங்குதல், இடமாற்றங்களை செய்தல், உயர்பதவிகளுக்கு நபர்களை நியமித்தல் உட்பட அரச சேவைகளுடைய சகல நியமனங்களுக்கும் பொறுப்பான அதி உயர் சபையாகும். இந்த சபையின் தலைவராகவே பேராசிரியர் தங்கமுத்து ஜயசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் தங்கமுத்து ஜயசிங்கம் கிழக்கு பல்கலைக்கழகத்தில் உப வேந்தராக கடமையாற்றிய நீண்டகால அனுபவமிக்கவர் என்பதால் கிழக்கு மாகாண ஆளுநரால் இந்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இந்த ஆணைக்குழுவின் தலைவராக கொழும்பை சேர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.டபிள்யூ.டி.சி. ஜயதிலக்க தலைவராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களின் உளவளர்ச்சிக்கு உதவ ஆசிரியர்கள் முன்வரவேண்டும்

**பெரியகல்லாறு நிருபர்**

சமூகத்தில் தாய் என்பவள் முக்கிய ஸ்தானத்தில் இருக்கின்றாள். சேய்களுக்எச் சேவை செய்வதில் அவர்களே முன்மாதிரியானவர்கள். அந்த வகையில் சிறுவர் மகளிர் அமைச்சில் எனக்கு சேவை செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தையிட்ட நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

மேற்கண்டவாறு குறித்த அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சிவன் சிறுவர் பாலர் பாடசாலையை வைபவரீதியாகத் திறந்து வைத்துப்பேசிய சிறுவர் மற்றும் மகளிர் விவகார வறண்ட பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி தர்சனா சேனநாயக தெரிவித்தாச்ஹூ.அவர் தொடாந்து பேசுகையில்,

சிறுவர்ஞ்ளுக்கு ஆசிரியர்களோ பெற்றோர்களோ கற்பிக்க முயற்சிக்க கூடாது. எதையும் அவர்களுக்குத் திணிக்க் கூடாது. அவர்களின் உள வளர்ச்சிக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அவர்களின் ஆற்றல்களை அறிந்த அவர்களின் விருப்ப்படி நடந்து கொள்வதே அவர்களின் உள வளர்ச்சிக்ககு உகந்ததாக அமையும்.

எனவே பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு ஆசிரியர் ஒரு தாய் போன்ற அன்பை வெளிப்படுத்தி அவர்களோடு அணுசரித்தது நடப்பதன் மூலமே அவர்கள் சிறந்த பிரஜைகளாக உருவாவார்கள்.

சிறுவர் பராயம் என்பது அவர்களின் முக்கியகாலப் பகுதி. எனவே அவர்கள் இந்தக் காலத்தைச் சிறந்த முறையில் கடப்பதற்கு ஆசிரியர்கள் முக்கிய பொறுப்பு வகிக்க வேண்டும். அதேபோல் பெற்றோர்களும் நல்ல முறையில் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அப்போதான் அவர்கள் எதிர்காலத்தில் நன்கு பிரகாசிக்க முடியும். அதற்கான சாத்தியம் நிறையவே இருக்கின்றது.



கடந்த 30 வருடகாலத்தின் பின் நாட்டில் நல்லதொரு சூழல் உருவாகியுள்ளது. இனியும் தமிழ் முஸ்லிம் சிங்களவர் என்ற பேதங்களைக் கடந்த ஒரு சமூகத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்ப எமதனைவருக்கும் இருக்கின்றது. இந்த நாட்டில் அனைவரும் ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும்.

இக் கட்டடம் இன்னும் முற்று முழுதாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும், மற்றும் வள குறைபாடுகள் பற்றியும் தலைவரும் விசேட அதிதிகளும் சுட்டிக்காட்டிப் பேசியிருந்தனர். எனவே அதற்கான நிதியை சுமார் 9மில்லியன் ரூபாவை ஒதுக்கலாம் என நினைக்கின்றேன். அதற்கான ஒதுக்கீடுகளை எதிர் வரும் மாதங்களில் செய்யக்கூடியதாக இருக்கும்.

# மீராவோடை வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் சந்திப்பு

**எம்.ரீ.ஹைதர் அலி**

மீராவோடை வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் எச்.எம். எம்.முஸ்தபா தலைமையிலுள்ள அபிவிருத்திக் குழுவினருக்கும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் இடையிலான சந்திப்பு மட்டக்களப்பில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் மீராவோடை வைத்தியசாலையில் நிலவும் ஆளணிகள் பற்றாக்குறை தொடர்பாகவும், இதனால் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளிகள் படும் சிரமங்கள் தொடர்பாகவும் விரிவாக சுட்டிக் காட்டப்பட்டது.

அத்துடன், கடந்த கால சந்திப்புக்களின்போது ஏற்கனவே அபிவிருத்திக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஆளணி கோரிக்கைகளில் ஒருசில குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு பெற்றுத்தந்தமைக்காக அபிவிருத்திக் குழுவினரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நன்றி பாராட்டப்பட்டார்.

அதில், தாதி உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர் மற்றும் அன்மையில் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட புதிய அம்பியுலன்ஸ் வண்டி என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருக்கு உருதுணையாக இருந்தார்.

மேலும், இங்கு நாளாந்தம் சுமார் 300 பேர் வெளிநோயாளர் பிரிவிலும், கிட்டத்தட்ட 1400 பேர் கிளினிக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதாவும் இவ்வாறான நிலையில் தற்போது இவ்வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருவதாகவும் அபிவிருத்திக் குழுவினரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வைத்தியசாலையினை நாடிவரும் மக்களுக்கு இன்னும் தனது சிறப்பான சுகாதார சேவையினை வழங்குவதற்காக இங்கு காணப்படும் வைத்தியர்களின் வெற்றிட ஆளணிக்கேற்ப இரு வைத்தியர்கள் தேவைப்பாடாக உள்ளதாகவும், அத்துடன் சிற்றூழியர்கள் தேவைப்பாடுகள் பற்றியும் இன்றைய சந்திப்பில் மிக பிரதானமாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு பதிலளித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இம்முறை வழங்கப்படவுள்ள வைத்தியர்களுக்கான நியமன வெற்றிடத்தில் மீராவோடை வைத்தியசாலைக்கு இன்னுமொரு வைத்தியரை நியமிப்பதற்கான வெற்றிடம் காட்டப்பட்டுள்ளதாகவும், அதற்கு எவரேனும் தங்களின் பிரதேசங்களிலிருந்தோ அல்லது வேறு பிரதேசங்களிலிருந்தோ வைத்தியர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இன்னுமொரு வைத்தியர் நியமிக்கப்படுவார் என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் இவ்வைத்தியசாலையின் தேவைக்கேற்ப சிற்றூழியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளையும் தான் அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மேலும், இவ்வைத்தியசாலையின்மீது இன்னுமொரு கரிசனையாளராக செயற்பட்டுவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் அபிவிருத்திக் குழுவினர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை சந்தித்து கலந்துரையாடுவதற்கான நேரத்தினையும் பெற்றுத்தந்து, அதற்கான ஏற்பாடுகளையும் செய்ததுடன், இச்சந்திப்பில் அபிவிருத்திக் குழுவினருடன் கலந்துகொண்டு இவ்வைத்தியசாலை இரு சமூகங்களும் நன்மையடையும் ஒரு வைத்தியசாலையாக அப்பிரதேசத்தில் காணப்படுவதுடன், அதற்கான ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறைகளின் அவசியத் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எடுத்துரைத்தார்.

அது மாத்திரமல்லாமல், இவ்வைத்தியசாலையில் இன்னுமொரு வைத்தியரை பெற்றுக்கொள்வதற்காக வைத்தியருக்கான விண்ணப்பம் கோரல் தொடர்பான ஆளணி வெற்றிடம் காண்பிக்கப்படுவதற்காக சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் மற்றும் கிழக்கு மாகாண அரசாங்க வைத்தியர் அதிகாரிகள் சங்கம் ஆகியோருடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கைகளையும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் முன்னெடுத்திருந்தார்.




## கிழக்கு மாகாண ஐந்து துறைகளுக்கான தலைவர்களும் பணிப்பாளர்சபை உறுப்பினர்களும் நியமனம்



கிழக்கு மாகாண ஐந்து துறைகளுக்கான தலைவர்களும் பணிப்பாளர்சபை உறுப்பி னர்களும் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.எம்.பி.அசங்க அபயவர்தன தலைமையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது மாகாண பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் தலைவராக பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம், கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையினுடைய தலைவராக ஜீ.கரீதரன், கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தின் தலைவராக எம்.எஸ்.உதுமான் லெவ்வை, கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாண உள்ளாச பயணத்துறையின் தலைவராக இந்திக நளீன் ஜெயவிக்ரம ,ஆகியோரும் இத்துறைக்கான பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வினால் நியமிக்கப்பட்டனர்

## கிண்ணியா வைத்தியசாலையை மத்திய அரசுக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும் ; ஆளுநரிடம் இம்ரான் எம்பி கோரிக்கை

**சின்னக் கிண்ணியா நிருபர்**

கிண்ணியா மைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டுவர நான் எடுத்துவரும் தொடர் முயற்சிக்கு உதவியாக கிண்ணியா தள வைத்திய சாலையை மாகாணசபையில் இருந்து விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் கிழக்கு மாகான ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகான ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரானுக்கும் இடையில் ஆளுநரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், திருகோணமலையில் தமிழர்கள் செறிந்து வாழும் திருகோணமலை நகரிலும் சிங்களவர்கள் செறிந்து வாழும் கந்தளாயிலும் உள்ள வைத்தியசாலைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. ஆனால் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் உள்ள எந்த வைத்தியசாலையும் இதுவரை மத்திய ஆரசின் கீழ் உள்வாங்கப்படவில்லை.

அண்மையில் ஏற்பட்ட டெங்கு நோய் அனர்த்தத்தின் போது கிண்ணியாவில் மாத்திரம் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டமை தொடர்பில் தாங்கள் அறிவீர்கள். இந்த வைத்தியசாலை மாகான சபையின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்றமையால் இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வளங்களும் இடவசதியும் பற்றாக்குறையாக கானப்படுகின்றமையாலையே இவ்வாறான உயிரிழப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றன.

இதனால் இந்த வைத்திய சாலையை மத்திய அரசின் கீழ் கொண்டுவருமாறு கோரி டெங்கு தாக்கம் ஏற்பட்ட காலத்தில் என்னால் பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டன.

எனினும் இதுவரை மாகான சபை இந்த வைத்தியசாலையை விடுவிக்க சம்மதம் தெரிவிக் காமையால் அந்த நடவடிக்கை களை தொடர முடியாதுள்ளது.

எனவே கிண்ணியா வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறையால் இங்குள்ள நோயாளிகள் படும் கஷ்டங்களை மனதில் கொண்டு இந்த வைத்திய சாலையை மாகான சபையில் இருந்து விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கிறேன்.

மேலும் ஒரு தடவை இந்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்கு நிலவும் குறைப் பாடுகளை நேரடியாக பார்வையிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

## படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

**சின்னக் கிண்ணியா நிருபர்**

திருகோணமலையில் படையினர் வசமுள்ள தனியார் காணிகள், மதஸ்தலங்களுக்கு சொந்தமான காணிகள் மற்றும் பாடசாலைகளுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பது விடுவிப்பது சம்மந்தமாக கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில்இவர்களுக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய, திருகோணமலையில் தோப்பூர், குச்சவெளி, புல்மோமோட்டை, கப்பபல் துறை ஆகிய பிரதேசங்களில் படையினர் வசமுள்ள தனியார் காணிகள், மதஸ்தலங்களுக்கு சொந்தமான காணிளை விடுவிப்பது தொடர்பில், பிரதியமைச்சர் ஆளுநருக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் எதிர்கால அபிவிருத்திகளுக்காக தனது ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் பிரதியமைச்சர் இதன்போது ஆளுநரிடம் தெரிவித்தார்.

## ‘கல்வியூர் மண்வாசனை’ வரலாற்று நூல் வெளியீட்டு விழா

**பெரியகல்லாறு நிருபர்**

முன்னாள் அதிபரும் பிரசித்தி நொத்தாரி சுமான மூத்ததம்பி மன்மதராஜாவின் (அகில இலங்கை சமாதான நீதவான்) கல்வியூர்மண் வாசனை என்னும் பெரியகல்லாற்றின் முதலாவது வரலாற்று நூல் பெரியகல்லாறு இந்து கலாசார மண்டபத்தில்சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய செயலாளர் நே.கமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது பிரதம அதிதியாக மலையக புதியகிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டாக்டர் பொன் சுரேஸ் கலந்து கொண்டார்.

ஆன்மீக அதிதிகளாக சர்வாடத்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ மேகானந்தக் குருக்களும், கல்லடி காயத்திரிபீடத்தைச் சேர்ந்த சிவயோகச் செல்வன் சிவஸ்ரீ த.சாம்பசிவம் குருக்களும், விசேட அதிதிகளாக மண்முனை தென் எருவில் பிரதேசசெயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவும், சிறப்புஅதிதியாக மண்மனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் ச.கணேசநாதனும் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய தலைவர் மா.கிருமைராசா, கல்லாறு மெதடிஸ்த திருச்சபையின் அருட்திருஜே.ஜே.ஞானரூபன் மற்றும் புனித அருளானந்தர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு ஜெரிஸ்டன் வின்சன்ரும் கலந்து கொண்டனர்.

ஆசியுரையை சிவயோகச் செல்வன் சிவஸ்ரீ த.சாம்பசிவமும், புனித அருளானந்தர் ஆலய பங்குதந்தை அருட்திரு ஜெரிஸ்டன் வின்சனும் கிகழ்த்தினர். அறிமுக உரையை பிராந்திய ஊடகவியலாளர் வி.கே.ரவீந்திரனும், வெளியீட்டுரையை சிவானந்தா தேசிய பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் ஈ.பி.ஆனந்தராஜாவும், மதிப்புரையை ஒய்வநிலை கால்நடை அபிவிருத்திதிணைக்கள உத்தியோகத்தர் சி.செல்வராசாவும், ஆய்வரையை கலாபூஷணம் வித்தகர் ஓய்வுநிலை வங்கி உயரதிகாரி எஸ்.ஆரசரெட்ணமும், நூல் விமர்சனத்தை இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பிர்தௌஸ் சத்தாரும்சிறப்பாக ஆற்றினர். இடையிடையே நடன நிகழ்வுகளும் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சம்பிரதாயபூர்வ மேளதாளத்தடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு, மங்கலவிளக்கேற்றி,



ஊர் கூடிய நிகழ்வாக புத்தக வெளியீடுஇடம் பெற்றது.

பிரதம அதிதியாக மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டாக்டர்பொன் சுரேஸ் தனதுரையில் இந் நூல் பல்கலைக்கழக மாணவர்களின் தேடலுக்குரிய ஒரு வரலாற்று ஆவணமாக அமைந்தள்ளது. அதுமட்டுமன்றி ஆசிரியர் தொட்டுக்காட்டியுள்ள சில விடயங்கள் பல்கலைக்கழக மாணவர்களால் ஆய்வு செய்யப்பட்டு முடிவுஎடுக்கப்பட வேண்டியவை எனக் குறிப்பிட்டார்.

அத்தகைய முயற்சிகள் குறிப்பாக குருகுலம் பற்றிய விரிவான ஆய்வு செய்ய முயற்சிப்போருக்கு தனது முழு ஒத்தழைப்பையும்அளிப்பதாகத் தெரிவித்தார்.அத்துடன் ஐயாவின் சமூக சேவையை இந்தக் கிராமம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதற்கு இங்குகூடியுள்ள சகல தரப்ப மக்கமே சாட்சியாக இருக்கின்றனர் என்றும் பெருமிதப்பட்டார்.

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பிர்தௌஸ் சத்தார் தனதுரையில் இங்குள்ள குடி மரபு முறை முஸ்லிம் பகுதிகளிலும் பேணப்பட்டு வருவதாக தெரிவித்ததுடன் ஆசிரியர் எதையும் திரிபு படுத்தாமல் உறுதிப்படுத்த முடியாதவிடயங்கள் தொடர்பாக தனது தெளிவு படுத்தல்களை அவ்வாறே செய்திருப்பது நல்ல விடயமாகும். இந்தப் புத்தகத்தைப்படிக்கும் ஒருவர் ஒரு திருமணத்தையோ மரணவீட்டையோ சுயமாகச் செய்யக்கூடியளவிற்கு இந்தப் புத்தகம் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்தக் கிராமத்தில் பல துறைகளிலும் நிபுணத்தவம் வாய்ந்தவர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக மகப்பேற்று வைத்திய நிபுணர்டாக்டர் தங்கவடிவேல் மூவின மக்களாலும் போற்றப்படுபவராக இருக்கின்றார். கூட்டுறவுத் துறை சம்பந்தமாக முதலாவதுநாவலான ஒரு வானவில் ரோஜாவாகிறது நாவலைப் படைத்த எழுத்தாளரும் இந்த மண்ணின் மைந்தரே. இவ்வாறே பலரையும்சுட்டிக்காட்டலாம் எனத் தெரிவித்தார்.

நூல் அறிமுகத்தைச் செய்த ஊடகவியலாளர் வி.கே.ரவீந்திரன் மூ. முன்மதராஜா அவர்கள் காலத்தால் அழியாத இருசாதனைகளைச் செய்துள்ளார். ஒன்று அவர் தலைமையேற்று அமைக்கப்பட்ட ஏழு தள இராஜகோபரம். மற்றது கல்வியாற்று மண்வாசனை என்னும் வரலாற்று நூல் என குறிப்பிட்டாட.

ஏவ்வாறுதான் விமாசித்தாலும் இந்த மண்ணின் கல்வி மரபணு கல்வியாறு என்ற அடைமொழிக்கமைய முதிர்ச்சியும் வளர்ச்சியம்பெற்றுக் கொண்டதான் இருக்கின்றது. ஓய்வுநிலையில் இருந்தாலம் கூட இந்தப் பாரிய பணியை சிறப்பாகச் செய்துமுடிப்பதற்குரிய ஆற்றலின் ரகசியம் அதுததான் என்று நான் நினைக்கின்றேன். கல்விறாறின் ஏற்ற என்பத தடைகள் தாண்டிமீறிப் பாயம் என்பதற்க முன் எதாரணமாக மன்மதராஸா இன்ற எம்முன் வீற்றிரக்கின்றாட எனக் கறிப்பிட்டார்.

ஆய்வரை நிகழ்த்திய கலாபூசணம் எஸ்.அரசரெட்ணம் தனது ஆய்வுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். நூலாசிரியரிடம் நான்கல்வி கற்காத போதும் கூட இயல்பாகவே அவரிடம் எனக்கு தனி மரியாதை இருக்கின்றது. வரலாறு என்ற மிகப் பாரிய பணியைமிகச் சிறப்பாகச் செய்திருக்கின்றார். தமிழ் கிராமங்கள் பற்றிய வரலாறுகள் மிக அருமையாகவே வெளிவருகின்றன. எனவேஐயாவின் முயற்சி காத்திரமானது. எனினும் வரலாறுகள் என்னும்போது அதற்க எதிடப்புக்கள் கூட வரலாம். ஆதற்கு முகம்கொடுக்கக் கூடிய அறிவம் ஆற்றலும் துணிச்சலும் அவரிடம் இருக்கின்றது. நூலில் அனைத்து அம்சங்களும் நிறைவாகவேஇருக்கின்றன. எனினும் மேலதிக தகவல்களுடன் இரண்டாவது பதிப்பும் இடம்பெற இறையாசி கிடைக்கவேண்டுமென்பதே எமதுஎதிர் பார்ப்பாகும் என்று குறிப்பிட்டார்.

நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட இந்த வெளியீட்டு விழாவில் ஆய்வுரையும் ஏற்பரையும் கேட்பதற்கு போதியளவுபார்வையாளர்கள் இல்லாமல் போனது கவலை தரும் விடயமாக இருந்தது.

## உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் போதைப் பொருள் தடுப்பு நிகழ்வு

**துரைவேந்தியமேடு நிருபர்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் 2019 ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி முதல் 25ம் திகதி வரையான காலப்பகுதி தேசிய போதைப் பொருள் ஒழிப்பு விழிப் புணர்வு வாரமாக பிரகடனப் படுத்தப் பட்டுள்ள நிலையில் பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட உதயபுரம் தமிழ் வித்தியாலயம் ஏற்பாடு செய்த போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு வித்தியாலயத்தின் முதல்வர் எஸ். சசிதரன் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வில் களுவாஞ்சிகுடி பிராந்திய பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கிருஷ்ணகுமார் இபிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி.வேணிதரன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் இமாணவர்கள் இபெற்றோர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது போதைப் பொருள் பாவனையால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் அவற்றினை தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் போதைப் பொருளின் தாக்கம் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக மீண்டும் எம்.டி.எம்.நிசாம் நியமனம்



**சின்னக் கிண்ணியா நிருபர்**

கிழக்கு மாகாண கல்விப் பணிப் பாளராக மீண்டும் எம்.டி.எம்.நிசாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த போது, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு சிரேஸ்ட செயலாளராக இடமாற்றப்பட்டார்.

இதனால் ஏற்பட்ட மாகாண கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்துக்கு எம்.ஐ.எம்.மன்சூர் முன்னாள் ஆளுநர் ரோஹித போகொல்லாகமையினால் நியமிக்கப்பட்டார்.

120 நாட்களே கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய எம்.ஐ.எம்.மன்சூர் தற்போது, கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

## கிண்ணியாவில் போராட்டம்

**கிண்ணியா நிருபர்**

திருகோணமலை அலக்ஸ் தோட்ட பிரதான வீதியில் திருகோணமலையில் உள்ள சட்டவிரோதமாக இயங்கி வரும் மசாஜ் நிலையங்களை அகற்றக்கோரி கவனயீர்ப்பு போராட்டம்) இடம் பெற்றது.

அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத குறித்த பல மசாஜ் நிலையங்கள் சட்டவிரோதமாக இயங்கி வருகிறது இதனால் மசாஜ் நிலையங்களில் விபச்சாரம் சமூக விரோத செயல்கள் இடம் பெற்று வருவதாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை நகர சபையினால் வழங்கப்பட்டு வரும் மசாஜ் நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது ஆராய்ந்து சட்டரீதியாக வழங்குமாறும் விபச்சாரமற்ற சமூக விரோத செயல்களுக்கு இடம் கொடுக்காத வகையில் முன்னெடுக்குமாறும் மேலும் கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் தங்களது ஆதங்கங்களை தெரிவித்தனர்.

நூற்றுக்கும் அதிகமான மக்கள் இக் கவனயீர்ப்பில் கலந்து கோசங்களை எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.









**செட்டிபாளையம் சிவன் பாலர் பாடசாலை தொடங்கி 6வது வருடத்தில் சிறுவர் மற்றும் மகளிர் வறண்டபிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கிட்டில் பூர்த்தி செய்யப்பட்ட கட்டத் திறப்பு விழாத லைவர் எம்.பாலகிருஷ்ணன் தலைமையில் திங்களன்று நடைபெற்ற போது அதிதிகள் அழைத்துவரப்படுவதையும் அமைச்சின் செயலாளர் திருமதி தர்சனா சேனநாயக்கா, மற்றும் விசேட அதிதிகளான அனர்த்த முகாமைத்தவ நிலையத்தின் பணிப்பாளாநாயகம் கலாநிதி எஸ்.அமலநாதன், மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு வடக்கு அபிவிரத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.பாஸ்கரன், நிதி அமைச்சின் திறைசேரி மேலதிக பணிப்பாளர் நாயகம் எம்.கோபாலரெட்ணம் மட்.மாவட்ட உதவி செயலாளர் தவேஸ்வரன் சகிதம் புதிய கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பதையும், மங்கல விளக்கேற்றப்படுவதையும், கிழக்கு மாகாண ஓய்வுநிலை மேலதிக கல்விப்பணிப்பாளர் சி.மனோகரன் பிரதம அதிதியால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.**

படம்: பெரியகல்லாறு நிருபர்

# சாதனையாளர்கள் என்றுமே பாராட்டப்படவேண்டியவர்கள்

## பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம்

**துரைவேந்தியமேடு நிருபர்**

சாதனையாளர்கள் என்றுமே பாராட்டப்பட வேண்டியவர்கள் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் தாம் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது மாத்திரமல்லாது பதவி உயர்வு பெறுகின்ற வரைக்கும் சாதனையாளர்களே அவ்வாறான பெருந்தகைகள் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். ஒருவருடைய சேவையும் ஓய்வு பெறுவதற்கு முன்னர் பாராட்டப்பட வேண்டும்.

இவ்வாறு மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வும் சேவைநலன் பாராட்டு விழாவும் பாசிக்குடா பிரதேசத்தில் டாக்டர் திவாகர் தென்னந்தோப்பு சுற்றுலா மையத்தில் நடைபெற்றது. நிகழ்வினை ஆரம்பித்து உரையாற்றும் போதே பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒரு திணைக்களத்தினுடைய வெற்றி வெறுமனே ஒருவருடைய முழுமையான பங்களிப்பில் தங்கியிருப்பதில்லை மாறாக அத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற தனிநபர் ஒவ்வொருவருடைய ஒட்டுமொத்தமான பங்களிப்பின் மூலமே வெற்றி உறுதி செய்யப்படுகின்றது.

எமது பிரதேச செயலகமானது தேசிய ரீதியாக நடைபெற்ற உற்பத்தித் திறன் போட்டியில் மூன்றாம் நிலையினைப் பெற்றமை பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் கடின உழைப்பின் காரணமாகப் கிடைக்கப் பெற்ற வெற்றியாகும்.இவ்வாறான வெற்றிக்கு உழைத்த உத்தியோகத்தர்களை பாராட்டாது இருக்க முடியாது.

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் பங்களிப்பானது வெறுமேனே வார்த்தைகளினால் கூறிவிட முடியாது.அவர்களின் தியாகந்தான் உண்மையில் எமது பிரதேச செயலகம் இவ்வாறான உயர்வான நிலைக்கு செல்வதற்கு காரணமாக இருந்தது.அதேபோன்று இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள் மற்றும் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் அனைவருடைய சேவையினை பாராட்டும் நோக்கில் இவ்வாறானதொரு நிகழ்வினை மிகப் பிரமாண்டமான முறையில் விளையாட்டுடன் கூடிய களியாட்ட நிகழ்வாக ஒழுங்கமைத்து இருக்கின்றோம்.

உண்மையில் இவ்வாறானதொரு நிகழ்வினை ஒழுங்கமைத்து வழிப்படுத்திக் கொண்டிருக்கும் எமது பிரதேச செயலக நலன்புரி சங்கத்தினருக்கு நன்றி கூற கடைமைப்பட்டிருக்கின்றேன்.எதிர் வரும் காலங்களிலும் இவ்வாறானதொரு நிகழ்வு நடைபெறுவதற்கு உத்தியோகத்தர்களின் பங்களிப்பு அவசியமானது.எனத் தெரிவித்தார்.




# பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கௌரவிப்பு



**சின்னக் கிண்ணியா நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட றஹ்மானியா நகர் மற்றும் சின்னக் கிண்ணியா ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 2017, 2018 ஆண்டுகளில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று நகரசபை விருந்தினர் விடுதிக் கட்டிடத்தில் நடைபெற்றது.

பையனியர்ஸ் விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவத்தில் 25 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த வைபவத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். எம். கனி, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர்

ஏ.சி.எம்.முஸ்இல், திருகோணமலை பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம்.மஃறூஸ், மஜ்லிஸ் சூரா தலைவர் ஏ.ஆர்.எம் பரீட், நகர சபை உறுப்பினர்களான எம்.எம்.நிவாஸ், எம்.எம். மஹ்தி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# நிவாரணப் பொருட்கள் கையளிப்பு



**மருதமுனை நிருபர்**

வட மாகாணத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட நிவாரண பொருட்கள் பிரதேச செயலாளர் எம்.ஐ.றிகாஸ் அவர்களின் வழிகாட்டலில் அம்பாரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர்

எம்.ஏ.சி.எம்.றியாஸ் அவர்களிடம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் வைத்து பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம். ஜுனைகிர் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜஹ்பர், அனர்த்த நிவாரண அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.றா.அஹமட் நபாயிஸ் போன்றவர்களினால் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் நெல் கொள்வனவைத் துரிதப்படுத்த நடவடிக்கை

**மருதமுனை நிருபர்**

அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் நெல் கொள்வனவைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட செயலாளர் திரு.டீ.எம்.எல்.பண்டாரநாயக்க அவர்களை சந்தித்து இது தொடர்பில் எடுக்கப்பட முடியுமான நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாவட்ட விவசாயப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் கடிதமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போது நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சிய வசதிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பல்வேறு இடங்களில் நடமாடும் சேவையினை நடத்துவதன் மூலம், விவசாயிகளின் சிரமத்தைக் குறைத்து நெல் விற்பனையை இலகுபடுத்த முடியும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

சார்பில் சுட்டிக் காட்டப்பட்டது. இதை சாதகமாகப் பரிசீலிப்பதாக மாவட்ட செயலாளர் உறுதியளித்தார்.

மேலும், தேவை அதிகமாகவுள்ள இடங்களில் நெல் கொள்வனவு நிலையங்களை ஏற்படுத்தலாம் எனவும் அவர் ஆலோசனை கூறினார். இது தொடர்பான சாத்திய அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.ஏ.எஸ்.கலீஸ் அவர்களைப் பணித்தார்.



# சம்மாந்துறைப் பிரதேச சபைச் செயலாளருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முகாமைத்துவ உதவியாளர் சங்கம் கோரிக்கை

**இறக்காமம் மேலதிக நிருபர்**

சம்மாந்துறைப் பிரதேச சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற முகாமைத்துவ உதவியாளர் ஒருவரின் சம்பளத்தினை சட்டவிரோதமாக சம்மாந்துறைப் பிரதேச சபைச் செயலாளர் முகம்மட்நிறுத்தி வைத்திருப்பதாகவும் இவ்வாறு நிறுத்தி வைப்பதற்கான அதிகாரம் இவருக்கு இல்லை எனவும் உடனடியாக இவரது சம்பளத்தை வழங்குவதற்கு பணிக்குமாறும் அனைத்து முகாமைத்துவ உதவியாளர் தொழிற் சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.முபாறக் கிழக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகளுக்கு தந்திச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடரப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, உத்தியோகத்தரின் சம்பளத்தினை இடைநிறுத்துவதன் மூலம் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் பிள்ளைகளின் கல்வி, உணவு மற்றும் அன்றாட அத்தியவசியதேவை குடும்பத்தினரின் தேவை என எவ்வளவோ பாரிய பிரச்சினைகளை குறிப்பிட்ட உத்தியோகத்தர் எதிர்நோக்குவார் என்பதை இன்று உணராதவர்கள் எவரும் இல்லை.

சம்பளத்தை இடைநிறுத்தியது பாரிய மனித உரிமை மீறலாகும். இது மன்னிக்கக்கூடிய ஒரு தவறாக கருதமுடியாது.

உடனடியாக சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றும், சம்பளத்தை நிறுத்தியமை தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கைமேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு சங்கத்தின் நிதியில் இருந்து உதவுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அந்த தந்திச் செய்தியில் குறிப்பிட்டு குறிப்பிட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மூதூர் மக்கள் சார்பாக சேவை பாராட்டும், கௌரவிப்பு நிகழ்வும்





**மூதூர் நிருபர்**

மூதூர் ஹைரியா வித்தியாலய அதிபராக கடமை புரியும் திருமதி. மெஹ்றுன் நிசா அவர்களது கல்விச்சேவையை பாராட்டி இன்று அப்பாடசாலை சமூகத்தினால் கௌரவிப்பு மற்றும் பாராட்டு நிகழ்வும் நடைபெற்றது.

இவர் மூதூரின் கல்வி வர்ச்சியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய சிறந்த அதிபராவார். இதற்கு முன் மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அதிபராக கடமை வகித்து அப்பாடசாலையிலும், மூதூரிலும் பாரியதொரு கல்வி மறுமர்ச்சியை உருவாக்கியவருமாவார்.

அதுபோல் தற்போது ஹைரிய்யா வித்தியாலயமானது மூதூரிலேயே முதன்மையான பாடசாலையாக மிளிர வைப்பதில் அதிபரான இவரது அர்ப்பணிப்பும் தியாகமும் பாராட்டத்தக்க தாகும்.

# விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் கல்முனை மஹ்மூத் கல்லூரி மாணவியின் ஆய்வு செயற்றிட்டம் தெரிவு

**சாய்ந்தமருது நிருபர்**



தேசிய விஞ்ஞான மன்றத்தினால் அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படுகின்ற விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி பாத்திமா ஷைரீன் இனாம் மௌலானாவின் செயற்றிட்டம் முதல் 20 செயற்றிட்டங்களுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிக்காக நாடு முழுவதும் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட செயற்றிட்டங்கள் சமர்பிக்கப்பட்டிருந்தன.

இப்போட்டியின் முதற்சுற்றில் 108 செயற்றிட்டங்களும் இரண்டாவது சுற்றில் 78 செயற்றிட்டங்களும் மூன்றாவது சுற்றில் 54 செயற்றிட்டங்களும் தெரிவு செய்யப்பட்டு, நான்காவது இறுதி சுற்றில் தேசிய மட்டத்தில் 20 செயற்றிட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த போட்டிக்காக கடந்த 2018 ஒக்டோபர் 10 மற்றும் டிசம்பர் 13 ஆகிய தினங்களில் ஸ்ரீலங்கா பொறியியல் நிறுவனத்தில் பயிற்சிப் பாசறைகள் நடாத்தப்பட்டதுடன் இம்மாதம் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் தேசிய விஞ்ஞான மன்றத்தில் இடம்பெற்ற போட்டியில் பங்குபற்றிய 54 செயற்றிட்டங்களில் 20 செயற்றிட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவற்றுள் ஒன்றாகவே 'கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் நிலக்கீழ் வெப்பநிலையில் கட்டடங்களினால் ஏற்படும் நகர்புற வெப்பத் தீவின் தாக்கம்' எனும் தலைப்பில் பாத்திமா ஷைரீன் இனாம் மௌலானாவினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட செயற்றிட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிக்கு நடுவர்களாக கொழும்பு பல்கலைக்கழக மற்றும் களனி பல்கலைக்கழக பேராசிரியர்கள் கடமையாற்றியிருந்தனர்.

கல்லூரி ஆசிரியர் எம்.ஏ.முஹம்மட் றியாஸின் வழிகாட்டலிலும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் ஏ.எம்.என்.எம். அதிகாரமின் மேற்பார்வையிலும் இச் செயற்றிட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கல்முனை மஹ்மூத் கல்லூரியின் பிரதி அதிபர் நதீரா, விஞ்ஞான பாட இணைப்பாளர் ஜீவைரீயா ஆகிய இருவரும் இம்மாணவியின் ஆய்வு செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். இவர்களுக்கு தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதாக கல்லூரி அதிபர் யூ.எல்.அமீன் குறிப்பிட்டார்.

இம்முறை ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை எழுதியுள்ள இம்மாணவி தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் கல்முனை கடற்கரைபள்ளி வீதியை சேர்ந்த இனாம் ஷக்காப் மௌலானா மற்றும் அப்துல் கனி மஜ்மலா தம்பதியரின் புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.







கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட பாடசாலை விவசாய தோட்டப்போட்டியில் கமு/கமு/ இ.கி.ச பெண்கள் வித்தியாலயம் காரைதீவு இரண்டாம் இடத்தைப் பெற்றதற்காக ரூபா 25000/= காசோலையை பாடசாலை அதிபர் திரு.செ.மணிமாறன் பெற்றுக்கொண்டார் .இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் இமற்றும் மாவட்ட விவசாய உயர் அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.அதன் பின்னர் பாடசாலை அதிபரினால் பாடசாலையில் வைத்து பெற்று கொண்ட காசோலையை பாடசாலை விவசாய பாட ஆசிரியரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்

படம்: காரைதீவு நிருபர்




# கல்முனையில் அரசகரும மொழிகள் ஆய்வு கூடம்; வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரிக்கை!

**சாய்ந்தமருது நிருபர்**

அரசகரும மொழிகள் ஆய்வு கூடமொன்றை கல்முனைத் தொகுதியில் அமைத்துத் தருவதாக அளித்த வாக்குறுதி 02 ஆண்டுகள் கடந்தும் நிறைவேற்றப்படாமல் இருப்பதியிட்டு பிரதேச மக்கள் கவலையடைந்துள்ளார்கள் என்று கல்முனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் பளீல் பவுன்டேசன் சமூக சேவை அமைப்பின் தலைவருமான தேசகீர்த்தி ஏ.அப்துல் கபூர், தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அப்துல் கபூர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2016 ஆகஸ்ட் மாதம் தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தின்போது ஸ்மார்ட் ஒப் ஸ்ரீலங்கா தேசிய அமைப்பின் தலைவரினால் சாய்ந்தமருதில் அரச கரும மொழிகள் ஆய்வு கூடமொன்று அமைக்கப்பட வேண்டியதன் தேவைகளை விளக்கி மகஜர் ஒன்றை தங்களிடம் கையளித்திருந்தார். இந்த மகஜரை ஏற்றுக்கொண்ட நீங்கள் கல்முனை பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களின் நலன் கருதி மிக விரைவில் அரச கரும மொழிகள் ஆய்வு கூடத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அந்த அமைப்பிடம் வாக்குறுதி அளித்திருந்தீர்கள்.

ஆனால் 02 ஆண்டுகளுக்கு மேல் கடந்த போதிலும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இவ் ஆய்வு கூடம் உங்களுடைய காலத்தில் எமது பிரதேசத்திற்கு கிடைக்கா விட்டால் பிற்பட்ட காலங்களில் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை.

மொழி உரிமை பற்றி அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று நடைமுறையில் இல்லை. சிங்கள மொழியைப் போன்று தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக இருந்த போதிலும் அது சரியான முறையில் அமுல்நடத்தப்படுவதாக இல்லை. இப்பிரச்சினை தொடர்பில் மக்கள் தெளிவு காண்பதற்காகவும், உண்மைத்தன்மைகளை புரிந்து கொண்டு சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதற்காகவும் அரச கரும மொழிகள் ஆய்வுகூடம் ஒன்று சாய்ந்தமருதில் அவசியம் அமைக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

# சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையிலான கலந்துரையாடல்





**எஸ்.எம்.அறூஸ்**

சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீசுடனான கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் அவரது சம்மாந்துறை இல்லத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நீர்ப்பாசண பொறியியலாளர் எம். நவாஸ், நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ. மன்சூர், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் நௌசாத், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ. பாவா, சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கள்ளியம்பட்டை மற்றும் வம்மியடி பாலங்கள் உள்ளிட்ட திராய்மடுவிலுள்ள இரண்டு பாலங்களையும் புனரமைத்து தருவதோடு விவசாய பாதைகளை அமைத்து தருமாறும் பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கைவிடுத்தார். நெற் பயிர்ச்செய்கை மற்றும் நெல் அறுவடைக் காலங்களில் விவசாயிகள் இப்பாலங்கள் மற்றும் பாதைகளை பயன்படுத்துவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கிராமிய பாலங்களை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை பயன்படுத்தி இப்பாலங்களை அமைத்துத் தரமுடியுமென இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் இதன்போது உறுதியளித்தார். மேலும் ஜப்பான் நாட்டின் ஜெய்கா திட்டத்தின் மூலம் விவசாய பாதைகளை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வததாகவும் தெரிவித்தார்.

# சாய்ந்தமருதில் விளையாட்டு நிதியம் உருவாக்குதல் வேண்டும்!

**கல்முனை நிருபர்**

சாய்ந்தமருதில் விளையாட்டு அபிவிருத்தி நிதியம் ஒன்றினை உருவாக்குதல் வேண்டும் என சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளரும் அவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது ப்லாஸ்டர் விளையாட்டுக் கழகத்தின் வீரர்களுக்கான சீருடை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது சீபிரீஸ் ரெஸ்ரூரண்டில் இடம் பெற்றது.

கழகத்தின் தலைவரும் உஸ்மான் கோல்ட் ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான அல்-ஹாஜ் ஏ.எல். முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளரும் அவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளருமான ஏ.எல். எம்.சலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில்,

எமது பிரதேச கழகங்கள் கிரிக்கெட் விளையாட்டோடு ஏனைய விளையாட்டுக்களிலும் ஈடுபட வேண்டும். சாய்ந்தமருதில் அமைச்சர்களின் நிதி உதவியோடு இரண்டு மைதானங்களை கழகங்களின் ஒத்துழைப்போடு உருவாக்கியுள்ளோம். இம்மைதானங்களை எமது வீரர்கள் முழுமையாக பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சாய்ந்தமருதில் உருவாக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்ளின் சம்மேளனத்தை மீள் புனர்நிமாணம் செய்து எமது பிரதேச விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு நிதி ரீதியான உதவிகளை வழங்குவதற்கு விளையாட்டு அபிவிருத்தி நிதியம் ஒன்றினை உருவாக்குதல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

கழகங்கள் தங்களை விளையாட்டோடு மட்டும் சுருக்கிக் கொள்ளாமல் சமூகப் பணிகளிலும் ஈடுபடுதல் வேண்டும். ஏனெனில் நான் பிரதேச செயலாளராக கடமையாற்றிய காலத்தில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களின் போது விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் எமக்கு உதவிகளை வழங்கினர்.

எமது நாட்டில் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை ஆகிய இரு துறைகளிலும் இன்று பலர் பிரகாசிக்கின்றர். எதிர்காலத்தில் நீங்கள் விளையாட்டுத் துறையில் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம். பஸ்மீர்,சாய்ந்தமருது பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஜஃபர், சாய்ந்தமருது லீடர் எம் எச்.எம்.அஷ்ரஃப் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ஏ.எம்.ஏ.நிசார், கழகத்தின் செயலாளரும், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் எம்.நிசார், பிரிவெல்த் குளோபல் நிறுவனத்தின் கல்முனை கிளையின் பிரதித் தலைவர் ஏ.எம்.றியாத், நியூ லங்கா பாத்திமா அரிசி ஆலை உரிமையாளர் ஏ.ஜஃபர், தொழிலதிபர் எம்.எச்.நாசர் உள்ளிட்ட சாய்ந்தமருது பிரதேச கழகங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# எலும்பு முறிவு நோயாளர்கள் சிகிச்சைபெற முடியாது அவதி

**தோப்பூர் நிருபர்**

மூதூர் தளவைத்தியசாலையில் எலும்பு முறிவுகளுக்கான தனியான எலும்புமுறிவு நோயியல் சத்திர சிகிச்சைப்பிரிவுகள் இல்லையென இப்பகுதி நோயாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதியில் திடீர் விபத்துகள் மற்றும் அனர்த்தத்தின்போதும் எலும்பு முறிவுகளுக்கும் மற்றும் எலும்புகள் தொடர்பான ஏனைய நோய்களுக்கும் ஆளாகி எலும்பு முறிவு சத்திர சிகிச்சைகள் பெறவேண்டிய நோயாளர்கள்

திருகோணமலை. மட்டக்களப்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கு சத்திர சிகிச்சைகளுக்காக சென்றுவரவேண்டிய ஆவல நிலை ஏற்பட்டிருப்பதாக இப்பகுதி நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

எலும்பு முறிவுக்கான சிகிச்சைகள் மற்றும் ஏனைய கிளினிக் ஆகியவற்றுக்கும் செல்ல வேண்டிய நோயாளர்கள் பெருந்தொகை பணத்தை செலவிட்டு திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கு சென்றுவரவேண்டியிருப்பதாகவும் அல்லது தனியார் வைத்தியசாலைகளை நிடவேண்டியிருப்பதாகவும் கூறுகின்றனர்

இதனால் தாம் வீண் செலவினத்தையும் பெரும் அசௌகரியத்தையும் எதிர்கொள்வதாகவும் இவர்கள் கூறுகின்றனர்..இதனால் இப்பகுதியிலுள்ள வறிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

மூதூர் பகுதியில் சுமார் 80 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். இவ் வைத்தியசாலையில் எலும்பு முறிவு நோய்க்கான ( ஓத்தோப் பெற்றிக் யுனிட் )தனியான எலும்பு முறிவு சிகிச்சைப்பிரிவை ஏற்படுத்துவதன் மூலமாக தோப்பூர். சேருவில. வெருகல் மற்றும் . கிண்ணியா உள்ளிட்ட ஏனைய பகுதிகளை சேர்ந்த மூவின மக்களும் நன்மை பெறுவார்கள்.

மூதூர் தளவைத்தியசாலையில் எலும்பு முறிவுகளுக்கு விசேட சிகிச்சை அளிக்கும் பொருட்டு எலும்பு முறிவு நோய் விசேட வைத்திய நிபுணர்களையும் இதற்கு தேவையான ஏனைய பௌதீக வளங்களையும் ஏற்படுத்தி இங்கு எலும்பு முறிவு நோய்க்கான தனியான சிகிச்சை பிரிவுகளை ஏற்படுத்தவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வீதியை புனரமைக்க கோரிக்கை

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட. தோப்பூரிலுள்ள அல்லை நகர்.மத்திய வீதியைப்புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ் அல்லை நகர் மத்திய வீதியின் ஒருபகுதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது மிக மோசமாக சேதமடைந்து குன்றும் குழியுமாக மாறி சேதமடைந்து காணப்படுகிறது.இவ் வீதியூடாக தினமும் அல்லை நகர் முகைதீன் ஜும்மா பெரியபள்ளிவாசல். பாடசாலை இக்பால் நகர். தாயிப் நகர் . உள்ளிட்ட ஏனைய தூர இடங்களுக்குச்சென்றுவரவேண்டிய பொதுமக்களும் இவ் வீதி சேதமடைந்திருப்பதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறுகின்றனர்.

இவ் வீதியூடாக அவசர நிலைகளில் சென்றுவர முடியாதிருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மாரி மழை காலத்தில் இவ் வீதி சேறும் சகதியுமாக மாறுவதால் இவ்வீதியூடாக பிரயாணம் செய்யமுடியாதிருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.இவ் அல்லை நகர். மத்திய வீதியை புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சம்மாந்துறை பிரதேசத்தில் பல்கலைக் கழகத்திற்கு தகைமை பெற்ற மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

**எம்.எம்.ஜபீர்**

சம்மாந்துறை பிரதேசத்தில் பல்கலைக் கழகத்திற்கு தகைமை பெற்ற மாணவர்களுக்கு சம்மாந்துறை பிரதேச சபை ஏற்பாடு செய்த வழிகாட்டல் கருத்தரங்கு சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது இம்முறை உயர்தர பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் எவ்வாறு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பது தொடர்பாகவும், இதேவேளை பல்கலைக்கழகத்திற்கு சென்று பட்டப் படிப்புக்களை நிறைவு செய்தாலும், தொழில் பெற்றுக் கொள்ளக்கூடிய தகைமைகளை பூர்த்தி செய்யக் கூடிய உயர் படிப்புக்களை மேற்கொள்வது தொடர்பாகவும், உயர் தொழில் தகைமை கல்வியை தொடர முடியாதவர்களுக்கான உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப் பட்டது.



சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.எம்.நௌசாட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் வீ.ஜெயசந்திரன், தென்கிழக்கு பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் எப்.எச்.வீ.சிப்லி, பிரதேச சபை உறுப்பினர்கள், மாணவர்கள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

# மைதான விடுவிப்பு தொடர்பில் ஆரம்ப கட்ட நடவடிக்கை

**கிண்ணியா நிருபர்**

கிண்ணியா சூரங்கல் மைதான காணி விடுவிப்பு தொடர்பிலான கலந்தாய்வு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். எம்.ஹனி தலைமையிலும் துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

வன இலாகாகு சொந்தமான காணி என கூறப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த பொது மைதானமானத்தை உடனடியாக விகுவிக்குமாறு உரிய வன இலாகா அதிகாரியான திரு.அல்விஸ் அவர்களுக்கு துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் அவர்கள் விளையாட்டு மைதான களவிஜயம் ஒன்றை மேற்கொண்டு தெளிவுபடுத்தியதுடன் விடுவிப்பு தொடர்பில் உரிய அதிகாரியை பணித்தார்.

உரிய மைதான காணிக்கான ஆவனங்களை வன இலாகா அதிகாரிக்கு பிரதியமைச்சர் ஆதாரங்களுடன் விடுவிப்பு தொடர்பில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

குறித்த கலந்தாய்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனி, வன இலாகா அதிகாரி அல்விஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத், பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா உள்ளிட்ட கிராம இளைஞர்கள் என பலரும் பங்கேற்றார்கள்.

**சாய்ந்தமருது ப்ளாஸ்ட்டர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய கழகச் சீருடை அறிமுக நிகழ்வு சாய்ந்தமருது ஸீ பிறீஸ் ஹோட்டலில் இடம்பெற்றது. இதன் போது, அதிதிகள் இணைந்து கழகத்தின் அணித்தலைவர் முஹம்மட் ஆபாக்கிடம் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.**

**படம்: கல்முனை நிருபர்**










**திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்பின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து பதவி சிறிபுர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பதவி சிறிபுர கொலன் கொள்ள புபுது முன்பள்ளி முன்பள்ளிப் பாடசாலை மற்றும் பதவி சிறிபுர ஜனபதபிரபோதாமுன்பள்ளிப்பாடசாலைகளுக்குத்தேவையான உபகரணங்கள் மற்றும் பேண்ட் வாத்தித்திய கருவி என்பன வழங்கிவைக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கலந்துகொண்டு இதனை முன்பள்ளி நிருவாகத்திடம் கையளித்தார்.**

**படம்: தோப்பூர் நிருபர்**

# வவுனியா மாவட்டத்திலும் படைப் புழுக்களின் தாக்கம்!

**வவுனியா நிருபர்**

வவுனியா மாவட்டத்திலும் சேளாப் பயிர் செய்கையில் படைப் புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்திலும் சோளப் பயிர்செய்கையில் ஏற்பட்ட படைப் புழுக்களின் தாக்கம் தற்போது ஏனைய பயிர்கள் மீதும் தாக்கியுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைககள் விவசாய திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் என்பன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.



அந்தவகையில் வவுனியா நெடுக்கேணி மற்றும் பம்பைமடு கமக்கார அமைப்பு பிரிவில் 40.5 ஏக்கர் நெற்பயிர் செய்கையும், உலுக்குளம் மற்றும் மடுகந்த கமக்கார அமைப்பு பிரிவில் 72.5 ஏக்கர் சோளப் பயிர் செய்கையும், உலுக்குளம் கமக்கார அமைப்பு பிரிவில் 0.5 ஏக்கர் குரக்கன் பயிர் செய்கையும், கோவில்குளம் கமக்கார அமைப்பு பிரிவில் 10 ஏக்கர் உளுந்து பயிர்செய்கையும் படைப்புழுக்களின் தாக்கம் காரணமாக பாதிப்படைந்துள்ளது.

இதனை கட்டுப்படுத்தும் வகையில் மாகாண விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாய பயிற்சி கல்லூரி என்பன இணைந்து பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

# தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ச.கீதன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 150 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கிய கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ச.கீதன் கருத்து தெரிவிக்கையில் வீழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் வீறுகொண்டெழ கல்வியின் தேவை இன்றியமையாதது அதற்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்றுமே துணையிருக்கும் என தெரிவித்தார். மேலும் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதமேந்தியும் பின்னர் அரசியல் ரீதியாக தொடர்ந்தும் மக்களுக்காக இயங்கிவரும் எம் அமைப்பு பதவிகளுக்காக எப்போதும் சோரம் போகாது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்பதோடு இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை முன்போலவே இனிவருங் காலங்களிலும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் செயல்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அமைப்பாளர் விஜயகுமார், துணை அமைப்பாளர் ராஜன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர்களான சந்திரபத்மன், பார்த்தீபன் , தமிழ் ஈழ விடுதலை இயக்க கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# தோட்ட தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கும் கூட்டு ஒப்பந்த உடன்பாட்டை நிராகரிக்கின்றோம்

## புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி

தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்று வந்த இழுத்தடிப்புகளுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில், கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து வலியுறுத்தப்பட்டு வந்த 1000 ரூபா கோரிக்கை புறந்தள்ளப்பட்டு 700 ரூபா அடிப்படை சம்பள உடன்பாடு மேற்கொள்ளப்பட்டமையானது, மீண்டும் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் வரலாற்று துரோகமாகும். என புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக 1000 ரூபா சம்பள கோரிக்கையை முன்னிறுத்தி பல்வேறு அரசியல் கபட நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வந்தன. இந்த சூழ்நிலையில் கடந்த மூன்று மாதங்களில் தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையான 1000 ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்பட வேண்டுமென கோரி பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்று வந்தன. எனவே, தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் தேசிய போராட்டமாக எழுச்சிபெற்று வந்த நிலையிலேயே அப்போராட்டங்களை மலினப்படுத்தும் வகையிலும் தொழிலாளர்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தும் வகையிலும் எட்டப்படிருக்கும் உடன்பாடு முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும்.

பேச்சு வார்த்தைகளின் போது கொடுப்பனவுகளுடன் 940 ரூபா வரை உடன்பாடு எட்டபட்டதாகவும் தாம் 1000 ரூபா அடிப்படை சம்பள நிலைப்பாட்டில் இருந்து தாம் பின்வாங்க போவதில்லை என கூட்டு ஒப்பந்ததில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் தெரிவித்து வந்தன. மறுபுறதில் ஏனைய மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் இவ்விடயம் தொடர்பில் முன்னுக்கு பின் முரணான நிலைப்பாட்டையை வெளிப்படுத்தி வந்தன. இந்த பின்னணியில் நாட்டின் முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளும் ஏனைய தொழிற்சங்கங்களும் இனைந்து முன்னெடுத்து வந்த எதிர்ப்பு இயக்கம் நாடளாவிய ரீதியில் வலுப்பட்டு வந்த நிலையில் அரசாங்கமும் தொழிற்சங்களும் இனைந்து இந்த துரோகத்தனமான சூழ்ச்சியை செய்திருக்கின்றன.

எனவே, தோட்டத்தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத, நாட்டில் இருந்து வரும் அடிப்படை சம்பள கொள்கைக்கு முரணாகவும் எந்த வகையிலும் வாழ்க்கை செலவுக்கு போதுமானதுமல்லாத இந்த தீர்மானத்தை எமது கட்சி முற்றாக நிராகிக்கிறது. தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் போராட முன்வர வேண்டும் எனவும் இடது சாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் ஏனைய தொழிலிற்ச்சங்கங்கள் தோட்டத்தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை வென்றெடுப்பதற்கான அழுத்தத்தை கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன். அதேவேளை, மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தமது சுயநல மக்கள் விரோத அரசியலை கைவிட்டு தொழிலாளர்கள் சார்பாக செயற்பட வேண்டும் எனவும் வலிறுத்துயுள்ளார்.

# தேசிய ஊடக கல்வி நிகழ்ச்சி திட்டம் முன்னெடுப்பு



**வவுனியா நிருபர்**

விழிப்புணர்வு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு ஊடகக்கல்வியை நடைமுறைப்படுத்துவதின் முக்கியத்துவம் பற்றிய தெளிவூட்டல் நிகழ்வுகள் வவுனியா மடுக்கந்தை ஸ்ரீ தம்பரத்தின வித்தியாலய யத்தன பிரிவேனா பாடசாலையில் நடைபெற்றது.

சிங்கள மொழி மூலம் நடை பெற்ற இவ் நிகழ்ச்சித்திட்டம் வவுனியா மாவட்ட செயலக ஊடக இணைப்பாளப் உப்பில்பாலசூரிய தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தகவல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் நிர்மலி பிரியாங்கனி குமாரகே, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார் மற்றும் தகவல் தினணக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியளாலர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஊடகக்கல்வியால் கிடைக்கும் பலாபலன்கள் பற்றியும், ஊடகங்கள் ஆற்றிய சேவைகள் குறித்தும் மாணவர்களின் கேள்விகளுக்கு ஊடகவியலாளர்களினால் பதில் அளிக்கப்பட்டது.

# தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் பூங்கதிர் இதழ் வெளியீட்டு விழாவும்



கிளிநொச்சி பூநகரி பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் பூங்கதிர் 6 இதழ் வெளியீட்டு விழாவும் பூநகரி பிரதேச பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றுள்ளது





கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பூநகரி பொது நூலகத்தினால் கடந்த ஆண்டில்; தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் பொது நூலகத்தினால் வெளியிடப்பட்டு வருகின்ற பூங்கதிர் சஞ்சிகையின் ஆறாவது இதழ் வெளியீட்டு விழாவும் நடைபெற்றுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அ ஐயம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக் பூநகரி பிரதேச செயலாளர் எஸ் கிருஸ்னேந்திரன் பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்

இந்நிகழ்வில் கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றிய வீரர்களுக்கான பரிசுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டதுடன் வருடாந்;தம் வெளியிடப்படுகின்ற பூங்கதிர் என்ற நூலின் ஆறாவது இதழ் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது இதில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் தவிசாளர் உபதவிசாளர் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# வெளிச்சம் அறக்கட்டளையின் மூலம் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் திரு. கு.கு.ஸ்ரீனிவாசன் அவர்களின் ஏற்பாட்டில் சிவானந்தன் நற்பணி மன்றத்தின் மூலம் திருமதி. தவராணி சிவானந்தன் அம்மையார் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாக நோர்வேயில் வசிக்கும் மகன் சுரேஷ் சிவானந்தன் அவர்களின் நிதி பங்களிப்பில் வவுனியா தரணிக்குளம் 18ம் ஒழுங்கையில் கணவனை இழந்து மூன்று பிள்ளைகளுடன் அன்றாடம் ஒரு வேளை கூட தனது வீட்டில் சமைத்து சாப்பிட வசதியில்லாமல் அயலவர்களின் உதவியுடன் தனது வாழ்க்கையினை வாழ்ந்துந்து வரும் ஒரு பெண்தலைமைத்துவ குடும்பத்திற்கு தற்போதைக்கு தேவையான உலர் உணவுப்பொருட்கள் வெளிச்சம் அறக்கட்டளையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.



இவ் நிகழ்வில் வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் திரு கு.கு. ஸ்ரீனிவாசன், வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் திரு.பா.லம்போதரன், அபிவிருத்தி அலுவலர் திரு கிறிஷ்வசந், தரணிதீபம் விளையாட்டுக்கழக இளைஞர்கள் எனபலரும் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏழாயிரம் லீற்றர் எதனோல் அழிப்பு



யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சுமார் ஏழாயிரம் லிட்டர் எதனோல் அடங்கிய சுமார் 331 கொள்கலன்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக ஊற்றி அளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சுண்ணாகம் பகுதியில் கடந்த 24ம் திகதி விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட பரிசோதனையின் பொழுது சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்காக பயன்படுத்தவிருந்த 7000ஆரயிரம் லீற்றர் எதனோல் அடங்கிய சுமார் 330 கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி இரண்டரைக் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குற்றச் செயலுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.யாழ்ப்பாணம் விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவலைப்பின் பொழுதே குறித்த சட்டவிரோத பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் இருவரையும் அதிரடி படையினர் அண்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி த. நந்தகுமார், மற்றும் நிலைய பரிசோதகர் த. நளிதரன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நீதிபதி மா. கனேசராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து குறித்த இருவரையும் 31 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைத்து விசாரனைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். இதே வேளை சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சுமார் ஏழாயிரம் லிட்டர் எதனோல் அடங்கிய சுமார் 331 கொள்கலன்கள்மதுவரித்திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் உமையாள் புரம் பகுதியில் ஊற்றி அளிக்கப்பட்டுள்ளன.

# படைப்புழுவின் தாக்கம் குறித்து விழிப்புணர்வு பேரணி



கிளிநொச்சி மாவட்டம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ள படைப்புழுவின் தாக்கத்திலிருந்து விடுபடுவோம் எனும் தொனி பொருளில் கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த விழிப்புணர்வு பேரணி கரடிபோக்கு சந்தியில் காலை8.30 மணியளவில் ஆரம்பமாகி கிளிநொச்சி பொது சந்தைவரை சென்று நிறைவு பெற்றது.

இதன்போது படைப்புழு பாதிப்புக்கள், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பான துண்டு பிரசுரங்களும் வினியோகிக்கப்பட்டன. விவசாய செய்கையில் பாதிப்பை ஏற்படுத்திவரும் படைப்புழுவிலிருந்து பாதுகாக்கும் முறைமைகள் தொடர்பாகவும் விவசாயிகள், பொது மக்களிற்கு விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடதக்கதாகும்.







**வரலாற்று சிறப்புமிகு யாழ்ப்பாணம் ஸ்ரீ தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய மேற்கு வாசல் கோபுர கும்பாபிஷேகம் மாவிட்ட புரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் அதீன கர்த்தா மகராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்களின் ஆசி நெறிப்படுத்தலுடன் சிறப்பாக இடம்பெற்ற பின்னர் குருமாரின் ஆசிகள் இடம்பெறுவதையும் கோபுரத்தின் தோற்றத்தினையும் படத்தில் காணலாம்**

**படம்: என்.ஹரன்**




## லண்டன் உயர்வாசல் குன்று முருகன் ஆலயத்தினால் வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு



**வவுனியா நிருபர்**

கிளிநொச்சியில் போரினால் பாதிப்புற்று கடந்த வெள்ளத்தின் போது கால்நடைகளை வெள்ளத்தில் இழந்து நாட்டுக்காக பிள்ளைகளை இழந்த குடும்பம் ஒன்றிற்கு ஆடும் குட்டியும் லண்டன் உயர்வாசல் குன்று முருகன் ஆலயத்தினரால் சர்வதேச இந்து இளைஞர் பேரவையினூடாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இலங்கை ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார், தலைவர் ஜெ.மயூரக்குருக்கள், ஆலோசகர் சிவ.கேதீஸ்வரன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

## வவுனியா குப்பை பிரச்சினையை தீர்க்க அமைச்சரவைக்கு கூட்டு அமைச்சரவை பத்திரம்

வவுனியா பம்பைமடு குப்பை மேட்டு பிரச்சினைக்கு மாற்று தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில் தானும் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் இணைந்து கூட்டு அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து, பொருத்தமான இடத்தில் குப்பைகளை கொட்டும் மாற்று திட்டம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் அரச அதிபர் காரியாலயத்தில் அரசாங்க அதிபர் ஹனிபா, மேலதிக அரச அதிபர் மற்றும் நகர சபை,பிரதேச சபை தலைவர்கள் உட்பட அதிகாரிகள் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

வவுனியா குப்பை மேடு பிரச்சினை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இழுபறி நிலையில் இருந்து வருகின்றது. கடந்த வாரம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்திய போது,

அரச உயர் அதிகாரிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய தற்காலிகமாக அவை நிறுத்தப்பட்டன.

அரச அதிபர், மேலதிக அரச அதிபர் ,நகர சபை,பிரதேச சபை தலைவர்கள், அதிகாரிகள் இணைந்து வேறு மாற்றிடங்களை குப்பை கொட்டுவதற்காக அடையாளப் படுத்தி இருக்கின்றனர். அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்பட்ட மூன்று இடங்களில் சாத்தியமான, மிகவும் பொருத்தமான ஓரிடத்தை அவர்கள் தெரிவு செய்வர்.

அதன் பின்னர் ஒரு வார காலத்துக்குள் அதற்கான திட்ட வரைபு, நிதிசெலவீனங்களின் அறிக்கை ஆகிய வற்றை எனது அமைச்சுக்கு அனுப்பி வைப்பர்.

உரிய ஆவணங்கள் கிடைத்த பின்னர் நானும் அமைச்சர் வஜிர அபேவர்தனவும் இணைந்து அமைச்சரவைக்கு கூட்டு அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்வோம்.

மேற்கொண்டு இதற்கான நிதிகளை பெற்ற பின்னர் விஞ்ஞான தொழில் நுட்ப முறைகளை பயன்படுத்தி இந்த பிரச்சினைக்கு சுமூகமான தீர்வை காண முடியும். எமது இந்த முயற்சிக்கு வன இலாக்கா மற்றும் ஏனைய அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் கோருகின்றோம்.

## வரலாற்றில் மீண்டும் ஒரு மாபெரும் காட்டிக்கொடுப்பு அரங்கேறியுள்ளது

**புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மலையகப் பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன் தெரிவிப்பு**

கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா சம்பளத்திற்காக போராடி வந்துள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி முழுமையாக ஆதரித்ததோடு எமது நேச சக்திகளான சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு, கம்யூனிஸ்ட் தொழிலாளர் சங்கம், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி, பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து அடிப்படை சம்பளம் ரூ 1000/- ஐ வென்றெடுப்பதற்காக போராடி வந்திருக்கின்றோம்.

2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கூட்டு ஒப்பந்தம் காலாவதியானதற்கு பிறகு தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக, முற்போக்கு, இடதுசாரி சக்திகள், இளைஞர்கள் என ஒன்றிணைந்து அடிப்படை சம்பளத்திற்காக போராடி வந்த போதும் தோட்டத் தொழிலாளர்களின் சந்தாவை பெற்று கம்பெனிகளுக்கு விலைபோகும் பிற்போக்கான தொழிற்சங்கங்கள் தாம் கூறிவந்த ஆயிரம் ரூபாய் கோரிக்கையை முதலாளிமாருக்காகவும் அரசாங்கத்துக்காகவும் விட்டுக் கொடுத்துள்ளனர். வெறும் 20 ரூபாய் சம்பள அதிகரிப்பே நடந்துள்ளது எனவும் இதனை மிக வன்மையாக கண்டிப்பதாகவும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மலையகப் பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன் கூட்டு ஒப்பந்த காட்டிக்கொடுப்பிற்கு எதிராக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் வைப்பிலிடப்படும் தொகையையும் சேர்த்து சம்பளம் அதிகரிக்கப்படுள்ளது என காட்டும் மாபெரும் துரோகத்தனம் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத்திரமே நடந்துள்ளது.

இதற்கான முழுப் பொறுப்பையும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் மத்தியஸ்தம் வகித்த அரசாங்கமும் ஏற்க வேண்டும்.

28.01.2019 அன்று அலரிமாளிகையில் வைத்து கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருட்டுக் கூட்டத்தின் தலைவர் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். தோட்ட தொழிலாளர்கள் இவ்வளவு போராடியும் வாய் திறக்காத ஜனாதிபதி யார் பக்கம் என்பதை காட்டியிருக்கின்றார்.

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது பற்றி முன்னாள் மனித உரிமைப் போராளி மனோ கணேசன் என்ன சொல்லப் போகிறார்? நாங்கள் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுபவர்கள் இல்லை.

கையொப்பமிடும் தொழிற்சங்கங்கள் மட்டும் தான் காட்டிக் கொடுத்து விட்டார்கள் எனக் கூறி தோட்டத் தொழிலாளர்களிடம் இருந்து தப்பிக்க போகிறாரா அமைச்சர் திகாம்பரம்?

மைத்திரி, ரணில், தொண்டா, திகா, வடிவேல் சுரேஸ் தொழிலாளர் பக்கம் இல்லை நாங்கள் என்றுமே முதலாளிமார் பக்கம் என்று அடித்து கூறியுள்ள நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறான அரசியல் பாதையை தெரிவுச்செய்ய போகிறார்கள் என்பது பற்றி பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், காணி, வீட்டுரிமை மற்றும் நிர்வாக சிவில் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி என்றுமே பயணிக்கும் எனவும் தோட்டத் தொழிலாளர்களுடன் இணைந்து போராடும் எனவும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மலையகப் பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன் மேலும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## காணி முறைப்பாடுகள் தொடர்பான வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபையின் விசாரணைகள் ஆரம்பம்

**வவுனியா நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் உள்ள காணிப் பிரச்சனைகள் தொடர்பாக விசேட காணி மத்தியஸ்த சபையிடம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் இன்று ஆரம்பமாகியுள்ளது.

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் விசேட காணி மத்தியஸ்தர் சபை தவிசாளர் இ.நவரட்ணம் அவர்களின் தலைமையில் காலை 9 மணியில் இருந்து 1 மணிவரை முறைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்களும், விசாரணைகளும் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள காணிப் பிணக்குகள் தொடர்பாக விசேட காணி மத்தியஸ்தர் சபையிடம் இதுவரை 370 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் முதல்கட்டமாக இன்று 10 காணிப் பிணக்குகளுக்கான கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளன. இதன்போது முறைப்பாட்டாளர்கள் மற்றும் எதிர் தரப்பினர் ஆகியோருக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த நிலையில் அவர்கள் வருகை தந்திருந்தனர்.



ஒவ்வொரு முறைப்பாடுகளும் மூவர் கொண்ட மத்தியஸ்தர் குழாம் மூலம் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அடுத்த கட்ட கலந்துரையாடல்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆரம்ப நிகழ்வில் விசேட காணி மத்தியஸ் சபை ஆணைக்குழுவின் ஆலோசகர் சிரேஸ்ட சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு, ஆசியான் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் எம்.ஜயந்த, நீதி அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## காணிகளை கையளிக்க இராணுவம் நடவடிக்கை

**வவுனியா நிருபர்**

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டு வந்த 8085 ஏக்கர் தனியார் மற்றும் அரச காணிகளை உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வன்னி பாதுகாப்பு படைத்தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா தலைமையில் அரச மற்றும் தனியார் காணிகள் 54.38 ஏக்கர் வடக்கு மாகாண ஆளுனர் சுரேன் ராகவனிடம் 22.01.2019 அன்று கையளிக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் படையினரின் பயன்பாட்டில் இருந்த 4.5 ஏக்கர் அரச காணி 54 படைப்பிரிவின் படைத்தளபதி பிரிகேடியர் செனரத் பண்டார தலைமையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்தாசிடம் 29-01-2019 அன்று கையளிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜனுக்கு மணி விழா நிகழ்வு

**வவுனியா நிருபர்**

வவுனியா தெற்கு வலயத்தின் தமிழ் கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜனுக்கு மணி விழா நிகழ்வு வவுனியா தெற்கு வலயத்தின் அதிபர்கள் சங்கத்தின் தலைவர் தே.சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.



வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் முத்து ராதாகிருஸ்ணனால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்ட எம்.பி.நடராஜன் பாண்டு வாத்தியங்கள் முழங்க நடைபவனியாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சமூகத்தினால், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு அழைத்து வரப்பட்டு ஐயாத்துரை மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வுகள் நடைபெற்றது.

கல்வி சமூகத்திற்கு பணியாற்றி தனது அறுவதாவது வயதில் ஓய்வு பெறும் எம்.பி.நடராஜனை கௌரவிக்கம் முகமாக 'நடராஜ மகுடம்' என்ற மணிவிழா நூல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா கல்வியல் கல்லூரியின் பீடாதிபதி க.சுவர்ணராஜா, முன்னாள் தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. அன்ரன் சோமராஜா, வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.அன்னமலர், ஆசிரியர் தமிழருவி சிவகுமாரன், அதிபர் த.அமிர்தலிங்கம் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## வியாபார நிலையத்திற்குள் திருடிய இருவர் மடக்கிப் பிடிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து திருடிய இருவரை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் வவுனியா பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா - மன்னார் வீதியில் உள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள பழ விற்பனை நிலைய உரிமையாளர் தனது கடையை திறந்து விட்டு அருகில் இருக்கும் கடைக்கு சென்றிருந்த வேளை, குறித்த பழ விற்பனை நிலையத்திற்குள் புகுந்த இருவர் அங்கிருந்த காசுப் பெட்டியை திறந்து பணத்தை திருடியுள்ளனர். இதனை அப்பகுதியில் நின்றவர்கள் அவதானித்ததும் குறித்த திருட்டில் ஈடுபட்ட இருவரும் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றனர். அங்கு ஒன்று கூடிய குறித்த இருவரையும் மடக்கிப் பிடித்தனர். வவுனியா பொலிசாரின் தமிழ் மொழி மூல முறைப்பாட்டு பிரிவுக்கு தொலைபேசி மூலம் வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தெந்த பொலிசார் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர். குறித்த நபர்கள் இருவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் நீர்கொழும்பு மற்றும் வவுனியா கொக்குவெளி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்களிடம் இருந்து கூரிய கத்தி மற்றும் கடவுச் சீட்டு உள்ளிட்டவையும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

கடை உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து வவுனியா பெலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியாவில் அடாத்தான முறையில் ஆசிரியையிடமிருந்து மோட்டார் வண்டி அபகரிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் லீசிங் முறையில் மோட்டார் வண்டி ஒன்றை வாங்கியிருந்த ஆசிரியை ஒருவரிடமிருந்து அடாத்தான முறையில் அவ் வண்டியை லீசிங் நிறுவனத்தினர் பறித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பண்டாரிக்குளத்தில் வசித்துவரும் ஆசிரியை ஒருவர் லீசிக் என்ற நிறுவனத்தில் தவணை முறையில் பணம் செலுத்தி மோட்டார் வண்டி ஒன்றை கொள்வனவு செய்திருந்தார். ஒழுங்கான முறையில் பணம் செலுத்தி வந்த நிலையில் இறுதியாக செலுத்த வேண்டிய ஏழு ஆயிரம் ரூபா தவணை பணத்தை செலுத்த தவறிய நிலையில், இன்று மாலை 6.00 மணிக்கு ஆசிரியையின் வீட்டிற்கு சென்ற நபரொருவர் தனது மகளுக்கு பிரத்தியோக வகுப்பு எடுக்க வேண்டும் என தெரிவித்து வவுனியா நகருக்கு ஆசிரியயை அழைத்து சென்று மோட்டார் வண்டியை பறிமுதல் செய்ததுடன் குறித்த ஆசிரியயை தகாத வார்த்தை பிரயோகத்தின் மூலம் திட்டியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட ஆசிரியை குறித்த நிறுவனத்தில் தவணை முறைப்பணத்தை ஒழுங்காக செலுத்திவந்த நிலையில் பணம் முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது இனி உங்களுக்கு மோட்டார் வண்டியின் புத்தகம் நிறுவனத்தால் வழங்கப்படும் என தெரிவித்திருந்தனர். ஆறு மாதங்கள் கடந்த நிலையில் திடீரென நீங்கள் 40 ஆயிரம் ரூபா பணம் செலுத்த வேண்டும் என தெரிவித்து இன்று என்னை ஏமாற்றி அடாத்தான முறையில் எனது வண்டியை அபகரித்துள்ளனர் இது சம்பந்தமாக வவுனியா பொலிஸ் நிலையதில் முறைப்பாடு செய்துள்ளேன் என தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணையை வவுனியா பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த வேண்டும்

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் போதைப்பொருளிற்கு அடிமையாகி வருவதாக கிளிநாச்சி மாவட்ட உளநல மருத்துவர் வைத்தியர் ஜெயராஜா தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போதைப் பொருள் பாவனையில் மாணவர்கள் அதிகம் ஈடுபடுவது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து குறித்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே வைத்தியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநாச்சி மாவட்டத்தின் நகர் புற பாடசாலைகள் சிலவற்றிற்கு அண்மை நாட்களாக சென்று போதைப்பொருள் பாவனை தொடர்பிலான விழிப்புணர்வு செயற்திட்டங்களை முன்னெடுக்கப்பட்டபோது, குறித்த விழிப்புணர்வு கருத்துக்களை மாணவர்களிற்கு எடுத்து கூறிய பின்னர் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாணவர் மத்தியில் போதைப்பொருள் பாவனை இடம்பெற்ற வருகின்றமை தொடர்பில்தகவல்களை திரட்ட முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார். இதே வேளை போதைப்பொருள் பாவனை தொடர்பில் மாணவர் மத்தியில் ஆய்வு செய்தபோது, மாணவர் மத்தியில் போதைப்பொருட்கள் அறிமுகப்படுத்தப்படுவதாகவும், அவற்றை பெற்றுக் கொள்ள மாணவர்களிற்கு பெற்றோர் பணம் வழங்காத நிலையில், விற்பனையாளர்களாக மாற்றப்படுவதாகவும் வைத்தியர் தனது ஆய்வில் கண்டு கொண்டதாக தெரிவித்தார்.

## வவுனியா விபுலானந்தா கல்லூரியில் சாரணர்களினால் பயணிகள் நிழற்குடை திறந்து வைப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் சாரணர்களினால் பயணிகள் நிழற்குடை ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

விபுல சாரணன் தர்மசீலன் லிசாந்தன் அவர்களின் ஜனாதிபதி விருது செயற்றிட்டமாக குறித்த பயணிகள் நிழல் குடை மாணவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளது.

விபுலானந்தா கல்லூரி சாரணர் ஆசிரியர் எஸ்.தற்பரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சாரணர் ஆணையாளர் எஸ்.உலகநாதன், பாடசாலை அதிபர் பொன்.சிவநாதன், பிரதி அதிபர் ரொசன், விபுல சாரணர்களின் உயர் விருதான பேடன் பவல் விருதினையும், ஜனாதிபதி விருதினையும் பெற்றவரும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளருமான சு.காண்டீபன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ஸ்ரீதரன், கல்லூரியின் ஜனாதிபதி சாரணர்களான வி.சஜீவ்நாத், வ.பிரதீபன், யோ.சதுர்சிகன், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்ணீதிச் சங்க உறுப்பினர்கள், சாரணர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# இலக்கியமும் நடைபாதை குடும்பமும்

டீ கடையில் தான், பாலா, எனக்கு அறிமுகம்.

அவர் பக்கத்தில் அமர்ந்து, டீ குடிக்கும்போது, தற்செயலா, அவர் ஜோல்னா பையில் துருத்திக் கொண்டிருந்த பத்திரிகை ஒன்றை பார்த்தேன். அது, நான் எப்போதாவது வாசிக்கும் வார, மாத இதழ்கள் போல், வண்ணத்தில் பளபளக்கும் அட்டைப் படம் இல்லை.

கருப்பு வண்ணத்தில், குண்டு குண்டாக பத்திரிகை பெயரும், கிறுக்கலான ஓவியமும் தலைகாட்டியது, மாறுபட்டு இருந்தது.

நான், பத்திரிகை பார்ப்பதை அவர் கவனித்திருக்க வேண்டும், 'பாருங்க...' என்று, அந்த பத்திரிகையை எடுத்து கொடுத்தார்.

ஆச்சரியத்துடன், 'இல்ல... சும்மா பார்த்தேன்...'என்றேன்.

'படிக்கவும் செய்யலாம்... நல்லா இருக்கும்... இலக்கிய சிற்றிதழ்... உங்கள் பார்வையில் ஆர்வம் இருக்கு... உள்ளுக்குள் ஒரு வாசகன் இருக்கார்ன்னு தெரியுது...' என்று, எழுந்தார்.

உயரம், கழுத்தை மீறி இறங்கும் தலைமுடி, சங்கிலி கோர்த்த கண்ணாடி, மோவாயில் குறுந்தாடி, கலர் வைக்காத கதர் ஜிப்பா, கால்களில் சோலாப்பூர் செருப்பு. ஆகாயத்தை பார்த்தபடி நடந்து, பார்வையிலிருந்து மறைந்தார்.



வேலை முடித்து வீடு திரும்பியதும், அந்த பத்திரிகையை புரட்டினேன். மொத்தம், 40 பக்கங்கள். நிறைய கட்டுரைகள், கதைகள், கவிதைகள், விமர்சனங்கள். ஒரு கட்டுரையை படிக்க ஆரம்பித்தேன்; பயம் வந்து விட்டது.

'வழக்கொழிந்த நுண்ணிய கருத்தாழக் கருதுகோள்களின் விழுமியங்களை மீட்டெடுக்கும் முகமாக பிராந்திய நுண்ணோக்கர்களின் ஆதி கருதுகோளுடன்...' என்று துவங்கிய அந்த கட்டுரையை, மேற்கொண்டு படிக்க முடியவில்லை.

தமிழ்தானா, வேறு மொழியோ என்று சந்தேகம் வந்தது. பாலாவிடம் புத்தகத்தை திருப்பி தரும்போது, ஏதாவது பேச வேண்டுமே என்று, சிலவற்றை படித்தேன்.

அதில், வட்டார வழக்கில் இரண்டு சிறுகதைகளில், ஒன்று பரவாயில்லை. கவிதைகள், சிலந்தி வலைகள். கொட்டாவி வந்தது.

மறுபடி அவரை பார்த்தபோது, புத்தகத்தை திருப்பி கொடுத்து, 'தேநீர் கடைக்கு சென்றேன். தேநீர் குடித்தேன்... என்பதை கூட, ஏதேதோ சொற்களை போட்டு, முன்னும் பின்னும் புரட்டி, படிக்கிறவன சிரமப்படுத்தணுமா... எதற்கு இந்த சிடுக்கு மொழி... எழுதியவருக்காவது புரியுமா...' என்று கேட்டேன்.

'இது, சராசரி வாசகனுக்கானது இல்லை... படிப்பவனை, அவன் ரசனையை, சிந்தனையை ஒரு படி உயர்த்துவதற்கான முயற்சி. இதை வாசிக்க, வாசகன் தன்னை தயார் செய்து கொள்ள, பயிற்சி எடுக்க வேண்டும். அதற்கான தகுதி, ஆர்வம் உங்களிடம் தெரிகிறது. இவைகளையும் படியுங்கள்...; என்று, மேலும் இரண்டு பத்திரிகைகள் மற்றும் புத்தகம் கொடுத்தார்; மறுக்க முடியவில்லை.

ஒருநாள் வந்து, ஒரு கூட்டத்துக்கு அழைத்து போனார்.

பள்ளிக்கூட வகுப்பறையில் தான், அந்த இலக்கிய கூட்டம்.

விரல் விட்டு எண்ணும் அளவுக்கு தான் ஆட்கள். டீயும், இரண்டு பிஸ்கட்டும் கிடைத்தது. ஏதோ பேசினர்.

என்னை பற்றி, 'ஆர்வமான இளைஞர், இலக்கிய நடை குறித்து கேள்வி கேட்கிறார். இவர், ஒரு காத்திரமான, ஆளுமையான விமர்சகராக வருவதற்கு அறிகுறி தெரியுது...' என்றார், பாலா.

அங்கிருந்தோர் திரும்பி பார்க்க, அரை நொடி குனிந்து கொண்டேன்.

கூட்டம் எப்போது முடியும் என்று தோன்றியது.

கூட்டம் முடிந்ததும், 'பார்ப்போம்!' என்று வழியனுப்பி, மற்றவர்களுடன் வேறு திசையில் போனார், பாலா.

'என்ன பார்க்கறீங்க... அவங்க, உ.பா., அருந்த போகின்றனர்... உண்மையான இலக்கிய விவாதம், 'பாரி'ல் வைத்து தான்... அனல் பறத்தும்...' என்று, சொல்லி வந்தார், ஒருவர்.

அடுத்து வந்த நாட்களில், பாலாவை பார்க்க முடியவில்லை. இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்க, தஞ்சை, கும்பகோணம், மதுரை என்று, சுற்றுப் பயணம் சென்றிருப்பதாக கூறினர். மிகப்பெரிய இலக்கிய ஆளுமையின் தோழமை தான், நமக்கு கிடைத்திருக்கிறது என்று, எனக்கு கொஞ்சம் பெருமை தான்.

என் திறனை வளர்த்துக் கொள்ள, அவர் கொடுத்த பத்திரிகை மற்றும் புத்தகத்தை படித்தேன். படித்ததைத் திருப்பிக் கொடுக்க, அவரை பார்க்க முடியாததால், அவர் முகவரி தெரிந்து, வீட்டிற்கு போனேன்; திகைத்தேன். அந்த வீடு, வீடாக இல்லை. எந்நேரமும் இற்றுவிடும் போல் பயமுறுத்தியது. வறுமை தாண்டவமாடியது.

உள்ளே ஒரு குழந்தை, காய்ச்சலில் கிடந்தது. இன்னொன்று, பசிக்கு அழுதது. கதவை திறந்த அம்மாள், இறுகிய முகத்துடன் புத்தகங்களை வாங்கி, 'அவரை பார்த்தீங்கன்னா, ஒருமுறை வீட்டு பக்கம் வந்து போகச் சொல்லுங்க...' என்று கதவை மூடினார்.

'அம்மா... ஒரு நிமிஷம்...' என்றேன்.

மூடிய கதவு திறந்து, என்ன என்பது போல் பார்க்க, 'நான், அவரை, அவர் எழுத்துக்களை பார்த்து பிரமிச்சேன். வீடும், இலக்கியம் போல் அழகா இருக்கும்ன்னு ஒரு கற்பனை இருந்தது. ஆனால், இங்கே நான் பார்ப்பது... அதிர்ச்சியா இருக்கு...'என்றேன்.

கசப்பாக புன்னகைத்து, 'உன் குடும்பத்துக்கு, நீயாவது நேர்மையா இரு தம்பி... எழுத்தும், இலக்கியமும் தப்பில்லை... ஆனால், அது ஒரு போதையாகி, குடும்பத்தை மறக்க வைக்கும் அளவுக்கு போகக் கூடாது... இவரது எழுத்து மோகத்தை ஒரு தகுதியா நினைச்சு தான் கழுத்தை நீட்டினேன்...

'எழுதறவங்க எல்லாம் குடும்பத்தை நல்லா வச்சிருக்காங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்... இவரும் அப்படி நடந்துக்குவார்ன்னு நம்பினேன்... ஆனால், வீடு, அவருக்கு கசக்குது... கடமைன்னு ஒண்ணு இருக்கறதையே மறந்துட்டார்... இப்படியான ஆட்கள், கல்யாணம் செய்துக்காமல் இருக்கலாம்... எல்லாம் எங்க தலைவிதி...'என்றாள்.

சில நாள், கனத்த மனதுடன் அவதிப்பட்டேன். பாலாவை தேடினேன். புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி ஒன்றில் முழங்கிக் கொண்டிருந்தார்.

வெளியில் வந்ததும், தோளில் கை போட்டு, 'நான் கொடுத்ததை படிச்சியா...'என்று கேட்டார்.

'பழகிய உரிமையில் கேட்கிறேன்... உங்களுக்கு என்ன வருவாய், குடும்பம் ஏன் அப்படியிருக்கு, அவர்களை கவனிக்க வேண்டியது முதல் கடமையல்லவா... இங்கே, குழந்தை காய்ச்சலில் இருக்கும்போது, உங்களால் எப்படி கும்பகோணத்தில் பேச முடிகிறது... தப்பில்லையா...' என்று கேட்டேன்.

'வருமானத்துக்காக இலக்கியம் பண்றவன் நான் இல்லை. இலக்கியத்துக்கு நேர்மையா இருக்க நினைக்கிறேன். ஒருவன், கொள்கையோடு இருந்தால், அவனை சார்ந்தவர்கள் பாதிப்படைவது தவிர்க்க முடியாது...' என்று, மது வாடையுடன், சொன்னார்.

'உங்கள் பொறுப்பின்மையை நியாயப்படுத்தாதீங்க சார்... உங்களை விடவும் நல்லா எழுதி, வெற்றிகரமாக இருக்கிறவங்க, தன் குடும்பத்தை நல்லாவே கவனிச்சுக்கறாங்க... வீட்டை கவனிக்க முடியாம, விடுதலைக்கா போராடிக்கிட்டுருக்கீங்க...

'வீடு அமைதியா, நிம்மதியா இருந்தால் தானே சார், ஒரு படைப்பாளிக்கு சிந்தனை நல்லா வரும்... இப்படி நான் பேசறேனேன்னு என்னை தப்பா எடுத்துக்காதீங்க... உங்க எழுத்து வேலைகள் ஒருபுறம் இருக்கட்டும், வீட்டு தேவைக்காக, எங்காவது பகுதி நேர வேலை பார்க்கலாமே...' என்றேன்.

என் பேச்சை அவர் விரும்பவில்லை என்பதை, முகச்சுழிப்பில் காட்டி, நகர்ந்தார்.எனக்கு முன், ஒரு நடைபாதை குடும்பம்... குழந்தைகள், பசிக்கு அழுது, தாய்க்காரியை நச்சரிக்க, அவர்களை சமாதானப்படுத்த முடியாமல், 'எங்கே போனாரோ மனுஷன்...' என்று புலம்பிக் கொண்டிருக்கும்போதே, ஒருவன் வேகமாக வந்தான். அவன் கையில் சாப்பாட்டு பொட்டலங்கள். 'இன்னா லேட்டு...' என்று கேட்டுக் கொண்டே பொட்டலங்களை பிரிக்க..

'நாளைக்கு, எங்க, என்ன வேலைன்னு மேஸ்திரியாண்ட கேட்க போனேன்...' என்றபடி, குழந்தைகளை அள்ளி மடியில் அமர்த்தி, சாப்பாட்டை ஊட்டியபடி, இடையிடையே அவனும் சாப்பிட்டான்.

குழந்தைகளை தன் பக்கம் இழுத்து, 'நீ துண்ணுய்யா... இதுகளுக்கு நான் ஊட்றேன்...' என்றாள், அவள். சாப்பாட்டு வாசனையுடன், அங்கே நேசமும் கலந்து, மணந்தது.

பாலா போன வழியை திரும்பிப் பார்த்தேன். இந்த குடும்பத்தையும் பார்க்கிறேன். எனக்கென்னவோ இந்த நடைபாதைவாசிகளின் வாழ்க்கை தான், உண்மையான இலக்கியம் என்று பட்டது.

அடுத்து வந்த நாட்களில், பாலாவை டீக்கடையில் பார்த்தேன், பேசினேன். ஆனால், அவர் ஜோல்னா பையை எட்டிப் பார்ப்பதில்லை, அவரும் கொடுப்பதில்லை.

**எஸ்.சங்கமேஸ்வரன்**

# தேசிய கொடியின் முக்கியத்துவம்

சுதந்திர தினமான இன்று எமது தேசிய கொடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த எமது தேசத்துக்கு 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் கிடைத்தது. அடிமைத்தனத்தில் இருந்து எமது தேச மக்களுக்கு விடுதலை கிடைத்தது. அன்றைய தினம் தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மக்கள் அனைவரும் தேசியக் கொடியினை, தம் வீடுகளிலும், வேலைத் தலங்களிலும், பொது இடங்களிலும், பாடசாலைகளிலும் பறக்கவிட்டு மரியாதை செய்கின்றனர்.

இன்று 70வது சிதந்திரதினத்தில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கம்பீரமாக தேசியக் கொடி பறப்பதனை அவதானிக்க முடிகின்றது ஒரு நாட்டில் பெருமையை பறைசாற்றும் சின்னமாக தேசியக் கொடி மதித்து கௌரவிக்கப்படுகிறது. தேசியக் கொடியை ஏற்றும் போதும் அதனை கம்பத்திலிருந்து இறக்கும் போதும் ஒரு நாட்டில் தலைவருக்கு கொடுக்கப்படும் அதே அளவு மரியாதை தேசிய கொடிக்கு கொடுக்கப்படுகிறது. நாட்டின் முக்கிய உத்தியோகபூர்வ நிகழ்வுகளின் போது தேசியக் கொடி சகல அரசாங்க கட்டடங்களிலும் கம்பீரமாக பறக்கவிடப்படுகிறது. பலவகையான கொடிகளை ஒரு இடத்தில் பறக்கவிடும் போது அவற்றை விட சற்று உயரத்தில் தேசியக் கொடி பறக்கவிடப்பட வேண்டும்.

1972ம் ஆண்டில் இலங்கை ஒரு ஜனநாயக குடியரசாக மாற்றமடைந்த போதும் 1978ம் ஆண்டில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட போதும் எமது நாட்டின் தேசியக் கொடியில் எவ்வித குறிப்பிடத்தக்க மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய இராச்சியத்திடமிருந்து இலங்கை விடுதலை அடையும் வேளையில் இலங்கைக்கு நாட்டு கொடிக்கான தேவை ஏற்பட்டது. அதுவரை பிரித்தானிய ஒன்றியக் கொடியே இலங்கை கொடியாக இருந்து வந்தது. விடுதலையின் போது இலங்கையின் பிரதமராக இருந்த டி. எஸ். சேனாநாயக்க இலங்கையின் கடைசி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கனின் சிவப்பு நிறப் பிண்ணணியில் மஞ்சள்நிற போர் வாளேந்திய சிங்கக்கொடியானது சுதந்திர இலங்கையை குறிக்கும் சிறந்த கொடியாக அமையும் என தேர்வு செய்தார். எனினும் அக் கொடியில் தங்கள் இனத்துவங்களை பிரதிபலிக்கும் அடையாளங்கள் ஏற்படுத்த வேண்டும் என தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.

சில நாட்களின் பின் தேசிய கொடியில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, ஜீ. ஜீ. பொன்னம்பலம், ஜே.எல். கொத்தலாவல, டி.பி. ஜாயா, எல்.ஏ. ராஜபக்ச, எஸ். நடேசன், ஜே. ஆர். ஜயவர்தன என்போர் அடங்கிய நாடாளுமன்றக்குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய தேசிய கொடியில் சமஅளவு அகலம் கொண்ட மஞ்சள், பச்சை நிறமான இரண்டு நிலைகுத்தான பட்டைகள் உருவாக்கப்பட்டது.

**என்.ஹரன்**

இலங்கையின் தேசியக்கொடி மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன. கொடியின் பெரும்பகுதியை அடக்கியுள்ள மற்றப்பகுதி கருஞ் சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது. செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும், பச்சை நிறப் பட்டை முஸ்லீம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ் சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது அத்துடன் பௌத்த மதத்தைக் குறிக்கும் வகையில் நான்கு அரசிலைகள் கொடியின் நான்கு முலைகளிலும் இணைக்கப்பட்டது. இக்கொடியே தற்போது இலங்கையில் பயன்பாட்டில் உள்ளது

இலங்கையின் இன்றைய தேசியக்கொடி பின்வரும் சிறப்பம்சங்களை உடையதாகும்.

சிங்கம் - உடல் வலிமையும், மனோ வலிமையும் மிக்கது. தனக்குப் பொருத்தமற்றதைச் செய்யாது ,வாள்- அநீதிக்கு எதிரான போராட்டம். அரச இலைகள் நான்கு-மெத்தா -ஒற்றுமையை பலப்படுத்தல்.கருணா-துன்பத்திலிருந்து மீட்சி பெறல். முதிதா - பிறரிடம் அனுதாபம் காட்டுதல். உபேக்கா - எளிமையும் சகிப்புத்தன்மையும். சிவப்பு நிறம் - சமத்துவம் மிக்க சமுதாய அமைப்பினை உருவாக்குதல்.மஞ்சள் நிறம் - அறிவு, சமாதானம், அகிம்சை,சத்தியம்,தர்மம் என்பவற்றை வெளிப்படுத்தல். செம்மஞ்சள் நிறம் - சிறுபான்மைத் தமிழர்.பச்சை நிறம் - சிறுபான்மை முஸ்லிம்கள் போன்ற சிறப்பம்சங்களை உடையதாகும்.

1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதியன்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அன்று இலங்கையின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கவின் கொடி ஏற்றப்பட்டு பிரிட்டிஷ் கொடி இறக்கப்பட்டமை எமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது. இத்தனை சிறப்புவாய்ந்த தேசியக் கொடியானது ஒரு தேசியத் தலைவரின் மரணம் அல்லது இயற்கை அனர்த்தத்தினால் நாட்டில் ஏற்படும் மனித அழிவின் போது தேசத்தின் சோகத்தை காண்பிக்கும் முகமாக தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும்.

முக்கிய நிகழ்வுகளின் போது தேசியக் கொடியை பயன்படுத்திய பின்னர் அவற்றை மிகவும் பாதுகாப்பாக இறக்கி நெறியாக மடித்து வைக்க வேண்டும். அடுத்த தேசிய நிகழ்வுகள் நடைபெறும் தினத்தில் அல்லது முக்கிய நிகழ்வுகளில் மாத்திரம் கம்பங்களில் பறக்க விட வேண்டும். தேசிய கொடியை தலைகீழாக கவனக்குறைவின் நிமித்தம் கட்டுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, இலங்கை சட்டப்படி ஒரு தண்டனைக்குரிய சட்டமாக கருதப்படுகிறது.

தேசியக் கொடியை பறக்கவிடும் போது அதன் ஒரு பகுதி தரையில் படுவதையோ வேறு ஏதாவது ஒரு பொருளின் மீது விழுவதையோ தடுக்க வேண்டும். இவ்விதம் தேசியக் கொடியை கட்டுவதும் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். அது போல் தேசியக் கொடிகளை அச்சிடும் போது அச்சகங்கள் அதன் இயற்கையான வர்ணங்களை மாற்றிவிடாமலும் அவதானமாக இருக்க வேண்டும். தேசியக் கொடியை பாதைகளின் வீதியின் குறுக்கே கட்டுவதும் அதனை அவமதிக்கும் செயலாக கருதப்படும்.

1951ம் ஆண்டிலும் 1972ம் ஆண்டிலும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கத்தின் கொடியில் சில திருத்தங்களை மேற்கொண்டு அதில் சிறுபான்மை சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய வகையில் சில வர்ணங்கள் எங்கள் தேசியக் கொடியில் சேர்க்கப்பட்டுள்ளன. சிலர் தேசியக் கொடியை பொலிதீனில் அச்சிட்டு தேசிய வைபவங்களின் போது தெருத்தெருவாக கட்டிவிடுவதுண்டு. அந்த வைபவம் முடிவடைந்த பின்னர் ஒருவருமே அவற்றை அகற்றிவிடவேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. இறுதியில் கொடிகள் வீதியில் அநாதரவாக விழுந்துவிடும் போது அவற்றை பலரும் பொருட்படுத்தாமல் மிதித்து செல்கின்ற வேதனைக்குரிய சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஆகவே, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தேசிய கொடியை அவமதிக்கக்கூடிய வகையில் அவற்றை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளின் போது இலங்கையின் தேசியக் கொடி மாத்திரமின்றி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் தேசியக் கொடிகள் தரக்குறைவான முறையில் பயன்படுத்துவதுண்டு. சில பெண்கள் தேசியக் கொடியை பயன்படுத்தி ஆடைகளை தைத்து விடுவதுண்டு. வேறு சிலர் ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் ஆரவாரம் செய்யும் போது தேசியக் கொடியை மடியில் கட்டிக்கொண்டு ஆடுவதும் அப்பொழுது அந்தக் கொடி நழுவி கீழே விழும் சம்பவங்கள் நடைபெறுவதும் இப்போது அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

இனிமேல் நாட்டின் சுதந்திரத்தின் சின்னமாக விளங்கும் தேசியக் கொடியை கௌரவிக்கக்கூடிய நற்பண்புகளை இப்போது பாடசாலைகளில் அறிவுறுத்துவதற்கான திட்டங்களை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.



# மலையாளத்தில் ஜெய்

ஜெய் நடிப்பில் தமிழில் 'பார்ட்டி', 'நீயா 2' ஆகிய படங்கள் வெளிவரத் தயாராக இருக்கும் சூழலில், 'அறம்' இயக்குநர் கோபி நயினார் அடுத்து இயக்கிவரும் புதிய படத்திலும் கவனம் செலுத்தி வருகிறார் ஜெய். இந்நிலையில் மம்மூட்டியுடன் இணைந்து 'மதுர ராஜா' என்ற மலையாளப் படத்திலும் நடிக்கத் தொடங்கியுள்ளார். இது ஜெய் நடிக்கும் முதல் மலையாளப் படம்.

மம்மூட்டி, ஜெய் உள்ளிட்டோர் சம்பந்தப்பட்ட காட்சிகளுக்கான படப்பிடிப்பு தற்போது தொடங்கியுள்ளது.

இப்படத்தில் அனுஶ்ரீ, மஹிமா நம்பியார், பூர்ணா ஆகிய மூவரும் நாயகிகளாக நடிக்கின்றனர்.



சந்திரபாபு வேடத்தில் நடிக்க பிரபுதேவாவிடம் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

பிரபுதேவா நடிப்பில் சமீபத்தில் ரிலீஸான படம் 'சார்லி சாப்ளின் 2'. ஷக்தி சிதம்பரம் இயக்கிய இந்தப் படத்தில், நிக்கி கல்ரானி மற்றும் அதா சர்மா என இரண்டு ஹீரோயின்கள் நடித்தனர். அம்ரிஷ் இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

'யங் மங் சங்', 'தேள்', 'பொன் மாணிக்கவேல்' ஆகிய படங்கள் தற்போது பிரபுதேவா கைவசம் உள்ளன.

மேலும், மோகன்லால் உள்பட நிறைய நட்சத்திரங்கள் நடிப்பில் உருவாகிவரும் 'மரக்கார்: அரபிக்கடலிண்டே சிம்ஹம்' மலையாளப் படத்திலும் நடித்து வருகிறார்.

தற்போது சல்மான் கானை வைத்து 'தபாங் 3' என்ற இந்திப் படத்தையும் இயக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் பிரபுதேவா.

ஹீரோயினாக சோனாக்ஷி சின்ஹா நடிக்கிறார்.

இந்நிலையில், நடிகர் சந்திரபாபு வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்படும் படத்தில், சந்திரபாபு வேடத்தில் நடிக்க பிரபுதேவாவிடம் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

# பெ… இ…

பெ… குநர் பட… மான பட… இயக்குந… அல்லது … அமைகிற… வாழ்க்கை… படி என்… உருவாக்… றிலும் ஒ… (90 ML) … அனிதா … குறித்து …

**நீங்கள்… நினைத்த… வுறுத்துவ…**

இங்… வாழ முடி… செய்றாங்… ஒரு குறி… வதால் ப… ால்வதில்… அவர்கள்…

# சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்

சர்வதேச திரைப்பட விழாக்களில் கவனம் ஈர்த்து வருகிறது இயக்குநர் வஸந்தின் 'சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்' திரைப்படம்.

இயக்குநர் வஸந்தின் 'சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்'

திரைப்படம் மும்பை திரைப்பட விழாவுக்கு பிறகு 23-வது கேரள சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு, பாராட்டுகளைக் குவித்தது. தற்போது ஸ்வீடனில் நடக்கும் சர்வதேச திரைப்பட விழாவில் தேர்வு செய்யப்பட்டு வெளியாகியுள்ளது

இதற்கிடையில், புனேயில் கடந்த வாரம் நடந்த சர்வதேச திரைப்பட விழாவிலும் வெளியாகி பார்வையாளர்கள் மத்தியில் பாராட்டுகளைப் பெற்றது

இத்திரைப்படத்தில் பார்வதி, லட்சுமி ப்ரியா சந்திரமவுலி, காளீஸ்வரி சீனிவாசன், கருணாகரன், 'மயக்கம் என்ன' சுந்தர், கார்த்திக் கிருஷ்ணா, மாரிமுத்து, மாஸ்டர் ஹமரேஷ், நேத்ரா என பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். என்.கே.ஏகாம்பரம் - ரவிசங்கரன் ஒளிப்பதிவு செய்ய, ஶ்ரீகர் பிரசாத் எடிட்டிங் செய்துள்ளார். இத்திரைப்படத்தில் பின்னணி இசை இல்லாதது மும்பை திரைப்பட விழாவில் பெரிதும் பாராட்டு பெற்றது. எழுத்தாளர்கள் அசோகமித்திரன், ஆதவன், ஜெயமோகனின் சிறுகதைகளைக் கொண்டு திரைக்கதை உருவாக்கி, இயக்குநர் வஸந்த் எஸ்.சாய் இத்திரைப்படத்தை இயக்கி தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# ஒரு பாடலுக்கு நடனமாடும் சன்னிலியோன்

விஷால் நடித்து வரும் 'அயோக்யா' படத்தில், ஒரே ஒரு பாடலுக்கு நடனமாட சன்னி லியோன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

'சண்டக்கோழி 2' படத்துக்குப் பிறகு விஷால் நடித்து வரும் படம் 'அயோக்யா'. ஏ.ஆர்.முருகதாஸிடம் உதவியாளராகப் பணியாற்றிய வெங்கட் மோகன் இயக்கி வருகிறார். இப்படத்தின் இறுதிகட்டப் படப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதில் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாட ஒப்புக் கொண்டுள்ளார் சன்னி லியோன். முன்னதாக, தமிழில் ஜெய் நடித்த 'வடகறி' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாடியுள்ளார். அதைத் தொடர்ந்து அவர் நடனமாட ஒப்புக் கொண்டுள்ள 2-வது படம் இது.

'அயோக்யா' படத்தில் விஷாலுக்கு நாயகியாக ராஷி கண்ணா நடிக்கிறார். லைட் ஹவுஸ் மூவி மேக்கர்ஸ் நிறுவனம் பெரும் பொருட்செலவில் இதைத் தயாரித்து வருகிறது.

'விக்ரம் வேதா' சாம் சி.எஸ். இசையமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார். தெலுங்கில் வெளியான 'டெம்பர்'தெலுங்குப் படத்தின் ரீமேக் இது என்று கூறப்படுகிறது.

கோடை விடுமுறை வெளியீடாக இப்படம் வெளியாகவுள்ளது. லகரி மியூஸிக் நிறுவனம் இதன் இசை உரிமையைக் கைப்பற்றியுள்ளது.

முன்னணி ஹீரோக்களுடன் ஜோடியாக நடித்து வரும் காஜல் அகர்வால் இந்தியில் கங்கனா ரனாவத் நடித்த குயின் படத்தின் தமிழ் ரீமேக்கில் நடித்திருக்கிறார். பாரீஸ் பாரீஸ் பெயரில் இப்படம் உருவாகியிருக்கிறது. சமீபத்தில் இப்படத்தின் டீஸர் வெளியானது. அதில் ஒரு காட்சியில் காஜலுக்கு சக தோழி பாலியல் தொல்லை தரும் ஆபாச காட்சி இடம்பெற்றிருந்தது. இது ரசிகர்களை அதிர்ச்சிக்குள் ளாக்கியது. அக்காட்சிபற்றி விளக்கம் எதுவும் அளிக்காமல் தனது வேலையை தொடர்ந்து கவனித்து வருகிறார் காஜல்.

ஏற்கனவே குயின் படம் தெலுங்கில் மகாலட்சுமி பெயரில் ரீமேக் ஆகிறது. அதில் தமன்னா கதாநாயகி யாக நடிக்கிறார். அப்படத்தின் டீஸரில் அதிர்ச்சி தரும் ஆபாச காட்சிகள் இல்லாததால் காஜல் தமிழில் நடித்துள்ள இப்படத்தை தெலுங்கிலும் ரிலீஸ் செய்ய வேண்டும் என்று பலரும் ஆசை வெளியிட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் தெலுங்கில் சீதா படத்தில் நடித்து வருகிறார் காஜல். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் வெளி யிடப்பட்டது. அதைக்கண்டதும் ரசிகர்கள் மீண்டும் அதிர்ச்சியில் உறைந்தனர். பாரீஸ் பாரீஸ் படத்தில் நடித்த ஆபாச காட்சியில் கொடுத்த அதே எக்ஸ்பிரஷனை இந்த பர்ஸ்ட் லுக் புகைப்படத்திலும் காஜல் தந்திருப்பதே அதிர்ச்சிக்கு காரணம். அவருடன் பட ஹீரோவும் ஜாலியான ஒரு எக்ஸ்பிரஷன் தந்திருப்பது அதிர்ச்சிக்கு உரம் போட்டிருக்கிறது. இதுபோன்ற காட்சிகளில் நடித்திருப்பதற்கு காஜலை அவரது ரசிகர்கள் நெட்டில் வறுத்தெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.



காரர்த்தியுடன் இணைந்து ரகுல் ப்ரீத் சிங் நடித்துள்ள 'தேவ்' படம் ரிலீஸாக உள்ள நிலையில், சூர்யாவுடன் இணைந்து நடித்துள்ள 'என்ஜிகே' (நந்த கோபாலன் குமரன்) படத்தின் படப்பிடிப்பையும் முடித்திருக்கிறார் ரகுல் ப்ரீத் சிங்.

'திறமையானவர்களின் இயக்கத்தில் நடிப்பது, ஒரு நல்ல பாடம் படிப்பது போல. செல்வராகவனின் இயக்கத்தில் 'என்ஜிகே' படத்தில் நடிக்கும்போது, அந்த அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அது சிறந்த அனுபவமாக அமைந்தது. அதிலும், எனக்குப் பிடித்த பாசமான மனிதர் சூர்யாவுடன் இணைந்து நடித்ததும் மகிழ்ச்சி. 'தேவ்'படம் போலவே 'என்ஜிகே'வும் எப்போது ரிலீஸ் ஆகும் என ஆவலோடு காத்திருக்கிறேன்' என்று, படப்பிடிப்பை முடித்த குஷியில் கூறியிருக்கிறார் ரகுல்.

# 'தேவ்'வை கைப்பாற்றிய சன் டிவி



கார்த்தி நடித்துள்ள 'தேவ்' படத்தின் … யுள்ளது.

கார்த்தி நடிப்பில் உருவாகியுள்ள படம் '… இயக்கியுள்ளார். வேல்ராஜ் ஒளிப்பதிவு செ… துள்ளார். பிரின்ஸ் பிக்சர்ஸ் சார்பில் லக்ஷ்மண்… யின்மென்ட்ஸ் வெளியிடுகிறது.

கார்த்தி ஜோடியாக ரகுல் ப்ரீத்சிங் நடித்து… வது முறையாக இருவரும் இணைந்து நடித்து… ங்கின் அம்மாவாக ரம்யா கிருஷ்ணனும் நடித்…

கார்த்திக், சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்… ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடி… வாகியுள்ளது.

காதலர் தினத்தை முன்னிட்டு, பிப்ரவரி 1… படத்தின் தொலைக்காட்சி ஒளிபரப்பு மற்றும்…



# இலியானாவின் கவர்ச்சி வலை

தனது அரை நிர்வாண கவர்ச்சி படங்களை நெட்டில் வெளியிட…

சுமார் 6 வருட இடைவெளிக்கு பிறகு தெலுங்கில் கடந்த … நடனம் ஆட வந்த வாய்ப்பை இலியானா ஏற்றுக்கொண்டார். … இடத்தைபிடித்துவிடலாம் என்று எண்ணினார். அதற்காக மெ… தோற்றத்துக்கு மாற்றி கவர்ச்சியாக நடனம் ஆடினார். அப்பட… பார்ப்புகள் சிதைந்து போனது. இலியானாவின் தோற்றத்துக்கு … காரணம். இதனால் மனம் நொந்துபோனவர், சில மாதங்கள் வ… மும்பை புறப்பட்டு சென்றார். தற்போது கைவசம் படம் எதுவ… மீண்டும் தனது கவர்ச்சி படங்களை வெளியிட்டு வாய்ப்புக்கு … வப்பு பிகினி நீச்சல் உடை அணிந்து இலியானா வெளியிட்டிரு… தாக அமைந்திருந்தது.

# ...ண் நினைப்பது போல ...ங்கு வாழமுடியாது!



...ண்களை மையமாக வைத்து ஒரு ஆண் இயக் ...ம் எடுக்கும்போது அது எல்லா பெண்களுக்கு ...மாக வருவதில்லை. சரி அதையே, ஒரு பெண் ...ர் எடுக்கும்போது அது பெண்ணியம் சார்ந்தோ ... ஆண்களை குறை சொல்லும் விதமாகவோ ...து. இங்கே 80 சதவீதப் படங்களில் காட்டும் ...கயை பெண்கள் அனுபவிப்பது இல்லை. அப் ...னதான் அவர்களின் வாழ்க்கை? இந்தக் கேள்வி ...தம் புள்ளியில் இருந்து யோசித்தபோது, முற் ...ரு ஜாலியான அனுபவமாக இந்த '90 எம்.எல்' ...திரைப்படம் உருவானது! என்கிறார் இயக்குநர் ...உதீப். தொடர்ந்து அவரது பட அனுபவங்கள் ...பேசியதாவது:

**...ா சொல்வதைப் பார்க்கும்போது ஒரு பெண் தான் ... மாதிரி வாழ்க்கையை வாழ வேண்டும் என்று அறி ...துபோல இத்திரைப்படம் இருக்குமோ?**

...கே ஒரு ஆண் நினைப்பதுபோல வாழ்க்கையை ...டியும். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும் ...க. ஆனால், பெண் அப்படி வளர்வதில்லை. ...ப்பிட்ட கட்டமைப்புக்குள் பெண்கள் வளர் ...ல விஷயங்களை வெளியே அவர்களும் செ ...லை. அந்த மாதிரி விஷயங்களை உடைத்து ... நிஜ வாழ்க்கையில் என்ன நினைக்கிறாங்க? எப்படி வாழணும்னு ஆசைப்படுறாங்க? அவங்களோட ஃப்ரெண்ட்ஷிப் எப்படி இருக்கணும்? காதல், திருமண வாழ்க்கை உள்ளிட்ட எதிர்பார்ப்பு இதையெல்லாம் கருத்தாக இல்லாமல் வெளிப்படையாக சொல்கிற களம்தான் இந்த '90 எம்.எல்'.

**ஷங்கர் இயக்கிய 'பாய்ஸ்' பட பாணியில் இது பெண் கதாபாத்திரங்களைக் கொண்ட படமா?**

அது வேறு களம். அதிலும் அந்த இளைஞர்களுக்கு ஒரு லட்சியம் இருக்கும். இதில் அந்த மாதிரி லட்சியமோ அல்லது சாதனை செய்யணும் என்கிற எண்ணமோ இல்லை. ஆங்கிலத்தில் 'இன்டர்னெல் ஜேர்னி'னு சொல்வோம். அந்த மாதிரி ஐந்து பெண்கள் தங்களோட உள்ளோட்டமான விருப்பத்தை ஒரு வாழ்க்கையாக வாழணும்னு நினைப்பாங்க. அந்த பகிர்வுதான் இது. சிலருக்கு இது பிடிக்கும். சிலருக்கு பிடிக்காமலும் போகலாம். ஆனால் இதுதான் நிஜம்.

**இதில் நடிகை ஓவியாவின் பங்களிப்பு என்ன?**

ப்யூட்டி பார்லரில் வேலை பார்க்கும் துணிச்சலான ஒரு பெண்ணாக வருகிறார். அதுக்காக எல்லாவற்றுக்கும் சண்டைபோடும் நபர் இல்லை. ஒரு மிடில் கிளாஸ் அபார்ட்மென்ட் வீட்டில் வசிக்கும் 4 பெண்களை அவர் சந்திக்கிறார். தினம் தினம் தங்களுடைய எண்ணங்களை அந்த வீட்டின் மொட்டை மாடியில் நின்று ஒவ்வொருவரும் பகிர்கிறார்கள். படம் முழுக்க காமெடி, துணிச்சல், சில இடங்களில் இரட்டை அர்த்த வசனங்கள்கூட இருக்கும். எல்லோருக்குமே குடும்பப் பின்னணியும் உண்டு. இந்த சமூகத்தை அவங்களோட வாழ்க்கை வேறொரு கோணத்தில் பார்க்க வைக்கும்.

**இந்தக் களத்துக்கு ஏன் '90 எம்.எல்' என்று பெயர் வைத்தீர்கள்?**

மது அருந்தினால் உள்ளே இருப்பதை வெளியே உளறிடுவோம்னு சொல்வோம். அந்த மாதிரி ஒரு கான்சப்ட்தான் இந்தப் படம். அதை படம் பார்க்கும்போதுதான் உணர முடியும்.

**படத்துக்கு சிம்பு இசையமைத்திருக்கிறார். திருப்தியாக வந்திருக்கிறதா?**

சிம்பு என்னோட நண்பர். எனது 'குளிர் 100 டிகிரி' படத்துல 'மனசெல்லாம்'னு ஒரு பாடலை ஏற்கெனவே அவர் உருவாக்கிக்கொடுத்தார். இப்போ இப்படத்தை முழுவதும் பார்த்துவிட்டு வித்தியாசமான கான்சப்ட். நிச்சயம் பேசப்படும்னு சொல்லிட்டு இசை வேலைகளை செய்ய முன்வந்தார். 4 பாடல்கள். படத்தில் அவரது பின்னணி இசை ரொம்பவே ஈர்க்கும்.

**அனிதா உதீப் எப்படி 'அழகிய அசுரா' ஆனாங்க?**

'விசில்' படத்துல வர்ற 'அழகிய அசுரா' பாடலை பாடியது நான்தான். முதலில் என்னோட சினிமா கேரியர் பின்னணி பாடகியாகத்தான் தொடங்கியது. அப்படியே சினிமா கிரியேட்டராக வளர்ந்தாச்சு. யாரிடமும் உதவியாளராக இருந்ததில்லை. கதை எழுதுவது பிடித்த வேலைன்னு வந்துட்டேன். இனி பாடகி, இசையமைப்பாளர், இயக்குநர்னு பல விதங்களில் கவனம் செலுத்தலாம்னு இருக்கேன். அதுக்காக 'அழகிய அசுரா' ஒரு அடையாளமாக இருக்கும்னு தோணுச்சு. அதான்.



...தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை, சன் டிவி கைப்பற்றி

...தேவ்'. அறிமுக இயக்குநரான ரஜத் ரவிசங்கர் இந்தப் படத்தை ...ப்துள்ள இந்தப் படத்துக்கு, ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத் ...ா குமார் இந்தப் படத்தைத் தயாரிக்க, ரிலையன்ஸ் என்டெர்டெ

...ள்ளார். 'தீரன் அதிகாரம் ஒன்று'படத்தைத் தொடர்ந்து இரண்டா ...ள்ளனர். கார்த்தியின் அப்பாவாக பிரகாஷ் ராஜும், ரகுல் ப்ரீத்சி ...துள்ளனர்.

...ளார். வம்சி கிருஷ்ணா, ரேணுகா, ஆர்.ஜே. விக்னேஷ்காந்த் ...ந்துள்ளனர். ஆக்ஷன் அட்வெஞ்சர் த்ரில்லர் படமாக இது உரு

... 4-ம் தேதி இந்தப் படம் ரிலீஸாக இருக்கிறது. இந்நிலையில், ... டிஜிட்டல் உரிமைகளை சன் டிவி கைப்பற்றியுள்ளது.



இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் என் எஜமானர்கள் என்று 'பாண்டி முனி' படம் குறித்துப் பேசும்போது ஜாக்கி ஷெராப் குறிப்பிட்டார்

கஸ்தூரி ராஜா இயக்கத்தில் ஜாக்கி ஷெராப் உள்ளிட்ட பலர் நடித்து வரும் படம் 'பாண்டி முனி'. இப்படத்தில் அகோரி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் ஜாக்கி ஷெராப். 'ஆரண்ய காண்டம்', 'மாயவன்' ஆகிய படங்களைத் தொடர்ந்து தமிழில் 'பாண்டி முனி' படத்தில் நடித்துள்ளார் ஜாக்கி ஷெராப்.

அகோரி கதாபாத்திரத்தில் நடித்துள்ளது குறித்து ஜாக்கி ஷெராப் கூறியிருப்பதாவது:

'இயக்குநர் கஸ்தூரி ராஜா இக்கதையைச் சொன்னவுடன் இது எனக்குப் புதிதாக இருக்கும் என்று தான் ஓ.கே. சொன்னேன். இதுவொரு புதுமையான கதைக்களம். என் உருவத்தை மட்டுமல்ல, என் நடை உடை பாவனை எல்லாவற்றையுமே இது மாற்றும் படமாக இருக்கும். இயக்குநர் என்ன சொன்னாரோ, அதை அப்படியே உள்வாங்கி நடித்துள்ளேன். சிவபக்த அகோரியாக நடித்துள்ளேன்.

நல்லது செய்யும் முனீஸ்வரன் என்ற அகோரிக்கும், எல்லோரையும் அழிக்க நினைக்கும் பாண்டி என்கிற பேய்க்கும் நடக்கிற போராட்டம் தான் இப்படத்தின் கதை. அகோரி என்றால் ஆ...ஊ என்று கத்தி கலாட்டா செய்யும் அகோரி வேடமல்ல. அமைதியால் எதையும் வெல்ல முடியும் என்கிற சிவ பக்த அகோரி வேடம்.

நான் அடிக்கடி சென்னை வருவேன். 80-ம் வருட நடிகர் நடிகைகள் சந்திப்பு நடக்கும் போதெல்லாம் வருவேன். ஒவ்வொரு நடிகர் நடிகையும் அவரவர் வீட்டிலிருந்து இட்லி, சாம்பார், ரசம் என்று எடுத்து வந்து பரிமாறி அசத்தி விடுவார்கள். ரேவதி, ராதிகா எல்லாம் எனக்கு நல்ல நண்பர்கள்.

தற்போது நிறையப் பேர் என்னிடம் சில நடிகைகளின் பெயர்களைச் சொல்லி அவர் எப்படி நடனம் ஆடுகிறார் என்று கேட்கிறார்கள். அவர்கள் பேர் எல்லாம் எனக்கு தெரியாது. நான் நிறைய படங்களைப் பார்ப்பது கிடையாது.

என்னைப் பொறுத்தவரை இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் தான் என் எஜமானர்கள். ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி அதில் என்னை உள்ளே கொண்டுவந்து அதற்கு சம்பளம், உடை ,சாப்பாடு கொடுப்பவர்களை என்றைக்கும் நான் மறக்க மாட்டேன்'.

இவ்வாறு ஜாக்கி ஷெராப் கூறினார்.



## அஜித்துடன் நடிப்பது மகிழ்ச்சி

அஜித்துடன் நடிப்பதில் மிக்க மகிழ்ச்சி எனத் தெரிவித்துள்ளார் நடிகை ஸ்ரத்தா ஸ்ரீநாத்.

எச்.வினோத் இயக்கத்தில் தற்போது நடித்து வருகிறார் அஜித். இந்தியில் வெளியான 'பிங்க்' படத்தின் ரீமேக் இது. இன்னும் பெயரிடப்படாத இந்தப் படத்தில், அஜித்துக்கு ஜோடியாக வித்யா பாலன் நடிக்கிறார். வித்யா பாலன் நடிக்கும் முதல் தமிழ்ப்படம் இது.

மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார். ஸ்ரத்தா ஸ்ரீநாத், ரங்கராஜ் பாண்டே, இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இந்தப் படத்தில் நடிப்பது குறித்து ட்விட்டரில் தன்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்துள்ளார் ஸ்ரத்தா ஸ்ரீநாத்.

அஜித் குமாரின் அடுத்த படத்தில் நான் நடிக்கவிருப்பதாக சில வதந்திகளும் யூகங்களும் நிலவின. இன்று அந்த வதந்திகள் உண்மையாகிவிட்டன என்பதைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அற்புதமான படத்தில் நானும் பங்காற்றுகிறேன்.

நான் இந்தப் படத்தில் நடிக்கிறேனா? எனப் பலர் கேட்டனர். அவர்களிடம் மவுனம் காத்தது மிகவும் கடினமாக இருந்தது. இப்போது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆர்வமும் பதட்டமும் கலந்துள்ளது. அஜித்துடன் நடிப்பதில் மிக்க மகிழ்ச்சி. இதுவரை நான் நடித்ததில் மிகச் சவாலான கதாபாத்திரமாக இது இருக்கும் என்பதையும் நான் நம்பிக்கையுடன் கூற முடியும்.

எச். வினோத் இயக்கத்தில், போனி கபூர் தயாரிக்கிறார். நீரவ் ஷா ஒளிப்பதிவு, யுவன் சங்கர் ராஜா இசை... இப்படியான அணியுடன் நடிக்க ஒருவர் ஆசைப்பட மட்டுமே முடியும். அற்புதமான தொழில்நுட்பக் கலைஞர்களுடன் பணியாற்றுவதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக, இந்தப் படம், இந்தக் கதை அனைவரும் பார்க்கவேண்டிய ஒன்று. இன்றைய சூழலில் தேவையான ஒன்று. பெரும் மக்கள் கூட்டத்தை இது சென்றடைவது மிக முக்கியம். முழு அர்ப்பணிப்புடன் நடிக்க இதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

நான் எனது வேனில் இப்போது உட்கார்ந்து அனைத்து வாழ்த்துச் செய்திகளையும் படித்துக் கொண்டிருக்கிறேன். எனக்காக சந்தோஷப்படும் அனைவருக்கும் பெரிய நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனது பயணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதைப் போல உணர்கிறேன்.

எல்லோருக்கும் பெரிய பெரிய நன்றி எனத் தெரிவித்துள்ளார் ஸ்ரத்தா ஸ்ரீநாத்.



தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து வந்த இலியானா திடீரென்று இந்தியில் நடிக்கச் சென்றார். பாலிவுட்டில் நுழைந்த வேகத்தில் வெற்றி படமும் அமைந்தது. ஆனால் அங்குள்ள போட்டியை சமாளிக்க முடியாமல் திணறினார். வெற்றி படம் தந்தபோதும் பட வாய்ப்புகள் குவியவில்லை. வந்த வாய்ப்புகளை ஏற்று நடித்தவருக்கு கைவசம் இருந்த படங்களை முடித்துக்கொடுத்த பின் புதிய வாய்ப்புக்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மீண்டும் தென்னிந்திய படங்களில் கவனத்தை திருப்ப முடிவு செய்தார். அதற்காக தெரிந்த நண்பர்களை தூது விட்டு வாய்ப்பு தேடியதுடன் ...ட்டு பரபரப்பு ஏற்படுத்தினார். அதற்கு பலன் கிடைத்தது. ...ஆண்டு அமர் அக்பர் ஆண்டனி படத்தில் ஒரு பாடலுக்கு ... அதைப் பயன்படுத்தி ஏற்கனவே தான் விட்டுச்சென்ற ...லிந்திருந்த தனது உடற்கட்டை மீண்டும் கொழுக் மொழுக் ...ம் முடிந்து திரைக்கு வந்த நிலையில் இலியானாவின் எதிர் ... கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டதே இதற்கு ...வாய்ப்புக்காக காத்திருந்துவிட்டு அது கைகூடாததால் ...யும் அவரிடம் இல்லை. இதனால் இணைய தள பக்கத்தில் ...வலை வீசிக்கொண்டிருக்கிறார். சில தினங்களுக்கு முன், சி...ந்த புகைப்படம் இளசுகளுக்கு இளமை விருந்துபடைப்ப

ராஜேஷ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துவரும் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் பிப்ரவரி 17-ம் தேதி வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.

'சீமராஜா' படத்தைத் தொடர்ந்து ராஜேஷ் இயக்கத்தில் உருவாகி வரும் படத்தில் நடித்து வருகிறார் சிவகார்த்திகேயன். ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் தயாரித்து வருகிறது. முழுக்க காமெடிக்கு முக்கியத்துவம் அளித்து படமாக்கி வருகிறார்கள்.

நயன்தாரா, ராதிகா சரத்குமார், சதீஷ், யோகி பாபு உள்ளிட்ட பலர் சிவகார்த்திகேயனுடன் நடித்து வருகிறார்கள். ஹிப் ஹாப் தமிழா ஆதி இசையமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார். இப்படத்துக்கான தலைப்பு இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

மேலும், இதன் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை சிவகார்த்திகேயன் பிறந்த நாளான பிப்ரவரி 17-ம் தேதி வெளியிடலாமா என்று ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

இப்படத்துக்கு இன்னும் ஒரு சில காட்சிகள் மட்டுமே படமாக்கப்படவுள்ளன.

# ஆபத்தில் முடியும் அதிக நேர உறக்கம்!



குறைவான நேரம் தூங்குவது பல நோய்களுக்கு வித்திடும் என்று நமக்குத் தெரியும். அதேபோல அதிக நேரம் தூங்குவதும் அபாயம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அதிக நேரம் தூங்குவதும், குறைந்த நேரம் தூங்குவதும் இதய நோய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் என்பது புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

தினமும் இரவு 7 மணி முதல் 8 மணி நேரம் வரை தூங்கவேண்டும். இல்லாவிட்டால் இதய நோய் பிரச்சினைகளும், பக்கவாதப் பாதிப்பும் ஏற்படும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 35 வயது முதல் 70 வயதுக்கு உட்பட்ட ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 632 பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவருமே சரியாக தூக்கம் இல்லாமல் அவதிப்படுபவர்கள்.

கனடாவில் உள்ள மெக்மாஸ்டர் பல் கலைக்கழகம் இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டது. ஆய்வுக் குழுவில் இடம்பெற்ற மாணவரான சுங்ஷி வாக்கன், ''தூங்கும் நேரத்தை ஆறு மணி முதல் எட்டு மணி வரை கணக்கிட்டு ஆய்வு மேற்கொண்டோம். அந்த நேரத்தைக் கடந்து அதிகம் தூங்குபவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். இதய நோய் பாதிப்புக்கு உள்ளாகி மரணத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்த ஆய்வின் முடிவில், பரிந்துரைக்கப்பட்ட நேரத்தை கடந்து 8 முதல் 9 மணி நேரம் வரை தூங்குபவர்களுக்கு 5 சதவீதம் நோய்ப் பாதிப்பு அதிகரிக்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

10 மணி நேரத்துக்கும் மேலாகத் தூங்குபவர் களுக்கு இதய நோய் பாதிப்பு 41 சதவீதம் அதிகமாக இருக்கும். அதுபோல் 6 மணி நேரம் அல்லது அதற்கும் குறைவாகத் தூங்குபவர்களுக்கு 9 சதவீதம் நோய் பாதிப்பு அதிகரிக்கும் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# கழுத்து வலியை உருவாக்கும் கைப்பேசி



நம் கையில் எப்போதும் ஒட்டிக் கிடக்கிறது செல்போன். நமது உடலின் ஒரு அங்கம் என்று கூட சொல்லலாம்.

கம்ப்யூட்டர் பயன்பாட்டுக்கு வந்த புதில் இளவயதினர் இடுப்பு வலிக்கு ஆளாயினர். மொபைல் போன் வந்தபிறகு இளவயதினருக்கு கழுத்துவலி வரத் தொடங்கி இருக்கிறது.

தலையின் சராசரி எடை சுமார் 5 கிலோ. செல்போன் திரையை பார்க்க கீழ்நோக்கி குனியும்போது கழுத்தின் மீது தலை செலுத்தும் விசையின் அளவு கூடுகிறது.

குனியும் கோணத்துக்கு ஏற்ப தலையின் அழுத்தம் அதிகரிக்கிறது. இதனால் கழுத்து தசைகள் களைப் படைந்து கழுத்து வலி, தோல் பட்டைவலி, தலைவலி உண்டாகிறது.

அழுத்தம் காரணமாக ஜவ்வுகள் வெளியே துருத்தி வந்து கை நரம்புகளை அழுத்துவதால் கை குடைச்சல் மற்றும் நரம்பு தளர்ச்சி ஏற்படுகிறது. இளம் வயதிலேயே எலும்பு தேய்வதும் நடக்கிறது.

### தடுப்பதற்கான வழிகள்

★ அதிக நேரம் செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை பிரேக் எடுத்துக் கொள்ள வேண்டும்.

★ மிக முக்கியமாக செல்போனை முகத்துக்கு நேராக வைத்து பார்க்க வேண்டும். கீழே குனிந்து பார்ப்பது நல்லதல்ல.

★ படுத்துக்கொண்டு செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

★ கழுத்து தசைகளை பயிற்சிகள் செய்து ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும்.




# ஆரோக்கியத்தின் தோழன் ஸ்மார்ட் பெல்ட்



பெல்ட் என்பது இடுப்பில் அணியக்கூடிய இறுக்கி பிடிக்க கூடிய பட்டை அமைப்பு. முந்தைய காலம் தொட்டு பெல்ட் பயன்பாடு இருந்து வந்துள்ளது. குறிப்பாக தோலால் ஆன பெல்ட் என்பது கி.மு. 3000 முதல் கி.மு. 1000 வரையிலேயே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

போர் படை வீரர்கள் தங்கள் ஆயுதங்களை இடுப்பில் இணைத்து கொள்ள ஏதுவாக தோலால் ஆன பட்டையை சில செ ாருகும் இடைவெளி விட்டு உருவாக்கினர். அதுதான் நாளடைவில் பலவித மாற்றங்களை பெற்று விதவிதமான பெல்ட்களாக உருமாறி வந்துள்ளது. தோலால் இந்த பட்டையை பதப்படுத்த அம்மோனியா நிறைந்த விலங்குகளின் மூத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோலவே இன்றைய நாளில் தோல் பெல்ட்கள் என்பதன் உருவாக்கம் பலவிதமான பதப்படுத்தும் முறையில் மெருகேற்றப்ட்டு அழகிய பெல்ட்களாக உலா வருகின்றன.

### வந்து விட்டது ஸ்மார்ட் பெல்ட்

அட பெல்ட்-யில் என்ன ஸ்மார்ட் என கேட்காதீர். எல்லா பயன்பாட்டிலும் ஸ்மார்ட் வந்து விட்டது எனும் போது இடுப்பிற்கு அணியும் பெல்ட் மட்டும் ஸ்மார்ட் ஆக மாறக்கூடாதா. அந்த வகையில் முற்றிலும் ஸ்மார்ட் வசதிகள் மற்றும் செயல்பாடுகள் கொண்ட பெல்ட் வந்துள்ளது. ஸ்மார்ட் வசதிகளாக இடுப்பின் அளவை அளவிடுவது, நமது உடல் செயல்களை கண்காணிப்பது, நாம் உண்ணும் உணவு பழக்கத்தை பதிவு செய்வது என்றவாறு நமது இடுப்பின் அளவு அதிகரிக்காத வண்ணம் எடை குறைப்பு சிந்தனையை மேம்படுத்தும் வகையில் இந்த பெல்ட் செயல்பாடு உள்ளது.

### ஸ்மார்ட் பெல்ட் செயல்படும் விதம்

ஸ்மார்ட் பெல்ட் என்பதில் அதன் பக்குள்ஸ் அமைப்பில் பொருத்தப்பட்டுள்ள சிறு சென்சார் கருவியின் மூலம் இயக்கப்படுகிறது. இது சுலபமான டிராக்கிங் வசதி மூலம் அதாவது பயல்லெஸ் டேட்டா சின்ஸிங் முறையில் மொபைல் போனில் உள்ள ஆப்வுடன் இணைக்கப்பட்டு தகவல்களை உடனுக்குடன் நமது மொபைல் போனுக்கு தந்து விடுகிறது. இதனை இயக்கிட எந்தவிதமான பட்டனையும் அழுத்த வேண்டாம்.

பெல்ட் அணிந்தவுடன் இதன் சென்சார் இயங்கி தானாகவே டிராக் பணியை தொடங்கிவிடும். பக்குள் மற்றும் ஸ்ட்ராப் பகுதியில் யாரும் அறிந்திராத வகையில் இடம் பெற்றுள்ள சிறு அமைப்பில் மைக்ரோ யுஎஸ்பீ போர்ட் மூலம் சார்ஜ் ஏற்றக்கூடிய பேட்டரி கூட உள்ளது. ஒரு முறை இந்த பேட்டர் சார்ஜ் செய்தால் போதும் அது முப்பது நாட்கள் வரை இயங்கிட வைக்கும். இந்த அமைப்பில் ஒரு சிறு சென்சார் டிராக் அமைப்பு மற்றும் பேட்டரி மட்டுமே உள்ளது.

### அனைத்து நிலை ஆரோக்கிய தோழன்

ஸ்மார்ட் பெல்ட் என்பதை அணிந்தவுடன் அது நமது இடுப்பின் அளவு எவ்வளவு உள்ளது என்பதையும், அதன் அகல விரிவு மாற்றங்களையும் அவ்வப்போது தெரிவிக்கும்.

நமது வாழ்க்கை முறை எப்படி உள்ளது என்பதை அதில் உள்ள இயக்கநிலை சென்சார் அறிந்து தெரிவிக்கும். அதாவது தினசரி நமது உடலில் எவ்வளவு கலோரி எரிக்கப்படுகிறது, எவ்வளவு தூரம் நடந்து வந்தோம், எவ்வளவு நேரம் அமர்ந்து இருந்தோம் என்பதை தகவலாய் மொபைலுக்கு அனுப்பி வைக்கும்.

எவ்வளவு கலோரி உணவை நாம் உட்கொள்கிறோம் என்பதை அரை மணி நேரத்திற்கு ஒரு முறை கணக்கிட்டு கூறிவிடும். அப்படியெனில் சாப்பிடும்போது ஏற்படும் வயிறு விரிவு அளவை வைத்தே கூர்மையான அளவீடுகளில் கலோரிகளை குறிப்பெடுத்து கூறிவிடும். இதன் மூலம் நாம் அதிகமாக உணவை உண்பதை தடுக்க முடிவதுடன், அன்றாட நம் பணிக்கான கலோரி மற்றும் உட்கொள்ள வேண்டிய உணவு கலோரி போன்றவை சுலபமாக அறிந்திட முடியும்.

நமது உடலமைப்பு மற்றும் நமது வாழ்க்கை முறை போன்றவற்றை கொண்டு நமது அன்றாட திட்ட வடிவமைப்பை தந்து ஆரோக்கியமாக வாழ வழிவகையை ஏற்படுத்தி தருவதிலும் ஸ்மார்ட் பெல்ட் சிறப்புடன் செயல்படுகிறது.

நாம் அணிகின்ற பெல்ட் என்பது அவ்வப்போது ஏற்படும் இடுப்பு அளவு அமைப்பிற்கு ஏற்ப மாறுபட்டும், ஒவ்வொரு ஆடைக்கும் ஏற்ற வகையில் அணிவதற்கும், இறுக பிடித்திருப்பதில் இருந்து சற்று தளர்வாக வேண்டும்போது மாற்றி அமைத்து கொள்ளவும் தனிப்பட்ட வழிமுறைகளுடன் ஸ்மார்ட் பெல்ட்-யை மாற்றிட முடியும்.

# இரவில் உண்ணக்கூடாத உணவுகள்



காலை நேர உணவு எந்த அளவிற்கு முக்கியமோ அதேபோல இரவு நேர உணவும் அவசியமானது. ஏனெனில் இரவு நீங்கள் சாப்பிடும் உணவுதான் அடுத்தநாள் காலை நீங்கள் புத்துணர்ச்சியுடன் எழ தேவையான சக்தியை கொடுக்கிறது. எனவே எக்காரணத்தை கொண்டும் இரவு உணவை தவிர்க்கக்கூடாது. ஆனால் நீங்கள் எந்த உணவை இரவு நேரத்தில் சாப்பிடுகிறீர்கள் என்பது முக்கியமானது.

ஏனென்றால் இரவு நேரத்தில் நீங்கள் சாப்பிடும் சில உணவுகளும், தின்பண்டங்களும் உங்கள் ஆரோக்கியத்தில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். முக்கியமாக நீங்கள் இரவில் சாப்பிடும் சில உணவுகள் உங்கள் செரிமான மண்டலத்தை பாதித்து உங்கள் தூக்கத்தை கெடுப்பதுடன், உங்கள் அடுத்த நாளின் செயல்பாடுகள் அனைத்தையும் பாதிக்கும். இந்த பதிவில் இரவில் சாப்பிடக்கூடாத உணவுகள் என்னென்ன என்பதை பார்க்கலாம்.

★ சுவையான இறைச்சியை யாருக்குத்தான் பிடிக்காது. இறைச்சியை எப்பொழுது கொடுத்தாலும் சாப்பிடுபவர்களே இங்கு அதிகம். ஆனால் அதை இரவு நேரத்தில் சாப்பிடுவது என்பது சரியான தேர்வு அல்ல. இறைச்சி உங்களுடைய உடல் இயக்கத்தை அதிகரிப்பதுடன் உங்களின் இரவு நேர தூக்கத்தையும் கெடுக்கிறது. நாள் முழுவதும் கடினமாக வேலை செய்து இரவு நேரத்தில் தூங்காமல் இருப்பது உங்கள் ஆரோக்கியத்திற்கு ஏற்றதல்ல.

★ காய்கறிகள் இயற்கையிலேயே சத்துக்கள் நிறைந்தவை. எனவே அதனை இரவு நேரத்தில் சாப்பிடுவது உடலுக்கு ஆரோக்கியமானது என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் உங்கள் எண்ணம் தவறானது. ஏனெனில் காய்கறிகளில் அதிகளவு நார்ச்சத்துக்கள் உள்ளது, இவை உங்கள் செரிமான மண்டலத்தில் மிக மெதுவாக நகரக் கூடியயவை. இது வழக்கமாக நீங்கள் இரவில் விழித்திருக்கும் நேரத்தை விட அதிக நேரம் விழித்திருக்க வைக்கும்.

★ சிப்ஸ் மற்றும் அதனை போன்ற நொறுக்குதீனிகள் அனைவருக்கும் பிடித்த ஒன்று. இரவு உணவுடன் இத்தனையும் சேர்த்து சாப்பிடுவது பலரின் பழக்கமாக கூட இருக்கலாம். ஆனால் இதனை தவிர்ப்பது நல்லது. ஏனெனில் சிப்ஸ்களில் உள்ள மோனோசோடியம் குளூட்டமேட் என்னும் பொருள் உங்கள் தூக்கத்தை கெடுக்கக்கூடிய ஒன்று மேலும் இது இரவுநேரத்தில் நெஞ்செரிச்சலை உருவாக்கக்கூடும்.

★ பசி அதிகமாக இருக்கும் நேரத்தில் நூடுல்ஸ் சாப்பிடுவது என்பது மிகச்சரியான ஒரு யோசனை ஏனெனில் இது நீண்ட நேரம் பசியை கட்டுப்படுத்தும். ஆனால் இதனை இரவு நேரத்தில் சாப்பிடுவதில் இருக்கும் பிரச்சினை என்னவென்றால் கொழுப்பு நிறைந்த இந்த உணவு நீங்கள் தூங்கும்போது உங்கள் எடையை அதிகரிக்கக்கூடிய அனைத்து வேலைகளையும் செய்யும். அதுமட்டுமின்றி இதில் உள்ள கார்போஹைட்ரேட்கள் செரிமானம் அடையவும் நிறைய நேரம் தேவைப்படும். எனவே ஆரோக்கியமான வேறு உணவை சாப்பிடுவது நல்லது.

★ இன்றைய இளைஞர்கள் பலருக்கும் இருக்கும் ஒரு மோசமான பழக்கம் இரவு சாப்பிட்டவுடன் ஐஸ்க்ரீம் சாப்பிடுவது. ஐஸ்க்ரீமில் கொழுப்பு மற்றும் சர்க்கரை இரண்டுமே அதிகளவில் உள்ளது. இந்த சூழ்நிலையில் இவை இரண்டும் செரிமானம் அடைய போதுமான உடல் உழைப்போ, நேரமோ இரவில் நீங்கள் உங்கள் செரிமான மணடலத்திற்கு கொடுப்பதில்லை. இதனால் உங்களின் எடை அதிகரிப்பதோடு இதய ஆரோக்கியமும் பாதிக்கப்படும்.

★ பெரும்பாலும் இரவு நேரத்தில் நாம் பீட்சா சாப்பிடமாட்டோம். ஆனால் அதற்கான வாய்ப்பு அமையும்போது நம் வாய் சும்மா இருக்குமா? எனவே ஆசைப்பட்டு சிறிது பீட்சா சாப்பிட்டாலும் அது உங்களுக்கு சுவையுடன் எடை அதிகரிப்பையும் சேர்த்தே வழங்கும். இதில் உள்ள கொழுப்பு மற்றும் மசாலா பொருட்கள் உங்களுக்கு நெஞ்செரிச்சலையும் சேர்த்து ஏற்படுத்தும்.

★ தூங்க செல்லும் முன் காபி குடிப்பது ஆரோக்கியமற்றது என்பது தெரிந்த பலருக்கும் சாக்லேட் சாப்பிடுவதும் ஆரோக்கியமற்ற ஒன்று என்பது புரிவதில்லை. ஏனெனில் காபியில் இருப்பது போலத்தான் சாக்லேட்டிலும் காஃபைன் உள்ளது. எனவே இரண்டையுமே தவிர்ப்பது தான் ஆரோக்கியதிற்கு நல்லது.

★ இரவு நேரம் மது அருந்திவிட்டு தூங்குவது சிறந்த யோசனையாக தோன்றலாம். ஆனால் உண்மையில் அது நல்ல முடிவல்ல. உங்களுக்கு தூக்கம் வருவது போன்ற உணர்வு இருக்குமே தவிர நிம்மதியான தூக்கம் உண்மையில் கிடைப்பதில்லை. நீங்கள் ஓய்வெடுத்தாலும் உங்களின் அடுத்தநாள் செயல்பாடுகள் இதனால் பாதிக்கப்படலாம்.

★ மிளகாயில் கார்போஹைட்ரேட் மட்டும் அதிகம் இருப்பதில்லை, இயற்கையாகவே இதில் கலோரிகளும் அதிகம் உள்ளது. இரவு உணவில் இதனை சேர்த்துக் கொள்ளும்போது தூக்கம் தொடர்பான பிரச்சினைகள் மட்டுமின்றி எடை அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளையும் நீங்கள் சந்திக்க வேண்டி வரும்.

# செர்ரியின் சிறப்பு




கண்பார்வை மங்குதல், மாலை மிகவும் நோய் போன்றவை ஏற்படுவதை தடுத்து, கண்பார்வை திறனை பிரகாசிக்க செய்கிறது. எனவே கண்களின் நலமாக இருக்க விரும்புபவர்கள் செர்ரி பழங்களை அவ்வப்போது சாப்பிட வேண்டும்.

செர்ரி பழத்தில் உணவை செரிமானம் செய்ய கூடிய சத்துகள் அதிகம் உள்ளன. இப்பழங்களை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு நீண்ட நாட்களாக இருக்கும் மலச்சிக்கல் பிரச்சனைகள் நீங்கும். குடல்களில் இருக்கும் நோய்களை போக்கி, குடல்களின் நலன் மற்றும் சீரான இயக்கத்திற்கும் கிவிபழம் பேருதவி புரிகிறது.

பலருக்கும் இக்காலங்களில் தலைமுடி கொட்டுதல், பொடுகு, தலைமுடியில் ஈரப்பதம் இல்லாமை போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. செர்ரி பழங்கள் சாப்பிடுபவர்களுக்கு அதிலிருக்கும் வைட்டமின் எ மற்றும் ஈ ஆகியவை தலைமுடி உதிர்வதை தடுக்கிறது. இளநரை, பொடுகு போன்ற பிரச்சனைகளை விரைவில் தீர்ப்பதில் செர்ரி பழம் மிகுந்த ஆற்றல் வாய்ந்த ஒரு இயற்கை உணவாக இருக்கிறது.

# அழிந்து போன தகவல்களை மீளப்பெறுவது எப்படி?




நண்பர்கள் மற்றும் வியாபார ரீதியிலான காண்டாக்ட்களை பதிவு செய்ய பயன்படுத்தப்படும் கூகுள் காண்டாக்ட்டில் அழந்து போன காண்டாக்ட்களை மீட்க என்ன செய்ய வேண்டும்.

ஸ்மார்ட்போனில் காண்டாக்ட்களை பதிவு செய்ய பயனுள்ள சேவையாக கூகுள் காண்டாக்ட் இருக்கிறது. நமது காண்டாக்ட்களை பதிவு செய்வதில் முக்கிய அங்கம் வகிக்கும் கூகுள் காண்டாக்ட்டில் அவ்வப்போது தேவையற்றதாக இருக்கும் காண்டாக்ட்களை நீக்குவோம். எனினும் தவறுதலாக அவசியமான சல காண்டாக்ட்களை நீக்கியிருப்போம்.

இதுபோன்ற நேரங்களில் அழிந்து போன கூகுள் காண்டாக்ட்களை மீட்பது சுலபமான வழிமுறைகள் இருக்கின்றன. அந்த வகையில் கூகுளில் அழிந்து போன காண்டாக்ட்களை மீட்க என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்ந்து பார்ப்போம். வழிமுறை 1: முதலில் புதிய கூகுள் காண்டாக்ட் வலைதளத்தை பிரவுசரில் திறந்து நீங்கள் காண்டாக்ட்களை பதிவு செய்திருந்த மின்னஞ்சல் முகவரி சைன்-இன் செய்யப்பட்டுள்ளதா என்பதை சரி பார்க்க வேண்டும்.

வழிமுறை 2: வலைதளத்தை திறந்ததும், மெனு ஆப்ஷனில் இருக்கும் மோர் (More) பட்டனை கிளிக் செய்ய வேண்டும். இதைத் தொடர்ந்து ரீஸ்டோர் காண்டாக்ட் (Restore Contacts) எனும் ஆப்ஷனை கிளிக் செய்ய வேண்டும்.

வழிமுறை 3: இனி திரையில் தெரியும் டைம் ஃபிரேமில் நீங்கள் அழித்த காண்டாக்ட்களில் மீண்டும் உங்களுக்கு தேவையானவற்றை தேர்வு செய்து ரீஸ்டோர் ஆப்ஷனை கிளிக் செய்ய வேம்டும்.

இவ்வாறு செய்ததும், நீங்கள் ஏற்கனவே அழித்த காண்டாக்ட்கள் மீட்கப்பட்டு விடும். இவ்வாறு நீங்கள் அழித்த காண்டாக்ட்களை 30 நாட்கள் வரை மீட்க முடியும். கூகுள் காண்டாக்டில் அழிந்து போன காண்டாக்ட்களை 30 நாட்களுக்கு பின் மீட்க முடியாது.

# மடிக்கக்கூடிய ஸ்மார்ட் போனை உருவாக்கும் இன்டெல்

இன்டெல் நிறுவனம் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போனினை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே சாம்சங், ஹூவாய், எல்.ஜி., சியோமி என பல்வேறு நிறுவனங்களும் மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போனினை உருவாக்கி வருகின்றன.




சர்வதேச காப்புரிமை அலுவலகம் மற்றும் அமெரிக்க காப்புரிமை மற்றும் டிரேட் மார்க் அலுவலகத்தில் இன்டெல் பதிவு செய்திருக்கும் விண்ணப்பத்தில் இன்டெல் ஸ்மார்ட்போனின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஸ்மார்ட்போன் திறக்கப்பட்ட நிலையில் பெரிய திரை கொண்ட டேப்லெட் போன்று காட்சியளிக்கிறது. இன்டெல் புதிய சாதனத்தில் மொத்தம் மூன்று டிஸ்ப்ளேக்கள் இடம்பெற்றுள்ளன.

இன்டெல் கார்ப்பரேஷன் சார்பில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை லெட்ஸ்கோடிஜிட்டல் வெளியிட்டுள்ளது. அதன்படி இன்டெல் காப்புரிமை விண்ணப்பத்தின் தலைப்பு மடிக்கக்கூடிய டிஸ்ப்ளே பேனல்கள் கொண்ட மின்சாதம் என வைக்கப்பட்டிருக்கிறது. காப்புரிமை விவரங்களின் படி முழுமையாக மடிக்கப்பட்ட நிலையில், இந்த சாதனத்தை ஸ்மார்ட்போன் போன்று பயன்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சாதனத்தில் ஃபுல் ஸ்கிரீன் டிஸ்ப்ளே, சுற்றிலும் பெசல்கள் இல்லாமல், கேமரா, சென்சார்கள் மற்றும் ரிசீவர்கள் டிஸ்ப்ளேவின் கீழ் பொருத்தப்படுகிறது. ஸ்மார்ட்போனினை இருமுறை திறந்தால், பெரிய டேப்லெட் போன்று பயன்படுத்தலாம். இருமுறை மடிக்கக்கூடிய வகையில் உருவாவதால் இந்த ஸ்மார்ட்போன் அதிக தடிமனாக இருக்கும் என தெரிகிறது.



டேப்லெட் சாதனம் திறக்கப்பட்ட நிலையில் மூன்று டிஸ்ப்ளே பாகங்களை கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு கேமராக்கள் என மொத்தம் ஆறு கேமராக்கள் வழங்கப்படுகிறது. இந்த சாதனத்துடன் ஸ்டைலஸ் பென் ஒன்றும் வழங்கப்படுகிறது. இதனை மடிக்கக்கூடிய சாதனத்துடன் காந்தம் போன்று இணைத்து கொள்ளலாம்.

இதுவரை கிடைத்திருக்கும் தகவல்களை வைத்து பார்க்கும் போது இந்த மடிக்கக்கூடிய சாதனம் சந்தையில் அறிமுகமாக சிலகாலம் ஆகும் என்றே தெரிகிறது.

# வீட்டு நெட்வேர்க்;
## பாதுகாக்க சில வழிமுறைகள்!



இண்டர்நெட் பயன்பாடு அத்தியாவசிய தேவையாகி விட்ட நிலையில், அனைவரின் வீட்டிலும் இண்டர்நெட் பயன்படுத்தப்படுகிறது. சைபர் அச்சுறுத்தல்கள் அதிகமாகியுள்ள நிலையில், வீட்டு நெட்வொர்க் பாதுகாக்கும் வழிமுறை.

இண்டர்நெட் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், இண்டர்நெட் பாதுகாப்பு அவசியமான ஒன்றாக இருக்கிறது. அந்த வகையில் இண்டர்நெட் இணைப்பை பயன்படுத்தும் அனைவரும் சைபர் சார்ந்த அச்சுறுத்தல்களில் பாதிக்கப்படும் அபாயம் அதிகமாகியுள்ளது.

இண்டர்நெட் பயன்படுத்தும் அனைவரும் பாதிக்கப்படலாம் என்ற வகையில், உங்களது நெட்வொர்க்களை ஹேக்கர்கள் பயன்படுத்துவதை தடுக்க வேண்டும். வீட்டில் நீங்கள் பயன்படுத்தும் நெட்வொர்க்கை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

### பெயரை மாற்ற வேண்டும்

முதலில் உங்களது வைபை பெயரை மாற்ற வேண்டும், பெயரை மாற்றுவது ஹேக்கர்களுக்கு நீங்கள் பயன்படுத்தும் ரவுட்டரை அறிந்து கொள்வதில் சிரமத்தை ஏற்படுத்தும். நீங்கள் பயன்படுத்தும் ரவுட்டர் சார்ந்த தகவல்களை ஹேக்கர்கள் அறிந்து கொண்டால், அவர்களால் மிக எளிமையாக உங்களது நெட்வொர்க்கில் நுழைய முடியும்.

### கடினமான பாஸ்வேர்டு

ரவுட்டர் வாங்கும் போது தானாக பாஸ்வேர்டு செட் செய்யப்படிருக்கும். எனினும் இவை அனைவராலும் மிக எளிமையாக கண்டறியக் கூடியதாகவே இருக்கும். இதனால் மிக கடினமான பாஸ்வேர்டு ஒன்றை செட் செய்ய வேண்டும். அந்த வகையில் 20 இலக்கு பாஸ்வேர்டு (அதில் எழுத்து, எண், சிறப்பு குறியீடு) உள்ளிட்டவற்றை சேர்த்திருத்தல் அவசியம் ஆகும்.

### நெட்வொர்க் என்க்ரிப்ஷன்

வயர்லெஸ் நெட்வொர்க்களில் பல்வேறு என்க்ரிப்ஷன் மொழிகள் இடம்பெற்றுள்ளன, WEP, WPA அல்லது WPA2. இதில் WEP 1990களில் உருவாக்கப்பட்டது. இதனால் இதனை மிக எளிமையாக ஹேக் செய்ய முடியும். என்க்ரிப்ட் செய்ய தலைசிறந்த மொழி WPA AES தான். அனைத்து வயர்லெஸ் நெட்வொர்க்களும் சப்போர்ட் செய்யும் மொழியாகவும் WPA AES இருக்கிறது.

### ரவுட்டர் வைக்கும் இடம்

வீட்டில் ரவுட்டர் வைக்கும் இடம் முக்கிய அங்கம் வகிக்கிறது. எப்போதும் வைபை ரவுட்டர்களை வீட்டின் நடுமையத்தில் வைத்திருக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது சிக்னல் சீராகவும், அனைத்து அறைகளுக்கும் பரவும். இத்துடன் சிக்னல் வெளியேறும் அளவும் குறைவாக இருக்கும்.

### ரிமோட் அக்சஸ்

பெரும்பாலான ரவுட்டர்கள் தங்களது இன்டர்ஃபேசினை இணைக்கப்பட்ட சாதனத்தில் இருந்து இயக்க வழி செய்கிறது என்றாலும் சில ரவுட்டர்கள் ரிமோட் சிஸ்டம்களில் இருந்தும் இயக்க வழி செய்யும். இதை பயன்படுத்தி ஹேக்கர்களால் மிக எளிமையாக உங்களது நெட்வொர்க்கில் நுழைய முடியும்.




ரிமோட் அக்செஸ் ஆப்ஷனை செயலிழக்க செய்தால் மற்றவர்கள் உங்களது நெட்வொர்க்கில் நுழைவதை தடுக்க முடியும். இதை செய்ய வெப் இன்டர்ஃபேஸ் சென்று ரிமோட் அக்செஸ் அல்லது ரிமோட் அட்மினிஸ்ட்ரேஷன் ஆப்ஷன் சென்று மாற்ற முடியும்.

# வைபை பாஸ்வேர்ட்டை கண்டறிவது எப்படி?

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள வைபை நெட்வொர்க்களின் பாஸ்வேர்டுகளை கண்டறிவது எப்படி.

இண்டர்நெட் பயன்பாடு நாடு முழுக்க அதிகரித்து வரும் நிலையில், அனைத்து பட்ஜெட்களிலும் இண்டர்நெட் பேக்கள் கிடைக்கின்றன. இத்துடன் பொது இடங்களில் இலவச வைபை மற்றும் பெரும்பாலானோர் வீடுகளில் வைபை பயன்படுத்தப்படுகிறது.




பொது இடங்களில் வைபை பயன்படுத்துவோர் தொடர்ச்சியாக அங்கு செல்லும் போது, அடிக்கடி அங்கிருப்பவர்களின் வைபை பாஸ்வேர்டுகளை கேட்பதை தவிர்த்து பாஸ்வேர்டுகளை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்யும் போது ஒவ்வொரு முறையும் பாஸ்வேர்டுகளை கேட்பதை தவிர்க்க முடிவதோடு எளிதாக போனில் வைபை இணைப்பைப் பெற முடியும்.

இதற்கான வழிமுறையை தொடரும் முன் உங்களது ஸ்மார்ட்போன் ரூட் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

★ கூகுள் பிளே ஸ்டோரில் கிடைக்கும் வைபை பாஸ்வேர்டு வியூவர் (WiFi Password Viewer ROOT) செயலியை டவுன்லோடு செய்ய வேண்டும்.

★ செயலியை இன்ஸ்டால் செய்ததும், செயலி கோரும் அனைத்து பெர்மிஷன்களையும் அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது பதிவு செய்யப்பட்டுள்ள வைபை பாஸ்வேர்டுகளை பார்க்க முடியும்.

★ வைபை பாஸ்வேர்டு வியூவர் கேட்கும் பெர்மிஷன்களை அனுமதித்ததும் ஸ்மார்ட்போனில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள பாஸ்வேர்டுகளை செயலி காண்பிக்கும்.

★ ஒருவேளை பாஸ்வேர்டுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனில் செயலியில் உள்ள பாஸ்வேர்டினை அழுத்தி பிடித்து, பாஸ்வேர்டினை கிளிப் போர்டில் காப்பி செய்து குறுந்தகவல் மூலம் மற்றவர்களுக்கு அனுப்பலாம்.

**குறிப்பு:** ரூட் செய்யப்படாத ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் இந்த வசதியை பயன்படுத்த முடியாது. இத்துடன், ஸ்மார்ட்போன்கள் ரூட் செய்வது ஒருவரின் தனிப்பட்ட விருப்பத்தில் தொடர வேண்டும். ஸ்மார்ட்போன்கள் ரூட் செய்யப்பட்டால் அவற்றிற்கு வழங்கப்பட்ட வாரண்டி செல்லாமல் போகும்.

# சிறிதினைப் பெரிதாய்...!

ஸ்மார்ட்போனில் உள்ள வீடியோ, போட்டோ மற்றும் ஆவணங்கள் உள்ளிட்டவற்றை அதிலுள்ள சிறிய திரையின் வழியே காண்பதற்குச் சிரமமாக இருப்பதுடன், ஒரே நேரத்தில் பலரும் காண இயலாத நிலையில் உள்ளது. தற்போது சந்தையில் விற்பனையாகி வரும் ஸ்மார்ட்போன் புரஜெக்டர் என்ற கருவி மூலம் செல்போனில் உள்ள வீடியோ, போட்டோ மற்றும் ஆவணங்களை அகன்ற திரையில் காண முடியும்.

துபாய் நாட்டைச் சேர்ந்த ‘‘மெர்லின்’ நிறுவனத் தயாரிப்பான இந்த ஸ்மார்ட்போன் புரஜெக்டர் கருவியையும் செல்போனையும் அதற்கான கேபிள் மூலம் இணைத்துவிட்டால், செல்போனில் சிறிய அளவில் நாம் காணும் காட்சிகள் மற்றும் செல்போன் இயக்கங்களை அப்படியே பெரிய அளவில் திரையில் காணலாம். இந்த புரஜெக்டரை செல்போன்களுக்கு ‘‘பவர் பேங்க்’ ஆகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# தவிர்க்க வேண்டிய பாஸ்வேர்ட் தவறுகள்




பாஸ்வேர்டுகளை விளையாட்டாக எடுத்துக் கொள்வதற்கில்லை. அவைதான் உங்கள் இணையப் பாதுகாப்புக்கான சாவி. இந்தச் சாவியைக் கவனமாகக் கையாள்வது அவசியம். இல்லை எனில் அது இணையக் கள்வர்கள் கையில் சென்றுவிடும் அபாயம் இருக்கிறது.

பொதுவாகப் பாதுகாப்பான பாஸ்வேர்டுக்குச் சொல்லப்படும் அடிப்படையான விஷயங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் இணையம் வளர்ந்துகொண்டே இருக்கும் நிலையில், இணையப் பாதுகாப்புக்கான சவால்களும் அதிகரித்துவருவதால் பாஸ்வேர்டு பாதுகாப்பையும் நீங்கள் அப்டேட் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

உதாரணத்துக்கு வலுவான பாஸ்வேர்டுக்கான அடிப்படை விதியை எடுத்துக்கொள்வோம். ஒரு காலத்தில் நல்ல பாஸ்வேர்டு குறைந்தது ஆறு எழுத்துக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைய ஹேக்கர்களோ, ஆறு எழுத்து பாஸ்வேர்ட்களைக்கூட மிக எளிதாக ஊகித்துவிடக்கூடிய அளவுக்கு அவர்கள் கையாளும் கணினிகள் ஆற்றல் கொண்டிருக்கின்றன. எனவே இப்போது பாஸ்வேர்டுகள் குறைந்தபட்சம் 8 எழுத்துக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். 10 முதல் 12 எழுத்துக்கள் கொண்டதாக இருந்தால் இன்னும் நல்லது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்குகளுக்கானது என்றால் தயங்காமல் 14 முதல் 16 எழுத்துக்களில் பாஸ்வேர்டை அமைத்துக்கொள்ளலாம் என்று வல்லுநர்கள் சொல்கின்றனர்.

அடுத்து, உங்கள் பாஸ்வேர்டு குழப்பமானதாக இருக்க வேண்டும். அதாவது பாஸ்வேர்டு எளிதாக இருக்கக் கூடாது. வெறும் எழுத்துக்களைக் கொண்டு மட்டுமே பாஸ்வேர்டு அமைக்காமல், இடையே எண்கள், நிறுத்தல் குறிகள் மற்றும் சிறப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துங்கள். முதலில் சில எழுத்துக்கள் அதைத் தொடர்ந்து சில எண்கள், அதன் பிறகு சிறப்புக் குறியீடுகள், பின் மீண்டும் சில எண்கள் இறுதியில் சில எழுத்துக்கள்... இப்படி இருந்தால் உங்கள் பாஸ்வேர்டு பாதுகாப்பில் பல படிகளைக் கொண்டிருக்கிறது என பொருள்.

இதற்கான எளிய வழி, வார்த்தைகளைக் கொண்டு பாஸ்வேர்டை யோசிக்காமல், ஒரு ஆங்கிலச் சொற்றொடரை எடுத்துக்கொண்டு அதில் உள்ள வார்த்தைகளின் முதல் எழுத்துக்களை மட்டும் வரிசையாக எழுதிவிட்டுப் பின்னர் இடையிடையே எண்களையும், நிறுத்தல் குறிகளையும் சேர்க்கலாம் என்கின்றனர். இந்த முறை ‘பாஸ்பிரேஸ்’ (pass-phrase) எனக் குறிப்பிடப்படுகிறது.

நீளமான பாஸ்வேர்டுகளை அமைப்பதில் உள்ள சிக்கல் என்னவென்றால் அவற்றை நினைவில் வைத்துக்கொள்வது கஷ்டமாக இருக்கும் என்பதுதான். பாஸ்வேர்டு தொடர்பாகப் பலரும் செய்யும் இரண்டு தவறுகளுக்கு இது வழிவகுக்கலாம்.

ஒன்று, அதுதான் சூப்பர் ஸ்டிராங் பாஸ்வேர்டு உருவாக்கியாச்சே என்ற நம்பிக்கையில், எல்லா இணையச் சேவைகளுக்கும் அதே பாஸ்வேர்டைப் பயன்படுத்தத் தோன்றும். இது நடைமுறையில் எளிதாக இருக்கலாம் என்றாலும் மிகவும் ஆபத்தானது. ஏனெனில் ஒரு சேவையில் பாஸ்வேர்டு திருடப்படும் நிலை ஏற்பட்டால், அந்த ஒரு கள்ளச்சாவியைக் கொண்டே விஷமிகள் ஒருவரது மற்ற இணைய சேவைகளுக்கு உள்ளேயும் எளிதாக நுழைந்துவிடுவார்கள்.

இமெயிலுக்கான பாஸ்வேர்டு மெயிலுக்கானதாக மட்டுமே இருக்க வேண்டும். பேஸ்புக்கிற்கும், ட்விட்டருக்கும், இன்னும் பிற இணையச் சேவைகளுக்கும் கட்டாயம் தனித்தனி பாஸ்வேர்டு தேவை. வேண்டுமானால், ஒரு அடிப்படை பாஸ்வேர்டை உருவாக்கிவிட்டு, ஒவ்வொரு சேவைக்கும் ஒரு சிறிய மாற்றம் செய்து அவற்றைப் பயன்படுத்தலாம்.

ஆனால், இப்படி தனித்தனியே பல பாஸ்வேர்டுகளை உருவாக்கிக் கொள்ளும்போது, அவற்றை எல்லாம் ஒரு காகிதத்தில் குறித்து வைக்கும் எண்ணம் இயல்பாக எழலாம். இதைவிட ஆபத்தானது எதுவும் இல்லை என்று இணையப் பாதுகாப்பில் அடிக்கடி வலியுறுத்தப்படுகிறது.

ஹேக்கர்கள் உங்கள் சிஸ்டத்தில் கைவரிசை காட்டலாமே தவிர, உங்கள் மேஜையில் கைவிட்டு இந்தக் காகிதத்தை எடுக்க முடியாதுதான். ஆனால் உங்கள் வீட்டிற்கு வரும் வேறு யாரேனும் கையில் கிடைத்தால் சிக்கலாகலாம். நினைவில்லாமல் இவற்றைத் தூக்கி வீசினாலும் பிரச்சனை ஆகலாம்.

நிறைய பாஸ்வேர்டுகளை நினைவில் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் பாஸ்வேர்டு மேனேஜர் சேவைகளை நாடலாம். இணையத்தில் நிறைய பாஸ்வேர்டு மேனேஜர் சேவைகள் உள்ளன. அவற்றைப் பரிசீலித்துப் பாருங்கள்.

பாஸ்வேர்டு மேனேஜர் மென்பொருட்களைப் பயன்படுத்தினாலும் சரி, பாஸ்வேர்ட்களை நீங்கள்தான் கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

அதாவது, தேவை எனில் பாஸ்வேர்ட்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு 3 மாதங்கள் அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பாஸ்வேர்டுகளை மாற்றுவது நல்லது எனும் கருத்து முன்வைக்கப்படுகிறது. இப்படி அடிக்கடி மாற்றுவது நல்லதல்ல என்ற கருத்தும் சொல்லப்படுகிறது.

என்றாலும், நிச்சயமாக ஆண்டுக் கணக்கில் ஒரே பாஸ்வேர்டைப் பயன்படுத்துவது பாதுப்பானது இல்லை.

சில ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் உங்கள் பாஸ்வேர்டை தூசி தட்டி அப்டேட் செய்துவிட வேண்டும். அதிலும் குறிப்பாக, இமெயில் சேவைகளிலிருந்து உங்கள் கணக்கில் சந்தேகத்துக்குரிய நடவடிக்கை நிகழ்ந்துள்ளது, பாஸ்வேர்டை மாற்றுங்கள்’ என எச்சரிக்கை வந்தால் அலட்சியம் செய்யக் கூடாது.

# மலர்களே...மலர்களே...!



மலர்ந்திருக்கிற பூக்களை பார்க்கும் போதே நம் மனதில் உற்சாகம் தொற்றிக் கொள்ளும். அதன் வாசமும் அதன் இருப்பும் எப்போதுமே நமக்கு ஒருவிதமான அமைதியை கொடுக்ககூடியது. அவ்வாறான பூக்களை அணியவும், மருத்துவ குணத்திற்காக மட்டுமல்ல அழகுக்காகவும் பயன்படுத்தலாம். பூக்களை அழகுக்கு எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என தெரியுமா?

### மல்லிகைப்பூ

ஒரு கப் மல்லிகைப்பூவுடன் 4 லவங்கம் சேர்த்து அரைக்கவும். அதில் சுத்தமான சந்தனம் சேர்த்து, வெதுவெதுப்பான தண்ணீர் விட்டுக் முகம், நெற்றி, கழுத்து, முதுகுப் பகுதிகளில் தடவி, 20 நிமிடங்கள் கழித்துக் குளிர்ந்த தண்ணீரால் கழுவினால், வெயிலினால் ஏற்பட்ட கருமை, சின்னச் சின்ன கட்டிகள் சரியாகி, சருமம் ஒரே சீரான நிறத்துக்குத் திரும்பும்.

### சாமந்திப்பூ

சாமந்திப்பூவின் இதழ்களை மட்டும் உதிர்த்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரை நன்கு சூடாக்கி அதில் சாமந்திப் பூக்களைப் போட்டு, அடுப்பை அணைத்து, அப்படியே மூடி வைத்து விடவும். ஒரு இரவு முழுக்க அப்படியே வைத்திடுங்கள். மறுநாள் காலையில் அந்தத் தண்ணீரை வடிகட்டி, அதில் முகம் கழுவினால், முகம் பொலிவு பெறும். இந்தத் தண்ணீரை இரண்டு நாட்களுக்கு ஃப்ரிட்ஜில் வைத்து உபயோகிக்கலாம்.

### மரிக்கொழுந்து

மரிக்கொழுந்து பூவின் சாறு 2 டீஸ்பூன், சந்தனத் தூள் 2 டீஸ்பூன் இரண்டையும் கலந்து முகம், கை, கால்களில் தேய்த்து மசாஜ் செய்து 20 நிமிடங்கள் கழித்துக் கழுவினால், வியர்வை கட்டுப்படும். சரும நிறம் கூடும்.

### ரோஜாப்பூ

பன்னீர் ரோஜாவின் இதழ்களுடன், வேப்பிலை சேர்த்து அரைத்துக் கொள்ளவும் அத்துடன் சில துளிகள் எலுமிச்சைச்சாறு கலந்து முகத்தில் தடவி, கண்களுக்கு மேல் பன்னீரில் நனைத்த பஞ்சை வைத்துக் கொண்டு 15 நிமிடங்கள் ஓய்வெடுக்கவும். இது முகத்திலுள்ள பருக்கள், கரும்புள்ளிகள் போன்றவற்றை நீக்கி, சருமத்தைப் பளபளப்பாக்கும். உதடுகளுக்கு : ரோஜா இதழ்களைப் பால் விட்டு அரைத்து, உதடுகளின் மேல் தடவி வந்தால் உதடுகள் இயற்கையான நிறம் பெறுவதுடன், பளபளப்பாகவும் மாறும்.

### மகிழம்பூ

கைப்பிடி அளவு மகிழம் பூவை ஊற வைத்து அரைக்கவும். இது வெயிலினால் உண்டாகும் சருமப் பிரச்னைகளைத் தவிர்க்கும். ஏற்கனவே வெயிலில் அலைந்ததால் உண்டான வேர்க்குரு, வேனல் கட்டிகள் போன்றவற்றையும் விரட்டும். தினமும் இதை உபயோகித்துக் குளிப்பதால் வியர்வை நாற்றமே இருக்காது.

### குங்குமப்பூ

ஒரு சிட்டிகை குங்குமப் பூவுடன் சிறிது அதிமதுரம் கலந்து, முதல் நாள் இரவே சிறிது தண்ணீரில் ஊற வைக்கவும். மறுநாள் காலையில் அதைக் கை விரல்களால் நசுக்கி, அதன் சாரத்தை முகம், கழுத்துப் பகுதியில் தடவி சிறிது நேரம் ஊற விடவும். பிறகு மென்மையாக மசாஜ் செய்து விட்டுக் கழுவினால், சருமம் சிவப்பழகு பெறும். வெயிலில் அலைவதால் கருத்துப் போவதையும் தவிர்க்கும்.

### ஆவாரம் பூ

100 கிராம் ஆவாரம் பூவுடன், 50 கிராம் வெள்ளரி விதை சேர்த்து பால் விட்டு விழுதாக அரைத்து முகம், கழுத்து, கை, கால்களுக்கு பேக் மாதிரி போடலாம். இயற்கையான சன் ஸ்கிரீன் மாதிரிச் செயல்படும் இது.

### தாமரைப்பூ

தாமரை இதழ்களை சிறிது பால் விட்டு அரைத்து, தடவவும். சிறிது நேரம் கழித்து காய்ந்ததும் கழுவிடலாம். இது சருமத்துக்கு ஒருவித மென்மையைக் கொடுக்கும். வெயில் காலத்தில் வாரம் 2 முறையாவது இதைச் செய்து வந்தால், சருமத்தை ஒரே சீரான நிறத்துடனும், மென்மையுடனும் பராமரிக்கலாம்.

### செம்பருத்தி

ஒற்றைச் செம்பருத்திப் பூவுடன், 2 பாதாம் பருப்பு சேர்த்து ஊற வைத்து அரைத்து வெயில் படும் சருமப் பகுதிகளில் எல்லாம் தடவவும். அரை மணி நேரம் ஊறியதும், கழுவிவிடலாம். இப்படிச் செய்வதனால் கோடையினால் உண்டாகிற சரும வறட்சி நீங்கி, தோல் மென்மையாக மாறும்.

# குளுகுளு வீடு!

தற்போதைய காலகட்டத்தில் தனி வீட்டை கட்டுவதை விட ஃப்ளாட்டாக வாங்குவதைத்தான் அனைவரும் விரும்புவார்கள். ஆனால் ஃப்ளாட்டில் என்ன அப்படி பெரிதாக வளர்த்துவிட முடியுமென சிலர் நினைப்பதுண்டு. மனமிருந்தால் போதும். வழியிருக்கு. சின்ன சின்ன செடிகளை வைக்கலாம். இதில் பெரிய ப்ளஸ்பாயின்ட் என்னவென்றால் இவற்றால் நமது வீடு குளுமையடையும். வெயிலின் தாக்கம் குறையும். அப்படி எந்த மாதிரி செடிகள் வீட்டில் வளர்க்கலாம்.

### பைக்கஸ் தாவரம்

இதனை 'அழுகை அத்தி' என்றும் அழைப்பர். இது உங்கள் அறையில் இருக்கும் காற்றினை தூய்மைபடுத்தி, வெப்பத்தினை உள்வாங்கி கொள்கிறது. குறைந்த வெப்பம் மற்றும் மிதமான தண்ணீர் யும் குறைக்கிறது.

### கற்றாழை தாவரம்

இது உங்கள் அடுக்குமாடி குடியிருப்பை புத்துணர்ச்சி பொங்க வைத்துகொள்வதோடு, பல பயன்பாடுகளையும் கொண்டதாக இருக்கிறது. இது உட்புற வெப்ப நிலையை குளுகுளுவென வைப்பதோடு மட்டுமல்லாமல், காற்றிலிருக்கும் தீங்குவிளைவிக்க கூடிய ஃபார்மால்டிஹைடையும் நீக்க வல்லதாகும். அத்துடன் இந்த தாவரத்தின் பின்னால் ஒளிந்திருக்கும் பல உடல் நலப் பயன்பாடுகளையும் தெரிந்துகொள்ள முயற்சி செய்து இன்புற்று உங்கள் வாழ்வில் மகிழலாம்.

### பாக்கு பனை மரம்

சுற்றுசூழலை பாதுகாக்கும் உட்புற தாவரத்தை நீங்கள் தேடுகிறீர்களா? அப்படி என்றால் இந்த மரத்தினை தேர்ந்தெடுப்பது சிறந்ததோர் யோசனையாக அமையும். இந்த தாவரத்தில் இயற்கையிலே காணப்



தேவைப்படும் இந்த தாவரத்தை பராமரிப்பது என்பது எளிதான தோர் வழியாகவும் இருக்கிறது. இது வெப்பத்தை குறைத்து குளுகுளுவென வைப்பதோடு, காற்றினால் உண்டாகும் மாசை

படும் ஈரப்பதம் தன்மை, உங்கள் இல்லறத்தை குளுகுளுவெனவும் இனிமையாகவும் வைத்துகொள்ள உதவுகிறது. அதோடு, காற்றில் இருக்கும் தீய பொருள்களை நீக்கிவிட்டு நல்லதோர் காற்றினை சுவாசிக்க நமக்கு வழிவகை செய்கிறது.

### கோல்டன் பாத்தோஸ்

'சில்வர் வைன்' அல்லது 'டெவில் இவி' என்னும் பெயர்களால் இந்த தாவரத்தை, உங்களால் அடையாளம் காண முடிகிறது. பசுமையான இலைகளை கொண்ட இந்த தாவரம், உங்கள் அறையினை அழகுபடுத்த பெரிதும் உதவுகிறது. அத்துடன், காற்று மாசுபடுவதையும் தடுக்கும் இந்த தாவரம், கோடைக் காலத்தில் உங்கள் வீட்டை குளுகுளுவென வைத்துகொள்ள உதவுகிறது. இதனை பராமரிப்பது என்பது எளிதாக இருக்க...தண்ணீரும் நமக்கு அவ்வளவு தேவைப்படுவதில்லை.

### புடலங்காய் கொடி

இதனை தனி வீடு இருந்தால் வைக்கலாம். இது தனித்தன்மை கொண்ட ஒரு தாவரமாகும். இரவு நேரத்தில் ஆக்சிஜனை வெளியேற்ற கூடியதாகும். அத்துடன் வழக்கமான நிலையை காட்டிலும் வெப்பத்தை குறைத்து கூலாகவும் வைத்துகொள்ள கூடிய ஒரு தாவரமாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த தாவரம், நச்சுத்தன்மை கொண்ட நைட்ரஜன் ஆக்சைடு, டிரைக்குளோரோஎதிலின், பென்ஸின், டொலுவீன், என பலவற்றில் இருக்கும் நஞ்சினை உறிஞ்சிகொண்டு தூய காற்றினை நமக்கு அளிக்கிறது.

### பன்னம் தாவரம் (பெர்ன்)

நாசாவின் சொற்கள் படி, இந்த பன்னம் செடி, சிறந்ததோர் காற்று ஈரப்பதமூட்டியாக விளங்குகிறது என்கின்றனர். இது உங்கள் அறையின் உள்ளே இருக்கும் காற்றினை புதுப்பிப்பதோடு தூய்மையாகவும் வைக்க உதவுகிறது. மேலும், இது வெப்பத்தை கட்டுபடுத்த கூடியதாகும். உங்கள் வீட்டு பால்கனியில் இந்த பன்னம் செடி இருக்குமாயின்...அது பார்ப்பதற்கு அழகிய காட்சியையும் கண்களுக்கு சமர்ப்பிக்கிறது

### பேபி ரப்பர் தாவரம்

உட்புற தாவரங்களையும் அவற்றினால் ஏற்படும் மாசு குறைபாடுகளையும் பற்றி நாம் பார்த்துகொண்டிருக்கிறோம். மேலும் அவை மூலமாக உங்கள் வீட்டு அறை குளிர்ச்சியாக காணப்படுவதனையும் நாம் பார்த்து கொண்டிருக்கிறோம். இந்த பேபி ரப்பர் தாவரத்தினை பற்றி நாம் பேசிக்கொண்டே போகலாம் என்கின்றனர். ஆம், இந்த தாவரத்திற்கு தண்ணீர் என்பது அடிக்கடி தேவைப்படாமல் போனாலும்...அதிகளவில் மணலும், வடிக்கட்டப்பட்ட ஒளியும் இந்த தாவரத்திற்கு தேவைப்படுகிறது.

# மழைக்கால மேக்கப்



மழையோ, வெயிலோ எப்படி இருந்தாலும் குறைவாக மேக்கப் போட்டால் தான் அழகாக இருக்கும். குறிப்பாக மழைக்காலத்தில் மேக்கப் போட்டிருப்பது அப்பட்டமாக தெரியக்கூடாது. அதே சமயம் மழையில் நனைந்தாலும் மேக்கப் கரைந்து ஓடக்கூடாது. அதற்காகவே வந்துள்ளது வாட்டர்ப்ரூஃப் மேக்கப். இது மழையில் நனைந்தாலும் ஒன்றும் ஆகாது.வாட்டர்ப்ரூஃப் மேக்கப் போல் மற்றொன்று ஆயில்மேக்கப். தண்ணீர் எண்ணெய் மேல் ஒட்டாது என்பதால், இந்த மேக்கப்பையும் பயன்படுத்தலாம்.

முதலில் முகத்தை நன்கு குளிர்ந்த நீரால் கழுவவேண்டும். அதன் பிறகு முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், கருவளையம் மற்றும் இதர தழும்பு இருக்கும் பகுதிகளை கன்சீலர் கொண்டு மறைக்க வேண்டும். அடுத்து ஃபவுண்டேஷன். சருமநிறத்திற்கு ஏற்ப ஃபவுண்டேஷன் போடவேண்டும். இது மேக்கப்பை சருமத்தில் பிடித்துக்கொள்ள உதவும். கடைசியாக மைக்ரோசாஃப்ட் பவுடர். இது மிக நுண்ணிய பவுடர் என்பதால், சருமத்தில் திட்டுதிட்டாக இல்லாமல் சமமாக பரவும். அதேபோல் ஃபவுண்டேஷன் மற்றும் எந்தவித கிரீமாக இருந்தாலும் சருமத்தில் நன்றாக பரவும் படி தடவ வேண்டும்.

அப்போதுதான் அது சமமாக பரவி சருமத்தை சீராக காட்டும். வியர்த்தாலோ அல்லது மழையில் நனைந்தாலோ, முகத்தில் படிந்துள்ள தண்ணீரை ஒற்றி எடுக்க வேண்டும். அழுத்தி துடைத்தால் அந்தப் பகுதியில் மட்டும் மேக்கப் கலைந்து போகும் வாய்ப்புள்ளது.

சருமத்துக்கு மேக்கப்போட்ட பிறகு, கண்களை அழகுபடுத்த வேண்டும். சிலருக்கு பெரிய கண்கள் இருந்தால் அதை வெளிப்படுத்த கண்களுக்கு மேக்கப் போடலாம். முதலில் ஐஷேடோ. பகலில் மேக்கப் போடும்போது பிங்க், பிரவுன், தங்கநிறங்களை பயன்படுத்தலாம். அதுவே இரவு நேரங்களில் கருப்பு, நீலம், பச்சை என அடர்த்தியான நிறங்களை பயன்படுத்தலாம். சில சமயம் இரண்டு நிறங்கள் சேர்ந்து போட்டால் பார்க்க அழகாக இருக்கும். இதில் தங்கநிறம் எல்லா நிற ஐஷேடோக்களுக்கும் செட்டாகும் என்பதால், அதை பயன்படுத்தினால் பார்க்க அழகாக இருக்கும்.

அடுத்து ஐலைனர். உடையின் நிறத்துக்கு ஏற்ப போடலாம். கடைசியாக மஸ்காரா. இது இமை முடிகளை அழகாக எடுத்துக்காட்டும். இவை எல்லாமே வாட்டர்ப்ரூஃப் என்பதால், தண்ணீர் பட்டாலும் கரையாது. கடைசியாக ஃபிளஷ். இது முகத்தில் கன்னம், மூக்கு போன்ற பகுதியை அழகாக எடுத்துக்காட்டும். கடைசியாக லிப்ஸ்டிக். பிங்க், பிரவுன் என்றுமே அழகாக இருக்கும். விருப்பப்பட்டால், கிளாஸ் போட்டுக் கொள்ளலாம். இது உதட்டை மேலும் அழகாக எடுத்துக்காட்டும்.




# கன்னத்தில் குழியழகு...



உண்மையில் பெண்கள் சிரிக்கும்போது அவர்களது கன்னங்களில் குழி விழுந்தால், அது ஒரு பேரழகு தான்!

பெண்கள் அழகில் பளிச் சென்று திகழ வேண்டும் என்றால் அவர் களது கன்னங்கள் மொழுமொழுப்பாக ஜொலிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள், இப்போது கன்னங்களில் கூடுதலாக இன்னொன்றையும் எதிர்பார்க்கிறார்கள். அது கன்னக்குழி. கன்னத்தில் குழிவிழுந்தால் அது கவர்ச்சியை அதிகரிக்கிறது என்கிறார்கள்.

உண்மையில் பெண்கள் சிரிக்கும் போது அவர்களது கன்னங்களில் குழி விழுந்தால், அது ஒரு பேரழகுதான்!

அந்த அழகை பார்த்து ரசிக்கும் ஆண்களில் பலர், 'சில பெண்களை மட்டும் இறைவன் நிதானமாக ரசித்து படைத்திருக்கிறான். அவர்களது கன்னங்களில் மட்டும் குழி விழுகிறது' என்பார்கள்.

இனி அப்படி சொல்ல முடியாது. செயற்கையாகவே டாக்டர்களால் கன்னத்தில் அழகுக்குழி அமைக்கப்படுகிறது. இயற்கையான கன்னக் குழிகளில் இருவகை இருக்கிறது. முதல் வகையினருக்கு பேசும் போதும், சிரிக்கும் போதும் மட்டுமே குழி வெளிப்படும். இரண்டாவது வகையினருக்கு எப்போதும் பளிச்சென அந்த குழி தெரியும். பொதுவாக பெண்களுக்கு இயற்கையாக கன்னத்திலும், தாடையிலும் குழி விழுவதுண்டு.

கன்னத்தில் குழி விழுவதற்கு என்ன காரணம்?

கன்னங்களின் தசைப் பகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள்தான் குழிவிழுவதற்கான காரணம். முகத்தில் 'ஜைக்கோமேட்டிக்கஸ் மேஜர்' என்ற தசைப்பகுதியில் ஏற்படும் மாற்றமே கன்னத்தில் குழியாக மாறுகிறது. அந்த தசையின் தடிமனாலோ, தொடர் தசையில் ஏற்படும் பிளவாலோ குழி உருவாகிறது. முகத்தில் சேரும் கொழுப்பும் கன்னக் குழிக்கு காரணமாகிறது. ஆனால் கொழுப்பு குறையும்போது அது மறைந்துவிடும். இளமையில் குழி அழகோடு தோன்றினாலும் வயதாகும்போது அது காணாமல் போவதன் மாயம் இதுதான்.

இயற்கையாக குழி இல்லாதவர்கள், செயற்கையாக உருவாக்கிக் கொள்ளலாம். இது நவீன அழகு சிகிச்சையாகும். லோக்கல் அனஸ்தீஸ்யா கொடுத்து, 20 நிமிடங்களில் குழியை உருவாக்கிவிடுகிறார் கள்.

முகத் தசையின் பலம், அதில் அடங்கியிருக்கும் கொழுப்பின் அளவு, முகத்தின் அமைப்பு, உடலின் அமைப்பு போன்ற பல விஷயங்களை கருத்தில்கொண்டு குழியை உருவாக்குகிறார்கள்.

ஆபரேஷன் முடிந்த முதல் வாரத்தில் முழு நேரமும் காணப்படும் இந்த செயற்கை குழி, பின்பு சிரிக்கும் போதும், பேசும்போதும் மட்டும் தெரியும்.

# நாகரீகத்தின் மறுவடிவம் ஜீன்ஸ்

ஜீன்ஸ் பேண்ட் அணிவது பெண்களின் கம்பீரமும், ஆளுமையும் அதிக அளவு வெளிப்படுவதாக கூறப்படுகிறது.

ஜீன்ஸ் பேண்ட் இன்றைய நாளில் அனைத்து வயது பெண்களும் விரும்பி அணியும் ஆடையாக உள்ளது. நவநாகரீக தோழனாக ஜீனஸ் பேண்ட் விளங்குவதால் எந்தநாளிலும், எந்த பார்ட்டி மற்றும் கொண்டாட்டங்களிலும் அணிந்து கொள்கின்றனர். இளைஞர்கள் மட்டுமே விரும்பி அணிந்த ஜீன்ஸ் பேண்ட் இன்றைய நாளில் பெண்களும் அணிய கூடியதாக உள்ளது.

பாரம்பரிய அடர் நீல ஜீன்ஸ், வெளிர் நிற நீல ஜீன்ஸ், ரிப்பிடு ஜீன்ஸ், வெள்ளை ஜீன்ஸ், கருப்பு ஜீன்ஸ், கிரீஸ் லைன் ஜீன்ஸ், ஸ்லிம் பிட் ஜீன்ஸ், ஜாக்கர் ஜீன்ஸ் என்றவாறு பல வகைகள் உள்ளன. அவற்றில் நமது தேவையை எவை பூர்த்தி செய்கின்றன என்பதுடன் எது காலத்திற்கு ஏற்ப ஒத்துபோகிறது என்பதும் அறிவது அவசியம்.

தற்போதைய டிரெண்டிங் வெள்ளை ஜீன்ஸ், அதிக கவனத்தை தருகின்றன. தமது பணியிடங்களுக்கு அணிந்து செல்லக்கூடிய கேஸ்வல் ஆடையாக அழகிய தோற்றத்துடன் விளங்குகிறது. இது பிசினஸ் கேஸ்வல் ஆக அணிந்த போதும் இதன் தோற்றம் பார்ட்டிக்கு அணிந்து செல்லக்கூடியது போன்று தோற்றமளிக்கும். இதில் ஏதும் புதிய வடிவமைப்பை பெற நினைத்தால் சிராய்ப்பு மற்றும் வெட்டப்பட்ட ஜீன்ஸ் வகைகளையும் வெள்ளை நிறத்தில் அணியலாம்.

### சிராய்ப்பு செய்யப்பட்ட ஜீன்ஸ்

ஜீன்ஸ் பேண்ட்டின் மேற் பகுதியில் வண்ண பகுதி சிராய்ப்பு செய்யப்பட்டு உள்வெளிர் பகுதி தெரியும்படி உள்ள ஜீன்ஸ் பேண்ட் - இது கேஸ்வல் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு அணிய ஏற்றவாறு டிஸ்டிரஸ்டு ஜீன்ஸ் உள்ளது. டிஸ்டிரஸ்டு ஜீன்ஸ் பேண்டின் பாக்கெட் பகுதி தொடையின் மேல் பகுதியில் இழுக்கும். சிராய்ப்பு செய்யப்படுவது என்பது பேண்டின் முட்டி பகுதி மற்றும் தொடைப்பகுதிகளில் அதிகமாக உள்ளவாறு வடிவமைக்கப்படுகிறது.

### கிரிஸ் லைன் வாஷ்டு ஜீன்ஸ்

அடர்நீல ஜீன்ஸ் பேண்ட் என்பது மேம்பட்ட வாஷ் செய்யப்பட்டு வெளிர் நிர சாயலுடன் கிரிஸ் லைன் கொண்டவாறு உருவாக்கப்படுகிறது. ஆக வடிவமைப்பின்றி ஓர் மங்களான தோற்றத்துடனே உருவாக்கப்படுகிறது. கேஸ்வல் ஜீன்ஸ் பேண்ட் ரகமாக இது உள்ளது.

### பார்ட்டிகளுக்கு அணி ஏற்ற கருப்பு ஜீன்ஸ்

முற்றிலும் கருப்பு நிறத்தில் ஜீன்ஸ் பேண்ட்கள் ஸ்மார்ட்டான தோற்றப் பொலிவை தருகின்றன. எப்போது இதனை அணிந்திருந்தாலும் பார்ட்டி லுக் தருவதுடன் கமபீரத்தையும் தருகிறது. கருப்பு நிற ஜீன்ஸில் மங்கலான தோற்றம் மற்றும் வெளுக்கப்பட்டது போன்றவை நன்றாக இருக்காது. எனவே முழுக்க முழுக்க கருப்பாய் உள்ளதே சிறப்பானது.

# பயமா? பாசமா?



அடர்ந்த சமோன் காட்டில் ஒரு சிங்கராஜா வாழ்ந்துவந்தது. அதுக்குத் தன்னைப் பற்றிய பெருமை அதிகம். தான் வலிமையானவன் மட்டுமில்லை, மிகவும் நல்லவன், அதனால் தான் தன்னைக் காட்டு விலங்குகள் மதிக்கின்றன என்ற எண்ணமும் அதுக்கு இருந்தது.

இப்படித் தன்னை நினைத்து சிங்கராஜா பெருமிதம் அடைந்துகொண்டிருந்தபோது, நரி வந்தது.

என்ன ராஜா, ஒரே சிந்தனை?

நான் எவ்வளவு நல்லவன் என்று யோசித்துப் பார்த்தேன். என்னாலேயே அதைத் தாங்கிக்க முடியலை.

என்னாலும் தாங்கிக்க முடியவில்லை என்று நினைத்த நரி, எதை வைத்து அப்படிச் சொல்றீங்க? என்று கேட்டது.

நான் செல்லும் இடங்களில் எல்லாம் எல்லோரும் எவ்வளவு மரியாதை தருகிறார்கள் என்பது உனக்கே தெரியுமே! இதுக்கு மேல் வேறு என்ன வேண்டும்?

ராஜா, உங்கள் மேல் உள்ள பயத்தினால் தான் மரியாதையே தவிர, அன்பால் யாரும் மரியாதை கொடுக்கவில்லை.

நரி சொன்ன உடன் சிங்கராஜாவின் முகமே மாறிவிட்டது. கோபத்தில் கர்ஜித்தது. பயத்தில் தலைதெறிக்க ஓடிவிட்டது நரி.

மகிழ்ச்சியாக இருந்த சிங்கராஜாவின் மனம், கல் எறிந்த குளம்போல் கலங்கிவிட்டது. 'உண்மையிலேயே இந்தக் காட்டில் வசிக்கும் விலங்குகள் எல்லாம் என் மீது அன்பால் மரியாதை செலுத்தவில்லையா?

நரி சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டாம். தானே இதை நேரில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தது சிங்கராஜா.

அடுத்த நாளே, தான் வசித்த குகையை விட்டு வெளியேறி, தலைமறைவாக வாழ ஆரம்பித்தது. ஒரு வாரத்துக்குப் பிறகு, ஒளிந்திருந்து விலங்குகளைக் கண்காணிக்கத் தொடங்கியது.

சிங்கராஜா இல்லை என்ற செய்தி காடு முழுவதும் பரவிவிட்டதால், விலங்குகள் எல்லாம் மகிழ்ச்சியாக இருந்தன. இதைக் கண்டதும் சிங்கத்தின் மனம் வருந்தியது.

நான் இல்லை என்ற வருத்தம் ஒருவருக்கும் இருப்பதுபோல் தெரியவில்லையே நான் மீண்டும் வந்துவிடுவேனோ என்ற பயம் மட்டும் சிலரிடம் இருப்பதைப் பார்க்க முடிகிறது என்று தனக்குள் நினைத்துக் கொண்ட சிங்கராஜா, மேலும் நடந்தது.

அப்போது ஆற்றில் தண்ணீர் குடிக்க வந்த இரண்டு மான்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டது.

எதுக்கு சோகமா இருக்கே?

நம்ம சிங்கராஜா காணாமல் போய் ஒரு வாரத்துக்கு மேல ஆச்சு. எங்க போனார், என்ன ஆனார் என்று தெரியலை என்றது ஆண் மான்.

அடடா! நம் மீது அன்பு செலுத்த ஒரு ஜீவன் இருக்கிறதே என்று மகிழ்ந்தது சிங்கராஜா.

அட, இதுக்கா இவ்வளவு சோகம்? நல்ல விஷயம் தானே?

என்ன சொல்ற?

சிங்கராஜா நமக்கு ஏதாவது செய்திருக்கிறாரா? நம்ம இனம் என்றால் அவருக்குக் கொண்டாட்டம். மான்களைத்தான் அதிகமா வேட்டையாடினார். நீயும் நானும் அவரைப் பார்க்கப் போனால் விருந்தா வைப்பார்? நம்மை விருந்தாக்கிக்கொள்வார். இனியாவது நிம்மதியா இருப்போம் என்றது பெண் மான்.

இதுக்கு மேல் எதுவும் கேட்கும் மனநிலையில் சிங்கராஜா இல்லை. வருத்தத்துடன் நடக்க ஆரம்பித்தது. திடீரென்று நரியின் அழுகை கேட்டது. சட்டென்று சிங்கம் மரத்துக்குப் பின்னால் ஒளிந்து, கவனிக்க ஆரம்பித்தது.

அங்கு வந்த இன்னொரு நரி காரணம் கேட்டது.

நம் சிங்கராஜா காணாமல் போயிட்டாரே என்று தேம்பி அழுதது அந்த நரி.

ஆஹா! இறுதியில் என் மீது அன்பு வைத்திருக்கும் ஒரு நரியையாவது கண்டுகொண்டேன் என்று மகிழ்ந்தது சிங்கராஜா.

அவர் இல்லை என்றால் உனக்கு என்ன நஷ்டம்?

என்ன இப்படிச் சொல்லிட்ட? அவரிடம் எனக்கு நெருக்கம் அதிகம் என்பதுபோல் ஒரு தோற்றத்தை உருவாக்கி வைத்திருந்தேன். அதனால் மற்ற விலங்குகளை மிரட்டி, எனக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்துகொண்டேன். ஒரு நாளும் உணவு தேடி அலைந்ததில்லை. சிங்கராஜாவுக்கு என்று சொல்லி, உணவை வாங்கிச் சாப்பிட்டேன். நானே ஒரு ராஜா மாதிரி இருந்தேன். இப்ப எல்லாமே என்னை விட்டுப் போய் விட்டதே என்று அழுதது அந்த நரி.

இதைக் கேட்டதும் சிங்கராஜாவின் மனம் இரண்டாவது முறையாக நொறுங்கியது.

பயத்தால் கிடைக்கிற மரியாதை நீர்க்குமிழி மாதிரி. எப்போது வேண்டுமானாலும் உடைந்துவிடும். அன்பால் கிடைக்கிற மரியாதைதான் கல்வெட்டு மாதிரி காலத்துக்கும் அழியாமல் நிற்கும் என்ற உண்மையைப் புரிந்துகொண்ட சிங்கராஜா, அன்று முதல் அன்பாகவும் நடந்துகொள்ள ஆரம்பித்தது.

## வண்ணத்திப்பூச்சி

விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையில்
எண்ணற்ற கோடி அதிசயங்கள்.
வண்ணப் பூச்சிகள் ஏராளம்.
வண்ணத்திப் பூச்சியுமொரு வகையாம்.
பல வர்ணத்தில் இறக்கைகள்
கண்ணைப் பறிக்குது பாருங்கள்!
பார்க்கப் பரவசம் தந்திடும்
ஈர்த்து மக்களை மயக்கிடும்
பூரிப்பாய் அமர்ந்து தேனருந்த
பூவிற்குப் பூவாய்ப் பறக்கும்.
தொட்டால் வண்ணம் ஒட்டும்.
பட்டு இறகுப் பூச்சி.
பொத்தினால் கையினுள் அடங்கும்.
எத்தனை சுதந்திரப் பூச்சி.
எனக்கும் ஒரு ஆசை
வனப்பு வண்ணத்திப் பூச்சியாக.



## கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. தெற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடு.
2. 1990-ல் தென்னாப்பிரிக்காவிடமிருந்து விடுதலை பெற்றது.
3. சிறுத்தைகள் அதிகம் இருக்கும் 6 ஆப்பிரிக்க நாடுகளில் இதுவும் ஒன்று.
4. 'துணிச்சல் மிக்க நாடு' என்ற பெயரும் இதுக்கு உண்டு.
5. வைரம், செம்பு, யுரேனியம், தங்கம், காரீயம், லித்தியம் போன்றவை இந்த நாட்டின் இயற்கை வளங்கள்.
6. இதன் தலைநகரம் விந்தோக்.
7. அரசியல் அமைப்புச் சட்டத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பை அறிமுகப்படுத்திய முதல் நாடு இதுதான்.
8. இந்த நாட்டின் தேசிய விலங்கு ஆப்பிரிக்க இரலை (Oryx).
9. இங்குள்ள மிக உயரமான மலை பிரான்ட்பர்க்.
10. உலகின் பழமையான பாலைவனங்களில் ஒன்றான நமீப் பாலைவனத்தின் பெயரைத்தான் இந்த நாட்டுக்கும் வைத்திருக்கிறார்கள்.

விடை: நமீபியா

## வியத்தகு விஞ்ஞானி தொப்ளர்



தொப்ளர் பின்விளைவு (Doppler Shifts)சைரன் ஒலிக்க ஒரு கார் சென்றுகொண்டுள்ளது. ஒலியை கேட்கும் முதலாமவர் நிலை கார் அவரை கடந்து சென்றுவிட்டது. ஒலியானது இவருக்கு கார் ஓட்டுனரை விட குறைவாக கேட்கும். 2ஆம் நிலையில் உள்ளவருக்கு ஒலியானது கார் ஓட்டுனரை விடவும் அதிகமாக கேட்கும் ஏனென்றால் கார் அவரை நெருங்குகிறது.

தொப்ளர் பிற முக்கிய ஆய்வு:

ஒளி அலைகளின் நீளம் (நீலம் மற்றும் சிகப்பு) மற்றும் ஒலி அளவைக்கொண்டு தொலைவை நிர்ணயிக்கும் முறை. இந்த ஆய்வைக்கொண்டு தான் பிரபஞ்சம் விரிவடைந்து வருகிறது என்ற கருத்து வெளியிடப்பட்டது.

**தொப்ளர் செய்த ஆய்வு:**

அவரின் ஆராய்சி என்னவென்றால் பிளாட்பாரத்தில் இவர் நின்று கொண்டு ரயில் போகும் போது ஒரு இசைக்குழுவை ரயிலின் உள்ளே அமரச்செய்து ஒரே ரிதம் பீட்டில் (குறிப்பொலியை) வாசிக்க வைத்து குறிப்பெடுத்தார்.

(ஆரம்ப காலங்களில் ரயிலின் வேகம் 30kmph தான்)

மீண்டும் இவர் போகும் ரயிலின் உள்ளே உட்கார்ந்துகொண்டு பிளாட்பாரத்தில் அதே குறிப்பொலியை அதே இசைக்குழுவை வாசிக்கச் செய்தார். இதையெல்லாம் பார்பவர்கள் என்ன முட்டாள் தனமான ஆராய்ச்சி என்று ஏளனம் செய்தார்கள். இந்த ஆராய்சியின் கண்டுபிடிப்பு டாப்ளர் விளைவு (Doppler Shifts) என அழைக்கப்பட்டது.

டாப்ளர் விளைவு குறிப்புகளைக் கொண்டுதான் கோள்களின் தொலைவு மற்றும் கேளக்சிகளுக்கிடையேயான தொடர்பு என்று விண்ணியலை தவிரவும் 12 அறிவியல் துறைகளில் இவரின் ஆய்வுதான் அடிப்படை. கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டபோது, அவர் பெரிதும் புகழப்பட்டார்! அவர் மறைவுக்குப்பின்னரே (1853). அவர் வாழ்ந்த காலத்தில் இவரின் கண்டுபிடிப்புக்கு வரவேற்பே இல்லை என்று சொல்லவேண்டும். போக்குவரத்து மற்றும் சிக்னல்களின் ஒலி ஒளி உபயம் அவர்தான். பல விபத்துகளை தடுக்கும் இக்கருவிகளின் காரணகர்த்தா.



## நாளைய பிரஜைகள்

## விடுகதைகள்

1) ஊரைச் சுற்றுவார்கள், கூடித் தின்பார்கள், கறுப்புக்கோட்டு ஆசாமிகள் யார் இவர்கள்..?

2) தங்கத் தட்டு வானத்துல நிற்குது அது என்ன?

3) ஈரடி பழத்தின் தோல் முழுக்க முட்கள் அது என்ன?

4) தண்ணீரில் விரிக்கும் ஓட்டைப் பாய் அது என்ன?

5) தலை சாய்க்க மடி தருவான் பஞ்சு நண்பன் அது என்ன?

6) சட்டையை கழற்றி சட்டென குளத்தில் குதித்தான் அது என்ன?

7). காம்பு இல்லாத வட்ட இலை அது என்ன?

8) நாலு காலில் உக்காருவான், அய்யோ பாவம் நிற்கமாட்டான் அது என்ன?

9) நீல நிற புடவைககாரி, முழு நீளம் குட்டி குட்டி ஓட்டைகளாம் அது என்ன?

10) நெட்டையன் குட்டயணைவிட சீக்கிரம் ஓடிடுவான் அது என்ன?

**விடைகள்:**

1) காகங்கள்
2). பௌர்ணமி நிலா
3) பலாப்பழம்
4) . மீன் வலை
5) தளலயணை
6) தோலுரித்த வாழைப்பழம் (வாய்க்குள்.)
7) அப்பளம்
8) நாற்காலி
9) வானத்தில் நட்சத்திரங்கள்
10) கடிகார முட்கள்

## கடலில் உணவு மழை!

முகத்தில் சுவாசக் கருவியை மாட்டிக் கொண்டு கடலுக்குள் நீந்துபவர்களைப் பலரும் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கலாம். விசேஷ கேமராவைக் கொண்டு அவர்கள் வண்ண வண்ண மீன்களைப் படம் எடுப்பார்கள். இது கண் கவர் காட்சியாக இருக்கும். கடலுக்குள் இறங்கிப் படம் எடுப்பது என்பது ஒரு தனிக் கலை. தொலைக்காட்சியில் நீங்கள் காணும் கடலடிக் காட்சிகள் பெரும்பாலும் முப்பது அடி ஆழத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கும். அதுவும் நல்ல வெயில் அடிக்கும்போது எடுக்கப்பட்டிருக்கும்.

கடலுக்குள் ஒருவர் எவ்வளவு ஆழம் இறங்கலாம் என்பது குறித்துப் பல விதிமுறைகள் உள்ளன. மேலே வருவது தொடர்பாகவும் இப்படி விதிமுறைகள் உண்டு.

இவை ஒருபுறம் இருக்க, கடல் வாழ் விலங்குகளில் பெரும்பாலானவை 60 அடி (சுமார் 20 மீட்டர்) ஆழத்துக்குள்ளாகத்தான் வாழ்கின்றன. கடல் வாழ் தாவரங்களும் அப்படித்தான். ஒளிச்சேர்க்கை மூலம் வளருவதற்கு அவற்றுக்குச் சூரிய ஒளி தேவை. கடலில் 200 மீட்டர் ஆழம் வரைதான் வெளிச்சம் இருக்கும். அந்த ஆழத்துக்குக் கீழே மிக மங்கலான நீல நிற வெளிச்சம் சுமார் 1,000 மீட்டர் வரை இருக்கும். கடலில் அதற்குக் கீழான ஆழத்தில் வெளிச்சமே இருக்காது. எப்பொழுதும் இருட்டாக இருக்கும்.

அந்த ஆழத்தில் வசிக்கும் மீன்கள் போன்ற உயிரினங்களுக்கு உணவு ஒரு பிரச்சினை. அவை ஒன்றை ஒன்று தாக்கி உண்ண வேண்டும். அல்லது மேலிருந்து உணவு வரும் என்று காத்திருக்க வேண்டும். கடலின் மேல் மட்டத்தில் வாழும் உயிரினங்கள் மரித்த பின்னர், அவற்றின் உடல்கள் கடலில் கீழ் நோக்கி இறங்கும். ஆழத்தில் வசிக்கும் உயிரினங்களுக்கு இவைதான் உணவு. அந்த அளவில் கடலில் எப்போதும் உணவு மழை இருந்துகொண்டே இருக்கும்.

ஆழ்கடலில் கும்மிருட்டில் வாழும் மீன்களிடம் ஒளியை உண்டாக்கும் உறுப்புகள் உண்டு. மீன்களின் உடலில் உள்ள சில வேதியியல் பொருட்கள் மூலம் இந்த ஒளி உண்டாக்கப்படுகிறது. இது மின்மினிப் பூச்சிகளின் ஒளி போன்றதே. இது உயிரிஒளி என்று அழைக்கப்படுகிறது. சில மீன்களுக்கு இந்த ஒளி உறுப்புகள் முன்புறத்தில் அமைந்திருக்கும். தூண்டில் மீன் இதற்கு உதாரணம். இந்த வகை மீனின் தலைப்புறத்தில் நீண்ட உறுப்பு உண்டு. இது முன்புறமாக நீட்டிக்கொண்டிருக்கும். இதன் முனையில் ஒளிரும் பகுதி அமைந்திருக்கும். தூண்டில் மீன்கள் உலகின் எல்லாக் கடல்களிலும் காணப்படுகின்றன. இவை சுமார் 3,000 அடி ஆழத்தில் வாழ்பவை.

## வர்ணம் தீட்டுவோம்



## வெளவால் ஏன் தலைகீழாக தொங்குகிறது?



பறக்கும் பாலூட்டியான வெளவாலுக்கு கால்கள் நிற்பதற்கு ஏற்ற வகையில் அமையவில்லை. பறப்பதற்கு ஏற்ற வகையில் முன்னங்கால்களும் பின்னங்கால்களும் சவ்வால் இணைக்கப்பட்டிருக்கின்றன. பகல் நேரத்தில் எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக மரக் கிளைகளைப் பின்னங்கால்களால் பற்றிக்கொண்டு தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன.

இப்படித் தொங்கும்போது எதிரிகளின் கண்களுக்குச் சட்டென்று இவை புலப்படுவதில்லை. அது மட்டுமின்றி, பறவைகளைப்போல நிலத்திலிருந்து வெளவால்களால் பறந்து செல்ல முடியாது. தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கும்போது எளிதாகப் பறந்து சென்றுவிட முடியும். தலைகீழாகத் தொங்கும்போது குறைவான சக்தியே செலவாகிறது என்பதாலும் வெளவால்கள் தலைகீழாகத் தொங்குகின்றன,

## இடதுகை பழக்கம் நல்லதா?



இடது கைப் பழக்கம் தவறானது என்ற எண்ணம் நம்மிடம் அதிகமாக இருக்கிறது. அதனால்தான் இந்தப் பழக்கத்தை மாற்ற நினைக்கிறார்கள். இயற்கையாக யார் யாருக்கு எந்தக் கையால் எழுதவும் வேலை செய்யவும் முடிகிறதோ, அந்தக் கையைப் பயன்படுத்துவதுதான் சிறந்தது.

கைகளில் என்ன பாகுபாடு? ஒருவரின் பழக்கத்தைக் கட்டாயப்படுத்தி மாற்றும்போது, அது அந்த நபருக்குத் தீங்காக முடியலாம்

இடது கைப் பழக்கக்காரர்கள் மிகவும் புத்திசாலிகளாக இருப்பார்கள். ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், ஐசக் நியூட்டன், மகா அலெக்சாண்டர், பில்கேட்ஸ், பராக் ஒபாமா, சச்சின் டெண்டுல்கர், அமிதாப் பச்சன் என்று இடது கைப் பழக்கக்காரர்களின் பட்டியல் நீண்டுகொண்டே இருக்கிறது.

அதனால் தயக்கம் இன்றிஇடது கைப் பழக்கதை அங்கீகரியுங்கள்

# இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் சப்தம பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் கணவன்-மனைவி ஐக்கியம், பிள்ளைகளுடன் பாசம், அன்பு நிலவும். உத்தியோகத்தர்கள் ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமளித்து திருமணப் பேச்சுக்கள் நிலவும். வங்கி வசதிகள் உண்டாகும். ஜென்மராசி அதிபதி தனுசு இராசியில் பலமாக இருப்பதால் தேச சுகம், மனோ தைரியம் மிகும்.




இவ்வாரம் இலாப பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதால் செய்தொழில் இலாபம், விருத்தி ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயம் பெறும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பூச்சி, புழுக்களின் தொல்லைகளிலிருந்து பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம்.




சப்தம பாவத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பதால் இல்லத்தில் கணவன், மனைவியருக்கிடையே கருத்து மோதல் அவ்வப்போது தோன்றி மறையும். நிதானத்துடன் செயற்பட்டால் நன்மையுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு குறைவடையும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். புதிய கொள்முதல் தொடங்கலாம்.




இவ்வாரம் மாதுரு பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை நலம், குடும்ப ஷேமம் உண்டாகும். ஜீவன பாவத்தை வெள்ளி நோக்குவதால் தொழில் உயர்வு, விருத்தி, வங்கி வசதிகள் உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நல்ல இலாபத்தை தரும். விவசாயிகளுக்கு அரச மானியங்கள் உரிய வேளையில் வந்து சேரும்.




இவ்வாரம் தன பாவத்தைக் குஜன் நோக்குவதால் தனலாபம், பொருள் விருத்தி, மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகளால் நன்மை உண்டாகும். மாதுரு ஸ்தானத்தில் சனி இருப்பதால் இடையிடையே மாதா நலம் பாதிக்கப்படும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமையும் மேலக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை திருப்தி தரும்.




இவ்வாரம் தன பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். கணவன்-மனைவி ஐக்கியம், பிள்ளைகளுடன் அன்பு பாசம் நிலவும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு கிட்டும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.




இவ்வாரம் ஜென்மத்தில் வெள்ளி ஆட்சி, தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அமைதி, நிம்மதி நிலவும். குடும்ப ஷேமம் நன்மை தரும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோக பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய கொள்முதல்களை தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். குடும்பப் பெண்களுக்கு இல்லத்தில் பிள்ளைகளுடன் உறவு சீரான நிலையில் இருக்கும்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தருக்கு கணிசமான அளவு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிட்டும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். குடும்ப பெண்களின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும்.




ஜென்மத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. தேகாபிமானம் அவசியம். இலாப பாவத்தில் இவ்வாரம் குரு சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலால் இலாபம், சேமிப்பு, நிதிவரவு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். கர்ம பாவத்தில் சுபர் நோக்குவதால் உத்தியோகத்தருக்கு பதவிச் சிறப்பு உத்தியோக அதிகாரம் வரும். புத்திரர்களால் பெண்களுக்கு மிகுந்த நன்மையுண்டு.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் வெள்ளி உச்ச யோகம் பெறுவதால் செய்தொழில் விருத்தியுண்டு. ஈடுபடும் கரும காரியங்கள் ஜெயமளிக்கும். குடும்பத்தில் இல்லறம் நல்லறமாக அமையும். விவேக வீரிய பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் மனோ தைரியம் தரும். நோய்கள் அகலும். தேகம் புதுப்பொலிவு பெறும். உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு ஏற்படும். இல்லறத்தில் பெண்களுக்கு மிகுந்த மரியாதை ஏற்படும்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, தொழில் இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள், மன நிறைவைத் தரும். உத்தியோகத்தருக்கு வேலைச் சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தால் நல்ல இலாப முன்னேற்றம் காண்பர். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியும். பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் ஏற்படும்.




ஜென்மத்தில் குஜன் சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. தோகாபிமானம் முக்கியம். அஷ்டமத்தில் வெள்ளி இருக்க தனபாவத்தை நோக்குவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி ஏற்படும். வியாபாரிகள் புதிய கொள்முதலை தொடங்கலாம். உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகளின் அழுத்தமும் வேலைச் சுமையும் குறையும். பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர்களின் உதவியுடன் நன்கு இடம்பெறும்.

# வேலுண்டு வினையில்லை!



முருகனது ஆயுதங்களில் அவர் கையில் வைத்திருக்கும் வேல் சிறப்பாக போற்றப்படுகிறது. வேல்வல்லான் என்று கலித்தொகையும் வல்வேல் கந்தன் என்று புறநானூறும் முருகனை புகழ்கின்றன.

முருகனுக்கு வேலை அருளியவர் சிவபெருமான். அந்த வேலுக்குச் சக்தியை அளித்தவர் பராசக்தி. இதனால் இரட்டைச் சிறப்புகள் வேலுக்குக் கிடைக்கின்றன.

பராசக்தியிடம் முருகன் வேல் வாங்கும் ஐதீகம், சிக்கலில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கு ஐப்பசி மாதம் மகா கந்தசஷ்டி திருவிழாவின் ஐந்தாம் நாள், சிக்கல் சிங்கார வேலர், அன்னை பராசக்தி வேல் நெடுங்கண்ணியின் சன்னதிக்குச் சென்று வேலைப் பெறுகின்றார்.

வேல் வாங்குதல் சிக்கலிலும், சூரசம்ஹாரம் திருச்செந்தூரிலும் உச்சநிலைச் சிறப்புகளுடன் நடைபெறுகின்ற காரணத்தினால், சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்ஹாரம் என்ற பழமொழி தோன்றியது.

முருகனது வேல் மகிமையுடையது. மேன்மையானது. தலைமையானது, தெய்வீகத் தன்மையுடையது. எனவே, இது சிறப்பான வழிபாட்டிற்குகிரியது. பண்டை காலத்தில் தனிக்கோட்டம் அமைத்து முருகனது வேலை வழிபட்டனர். இதற்கு வேல் கோட்டம் என்று பெயர். முருகனின் ஆறாம்படை வீடான சோலையில் இன்றும் வேல்தான் மூலவராக உள்ளது.

ஆதிகாலத்தில் இந்த ஊர் வேல் கோட்டம் என்று அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. வீடுகளில் செம்பாலும், பொன்னாலும், ஐம்பொன்னாலும் வெள்ளியாலும் வேல்களைச் செய்து போற்றி வழிபடுகின்றனர். இந்த வேல்களின் உயரம் ஆறங்குலத்திற்குள் இருக்க வேண்டும்.வேலைத்தனியாகவும் வழிபடலாம். அல்லது பீடத்தில் எழுந்தருளச் செய்தும், திருவாசி அமைத்தும் வழிபடலாம். சிலர் வேலின் நடுவில் சிவப்புக் கல்லைப் பதிக்கின்றனர். இப்படி பதிப்பது மிக நல்லது. முருகனை வழிபடுவதைப் போலவே வேலையும் வழிபட வேண்டும்.

சிலர் பரம்பரை பரம்பரையாக ஒரே வேலை பாதுகாத்து வழிபட்டு பக்திப் பெருமிதம் கொள்கின்றனர். வேலைத் தினமும் வழிபடுவது நல்லது. குறிப்பாக செவ்வாய்க் கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் வேலை நிச்சயம் வழிபட வேண்டும். மேலும், கிருத்திகை பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் முதல் முருகனுக்குரிய நாட்களில் வேல் வழிபாடு மிக அவசியம் ஆகும்.

# ஒன்றாய் வாழ்ந்திடுவோம்

நமது தேசத்தின் அடையாளங்களில் நமது குடும்பமும் ஒன்று. இதர நாடுகளில் பெரும்பாலும் குடும்பம் என்பது சிதைந்து போன நிலையில் தான் இருக்கிறது. அதிலும் கூட்டுக்குடும்பத்தைப் பற்றி சொல்லவே வேண்டாம்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, கூட்டுறவே நாட்டுயர்வு, நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம், யாதும் ஊரே, யாவரும் கேளிர், ஒன்றே குலம், ஒருவனே தேவன்... என்பதெல்லாம் தமிழகத்தின் தாரக மந்திரச் சொற்கள்.

இஸ்லாமிய மார்க்கமும், குடும்பம் என்பது என்ன, குடும்பத்துடன் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை பின்வரும் திருக்குர்ஆன் வசனங்கள் மூலமும், நபி மொழிகள் மூலமும் தெள ிவாக தெரிவிக்கின்றன.

ிமனிதர்களே, உங்கள் இறைவனுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப் படுத்தி உலகில்) பரவச்செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக்கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) ரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்)- நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)



மனிதர்களே, நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (திருக்குர்ஆன் 49:13)

ஒரு மனிதன் குடும்பம் என்ற வளையத்தை விட்டு வேறு வழியில் சென்று விடக்கூடாது.

நாம் குடும்பத்தைப் பாதுகாத்தால் நமது குடும்பம் நிச்சயம் நம்மை பாதுகாக்கும்.

இதனால் தான் நீங்கள் உறவுகளோடு சேர்ந்து வாழுங்கள், உங்கள் உறவுகளை துண்டிக்காதீர்கள். உங்கள் உறவுகளை ஆதரியுங்கள், உங்களது ஆயுள் அதிகரிக்கும். உங்களுக்குத் தேவையான சகல வாழ்வாதாரங்களிலும் அபிவிருத்தி செய்யப்படும் என்றெல்லாம் சொல்லி, நமது உறவுகளுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள்.

குடும்பம் தான் மனிதனை மனிதனாகவே வாழவைக்கிறது. நல்லொழுக்கங்களை கற்றுத்தருகிறது. உறவுகளை மதிக்கச்சொல்கிறது, ஒற்றுமையோடு வாழ வழிகாட்டுகிறது. ஏற்றத்தாழ்வுகளை நீக்குகிறது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துவாழக் கற்றுக்கொடுக்கிறது என ஏகப்பட்ட நன்மைகள் ஒரு குடும்பத்தில் உண்டு.

ஒருவர் செலவு செய்யும் தொகைகளிலேயே ஆக மிகச் சிறந்தது அவர் தனது குடும்பத்திற்காக செலவு செய்வதே ஆகும் என்பது நபிமொழியாகும். (நூல் : முஸ்லிம்)

ஒருவர் தமது குடும்பத்திற்காக செலவு செய்யும் போது இறைவனின் திருப்தியை நாடி செலவு செய்தால், அவர் செய்யும் ஒவ்வொரு செலவும் அது அவருக்கு தர்மமாக ஆகும் என்பது மற்றொரு நபிமொழியாகும். (நூல்: புகாரி).

இந்த நபிமொழிகள் நமக்கு உணர்த்துவது என்ன..? செல்வம் அது சேர்த்து வைக்கப்படுவதற்கல்ல. அது செலவு செய்யப்படுவதற்குத்தான். அதுவும் அவரவர் தமது குடும்பங்களுக்காக செலவு செய்வது தான் சிறந்தது.

அதற்கு இரண்டு விதமான நன்மைகள் உண்டு. ஒன்று குடும்பத்தை கவனித்த நன்மை. மற்றொன்று தர்மம் செய்த நன்மை. இதுதவிர ஒருவன் தன் குடும்பத்தை சரிவர கவனிக்கவில்லை என்றால் அது ஒரு பாவச்செயல். அந்தப் பாவம் ஒன்றே போதும் அவனை நரகத்தில் கொண்டு போய் தள்ளுவதற்கு.

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தம்மைச் சுற்றியுள்ளவர்களை கவனித்துக் கொள்வது கட்டாயக் கடமையாகும். குடும்பம் என்பது கதவும், ஜன்னலும் கொண்ட வெறும் வீடல்ல. அன்பும், இரக்கமும், பாசமும் கொண்ட ஒரு பெரும்கூடு ி என்பதை முதலில் நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ வகை மனிதர்கள் நம்மைச் சுற்றி வாழ்கிறார்கள். அத்தனை பேருக்கும் ஒரே முகவரி அவர்களது குடும்பம் தான். இதனால் தான் உங்கள் பிள்ளைகளுக்கு உங்களது குடும்பப் பாரம்பரியத்தை கற்றுக்கொடுங்கள் என்று நபிகள் நாயகம் சொன்னார்கள்.

உறவு என்பது ஒரு தனிப்பிரிவல்ல. அது ஒரு உயிரின் குடும்ப இணைப்பு.

உறவற்ற குடும்பம் உயிரற்ற உடலைப் போன்றது. எனவே நமது குடும்பம் நம்மைப் போலவே உயிருடனும், உயிர்ப்புடனும் இருக்க வேண்டும். படைப்பினங்கள் யாவும் ஒரே குடும்பம் என்று பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே நபிகள் நாயகம் சொல்லிச்சென்றது இன்றும் நினைக்கத்தக்கது.

இங்கு படைப்பினங்கள் என்று பொதுவாகக் கூறி இருப்பதின் வழியாக உயிரினங்கள் யாவுமே அவற்றில் உள்ளடங்கும் என்பதையும் இங்கு நாம் நன்கு நினைவு கூரவேண்டும். அனைத்து உயிரினங்களையும் அரவணைத்து வாழும் போது தான் அந்த வாழ்க்கை நிச்சயம் அர்த்தமுள்ளதாய் அமையும்.

என்றும் ஒன்றாய் வாழ்ந்திடுவோம், நன்றாய் சேர்ந்தே உயர்ந்திடுவோம்.

# நம்மை காக்கும் தெய்வம்

இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் மீட்பிற்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பெத்லகேமில் மனிதனாக பிறந்தார். இப்பூவுலக மாந்தர்கள் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ்வதற்காகவும் நித்திய ஜீவனை, அதாவது பரலோக வாழ்வை அளிப்பதற்காகவுமே அவர் வந்தார்.

அவருடைய இளமை பருவத்தை நாசரேத் என்னும் ஊரில் வாழ்ந்து, பின்னர் கலிலேயா, தீரு, சீதோன் போன்ற அநேக பட்டணங்களில் செஙற்பொழிவு ஆற்றினார். ஜனங்களை நோயிலிருந்து சுகமாக்கி, பிசாசினால் பாதிக்கப்பட்டவரை விடுதலையாக்கி அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்.

எருசலேம் என்னும் பட்டணத்தில் பெதஸ்தா எனப்பட்ட ஒரு குளம் இருந்தது. இந்த குளத்தை சுற்றி குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் படுத்திருப்பார்கள். அவர்கள் எப்பொழுது தண்ணீர் கலங்கும் என்று பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

ஏனெனில் சில சமயங்களில் தேவ தூதன் ஒருவன் வந்து அந்த குளத்தில் இறங்கி தண்ணீரை கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் குணமடைவான்.

முப்பத்தெட்டு வருஷம் வியாதியஸ்தனாய் இருந்த ஒரு மனிதன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு சொஸ்தமாக வேண்டும் என்று விரும்புகிறாயா? என்று கேட்டார். அதற்கு வியாதியஸ்தன், ‘ஆண்டவரே, தண்ணீர் கலங்கும் போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுவதற்கு ஒருவருமில்லை. நான் குளத்திற்குள் இறங்குவதற்கு முன் வேறொருவன் இறங்கி சுகமாகி விடுகிறான்’ என்றான்.

இயேசு அவனை நோக்கி, ‘எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட’ என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி தன் படுக்கையை எடுத்து கொண்டு போனான் என்று வேதாகமம் கூறுகிறது.

இயேசு அவரிடம், எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும் என்றார். உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தார். (திருவிவிலியம், யோவான்-5:8,9).

இவனை சுற்றிலும் வாழ்ந்த மனிதர்கள் சுய நலம் மிகுந்தவர்களாய் இருந்தனர். இவனுடைய கஷ்டத்தையும், கண்ணீரையும், வேதனையையும் கண்டும் ஒருவனுக்கும் உதவி செய்ய மனதில்லாதிருந்தது. ஆனால் இயேசு அவன் மேல் மனதுருகுகிறார். அவனை சொஸ்தமாக்க சித்தம் கொள்கிறார்.

இன்றைக்கும் சுயநலமான மனிதர்கள் தான் பெரும்பாலும் நம்மை சுற்றி வாழ்கின்றனர். உதவி செய்யும் மனப்பான்மை, இரக்கம் காட்டும் மனப்பான்மை மனுக்குலத்தில் குறைந்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்களும் ஜீவிக்கின்றீர்களா? ஐயோ எனக்கு உதவி செய்ய, என்னை கை தூக்கி விட, ஒருவருமே இல்லையென்று கலங்குகிறீர்களா?

கவலைப்படாதிருங்கள், உங்களுக்கு உதவி செய்ய, உங்கள் துயரம் நீக்க, உங்களைக் கை தூக்கி விட ஒருவர் இருக்கிறார். அவர் நாமம் இயேசு. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர் (எபிரேயர் 13:8).

பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில், நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலக மாட்டேன் என்று கடவுளே கூறியிருக்கிறார் (எபிரேயர் 13:5).

அன்று கேட்பாரற்று, விசாரிப்பாரற்று கிடந்த ஒரு மனிதனைத் தேடிப்போய் அவனை விசாரித்து அவனுக்கு நன்மை செய்தவர் இன்றைக்கும் உங்களுக்கு அப்படியே செய்வார்.

மனிதர்கள் கை விட்டு விட்ட கலக்கத்தில் துயரத்தில் ஜீவிக்கின்றீர்களோ இயேசு நிச்சயமாக கைவிடமாட்டார். அவர் உங்களுக்கு நன்மை செய்வார்.

எப்படி அந்த குளக்கரை வியாதியஸ்தன் தன் சூழ்நிலைகளை இயேசுவிடம் சொன்னானோ, அதுபோல நீங்களும் உங்கள் மனதின் கவலைகளை பாரங்களை இயேசுகிறிஸ்துவிடம் தெரிவியுங்கள். நிச்சயமாய் அவர் உங்களுக்கு உதவி செய்வார்.

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார். கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்மாவைக் காப்பார். (சங்கீதம் 121)

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.



# கட்டிளமைப் பருவமும் சமவயது குழுக்களின் சமூகமயமாக்கமும்



வாழும் சூழல் மற்றும் சமூகத்திற்கு ஏற்ற வகையில் வாழப்பழகிக் கொள்ளும் நெடுங்கால செயன்முறையை சமூகமயமாக்கம் என்பது சுட்டிக் காட்டுகின்றது. ஒரு மாணவனின் சமூகமயமாக்கலில் பிரதான இடத்தை பிடிப்பது சம வயதுக்குழுக்கலே ஆகும் . இதற்கு மேலதிகமாக குடும்பம், பாடசாலை, கல்வி நிறுவனங்கள், தொலைபேசி, தொலைக்காட்சி, வழிபாட்டுத்தளங்கள் பங்களிப்பு செய்கின்றன. மனிதனின் அனைத்து தேவைகளும் சகமனிதனையும் சமூகத்தையும் சார்ந்து இருப்பதால் ஒருவரில் மற்றொருவர் தங்கிஇருக்கும் நிலை இயல்பானது.

சமூகமயமாக்கல் என்பது பல சிக்கலான காரணிகளின் உருவாக்கம் என்றும் ஒரு குழுவின் விதி மற்றும் மதிப்பீடுகளுக்கு கீழ்ப்படிய கற்றுக் கொடுப்பது என்றும் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. சமூகமயமாக்கல் மூலம் தனிப்பட்டவர்கள் கற்கின்றார்கள். இதன் விளைவாக சம வயதுக் குழுவினர் மத்தியில் இணைந்திருக்கும் கலாசாரம் வளர்கிறது. சமூகமயமாக்கல் பலதரப்பினரையும் தரம் உயர்த்துவதில் செல்வாக்கு செலுத்துகிறது. கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்க காரணியாகவும் செயற்படுகிறது. போட்டி நிறைந்த இன்றைய கல்விச்சூழலில் பல்வேறு பிரத்யேக வகுப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் மாணவர்கள் தாங்கள் எந்த கல்வி நிலையத்திற்கு கற்;க செல்லவேண்டும் என்பதைக் கூட சமவயதுக்குழுவே நிர்ணயிக்கிறது.

பல்வேறு தனிமனிதர்களின் இணைப்பால் உருவாகும் பலம் பொருந்திய சங்கிலியே சமூகமாகும். இச்சமூகத்தில் சிக்கலின்றி வாழ்வை முன்னெடுக்க சமூகமயமாக்கம் அவசியம். ஆரம்ப மட்ட சமூகமயமாக்கள் முகவரான குடும்பத்திற்;கு அடுத்த படியாக பிள்ளைகள் தம்மை ஒத்தவர்களுடன் தொடர்புகொண்டு தங்களுக்கான அமைப்பாக குழுக்களை உருவாக்கிக் கொள்கின்றனர். இத்தகைய குழுக்கள் பிள்ளைகளை சமூகத்துக்கு அடையாளப்படுத்துகிறது.

பிள்ளைப் பருவத்திற்கு அடுத்த வளர்ச்சிப் பருவத்தை கட்டிளமைப் பருவம் என அழைக்கிறோம். ((Adolessent) எனும் ஆங்கிலச் சொல்லின் அடிப்படை வளருதல் என்பதாகும். இலத்தீன் மொழியில் இருந்து பிறந்த இச் சொல்லிற்கு முதிர்ச்சியுறல் என்பது பொருளாகும். 11 தொடக்கம் 19 வயது வரையான பருவமே கட்டிளமைப் பருவமாகும். மக்களது வாழ்க்கைப் பருவங்களில் முக்கியமாக மாற்றமுறும் ஒரு பருவமாக கட்டிளமைப் பருவம் காணப்படுகின்றது.

கட்டிளமைப் பருவத்தில் மனோபாவ நெருக்கீடுகள் மிகுந்து காணப்படுவதோடு இதுவரை வளர்ந்தோரை சார்ந்திருந்த பிள்ளைகள் தாமே சுதந்திரமாக இயங்க விரும்புவதையும் காணமுடியும். இவர்கள் குழுவாக இணைந்து சமூக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதனால் தம்மை ஒத்த சமவயதுக் குழுக்களுடன் கருத்துக்களை பரிமாறிக் கொள்வர். தம்மைத்தாமே அடையாளம் கண்டு கொள்ள எத்தனிப்பதால் கவர்ச்சி மற்றும் குழுவாக பங்குபற்றும் நாட்டம் இப்பருவத்தில் ஏற்படுவது இயல்பானதாகும்.

கட்டிளமைப் பருவத்தினரிடையே உடல் வளர்ச்சி தீவிரம் அடைதல் (இதனால் கூச்சம்இ அச்ச உணர்வு ஏற்படுதல்) சுதந்திர உணர்வு காரணமாக பெற்றோர் பாடசாலையில் கட்டுப்பாட்டுடன் மோதுதல் அறிவு வளர்ச்சி முழுமை அடைவதுடன் அதற்கேற்ப்ப பாடசாலை சோதனைகள் அமையாவிடின் வெறுப்படைதலும் பிரச்சினைகள் எழுதலும் இயல்பானது. இச்சந்தர்ப்பத்தில் கட்டிளமையோர் மனவெழுச்சி பிரச்சினைக்கு உட்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரியோரின் ஆலோசனைகளை செவிமடுக்காது அவற்றை புறந்தள்ளி தமது வயதை ஒத்த சக மாணவர்களை உற்ற நண்பனாக ஏற்றுக்கொள்வர்.

சம வயதுக்குழுவினர் மத்தியில் வெளிப்படைத் தன்மையும் புரிந்துணர்வும் அதிகமாக காணப்படுவதால் கட்டுப்பாடற்றதும் சுதந்திரமானதுமான தகவல் பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றன. இவர்களின் மத்தியில் ஒருமித்த தேவை, நோக்கம், இயல்பு எழுவதால் தனித்து இயங்குவதை விட கூட்டாக செயலாற்றுவதில் ஆர்வத்தைக் கொண்டிருப்பர். நவீன தொழிநுட்பம் கட்டிளமை பருவத்தினரின் அனுபவங்களை மாற்றி அமைத்து மாணவர்களின் சாதனைக்கு பங்களிப்பு செய்வதுடன் சமவயது மாணவ குழுக்களுக்கு இடையில் தொடர்பை பேணவும் பங்களிப்பு செய்கிறது.

ஒரு குழந்தை வளரும்போது தான் பிறந்த சமூகத்திற்கு ஏற்புடைய பழக்கவழக்கங்களை சமவயதுக்குழுவே கற்றுக்கொடுக்கின்றது. பிள்ளைகள் ஒவ்வொருவரும் தன்னை சமூகத்தின் அங்கத்தவராக இணைத்துக்கொள்வது கட்டாயம். சகநண்பர்களுடன் இணைந்து விளையாடுதல், கலந்துரையாடுதல், வைபவங்கள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களில் பங்குபற்றுவதன் ஊடாக சமூத்துடன் பிண்ணிப்பிணைந்து சமூகவாழ்வியல் அம்சங்களை கற்று சமூகமயமாக்கத்துக்கு உட்படுகின்றனர். ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு அமைய சமவயதுக் குழுக்களின் மத்தியில் காணப்படும் பண்பாடு, நடத்தை, பேச்சு, மனப்பாங்கு, சிந்தனைப்பாங்கு, ஆளுமை என்பன ஒத்த தன்மையை கொண்டிருக்கும். மாணவர்களின் வெற்றி, தோல்வியை தீர்மானிக்கும் கருவியாக சமவயதுக்குழுவே திகழ்கிறது.

சமவயதுக் குழுக்களின் சமூகமயமாக்கத்திற்கு குழு கற்பித்தல் முறை வித்திடுகிறது. மாணவர்கள் குழுக்களாக பிரிந்து குழு ஆக்கம் ஒன்றை வடிவமைக்கும்போது பல்வேறு கருத்து அபிப்பிராயங்கள் பெறப்பட்டு பெரும்பான்மையோர் கருத்து ஏற்றுக்கொள்ளப்படும். இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு விருத்தியடைந்து சமூகமயமாக்கத்துக்கு உள்ளாவர். மனிதன் இணைந்து வாழும் சமூக பிராணி என்பதர்க்கு இனங்க குழந்தைப்பருவம் முதல் வயோதிபப் பருவம் வரை பல வழிகளிலும் தனக்கேற்ற சமவயதுக் குழுக்களுடன் தொடர்பை பேணுகிறான்.

மனித வாழ்வை அர்த்தப்படுத்த சமூகமயமாக்கல் இன்றியமையாதது. சமூகமயமாக்கத்துக்கு உட்படுத்தப்படாத மனிதன் சமூகத்தின் மத்தியில் பெறுமதி அற்றவனாகவே கருதப்படுவான். இத்தகையோர்கள் சமூகத்தால் புறந்தள்ளப்படுவர், எந்தவொரு விடயத்தையும் ஏற்றுக்கொள்ளும் மன நிலை இவர்களிடம் காணப்படாது. நாம் வாழும் நவீனயுகத்தில் நாளுக்கு நாள் புதிய மாற்றங்கள் உட்புகுத்தப்படுவதுடன் பொருத்தமற்ற விடயங்கள் கைவிடப்படுகிறது இவற்றுக்கு ஏற்றவகையில் மனிதன் இசைவாக்கம் அடைவதற்கு சமூகமயமாக்கமே காரணம்.

தற்கால சமவயதுக் குழுக்களின் சமூகமயமாக்கத்தில் தொழில்நுட்ப சாதனங்களின் பங்களிப்பு பாரிய அளவிலான மாற்றங்களை தோற்றுவிக்கிறது. இந்தவகையில் தொலைபேசி, இணையம், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் பாவனை கட்டிளமைப் பருவ மாணவர்கள் மத்தியில் அதிகளவு பிரபல்யம் பெற்றுள்ளது. சமவயதுக் குழுக்கள் தங்களுக்கு இடையே முழுநேர தொடர்புகளை பேணிக்கொள்ள whatsapp, viber என்பவற்றில் குழுக்களை உருவாக்கி கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்றனர். இத்தகைய வளைத்தளங்கள் சமவயதுக் குழுக்களை ஒருங்கிணைக்க துணைபுரிவதுடன் கட்டிளமைப் பருவத்தினரின் மனவெழுச்சிகளை சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்பளிக்கின்றது.

மாணவர்களின் பாடப்பரப்பில் சந்தேகங்கள் எழுகின்றபோது தங்களது ஆசானை நாடி தெளிவைப் பெற்றுக்கொள்ள எத்தனிப்பதைவிட சகநண்பனை நாடியே பிரச்சினையை தீர்க்க முற்படுகிறான். மாணவனின் அறிவுத்தளம் விருத்தியாவதில் சமவயதுக்குழுக்களின் செல்வாக்கு அளவிடமுடியாதது. மாணவர்கள் தாம் இணைந்துள்ள சமவயதுக் குழுக்களின் தன்மைக்கு ஏற்ற நடத்தைக் கோலங்களையே வெளிப்பாடுத்துவர். எனவே பிள்ளைகள் இணையும் சமவயதுக் குழுக்கள் தொடர்பில் பெற்றோர் விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியம்.

**சி.தினேசிதா**
**4ஆம் வருட சிறப்புக்கற்கை,**
**கல்வி, பிள்ளை நலத்துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**



# பழநி முருகன் எங்கள் மருமகன்
# சிலிர்க்க வைக்கும் எடப்பாடி கிராம மக்களின் வழிபாடு







பழநி மலை முருகன் கோயிலில் யாருக்கும் இரவு நேரத்தில் தங்குவதற்கு அனுமதி கிடையாது. யார் மலையேறினாலும் முருகப் பெருமானைத் தரிசித்ததும் கீழிறங்கிவிட வேண்டும். அதுதான் நியதி. ஆனால், இடப்பாடி எனப்படும் எடப்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் தைப்பூசத்துக்குப் பிறகு, ஒரு நாள் பழநி மலைக் கோயிலில் இரவு தங்கி வழிபடுகிறார்கள். யாருக்குமே இல்லாத உரிமை இவர்களுக்கு எப்படி வந்தது?

'வள்ளி மகள் எங்களது குலத்தில் பிறந்தவள். வள்ளியைத் திருமணம் செய்துகொண்டதால் முருகன் எங்கள் மருமகன். எங்கள் மருமகனுக்கு வருடாவருடம் தைப்பூசம் முடிந்ததும் சீர் கொண்டு வருகிறோம்'என்று உரிமையுடன் கூறுகிறார்கள் எடப்பாடி மக்கள்.

எடப்பாடி கிராம மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாகத் திரண்டு தைப்பூசத்துக்குப் பிறகு, ஒரு நாள் ஆடிப்பாடிக் கொண்டாடியபடி பழநிக்கு வருவார்கள். அவர்கள் கோயிலுக்குள் நுழைந்த பிறகு அந்த நாள் முழுவதும் கோயில் அவர்களது கட்டுப்பாட்டில்தான் இருக்கும். அன்று இரவு முழுவதும் அவர்கள் மலையிலேயே தங்கிக் கொண்டாடுகிறார்கள்.

பழநி மலை முருகன் கோயிலில் தைப்பூசத் திருவிழாவுக்கான கொடி ஏற்றப்பட்டதும் எடப்பாடி கிராம மக்கள் பாதயாத்திரைக்கான கங்கணம் கட்டி, விரதத்தைத் தொடங்கிவிடுவார்கள். சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பாலின வித்தியாசம் இல்லாமல் ஒட்டுமொத்த கிராமமே விரதமிருப்பர். பழநி ஆண்டவரைத் தரிசித்து, வீடு வந்து சேர்ந்ததும் படையல் போட்டப் பிறகுதான் அவர்களின் விரதம் நிறைவு பெறும். இடைப்பட்ட நாள்களில் முருகனுக்குப் படையல் போடுவதற்கு முன்பு பச்சைத் தண்ணீரைக்கூடக் குடிக்க மாட்டார்கள். அந்தளவுக்குப் பக்தியுடன் விரதம் இருந்து தன் மருமகனை வழிபடுவார்கள் எடப்பாடி மக்கள்.

பழநிக்கான பாதயாத்திரைக்கு முன்பு எடப்பாடியே விழாக்கோலம் பூணும். பழநி மலை முருகன் கோயிலைப் போன்றே மாதிரிக் கோயிலைப் பெரும் பொருள்செலவில் அமைத்து பெருவிழா எடுப்பார்கள். எடப்பாடியில் பூஜை நடைபெறும்போது பழநி மலையிலிருக்கும் முருகன் எடப்பாடிக்கு வந்துவிடுகிறானாம். எடப்பாடி மக்களின் பாதயாத்திரையின்போது அவர்களுடன் முருகனும் சேர்ந்து பயணிப்பதாகவும் நம்பிக்கை.

ஆயிரக்கணக்கான எடப்பாடி மக்கள் சர்க்கரைக் காவடி, கரும்புக் காவடி, இளநீர்க் காவடி, தீர்த்தக் காவடி என்று விதவிதமான காவடியெடுத்து பெருங்கொண்டாட்டத்துடன் பழநி மலை முருகனை நோக்கி நடக்க ஆரம்பிப்பார்கள். இவர்கள் தமது காவடியை அலங்கரிக்க 'பனாங்கு' என்ற கைவேலைப்பாடுகள் நிறைந்த பட்டுத் துணியைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் சிலர் மச்சக்காவடி எடுத்து ஆடி வருவார்கள். முருகனின் உத்தரவு யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களால் மட்டுமே மச்சக்காவடியை எடுக்க முடியுமாம்.

காவடி எடுத்தவர்கள் போக மற்றவர்கள் முருகன்மீது 'கோலாட்டப் பாடல்'களைப் பாடியபடி வருவார்கள். இவர்களின் ஆட்டத்தில் நாலாம் நாடி, எட்டாம் நாடி, சென்னி மலை கொட்டு என்று பலவிதமான கொட்டுகள் இடம்பெறும். எடப்பாடி பக்தர்களின் தனிச்சிறப்பு, 'குடையாட்டம்'. இது பழங்காலந்தொட்டே முருகனுக்கு உரிய ஆட்டம். ஆட்டம் பாட்டத்துடன் பழநிமலை நோக்கி வரும் எடப்பாடி மக்கள் வரும் வழிகளில் பூஜை மற்றும் அன்னதானங்களைச் செய்து வருகிறார்கள். பழநியை அடைந்ததும் 'படி பூஜை'செய்வர். அதைத் தொடர்ந்து மலை ஏறியதும் கோயிலில் வெளிப் பிராகாரத்தில் 'ஓம்' என்று மலர் அலங்காரம் செய்து வழிபடுவார்கள். இவர்களது கூட்டு வழிபாடான 'விபூதி படைத்தல்' நிகழ்வு சிறப்பு மிக்கது.

ஒவ்வொருவரும் சுமார் இரண்டு கிலோ அளவிலான விபூதியைக் குவித்து, அதில் கால் கிலோ அளவுக்குக் கற்பூரத்தை வைத்துக் கொளுத்தி, பிறகு தேங்காய் உடைத்து முருகனை வழிபடுவார்கள். தேங்காய் உடைக்கும்போது எடப்பாடி மக்கள் 'அரோகரா' என்று பக்திப் பரவசத்துடன் எழுப்பும் சத்தம் மலையடிவாரம் வரைக் கேட்கும். அந்த விபூதியை வீடுகளுக்குக் கொண்டு சென்று பூசிக்கொள்வார்கள்.

கோயிலில் இரவு தங்கும்போது அவர்கள் முருகனுக்குப் படைக்கும் பஞ்சாமிர்தத்தைத் தாங்களே தயாரித்துக்கொள்கின்றனர். இதற்காக மலையேறும்போதே மூட்டை மூட்டையாகச் சர்க்கரை, மலைவாழைப்பழம் ஆகியவற்றைக் கொண்டு செல்வார்கள். அதை முருகனுக்குப் படைத்துவிட்டு, பக்தர்களுக்கு அதைப் பிரசாதமாக வழங்கிவிடுவார்கள்.

முருகனுக்கும் எடப்பாடி மக்களுக்குமான பிணைப்புக் கதைகள் பல உண்டு.

நாங்க பலநூறு வருசமாவே பழநி மலை முருகன வழிபட்டு வர்றோம். முருகன், பெத்தவங்க மேல கோபப்பட்டு பழநி மலைக்கு வரும் வழில அவருக்குப் பசி எடுத்துது. அப்போ வழில ஒரு தோட்டத்துல நெறைய பொண்ணுங்க தினை அறுவடை செஞ்சிகிட்டு இருந்தாங்க. அவுங்க கிட்ட முருகன் சாப்பாடு கேட்டிருக்காரு. 'பண்ணைக்காரர் திட்டுவார்'னு சொல்லி யாரும் அவருக்கு உணவு கொடுக்கல. ஆனா, அங்க வேலை செஞ்ச ஒரு பொண்ணு மட்டும் முருகனுக்குத் தினை கொடுத்தா. அத வாங்கிச் சாப்பிட்டாரு முருகன். இதைக் கேள்விப்பட்ட பண்ணைக்காரரு அந்தப் பொண்ண வேலையவிட்டு அனுப்பிட்டாரு. கூலியையும் கொடுக்கல. அந்தப் பொண்ணு அழத் தொடங்கிட்டா. இதைப் பார்த்த முருகன், அந்தப் பொண்ணையும் தன்கூட பழநிக்கு அழைச்சுக்கிட்டு வந்து மணம் முடிச்சிட்டாரு. அந்தப் பெண்தான் எங்க ஊரு வள்ளி. வள்ளி எங்க வீட்டு மக. முருகன் எங்க ஊரு மருமகன். முருகனுக்கு சீர் கொண்டு வர்றது எங்களோட உரிமை என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார் எடபாடியைச் சேர்ந்த ஒரு பெரியவர்.

மலைக்கோயில் பெரிய தேர் ஒருசமயம் குழில சிக்கிக்கிச்சு. யார் இழுத்தும் தேர் நகரல. யானையக்கூட கட்டி இழுத்தாங்க. ம்ம்கூம்... தேர் ஒரு இன்ச்கூட நகரலையாம். அப்போ எங்க ஊரு மக்கள் இழுத்தபோதுதான் தேர் நகர்ந்துச்சாம். அதைப் பார்த்த மன்னர் எங்களுக்கு 'செப்புப் பட்டயம்' ஒண்ணு கொடுத்தாரு. அந்தப் பட்டயம் மூலம்தான் நாங்க மலைக் கோயில்ல தங்கறதுக்கு உரிமை பெறறோம். நாங்க மலைல தங்கறப்போ ராக்காவலர்கள தவிர, வேறு யாரும் இருக்க மாட்டாங்க. முருகனுக்கு செய்யற பூஜையக்கூட நாங்களே செஞ்சிக்குவோம். முருகன் சந்நிதிக்கு முன்னாடி எங்க பிரச்னைகள் எல்லாத்தையும் பேசித் தீர்த்துக்குவோம். ராத்திரி பட்டிமன்றம், பாட்டு, கச்சேரினு கொண்டாட்டம் தூள் கிளப்பும். இங்கேருந்து எடுத்துட்டுப் போற விபூதியைத்தான் நாங்க பூசுவோம். உடம்பு சரி இல்லாட்டி இந்தத் திருநீற்றைப் பூசுனா போதும், எங்களோட மருமகன் அருளால எல்லா வியாதிகளும் சிட்டா பறந்துபோகும். பழநி முருகன்தான் எங்களோட குல தெய்வம். அவர கடவுளா பார்க்கறத விடவும் எங்க மருமகனா பார்க்கறதுலதான் எங்களுக்கு மகிழ்ச்சி என்றார்.






பசுமைப் புரட்சி தேசிய மரநடுகைத் திட்டத்துக்கு அமைவாக காரைதீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராம கிருஷ்ண மிசன் பெண்கள் பாடசாலையின் மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்ட வைபவம் பாடசாலை அதிபர் திரு.எஸ்.மணிமாறன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

படம்: காரைதீவு நிருபர்





கல்முனைத் தமிழ்ப் பிரிவு மற்றும் காரைதீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற ஆர்.திரவியராஜாவிற்கான பிரியாவிடை வைபவம் இரு கோட்டக் கல்வி அலுவலகங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்களினாலும் ஆசிரிய ஆலோசகர்களினாலும்; காரைதீவு கோட்டக் கல்வி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்;றபோது அவர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதனையும் உரையாற்றுவதனையும் நினைவுப் பரிசு வழங்கப்படுவதனையும் படங்களில் காணலாம்.

படம்: கரடித்தோட்ட நிருபர்





நுவரெலியா இந்து கலாசார பேரவையின் பொங்கல் விழா அண்மையில் நுவரெலியா ஹாவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கோலப்போட்டி, சுவையான பொங்கல் வைத்தல் போட்டி, மாலை கட்டுதல் போட்டி என பல்வேறு போட்டிகளும் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கலந்து கொண்டார்.

படம்: க.கிஷாந்தன்






மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஏறாவூர் ஐயங்கேணி ஹிஸ்புல்லாஹ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. ஏறாவூர் நகர பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கே.கணேஷமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக ஏறாவூர் நகர பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத் கலந்து கொண்டார்.

படம்: காத்தான்குடி நிருபர்






தேசிய போதைப்பொருள் தடுப்பு பாடசாலை வாரத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் முதல்வர் பி.எம்.எம்.பதுறுத்தீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பிள்ளைகளிடமிருந்து கற்றுக் கொள்வோம் எனும் தொனிப் பொருளுக்கு இனங்கள் மாணவர்களின் ஆக்கங்களை சிறப்பதிதிகள் பார்வையிடுவதையும் 'போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தனிநபர், சமூக பாதிப்புக்கள்' பற்றி கல்முனை பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர்கள் ஏ.ஆர்.தஹ்லான் வளவாளராக கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

படம்: மருதமுனை நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 03.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.